# சொன்னால் நம்பமாட்டீர்கள்



சின்ன அண்ணாமலை

குமரன் பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

❋❋❋

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

❋❋❋

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# சொன்னால் நம்பமாட்டீர்கள்

தேசியச் செல்வர்

சின்ன அண்ணாமலை

குமரன் பதிப்பகம்
3, முத்து கிருஷ்ணன் தெரு,
பாண்டிபஜார், சென்னை-17.
தொலைபேசி : 28 15 3742

குமரன் பதிப்பகம்

## நூல் விவரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சொன்னால் நம்பமாட்டீர்கள் |
| ஆசிரியர் | : | சின்ன அண்ணாமலை © |
| நூல் வகை | : | வரலாறு |
| குமரனின் முதற் பதிப்பு | : | டிசம்பர், 2004 |
| பக்கங்கள் | : | 240 |
| அச்செழுத்து | : | 12 புள்ளிகள் |
| பைண்டிங் | : | சாதாரணக் கட்டு |

**விலை ரூ.60. 00**

| | | |
|---|---|---|
| கணினி அச்சு | : | குமரன் கம்ப்யூட்டர் சென்னை-600 017. |
| அச்சிட்டோர் | : | சபரி பிராசஸ், சென்னை-600 014. |

# பதிப்புரை

சா.கணேசனாக வாழ்வைத் தொடங்கி, பொது வாழ்வுப் பணிகளால் காரைக்குடி சா.கணேசனாக சிறந்து, தேசபக்த பணிகளால் சட்டையில்லா சா. கணேசனாக உயர்ந்து, கம்பன் புகழ்பாடும் செயல்களால் கம்பனடிப்பொடி சா.கணேசனாக வாழ்ந்து முடித்தவர் தேசபக்தர் சா.கணேசன்.

சா.கணேசனின் உறவினர் என்ற வாய்ப்பினால், சின்னஞ் சிறு வயதிலேயே தேசத்தைப் பற்றியும், தேசப்பிதா காந்திஜி பற்றியும் அறிந்து, தேசபக்த பணிகளில் தம்மை இழந்து, சிறை வாழ்ந்து பொது வாழ்வில் சாதனை நிகழ்த்தியவர் சின்ன அண்ணாமலை.

மேடையில் பேசுபவர்களுக்கு, சுவையாக எழுதத் தெரியாது; சிறப்பாக எழுதத் தெரிந்தவர்களுக்கு மேடையில் அழகாக பேச வராது; இரண்டிலும் சிறந்தவர்கள் மற்றவர் களையும் பரிசுத்தமாக நேசித்தது கிடையாது என்பது தமிழர்களின் வரலாறு. இதை மாற்றிக் காட்டிய பெருமை சிலருக்கு மட்டும் உண்டு. அந்தச் சிலரில் சின்ன அண்ணாமலைக்கு சிறந்த தனித்த இடமுண்டு.

கல்கியின் எழுத்துக்களால் சொற்பொழிவாளனாகி, அதன்பின் கல்கியாலேயே விதந்து பாராட்டப்பெற்றவர்; அறியாப் பருவத்திலேயே காந்தியை அறிந்து, அதன்பின் காந்திஜி நடத்திய 'அரிஜன்' பத்திரிகையை தமிழில் நடத்த அண்ணலிடமே அனுமதி பெற்றவர்; தேவகோட்டை பள்ளியில்

படிக்கும் போதே விடுதலை உணர்வுக்காக தலைமை ஆசிரியரிடம் மோதி, அதன்பின் அந்த தலைமை ஆசிரியரே தம் பேத்திக்கு 'கமலா' என்று பெயர் வைக்க உந்து சக்தியானவர்; 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் திருவாடனை சிறைக் கைதியாகி,அந்தச் சிறையை பொதுமக்கள் உடைத்து இவரை மீட்ட வீரவரலாறும் இவருக்கு உண்டு.

இன்று தேவகோட்டை பகுதியைச் சார்ந்த பலரும் பதிப்புத் துறையில் ஈடுபட்டு வருகின்றனர், இதற்கு அடித்தளமிட்டவர் சின்ன அண்ணாமலைதான். இவரிடம் தொழில் பயின்றவர்கள் இன்றும் வாழ்கின்றனர். ராஜாஜி, ம.பொ.சி.,தேசியக்கவி நாமக்கல் கவிஞர் போன்ற தேச பக்தர்களின் நூல்களை எல்லாம் வெளியிட்ட பெருமை சின்ன அண்ணாமலையின் தமிழ்ப் பண்ணைக்கே உண்டு.

தேசபக்தராக, நகைச் சுவையை அள்ளித் தெளிக்கும் மேடைப் பேச்சாளராக, பதிப்பக உரிமையாளராக, திரைப்படத் தயாரிப்பாளராக, நடிகர் திலகம் சிவாஜியின் ரசிகர்களை ஒன்றிணைத்து வழிநடத்துபவராக, எழுத்தாளாராக, ராஜராணி கதைகளிலிருந்து சமூகக் கதையின் பக்கம் எம்.ஜி.ஆரை திருப்பிய திசைகாட்டியாக வாழ்ந்து முடிந்தவர் சின்ன அண்ணாமலை.

காலம் செல்லச் செல்ல சிலர் காணாமல் போவர்; சிலர் காலம் செல்ல செல்ல கவனிக்கப்படுவர். இரண்டாவது வகையைச் சார்ந்தவர் சின்ன அண்ணாமலை என்பதற்கு இந்த நூல் மிகச் சிறந்த சான்று. தமிழ் மக்கள் இந்த நூலை பெரிதும் வரவேற்பர்; வரவேற்க வேண்டும்.

**எஸ்.வைரவன்**
குமரன் பதிப்பகம்

## மகாத்மாவின் ஆசி

ஹரிஜன பத்திரிகையைத் தமிழில் நடத்துவதற்கு ஒரு இளைஞரை ராஜாஜி அவர்கள் சென்னை இந்தி பிரசார சபையில் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அந்த இளைஞர் பெயர் ஸ்ரீ சின்ன அண்ணாமலை என்று ராஜாஜி சொன்னார்.

அதன் பின் சின்ன அண்ணாமலையைப் பற்றிப் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன். சுதந்திரப் போராட்டத்தில் பல முறை சிறை சென்றவரென்றும், குறிப்பாக 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் இவர் இருந்த திருவாடானை சிறையை உடைத்து மக்கள் இவரை விடுதலை செய்தனர் என்றும் அறிந்து ஆச்சரியமடைந்தேன். அந்தப் போராட்டத்தில் பலபேர் உயிர் இழந்தனரென்றும் ஸ்ரீ சின்ன அண்ணாமலை கையில் குண்டு பாய்ந்து உயிர் தப்பியவர் என்றும் கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட இளைஞர்களை நினைத்துப் பெருமை அடைகிறேன்.

ராஜாஜி சாதாரணமாக யாரையும் சிபாரிசு செய்யமாட்டார். ஸ்ரீ சின்ன அண்ணாமலையைச் சிபாரிசு செய்திருப்பது ஒன்றே அவர் ரொம்ப பொருத்தமானவர் என்பதில் சந்தேகமில்லை.

ஆகவே ஹரிஜன பத்திரிகையைத் தமிழில் நடத்த ஸ்ரீ சின்ன அண்ணாமலைக்கு நான் அனுமதி வழங்கி என் வாழ்த்துதலையும் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**எம்.கே.காந்தி**

ஹரிஜன் பத்திரிகையில் வெளிவந்த கட்டுரை

## ராஜாஜியின் ஆசி

எனக்கு மிகவும் பிடித்தமானவர்களின் சின்ன அண்ணாமலை முக்கியமானவர். தெய்வபக்தியும், தேசபக்தியும் தமிழ்ப் பக்தியும் நிறைந்தவர். இவருடைய வாழ்க்கை வீரம் நிறைந்தது. காந்தீய வழியில் தொண்டு செய்யும் உள்ளம் கொண்டவர்.

பெரிய விஷயங்களை எளிய முறையில் நகைச் சுவையாகச் சொல்லும் திறன் படைத்தவர். சிறைச்சாலையில் கூட இவர் இருக்கும் இடம் கலகலப்பாக இருக்கும். சுதந்திரப் போராட்ட காலத்தில் இவர் மிகவும் ஆவேசமாகப் பேசுவார்; செயல்படுவார். அதனால் இவரை நான் உற்சாக எரிமலை என்று பாராட்டிப் பேசியிருக்கிறேன். இவருடைய குணம் விசேஷ மானது.

இவர் மற்றவர்களுக்காகவே உழைப்பவர். தனக்கென்று எதுவும் செய்து கொள்ளமாட்டார். இதுவரையில் என்னிடம் இவர் தனக்கென்று எதையும் கேட்டது கிடையாது. தமிழுக்கு நிறையத் தொண்டு செய்திருக்கிறார்.

தமிழ்ப் பண்ணை என்ற புத்தகப் பிரசுரம் மூலம் பல நல்ல நூல்களை வெளியிட்டிருக்கிறார். மிக அழகாக அதிகச் செலவில்-லாபம் கருதாமல் வெளியிட்டிருக்கிறார். என்னுடைய நூல்களை வெளியிட்டு அதற்கு ஒரு மகத்துவம் ஏற்படுத்தி யிருக்கிறார். எனது பிரியமுள்ள சின்ன அண்ணாமலை அவர்களுக்கு எனது ஆசி.

**சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரி**

''கண்டறியாதன கண்டேன்''
புத்தக வெளியீட்டு விழாவில்
ராஜாஜி அவர்கள் பேசியது

பேராசிரியர் **கல்கி** அவர்களின்

## வாழ்த்து

நண்பர் ஸ்ரீ சின்ன அண்ணாமலை பெரும்பாக்யசாலி. ராஜாஜி அவர்களின் திருவாக்கினால் சின்ன அண்ணாமலை என்ற சிறப்புப் பெயரை அடைந்தவர். அவரை என் சிறந்த நண்பராகக் கருதி வருகிறேன்.

பல இடங்களுக்கு அவருடன் பிரயாணம் செய்திருக்கிறேன். அவரது தேச சேவை மகத்தானது. அதை எழுதினால் ஒரு வீரசரித்திரமாக இருக்கும்.

ஸ்ரீ சின்ன அண்ணாமலை அபூர்வமான பல ஆற்றல்கள் படைத்தவர். பதினாயிரம் இருபதினாயிரம் ஜனங்கள் அடங்கிய சபையில் மணிக்கணக்கில் பிரசங்க மாரி பொழியக் கூடியவர். ஆவேசமாகப் பேசுவார்; அழவைக்கும்படி பேசுவார் ; சிரித்து வயிறு புண்ணாகும்படியும் பேசுவார்.

இவருடைய பேச்சாற்றலைப் பார்க்கும் போது இவரைப் போன்றவர்கள் நமது சட்டசபையில் இருந்தால் எவ்வளவு கலகலப்பாக இருக்கும் என்று நான் எண்ணுவது உண்டு.

பேசும் ஆற்றலைப்போல் எழுதும் ஆற்றல் படைத்தவர் ஸ்ரீ சின்ன அண்ணாமலை. அழகிய சிறு கதைகள் எழுதியிருக்கிறார். சிறந்த நாவல்கள் எழுதியிருக்கிறார். ரஸமான பிரயாணக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக இவருடைய செயல்திறன் வியக்கத்தக்கது. எடுத்த காரியத்தை சிறப்பாக முடிக்கும் செயல் வீரர் இவர். ராஜாஜி அவர்களுக்கு இவரை ரொம்பப் பிடிக்கும்.

ராஜாஜியின் நெருங்கிய நண்பர்கள் இவரை சின்ன திருவடி என்று செல்லமாக அழைப்பார்கள். ர்ாஜாஜியின் நூல்களை இவர் தமிழ்ப் பண்ணையின் மூலம் பிரசுரித்த விதமே ஒரு பக்தியானது.

ரஸிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்கள் சொன்னது போல, சின்ன அண்ணாமலையைப் போல ஒரு நண்பர் கிடைப்பதற்கு எவ்வளவோ தவம் செய்திருக்க வேண்டும்.

அவருடைய நண்பர் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமை அடைகிறேன்.

சின்ன அண்ணாமலை எழுதிய

''காணக் கண்கோடி வேண்டும்''

என்ற நூலின் முன்னுரையில்

கல்கி - ரா.கிருஷ்ணமூர்த்தி எழுதியது.

## காமராசரின் ஆசி

நாட்டுக்கு நமது சின்ன அண்ணாமலை செய்திருக்கும் சேவை மகத்தானது. அவருடைய பேச்சைக் கேட்டுப் பல இளைஞர்கள் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டது எனக்குத் தெரியும். சின்ன அண்ணாமலையின் தலைக்கு விலை வைத்தது ஆங்கில அரசாங்கம். ஒரு மாதம் வெள்ளைக்கார அரசாங்கத்தை ஸ்தம்பிக்க வைத்தவர் சின்ன அண்ணாமலை.

இவரைக் கைது செய்ய முடியாமல் இவரது பெற்றோரையும் உற்றார் உறவினர்களையும் சொல்லொணாக் கொடுமைகள் செய்தது ஆங்கில ஏகாதிபத்யம். போலீசாரின் துப்பாக்கி முன் அஞ்சாது மார்பைக் காட்டி நின்று வந்தேமாதரம் என்று முழங்கியவர் சின்ன அண்ணாமலை.

ஆங்கில அரசாங்கம் 1942 ஆகஸ்டில் இவரைக் கைது செய்து திருவாடானை சிறையில் அடைத்தது. 24 மணி நேரத்தில் மக்கள் ஒன்று திரண்டு அச்சிறையைப் பட்டப் பகலில் உடைத்து இவரை விடுதலை செய்துவிட்டார்கள்.

இப்படி மக்களே சிறையை உடைத்து விடுதலை செய்தது உலக சரித்திரத்திலேயே இதுதான் முதல் தடவையாக இருக்கும் என்று எண்ணுகிறேன். அப்படி சரித்திரத்தில் எழுதப்பட வேண்டிய சிறந்த தியாகி சின்ன அண்ணாமலை. இன்றும் இவரது கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்த இடத்தில் தழும்பு இருப்பதைக் காணலாம்.

இவர் நான்குமுறை சிறை சென்றிருக்கிறார். பல ஆண்டுகள் சிறைவாசம் செய்திருக்கிறார். தனிப்பட்ட நபர் சத்யாக்கிரகத்தின்போது மகாத்மா காந்தி அவர்களால் சத்யாக்கிரகியாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று தேவகோட்டையில் யுத்த எதிர்ப்புப் பிரசாரம் செய்தார். இவரை அங்கு கைது செய்யாததால் அங்கிருந்து சென்னை வரை நடந்தே வந்து வழியில் உள்ள ஊர்களில் எல்லாம் யுத்த எதிர்ப்புப் பிரசாரம் செய்து கொண்டு வந்தார். சென்னையில் கைது செய்யப் பட்டார். நாட்டுக்குச் சுதந்திரம் வந்த பின்னும் இவர் போராட்ட மனப்பான்மையை விடவில்லை.

தமிழ்நாடு தனி மாநிலமாக அமையவும், தமிழ் ஆட்சி மொழியாக வேண்டுமென்றும், திருப்பதி, கன்னியாகுமரி தமிழ் நாட்டோடு சேர தலைநகராகவே வைத்துக் கொள்ள வேண்டுமென்றும், ஆந்திராவுக்குப் பங்கு பிரித்துக் கொடுக்கக் கூடாதென்றும் நடந்த போராட்டத்தில் முக்கிய பங்கேற்று, அதற்காகவும் சிறை சென்றார். இப்படி வாழ்க்கையில் பெரும்பகுதி போராட்டம், சிறை என்றே கழித்துவிட்டார். இவ்வளவு தியாகம் செய்தும் கட்சியிலோ அரசாங்கத்திலோ எந்தப் பதவியையும் அவர் எதிர்பார்க்கவில்லை.

இவருடைய தியாகத்தையும், பட்டம் பதவியில் ஆசையில்லாத இவருடையமனப் பக்குவத்தையும் ஒவ்வொரு காங்கிரஸ் ஊழியரும் உதாரணமாகக் கொள்ள வேண்டும்.

திரு. சின்ன அண்ணாமலை எழுதிய "தியாகச் சுடர்"
என்ற புத்தக வெளியீட்டு விழாவில் பெருந்தலைவர்
காமராஜ் அவர்கள் பேசியதில் ஒரு பகுதி.

## என்னுரை

இந்நூலை நான் எழுதுவதற்குத் தூண்டுகோலாக இருந்தது "குமுதம்" பத்திரிகையே.

"குமுதம்" பத்திரிகை "போனஸ் வெளியீடாகச் சிறு சிறு புத்தகங்கள் வெளியிட்டபோது, என் வாழ்க்கையில் நடைபெற்ற நம்பமுடியாத சில சம்பவங்களைத் தொகுத்து எழுதும்படி பணித்தார்கள். அதற்காகச் சில சம்பவங்களை எழுதிக் கொடுத்தேன். "குமுதம்" போனஸ் வெளியீடாக வந்தபோது பலரும் படித்துப் பாராட்டினார்கள்.

அதைப்போல இன்னும் பல சம்பவங்கள் என் வாழ்க்கையில் நடந்திருக்கின்றன. அவைகள் பலவற்றையும் தொகுத்து எழுதியபோது அது ஒரு பெரிய நூலாக வடிவெடுத்து உங்கள் பார்வைக்கு வந்திருக்கிறது.

ஒரு எளிய தொண்டனின் வாழ்க்கையில் நடைபெற்ற சில விசித்திரச் சம்பவங்களின் தொகுப்புத்தான் இந்நூல். படிக்க சுவரஸ்யமாக இருந்தால் அது போதும். அச்சாகும்போதே படித்துப் பார்த்த சில மேதைகள், மிகவும் சுவாரஸ்யமாக இருக்கிறது என்று சொன்னார்கள்.

அது முகஸ்துதி அல்ல, உண்மை என்றே நான் நம்புகிறேன். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்பதை எனக்குத் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

அன்பன்

பிப்ரவரி, 1978. **சின்ன அண்ணாமலை**

# உள்ளடக்கம்


- காந்தி தரிசன ........ 15
- பகத்சிங் பாட்ஜ் ........ 17
- பாட்டியின் சாபம் ........ 19
- என் மனைவி ........ 21
- முதல் சொற்பொழிவு ........ 26
- கல்கியைக் கண்டேன்! ........ 29
- காவிநிறச் சட்டை ........ 31
- தேசபக்தி ........ 33
- முதல் காங்கிரஸ் கூட்டம் ........ 35
- பார்க்கர் பேனா ........ 40
- இதய ஒலி ........ 46
- தமிழிசை மகாநாடு ........ 52
- ஆயிரம் ரூபாய் பரிசு ........ 55
- விடுதலை ஆவேசம் ........ 57
- திருவாடானைச் சிறை ........ 61
- தலைமறைவு வாழ்க்கை ........ 70
- சுயராஜ்யம் வாங்கியாச்சா? ........ 76
- தருமம் தலைகாக்கும் ........ 81
- சென்னைக்கு வந்தேன் ........ 86

- தமிழ்ப்பண்ணை ............................................ 92
- திரு.ம.பொ.சி ............................................ 97
- தமிழ் ஹரிஜன் ............................................ 102
- கல்கி தந்த கார் ............................................ 104
- வேலைக்காரி ............................................ 107
- நாடோடியாக நடித்தேன் ............................................ 112
- அன்னையின் பிரிவு ............................................ 115
- சங்கப் பலகை ............................................ 118
- ராஜாஜியின் மதிநுட்பம் ............................................ 129
- தொல்காப்பிய மாநாடு ............................................ 132
- பாரதி நிதி ............................................ 136
- வெள்ளி மணி ............................................ 137
- பூட்டை உடையுங்கள் ............................................ 142
- நான் ஒரு முஸ்லிம் ............................................ 144
- சிவாஜி தந்த கைக்குட்டை ............................................ 146
- பத்திரிகை ஆசிரியர் ............................................ 148
- அரசவைக் கவிஞர் ............................................ 150
- கம்பராமாயணப் பதிப்பு ............................................ 151
- கலைவாணருடன் போட்டி ............................................ 153
- திராவிடக் கழகத்தினர் கலாட்டா ............................................ 156
- திராவிட இயக்க எதிர்ப்பு ............................................ 161

* மந்திரி பதவி ............................................ 163
* பதவிக்குரிய தகுதி ............................................ 164
* மஞ்சள் பத்திரிகை ............................................ 166
* போலீஸ் அதிகாரி ............................................ 169
* தம்பி தயங்காதே ............................................ 171
* விளம்பர வெற்றி ............................................ 172
* ராஜாஜி - காமராஜ் ............................................ 177
* இரண்டு அல்வா- இரண்டு வடை ............................ 183
* சிவாஜி ரசிகர் மன்ற உதயம் ............................ 187
* வடக்கு எல்லைப் போராட்டம் ............................ 193
* கட்டபொம்மன்-கப்பலோட்டிய தமிழன் ............ 197
* சிவாஜிக்கு என்ன தொழில்? ............................ 202
* பெரியார் தந்த பத்து ரூபாய் ............................ 204
* கொதிக்கும் சோற்றுப்பானை ............................ 209
* திருடாதே ............................................ 214
* பனகல்பார்க் காய்கறி அங்காடி ............................ 222
* டி.கே. சண்முகம் அடைந்த பேரின்பம் ................ 225
* அறிஞர் அண்ணாவுடன் ............................................ 227
* அன்பிற்கு அளவுண்டோ? ............................................ 231
* நானும் எழுத்தாளனானேன்! ............................................ 236

# காந்தி தரிசனம்

காரைக்குடியில் எனது சிறியதாயார் உமையாள் ஆச்சி அவர்கள் வீட்டில் தங்கிப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது எனக்கு வயது 10 இருக்கலாம்.

எனது சிறிய தாயார் அவர்கள், தேசபக்தர் திரு.சா.கணேசன் அவர்களின் சிறிய தகப்பனார் அவர்களின் மனைவி ஆவார். அதனால் அவர்கள் எல்லோரும் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள்.

அந்த வீடு எப்போதும் 'ஜே ஜே' என்றிருக்கும். தேசத் தொண்டர்கள் வருவதும் போவதும் திரு.சா.கணேசனைக் கண்டு பேசுவதுமாக இருப்பார்கள். எப்போதும் என் காதில் 'காங்கிரஸ்' என்றும் காந்திஜி என்றும் கேட்டுக்கொண்டே யிருக்கும். என் கண்கள் தேச பக்தர்களையும், கொடியையும் கதரையும் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டேயிருக்கும்.

என்னையறியாமலே நான் ஒரு காந்தி பக்தனாகவும், காங்கிரஸ் தொண்டனாகவும் மாறிக்கொண்டே வந்தேன். இந்த நிலையில் மகாத்மா காந்தி காரைக்குடிக்கு வருவதாக ஒரே பரபரப்பாக இருந்தது.

என் சிறிய தாயார் வீட்டின் முன் ஒரு திறந்த (டாப் இல்லாத) கார் ஒன்று அலங்காரம் செய்யப்பட்டு நின்றது. அதில்தான் மகாத்மாவை வைத்து ஊர்வலம் நடத்தப் போவதாகச் சொன்னார்கள்.

எனக்கு ஒரே துடிப்பு, காந்திஜியை நேரில் பார்க்கப் போகிறோம் என்ற ஆர்வம்.என் சிறிய தாயார் பல முறை

சாப்பிடக்கூப்பிட்டும் நான் போகவில்லை. வைத்த கண் வாங்காமல் காரையே பார்த்துக் கொண்டு நின்றேன். 'ஜே' கோஷம் காதைப் பிளந்தது; எங்கும் பரபரப்பு.

காந்தி மகாத்மா வந்துவிட்டார். காரிலும் ஏறி உட்கார்ந்து விட்டார். எனக்கோ ஒரே பதட்டம். நெருக்கியடித்து காரின் பின்பக்கம் சென்று விட்டேன். காந்திஜியின் முகம் தெரிய வில்லை. முதுகு மட்டும் தெரிந்தது. சடக்கென்று காரின் பின்புற முள்ள 'காரியரில்' தாவி ஏறி காந்திஜியின் முதுகைத் தொட்டேன். அவர் திரும்பிப்பார்த்து சிரித்தார்.

உடனே அங்கிருந்தவர்கள் நான் ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டதுபோல் நினைத்து என்மீது பாய்ந்து என்னைப் பிடித்துத் தூக்கினார்கள். காந்தியடிகள் , அவர்களை அடக்கி விட்டு என்னை தன் அருகில் வரும்படி அழைத்தார். நான் பயந்து கொண்டே அவரிடம் போனேன். அவர் ஒரு மோகனச் சிரிப்புச் சிரித்துவிட்டு என்னிடம் ஒரு ஆப்பிளைக் கொடுத்து கன்னத்தில் செல்லமாகத் தட்டினார்.

பிறகு மாலை போட வந்த கூட்டம் என்னை நெருக்கிப் பின்னுக்குத்தள்ளிவிட்டது. ஊர்வலம் புறப்பட்டுப் போயிற்று நானும் 'காந்திஜிக்கு ஜே ஜே' என்று கத்திக்கொண்டு பின்னே சென்றேன்.

ஊர்வலத்தில் போகும்போதே அந்த காந்தி ஆப்பிளை சுவைத்துச் சுவைத்துச் சாப்பிட்டேன். அந்த ஆப்பிள் என் ரத்தத்துடன் கலந்ததோ இல்லையோ 'காந்தி நாமம்' என் ரத்தத்துடன் அன்றே கலந்து விட்டது.

அன்றிலிருந்து இன்றுவரை நான் காந்தியடிகளைப் பின்பற்றி வருகிறேன். உண்ணும் போதும், உறங்கும்போதும்கூட காந்திஜியின் நினைப்பு என்னை விட்டு அகலுவதில்லை.

# பகத்சிங் பாட்ஜ்

'காந்தி' என்றும் 'காங்கிரஸ்' என்றும் சொல்லிக் கொண்டு படிக்காமல் திரு.சா.கணேசன் அவர்களையே சுற்றித் திரிந்த என்னை என் தாய் மாமன் தம்முடன் மலேயாவிற்குக் கூட்டிச் சென்றார்கள். அவர்களுக்கு மலேயாவில் டெலுக்கான்சன் என்ற ஊரில் வட்டிக்கடை இருந்தது. அந்த ஊரிலிருந்த ஆங்கிலோ சைனீஸ் ஸ்கூலில் என்னைப் படிக்க வைத்தார்கள். நான்கு ஆண்டுகள் அந்தப் பள்ளியில் படித்தேன்

அந்தப் பள்ளிக்கூடத்தில் நிறைய சீன மாணவர்கள் படித்தார்கள். அச்சமயம் ஜப்பான் நாடு சீனாமீது அக்கிரமமாகப் படையெடுத்தது. ஜப்பானை எதிர்த்து சீன மாணவர்கள் எல்லோரும் ஊர்வலம் நடத்தினார்கள்.

என் உள்ளத்தில் அமுங்கிக் கிடந்த கிளர்ச்சி எண்ணம் வீரிட்டெழுந்தது. நானும் ஊர்வலத்தில் கலந்து கொண்டேன். ஜப்பான் சாமான்களையெல்லாம்தெருவில் போட்டுக் கொளுத்தினோம். கடைகளுக்குள் புகுந்து ஜப்பான் துணி மணிகளை எல்லாம் எடுத்துத் தெருவில் எறிந்தோம்.

போலீஸ் எங்களை அடித்து வளைத்துப் பிடித்தது. கூட்டத்தில் நானும் போலீஸ் மத்தியில் அகப்பட்டுக் கொண்டேன்.

மலேயாவில் அப்போது நிறைய பஞ்சாபி சீக்கியர்கள் போலீஸ்காரர்களாக இருந்தார்கள், அதிகாரிகள் மட்டும் ஆங்கிலேயர்கள்தான். ஒரு சீக்கியப் போலீஸ்காரர், சீன

மாணவர்களுக்கு மத்தியில் ஒரு இந்திய மாணவனான நான் நிற்பதைக் கவனித்து விட்டார்.

மாணவர்களை போலீஸ் வேனில் ஏற்றினார்கள். என்னைக் கவனித்த சீக்கிய போலீஸ்காரர் ஒவ்வொரு மாணவராக போலீஸ் வேனில் ஏற்றிக் கொண்டிருந்தார் நான் வேன் அருகில் வந்ததும் அதிகாரிக்குத் தெரியாமல் சடக்கென்று என்னை வெளியே இழுத்து வேறு பக்கம் தள்ளி விட்டார்.

நான் வெகு தூரம் போய் விழுந்தேன். அதனால் நான் போலீசாரிடமிருந்து தப்பி விட்டேன். ஆனால் என் தாய் மாமனிடம் தப்ப முடியவில்லை. போலீஸ் அடியைவிட பலமான அடி அன்று கிடைத்தது.

சொன்னால் நம்பமாட்டீர்கள், அன்று மாலை மேற்படி சீக்கியபோலீஸ்காரர் என்னைத் தேடி வந்தார். எனக்கு ஒரே திகிலாக இருந்தது.

அவர் என்னைக் கூட்டிக் கொண்டு போய் ஒரு டீ கடையில் டீ வாங்கிக் கொடுத்து 'பகத்சிங்' படம் போட்ட பாட்ஜ் ஒன்றை என் சட்டையில் மாட்டி விட்டு பகத்சிங் கின் வீரம் தீரம் தியாகம் இவைகளைப் பற்றி எனக்குச் சொல்லி நானும் பகத்சிங் போல இந்திய நாட்டின் விடுதலைக்குப் பாடுபட வேண்டும் என்று கூறி விடைபெற்றுக்கொண்டு சென்றார்.

அன்றிலிருந்து பகத்சிங் போல புரட்சி வீரனாக வேண்டுமென்ற எண்ணம் மனதில் புயலடிக்க ஆரம்பித்தது. சிறு வயதில் நெஞ்சில் ஏற்பட்ட அந்த வேகம்தான் 1942-ல் பெரும்புயலாக மாறி தேவ கோட்டை திருவாடானை பகுதிகளில் புரட்சியாக வெடித்தது.

## பாட்டியின் சாபம்

நான்கு ஆண்டுகள் டெலுக்கான்சனில் (மலேசியா) படித்துவிட்டு பிறகு, என் சொந்த ஊருக்கு-சிறுவயலுக்கு-வந்து சேர்ந்தேன். என்னை தேவகோட்டைக்கு சுவீகாரம் விடுவதென்று என் பெற்றோரால் முடிவு செய்யப்பட்டது.

இந்த முடிவு என் பாட்டியாரை (என் தந்தையைப் பெற்றவர்) பெரிய அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அவர் என் தந்தையைப் பார்த்து ஆவேசமாக டேய் நாச்சியப்பா, நம்ம குடும்பத்திலிருந்து நான் கண்போல காத்து வளர்த்த பிள்ளையையா சுவீகாரம் விடுறே, என் பேச்சைக் கேளுடா பிள்ளையை விடாதே. இல்லே மீறிவிட்டே உன் குடும்பத்துக்கு ஆண் வாரிசே இல்லாமல் போகும் என்று சாபம் கொடுத்துவிட்டு என்னை மட்டும் வாழ்த்தி நீ நல்லா இருப்பே; போயிட்டு வா என்று விக்கி விக்கி அழுது விடை கொடுத்தார்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள். நான் பிறந்த வீட்டில் அதன் பிறகு ஆண் வாரிசு உண்டாகவில்லை,

பாட்டி சாபம் பலித்துத்தான் விட்டது.

ஆம் என் மூத்த சகோதரர் சுப்பையாசெட்டியார் அவர்கள் காலமாகிவிட்டார்கள். அவர்களுக்கு ஒருபுதல்விதான் உண்டு. திருமணம் செய்து கொடுத்தாகி விட்டது. என் சகோதரருக்கு ஆண் குழந்தை பிறக்கவில்லை. என் அண்ணியாரும் காலஞ் சென்று விட்டார்கள்.

என் இரண்டாவது சகோதரர் திரு. அழகப்பன் திருமண மாகிச் சில நாட்களில் இறந்துபோனார். அவர் இறந்து சில நாட்களில் அவரது மனைவியும் இறந்து போனாள். என் தம்பி இராமநாதனுக்கு ஒரு புதல்வி பிறந்தாள். அத்துடன் அவனும் இறந்து போனான்.

பாட்டியின் சாபம் பலித்ததென்று சொல்லாமல் இதற்கு வேறு என்ன காரணம் சொல்லமுடியும்?

நான்கு சகோதரர் பிறந்த வீட்டில் நான் சுவீகாரம் சென்றேன். மற்ற மூன்று சகோதரர்களுக்கு ஆண் குழந்தை பிறக்கவில்லை.

சொன்னால் நம்ப மாட்டீர்கள். அந்த வீட்டிற்கு ஆண் வாரிசு வேண்டுமென்று எனது பெரிய சகோதரர் திரு.சுப்பையா செட்டியார் அவர்களுக்கு மட்டும் இப்போதுஒரு பையனை சுவீகாரம் செய்திருக்கிறது.

## என் மனைவி

நான் தேவகோட்டைக்கு சுவீகாரம் போன பின் என்னுடைய பதிமூன்றாவது வயதில் எனக்குத் திருமணம் நடைபெற்றது. சொன்னால் நம்ப மாட்டீர்கள், என் மனைவிக்கு நான் தாலி கட்டவில்லை! வேறு யார் கட்டமுடியும் என்று பரபரப்படைய வேண்டாம்.

எங்கள் நகரத்தார் சமூகத்தில் முன்பு அப்படி ஒரு வழக்கம் இருந்து வந்தது. மணமகன் தொட்டுக்கொடுத்த தாலியை பங்காளிகளில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு பெரியவர் மணமகனின் பிரதிநிதியாகச் சென்று மணப்பெண்ணுக்கு திருப்பூட்டுவார்.* அதன் பின்னர் நடை பெறும் மணவறை நிகழ்ச்சியில்தான் மணமகன் மணமகள் நேரிடை சந்திக்கும் சடங்குகள் நடைபெறும்.

என் திருமணம் ஆறு நாட்கள் நடைபெற்றது. என் மனைவிக்கு அப்போது வயது 12. எங்கள் திருமணத்தில் பல பழக்க வழக்கங்கள் இருந்தாலும் பெண் எடுக்கிக் காட்டுவது என்பது சுவாரஸ்யமான ஒரு வழக்கமாகும்.

---

*திருப்பூட்டுதல் என்றால் தாலி கட்டுதல் என்று பொருள். அக்காலத்தில்-பெண்களுக்கு போதிய பாதுகாப்பு சமூகம்-சட்டம் இவைகளில் கிடையாது. தாலி கட்டியவன் கணவன் என்று இருந்தால் எவனாவது பலாத்காரத் தாலி கட்டிவிட்டாலும் கணவனாகி விடுவான். ஆகவே மாப்பிள்ளையின் பங்காளிகளில் சிறந்த ஒருவரைக் கொண்டு மணமகனுக்காகத் திருப்பூட்டுவது நகரத்தார் வழக்கம்.

மணமகளை அதுவரையில் மணமகன் பார்த்திருக்க மாட்டான். பெண் எடுக்கிக் காட்டும் சடங்கிற்கு மணமகன் குதிரைமேல் மணப்பெண் வீட்டுக்குச் செல்வான்; மணமகள் வீட்டு வாயிலின் முன் மணமகன் வந்ததும் மணப் பெண்ணின் அத்தை மணப்பெண்ணை அழைத்து வந்து (தூக்கிக்) காட்ட வேண்டும்.

அப்போதுதான் மாப்பிள்ளை பிள்ளையாண்டான் தனது வருங்கால வாழ்க்கைத் துணைவியைப் பார்க்க நேரும். ஏனெனில் மணப்பெண் தன் கைகளால் முகத்தை வேறு மூடிக்கொள்ளுவாள். அவள் கையை முகத்திலிருந்து எடுக்க பலர் முயற்சிப்பபார்கள், பாதி முகத்தைப் பார்த்தும் பாராமலும் தன் விதியை நொந்துகொண்டு மணமகன் திரும்ப வேண்டியதுதான்.

எனக்கும் இதே பாணியில்தான் திருமணம் நடந்தது. திருமணம் எல்லாம் முடிந்த பிறகு ஒரு நல்ல நாள் பார்த்து என் அன்னை இன்று உன் பெண்டாட்டியுடன் போய் பேசிக் கொள் என்று சொல்லி என்னைப் பள்ளி அறைக்கு அனுப்பினார்.

நானும் சரி என்று என் மனைவியுடன் பேசப்போனேன். என் மனைவி அப்போது நல்ல தூக்கத்தில் இருந்தாள். அவளுக்கு வயது 12 தானே?

அவள் தூங்கும்போது நான் மட்டும் ஏன் விழித்திருக்க வேண்டும்? ஆகவே நானும் விழுந்து தூங்கினேன். எனக்கும் அப்போது வயது 13 தானே! அன்று தூங்கியதற்குப் பிராயச்சித்தமாக அதன் பிறகு எனக்காக என் மனைவி பல இரவுகள் கண் விழித்து, கண் கலங்கியிருக்கிறாள்! காரணம் என்னுடைய அரசியல்தான்!

பல நாட்கள் நான் பொதுக்கூட்டம் என்றும் மாநாடு என்றும் போய்விட்டு இரவு 11 மணி 12 மணி 2 மணி என சில சமயம்

காலை 5 மணி இப்படி பல மாதிரியாக வருவேன். நான் வந்து சாப்பிட்ட பிறகுதான் அவள் சாப்பிடுவாள்.

அவளுக்கு அரசியல் எல்லாம் தெரியாது. "எதற்காக நம் கணவர் இப்படி எல்லாம் கஷ்டப்படவேண்டும்? நேரா நேரத்தில் சாப்பிடாமல் -தூங்காமல், தொண்டை வலிக்கப் பேசி, பல இடங்களுக்கு அலைந்து திரிந்து ஏன் சிரமப்பட வேண்டும்?" என்று நினைப்பாள்.

அவள் எதுவும் கேட்டால் உனக்கு ஒன்றும் தெரியாது, பேசாமல் வாயை மூடிக்கொண்டு கிட, என்று நான் எத்தனையோ முறை அலட்சியமாக அவளைப் பேசியிருக்கிறேன். ஆயினும் அதை எல்லாம் அவள் மனதில் வைத்துக் கொள்ள மாட்டாள், "நம் கணவன்- நம் குழந்தைகள்- நம்குடும்பம்" நன்றாக இருக்க வேண்டும். நாலுபேர் நம்மைப்பற்றி கௌரவமாக நினைக்க வேண்டும். இதுதான் அவளுக்குத் தெரிந்தது.

யாருக்கும் எந்தத் தீங்கும் மனதால் கூடநினைக்க அவளுக்குத் தெரியாது. 1942-ல் நடைபெற்ற போராட்டத்தின் போது போலீசாரின்கெடுபிடியில் மிகவும் சிரமப்பட்டு விட்டாள். மக்கள் திருவாடானை சிறைச்சாலையை உடைத்து என்னை விடுதலைசெய்ததும், நான் தலைமறைவாகச் சென்றுவிட்டேன். அச்சமயம் எங்கள் வீட்டில் நடைபெற்ற ஒரு திருமணத்தை ஒட்டி நான் வந்திருப்பேன என்று போலீசார் யூகித்து, திருமண வீட்டிற்குள் புகுந்து பெருங்கலாட்டா செய்து விட்டார்கள். அதில் என் மனைவி அகப்பட்டுக் கொண்டாள்.

கைக் குழந்தையுடன் இருந்த அவளை ஓட ஓட விரட்டி அடித்தார்கள் போலீசார். அவள் விரலில் போட்டிருந்த விலை மதிப்புள்ள வைர மோதிரம் ஒன்று கீழே விழுந்து விட்டது. அதை எடுக்கக்கூடப் பயந்து எடுக்காமலேயே ஓடியிருக்கிறாள். மோதிரம் போனது போனதுதான்.

அவள் ஏற்கனவே பயந்த சுபாவம் உள்ளவள். அதிர்ந்து ஒரு வார்த்தை பேசமாட்டாள். ஆனால்-எதிர்பாராதவிதமாக இந்த போலீசார் விரட்டிய சம்பவம் அவளைக் கொஞ்சம் தைரியசாலியாக்கியது. சிறிது அரசியலிலும் சிரத்தை ஏற்பட வைத்தது.

1944 முதல் அவள் என்னுடன் சென்னையில் வசித்தாள். நான் ஒரு அரசிய்ல்வாதியாகையால், வியாபாரத்தை லாபகரமாக நடத்தத் தெரியவில்லை. தமிழ்ப்பண்ணை புத்தகங்களை அழகுறப்போடுவதிலும், புத்தக வெளியீட்டு விழாக்கள் நடத்துவதிலும், பண்ணையை நாடிவரும் தேச பக்தர்கள், தமிழ் ஆர்வமுள்ளவர்கள், எழுத்தாளர்கள் இவர்களுக்கு உதவி செய்வதிலும் அதிக நாட்டமுடையவனாக இருந்து வந்தேன். அதனால் வியாபாரத்தில் லாப நஷ்டம் பார்த்து நெளிவு சுளிவு பார்த்து நடத்தக்கூடிய வியாபார நுட்பம் தெரியவில்லை. வந்ததெல்லாம் லாபம் என்று நினைத்து செலவு செய்து வந்தேன்.

இப்படியிருந்தால் எனக்குப் பணமுடை வராமல் இருக்குமா? சொன்னால் நம்பமாட்டீர்கள், எனக்குப் பணமுடை வரவில்லை. காரணம் என் மனைவி அப்போதைக்கப்போது தன் நகைகளை விற்றுப் பணமாக்கி எனக்குப் பணமுடை தெரியாமல் செய்து வந்தாள்.

டாக்டர் டி.எஸ்.எஸ்.ராஜன் அவர்கள் ராஜாஜி மந்திரி சபையில் இருந்தபோது, திரு.வி.க. மணிவிழாவிற்கு அழைக்கச் சென்றிருந்தேன். ''என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?'' என்று டாக்டர் ராஜன் கேட்டார்.

''புத்தகம் போட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று சொன்னேன்.

''அது சரி சாப்பாட்டிற்கு என்ன செய்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

நான் பளிச்சென்று, ''என் மனைவியின் நகைகளை விற்று சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்'' என்று சொன்னேன்.

இதை டாக்டர் ராஜன், ராஜாஜி அவர்களிடம் சொல்லி விட்டார். ராஜாஜிக்கு அப்போதுதான் என் நிலைமை புரிந்தது. ராஜாஜி மறுநாள் என் வீட்டுக்கு வந்து என் மனைவியிடம் ''இனிமேல் நகைகளை விற்பதில்லை என்று உறுதிமொழி வாங்கிக் கொண்டு போனார். அன்றிலிருந்து என் மனைவி எந்த நகையையும் விற்காமல் மிஞ்சியதைப் பத்திரப்படுத்திவிட்டாள்.

அவள் இறக்கும்போது, பத்திரப்படுத்திய அந்த நகைகளை என்னிடம்கொடுத்து, ''இது ராஜாஜியால் தான் மிஞ்சியது. அவர் நினைவாக இதைப் பத்திரமாக வைத்திருங்கள்'' என்று சொன்னாள்.

இன்றும் அந்த நகைகள் ராஜாஜியின் நினைவாக என்னிடம் பத்திரமாக இருக்கிறது. அதில் என் மனைவி உமையாளின் நினைவும் பூரணமாக இருக்கிறது.

## முதல் சொற்பொழிவு

தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருக்கும்போது வகுப்பு மாணவர்கள் கூட்டம் ஒவ்வொரு வாரக் கடைசியில் நடக்கும். வாரத்திற்குச் சில மாணவர்கள் வீதம் பகிர்ந்துகொண்டு குறிப்பிடப்பட்ட விசயத்தைப்பற்றிச் சுருக்கமாகத் தமிழில்பேசவேண்டும். கட்டாயமாக எல்லா மாணவர்களும் ஏதாவது ஒரு வாரத்தில் பேச வேண்டும். இப்படிப்பட்ட இக்கட்டான நிலை எனக்கும் ஒரு வாரம் வந்தது.

எப்போதும் பேசவேண்டிய விஷயத்தைப் பற்றி ஒரு வாரம் முன்பே ஆசிரியர் அறிவித்து விடுவார்.

நான் பேச வேண்டிய அந்த வாரத்தின் பொருள் 'செல்வம்' என்பதாகும். என்ன செய்வதென்று எனக்குப் புரியவில்லை. இதற்கு முன் நான் எந்தக் கூட்டத்திலும் பேசியதுமில்லை. ஒரே குழப்பமாக இருந்த நேரத்தில் எங்கள் உயர்நிலைப் பள்ளிக்கு எதிரிலிருந்த "ஹரிஜன ரெங்கண்ணா" அவர்களின் இல்லத்திற்கு எப்போதும் போல் சென்றேன்.

திரு ரெங்கண்ணா அவர்கள் அய்யங்கார் குடும்பத்தில் பிறந்தவர். அவர் ஹரிஜன சேவை செய்து வந்ததனால் "ஹரிஜன ரெங்கண்ணா" என்று அன்புடன் அழைக்கப்பட்டு வந்தார்.

அவர் என்னிடம் ரொம்ப அன்பு கொண்டவர். சிறு வயதிலே நான் 'காந்தி' 'காங்கிரஸ்' என்று பேசுவதைக் கேட்பதில்

அவருக்கு மெத்தமகிழ்ச்சி. ஆகவே அடிக்கடி நான் அவர் இல்லத்திற்குச் செல்வேன்.

அன்று நான் சென்றபோது அவர் மேஜைமீது ஆனந்தவிகடன் பத்திரிகை இருந்தது. அதன் மேலட்டை மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது. படங்கள் நிறைய இருந்தன. உள்ளே பிரித்துப் படித்தேன். வேடிக்கை வேடிக்கையாக துணுக்குகளும் கதைகளும் இருந்தன.

அதில் கொட்டை எழுத்தில் முதலில் இரண்டு பக்கம், "பொருளாதாரம், பணம், செல்வம் என்றெல்லாம் விவரித்து எழுதி சின்னஞ் சிறுகதை மூலமும், துணுக்குகள் மூலமும் விளக்கப்பட்டிருந்தன. சிறுவனாகிய எனக்கே மிகத் தெளிவாக விளங்கியது நான் பேச வேண்டிய விஷயமும் அதுதான். அதனால் நான் பரபரப்படைந்திருந்தேன்.

வழக்கம் போல ஹரிஜன ரெங்கண்ணா வெளியே வந்தார். நான் வணக்கம் செலுத்திவிட்டு, சார் இது..." என்று இழுத்தேன். வேண்டுமா எடுத்துக் கொண்டு போ, 'கல்கி' ன்னு ஒருத்தன் இதிலே அருமையா எழுதுகிறான், அவன் எழுதுறதை விடாம படி; சமத்தாயிடுவே" என்று சொன்னார்.

ஒரே ஓட்டம், 'ஆனந்த விகடன்' இதழில் எழுதியிருந்த தலையங்கத்தைப் படித்து நன்றாக மனப்பாடம் செய்து கொண்டேன்.

அந்த வாரம் மாணவர் கூட்டம் ஆரம்பமாயிற்று உள்ளூர் வக்கீல் திரு.ராமசாமி அய்யங்கார். அவர்கள் தலைமை வகித்தார். அவர் செல்வம் என்பது பற்றிச் சிறது நேரம் பேசினார். வேறு சில மாணவர்களும் பேசினார்கள். கடைசியாக என் முறை வந்தது.

மேடையில் வந்து நின்றேன். கைகால் உதற, கண்கள் சுழல, நாக்கு குளறியது. ஆயினும் எப்படியோ சமாளித்து, நான் மனப்பாடம் செய்து வைத்திருந்த ஆனந்தவிகடன் தலையங்கத்தைப் பேச ஆரம்பித்தேன். சிறிது நேரத்தில் கை தட்டுதலும், சிரிப்பொலிகளும் எனக்கு உற்சாகத்தைக் கொடுத்தன.

பின்னர் வெகு நிதானமாகவும், குழப்பமில்லாமலும் பேசி முடித்தேன். எல்லோரும் அசந்து போனார்கள். செல்வத்தைப் பற்றி இவ்வளவு அழகாக ஒரு சிறுவனால் எப்படிப் பேச முடிந்தது என்று ஆசிரியர்களும் தலைமை வகித்தவரும் வியப் படைந்தார்கள். தலைமை வகித்த வக்கீல் திரு.ராமசாமி அய்யங்கார் அவர்கள், என்னைத் திருஞான சம்பந்தருக்கு ஒப்பிட்டுப் பேசிப் பாராட்டினார்.

விஷயம் மனப்பாடம் என்பது அவருக்குத் தெரியாதல்லாவா? அன்றிலிருந்து ஒவ்வொரு வாரமும் ஆனந்த விகடனை வாங்கி ஒன்று விடாமல் படிப்பதை வழக்கமாக்கிக்கொண்டேன். பல தலையங்கங்களை மனப்பாடம் செய்துகொண்டேன்.

பின்னர் கேட்பானேன்! சங்கங்கள், வாசகசாலைகள், பொதுக்கூட்டங்கள் என்று சொற்பொழிவு செய்ய ஆரம்பித்தேன். குரல் மட்டும் என்னுடையதுதான். விஷயம் அனைத்தும் 'கல்கி ' எழுதியதாகத்தான் இருக்கும்.

## கல்கியைக் கண்டேன்!

தேவகோட்டைக்கு ஒரு சமயம் ராஜாஜி வந்திருந்தார். ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடாகியிருந்தது கூட்டங்களில் பேச வேண்டுமென்ற மோகம் எனக்கு அதிகமாக இருந்த நேரம். ஹரிஜன ரங்கண்ணாவைக் கெஞ்சி ராஜாஜி வரும் கூட்டத்தில் பேச அனுமதி வாங்கிக் கொண்டேன். ஆனால் ராஜாஜி கூட்டத்திற்குவருவதற்கு முன்பே என்னைப் பேசச் சொல்லி விட்டார்கள்.

நான் ராஜாஜியைப் பற்றி ஆனந்தவிகடனில் வந்த கட்டுரையை மனப்பாடம் செய்து வைத்திருந்தேன். நான் பேச ஆரம்பித்ததும் நல்ல வேளையாக ராஜாஜி வந்துவிட்டார். ஒரே கரகோஷம். எனக்கு உதறல் எடுத்தது. ஆனால் ராஜாஜி அன்புடன் என்னைத் தட்டிக் கொடுத்து "தைரியமாகப் பேசு " என்றார்.

நான் மளமள்வென்று ராஜாஜியைப் பற்றி மனப்பாடம் செய்து வைத்திருந்ததைப் பேசினேன். சபையோர்கள் ஒவ்வொரு கருத்துக்கும் கரகோஷம் செய்து உற்சாக ஒலி எழுப்பினார்கள். பேசி முடிந்ததும் ராஜாஜியின் பாதத்தைத் தொட்டு, வணங்கினேன்.

ராஜாஜி என் தலையைத் தொட்டு "நன்றாக மனப்பாடம் செய்திருக்கிறாய்" என்று சொல்லி ஆசி கூறினார். ராஜாஜி மிக புத்தி கூர்மையுள்ளவரல்லவா? அதனால் நான் மனப்பாடம் செய்ததைக் கண்டு பிடித்து விட்டார்.

நான் கலக்கத்துடன் அவருக்குப் பின்புறம் போய் அமர்ந்தேன். எனக்கு அருகிலிருந்த ஒருவர் என்னைப் பார்த்து, ரொம்ப நன்றாகப் பேசினீர்கள், இதையெல்லாம் எதில் படித்தீர்கள்? என்று கேட்டாரே ஒரு கேள்வி. எனக்கு வெல வெலத்து விட்டது "ஏன்?" என்று கேட்டேன்.

"இல்லை இதை நானும் எதிலோ படித்த மாதிரி இருக்கிறது" என்றார். சரி இனி இவரிடம் மறைக்கக் கூடாதென்று, ஆனந்த விகடனில் இருந்து என்றேன்.

"யார் எழுதியது தெரியுமா?" என்றார்.

"கல்கி" எழுதியது என்றேன் நான்.

"கல்கியைத் தெரியுமா?" என்றார் அவர்.

"தெரியாது நான் பாத்ததில்லை என்றேன்."

"பார்த்தால் என்ன செய்வீர்கள்?" என்றார் அவர்.

"பார்த்தால் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்யவேண்டுமென்று இருக்கிறேன்" என்றேன்.

"சரி அப்படியானால் என்னையே நமஸ்காரம் பண்ணுங்க"என்றார்.

ஏன் என்றேன்.

நான்தான் அந்தக் 'கல்கி' என்றாரே பார்க்கலாம்.

எனக்கு சந்தோச மிகுதியால் மூச்சே நின்றுவிடும்போல் இருந்தது. அவர் கைகளைப் பற்றி-பிடித்து என் கண்களில் ஒற்றிக்கொண்டேன். என் ஆனந்தக் கண்ணீர் அவர் திருக் கரங்களை நனைத்தது. நான் அவர்மீது வைத்திருந்த அன்பைக் கண்டு அவர் உருகிவிட்டார். அன்று தொடர்ந்த எங்கள் அன்பு இன்றளவும் என் இதயத்தில் பசுமையாக இருந்து வருகிறது.

## காவி நிறச் சட்டை

''நீங்கள் ஏன் எப்பொழுதும் காவிகலர் சட்டையை அணிகிறீர்கள்? என்று பலர் என்னைக் கேட்டதுண்டு. அது சம்பந்தமாக ஒரு சம்பவம் உண்டு.

நான் 1935-36ல் கோபி செட்டிபாளையத்தில் டைமன் ஜுபிலி உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். அச்சமயம் கோபியில் நடைபெற்ற ஓர் அரசியல் மாநாட்டிற்காகத் தலைவர் சத்யமூர்த்தி அவர்கள் வந்திருந்தார். அவரை நான் படித்துக் கொண்டிருந்த டைமண்ட் ஜுபிலி உயர்நிலைப் பள்ளிக்குப் பேச அழைத்தோம். நான் மாணவர் சங்கக்காரியதரிசி. எனக்கு வயது 15 இருக்கும். நல்ல சில்க் சட்டையும், ஜரிகை வேஷ்டியும் கட்டிக்கொண்டுதான் பள்ளிக்குப் போவேன். அன்றும் அப்படித்தான் போயிருந்தேன்.

திரு.சத்யமூர்த்தி அவர்கள் எங்கள் பள்ளிக்கு வந்து ஆங்கிலத்தில் பேசி எங்களை வியப்பில் ஆழ்த்தினார். நான் தமிழில் நன்றி கூறும்போது ''தமிழர்களாகிய நாம் ஒருவருக்கொருவர் பேசும்போது ஆங்கிலத்தில் பேசுவது எனக்கு அவ்வளவு சரியாகப் படவில்லை. அதனால்தான் நான் தமிழில் நன்றி கூறுகிறேன்,'' என்று சொன்னேன்.

உடனே சத்யமூர்த்தி என் மொழிப்பற்றைப் பாராட்டி, ''அது சரி. நீ தாய் மொழிப் பற்றுக் கொண்டிருந்தால் மட்டும் போதுமா? தாய்நாட்டுப் பற்று வேண்டாமா?'' என்றார். ''அதுவும்

வேண்டியதுதான்", என்றேன். அப்படியானால் இன்றிலிருந்து நீ கதர் கட்ட வேண்டும்'' என்றார். ''சரி க்ட்டுகிறேன்'' என்றேன். இன்று மாலையில் நடக்கும் அரசியல் மாநாட்டுக்கு வா'', என்று சொல்லிவிட்டுப் போனார்.

நான் அன்று மாலையில் நடந்த அரசியல் மாநாட்டுக்குச் சென்றேன். திரு.சத்யமூர்த்தி என்னைத் தன் அருகில் உட்கார வைத்துக் கொண்டார்.

என்னையும் மாநாட்டில் பேசுவோர் பட்டியலில் சேர்த் திருந்தார் திரு.சத்யமூர்த்தி. மாநாட்டில் என் பேச்சு ரொம்ப நன்றாக அமைந்தது. தலைவர் சத்யமூர்த்தி எழுந்து என்னை மனதாரப் பாராட்டி என் நாவன்மையைப் புகழ்ந்தார்.

அவர் பேசிய தமிழ்-தோரணை-உச்சரிப்பு-விஷய அழுத்தம்- கணீர் என்ற குரல்-இவையனைத்தும் என்னை மெய்மறக்கச் செய்தன. தன் பேச்சு முடிவில் தலைவர் சத்யமூர்த்தி அவர்கள் என்னை நோக்கி, ''இன்று முதல் நீ கதரே கட்ட வேண்டும். காங்கிரஸ் உறுப்பினராக வேண்டும். உன் சேவை நம்நாட்டுக்கு ரொம்பத் தேவை'' என்று கூறி தான் அணிந்திருந்த காவி கலர் அங்கவஸ்திரம் ஒன்றைச்சபையின் கரகோஷத்துடன் எனக்குப் போர்த்தினார்.

என் உடம்பில் முதலில் பட்ட கதர் துணி காவிக்கலர் துணியே. அதுவும் சத்யமூர்த்தி அவர்களால் அணிவிக்கப் பட்டதாகும். அந்தப் பெரும் பாக்யத்தை நான் என்றும் மறக்கமாட்டேன். அந்த நினைவாகவே நான் என்றும் கதரில் காவி நிறச் சட்டையையே அணிகிறேன்.

# தேசபக்தி

நான் தேவகோட்டை நகரத்தார் உயர்நிலைப்பள்ளியில் எஸ்.எஸ்.எல்.சி. படித்துக் கொண்டிருக்கும்போது கமலா நேரு அம்மையார் இறந்து போனார்கள். அதற்கு விடுமுறைவிட வேண்டுமென்று தலைமையாசிரியரிடம் கேட்டுக் கொண்டேன். அவர் ஒரேயடியாக முடியாது என்று மறுத்து விட்டார். வேறு வழியில்லாமல் ஹர்த்தால் செய்வதென்று முடிவு செய்து மாணவர்களை ஒன்று திரட்டி ஊர்வலமாகக் கூட்டிக் கொண்டுபோய் விட்டேன்.

தலைமையாசிரியர் மிகுந்த கோபம் கொண்டு என்னை பள்ளியிலிருந்து டிஸ்மிஸ் செய்து விட்டார். நான் அவரிடம் நேரில் சென்று ''தேச பக்தியாக இருப்பது குற்றமா'' என்றேன். ''ஹர்த்தால் செய்வது பெருங்குற்றம். ஆயினும் நீ செகரட்ரிக்கு உறவினனாக இருப்பதால் மன்னிப்பு எழுதிக் கொடு, உன்னை மீண்டும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளுகிறேன்'' என்றார்.

''நான் செய்தது குற்றமில்லை. நாட்டின் தலைவி இறந்ததற்குக்கூட பள்ளிக்கூடம் விடுமுறை விடாததுதான் குற்றம். ஆகவே நீங்கள்தான் தவறை உணர வேண்டும். நான் மன்னிப்புக் கேட்க மாட்டேன்'' என்றேன்.

''நீ வெளியே போ'' என்று கூச்சல் போட்டார். ''நான் இப்போது வெளியே போகிறேன். ஆனால் நீங்கள் இந்தப் பள்ளியை விட்டு வெளியே போகும் காலம் விரைவில் வரும்'' என்று கூறிவிட்டுச் சென்றேன்.

பிறகு இரண்டு மாத காலம், மாணவர்கள் தொடர்ந்து ஹர்த்தால் செய்ததால் நிர்வாகம் ஸ்தம்பித்தது.

தலைமை ஆசிரியர் ராஜினாமா செய்துவிட்டு பள்ளியை விட்டு வெளியே போய்விட்டார். எனது பள்ளிப் படிப்பும் அத்துடன் முடிந்தது. பின்னர் ஒரு சமயம் ஒரு மாநாடு சம்பந்தமாக நான் திருச்சிக்குப் போயிருந்தபோது மேற்படி தலைமை ஆசிரியரைச் சந்திக்க நேர்ந்தது.

"என்ன படிக்கிறாய்?" என்று கேட்டார். "தங்கள் புண்ணியத்தினால் என் பள்ளிப் படிப்புத்தான் முடிந்து விட்டதே?" என்றேன்.

"உன் புண்ணியத்தினால் என் வேலையும் போய் விட்டதல்லவா?" என்றார். இருவரும் வாய்விட்டுச் சிரித்தோம்.

"என் வீட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டுத்தான் போகவேண்டும். நாம் இருவரும் இனி நண்பர்களாக இருப்போம்" என்றார்.

சரி என்று அவர் வீட்டுக்குச் சென்றேன். அன்பாக உபசாரம் செய்து விருந்தளித்தார். சாப்பிட்டு முடிந்ததும் ஒரு சிறு பெண் குழந்தையைத் தூக்கிக் கொண்டு வந்தார்.

"இது யார் சார்?" என்றேன். "என் பேத்தி" என்று சொல்லிவிட்டு "இவள் பெயர் என்ன தெரியுமா? கமலா" என்றார். நான் வியப்பால் அவரையே நோக்கினேன். அவர் சொன்னார், கமலாநேரு இறந்த அன்று இவள் பிறந்தாள். அதனால் இவளுக்குப் பேர் கமலா என்று வைத்தேன். தேச பக்தி என்பது உனக்கு மட்டும்தான் சொந்தமா?" என்று கேட்டார்.

'உங்கள் தேச பக்திக்கு தலை வணங்குகிறேன்,' என்று சொல்லிவிட்டு விடைபெற்றுக் கொண்டேன்.

# முதல் காங்கிரஸ் கூட்டம்

நான் 'மைக்' இல்லாத காலத்தில் மேடையில் பேசத் துவங்கியவன். நான் காங்கிரஸ் கூட்டங்களில் பேச ஆரம்பித்த காலங்களில் கூட்டம் நடத்த யாரும் முன் வரமாட்டார்கள். அச்சகத்தில் துண்டுப் பிரசுரம் அச்சடித்துக் கொடுக்க மாட்டார்கள். "காங்கிரஸ் கூட்டம் என்று" அச்சடித்தால் ஒரு வேளை போலீஸ் தொந்தரவு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்ற பயம்தான் காரணம்!

முதன் முதலில் நான் பேசிய காங்கிரஸ் கூட்டம் என் நினைவுக்கு வருகிறது. கூட்டம் நடத்துவதற்கு அப்போது நான் கையாண்ட முறை, கழுத்தில் ஒரு தமுக்கைக் கட்டிக்கொண்டு தெருத் தெருவாகச் சென்று தமுக்கடித்து, "இன்று மாலை ஜவஹர் மைதானத்தில் மாபெரும் காங்கிரஸ் பொதுக்கூட்டம், நானே பேசுவேன் அனைவரும் வருக" என்று உரக்கச் சத்தம் போட்டுக் கொண்டே சென்றேன்.

மாலையில் ஜவஹர் மைதானம் சென்றால் மேடை இல்லை, 'மைக்' இல்லை எதுவுமே இல்லை. அதற்காக கொஞ்சமும் மனம் தளராமல் பக்கத்திலிருக்கும் பெட்டிக்கடையிலுள்ள ஒரு பெஞ்சைத் தூக்கிப் போட்டு, ஒரு கம்பை ஊன்றி அதில் ஒரு அரிக்கேன் விளக்கை மாட்டி, காங்கிரஸ் கொடியை ஒரு பக்கம் நட்டு, பெஞ்சிமேல் ஏறி நின்று, "அன்பார்ந்த சகோதர சகோதரிகளே" என்று உரக்கப் பேச ஆரம்பித்தேன். எதிரில் பிரம்மாண்டமான கூட்டமாக ஏழேபேர் அமைதியின் சொரூபமாக அமர்ந்திருந்தார்கள். அனைவரும் எனது நெருங்கிய உறவினர்கள், சொந்தக்காரப் பையன் என்ன பேசப் போகிறான் என்று பார்க்க வந்தவர்கள்.

நானும் அவர்களைப் பார்த்துக் கொண்டே நம் நாட்டை வெள்ளைக்காரன் ஆள்கிறானே உங்களுக்கு வெட்கமில்லையா, ரோஷமில்லையா, மானமில்லையா என்று அடுக்கிக் கொண்டே போனேன். அந்தப் பக்கம் இந்தப்பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை.

அந்த ஏழு பேரைப் பார்த்தே பேசிக் கொண்டிருந்தேன். கொஞ்சம் நான் அசந்தாலும் ஏழு பேரில் யாராவது எழுந்து போய்விடுவார்கள். ஆகவேதான் என் பார்வை அவர்கள் மேலே இருந்தது.

சொற்பொழிவின் மத்தியில் போலீஸ் ஏட்டய்யாவின் சிகப்புத் தொப்பி தூரத்தில் தெரிந்தது. ஏட்டையா வருவது தெரிந்ததும் கூட்டத்திலிருந்த ஏழுபேரில் நால்வர் உலக "ரெக்கார்டை"முறியடிக்கும் அளவிற்கு "லாங் ஜம்ப்" செய்து பக்கத்திலிருக்கும் வெற்றிலைப்பாக்குக் கடையில் குதித்து ஏதோ வெற்றிலை போட வந்தவர்கள்போல் பாவலா செய்து கொண்டு நின்றார்கள்.

பாக்கி மூவரும் ஓடவும் முடியாமல் உட்காரவும் முடியாமல் திரிசங்கு சொர்க்கம்போல் தத்தளித்துக் கொண்டிருந் தார்கள். அந்நாளில் காங்கிரஸ் கூட்டங்களுக்கு வரவே மக்கள் அப்படிப் பயந்து கொண்டிருந்தார்கள்.

ஏட்டய்யா ஜம்மென்று மீசையை முறுக்கிவிட்டுக் கொண்டு என்முன்னால் வந்து நின்று மிக மரியாதையாக, டேய் நிறுத்துடா என்றார்.

"ஏன்?" என்றேன்.

"144" என்றார்

"உத்தரவு எங்கே?" என்றேன்.

ஏட்டய்யாவை நான் இவ்வளவு தூரம் எதிர்த்துப் பேசியதும் கேள்வி கேட்டதும் சுற்றி நின்ற மக்களுக்கு ஒரு நடுக்கத்தையே கொடுத்தது. ஏனென்றால், அக்காலத்தில் போலீஸ் ஏட்டய்யா என்றால் எல்லோரும் நடுங்குவார்கள். அக்கால ஏட்டுகளுக்கு நிறைய அதிகாரம் இருந்தது. மீசையும் நிறைய இருந்தது. இக்கால ஏட்டுகளுக்கு மீசையும், சுருக்கம், அதிகாரமும் சுருக்கம். ஒரு கிராமத்திற்கு ஏட்டு வந்தால் கிராமமே நடுங்கும். வெள்ளைக்காரன் தன் அதிகாரத்தைச் சாமர்த்தியமாக அப்படி நடத்திக் கொண்டிருந்தான் நம் மக்களின் அன்றைய நிலை பற்றி மகாகவி பாரதியார் கூறினார்.

"சிப்பாயை கண்டு அஞ்சுவார்- ஊர்ச்
சேவகன் வருதல் கண்டு மனம்பதைப்பார்;
துப்பாக்கிக் கொண்டு ஒருவன்-வெகு
தூரத்தில் வரக்கண்டு வீட்டிலொளிப்பார்;
அப்பால் எவனோ செல்வான்-அவன்
ஆடையைக் கண்டுபயந் தெழுந்து நிற்பார்;
எப்போதும் கைகட்டுவார்-இவர்
யாரிடத்தும் பூனைகள்போல் ஏங்கி நடப்பார்
நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால்."

இது வெறும் பாரதியாரின் கவிதை அல்ல அவர் கதறி அழுதது. பாரதியாரின் இந்தக் கூற்றை அன்று நான் நேரில்

கண்டேன். சுற்றி நின்ற மக்கள் பயந்து செத்துக் கொண்டிருந்தார்கள். உறவினர்கள் என் வாயை மூடும்படி சைகை காட்டினார்கள்.

இதற்குள் இன்ஸ்பெக்டர் அங்கு வந்து விட்டார். ஏட்டய்யாவிற்கே அந்தப் பயம் என்றால், இன்ஸ்பெக்டர் வந்தால் கேட்கவா வேண்டும்? அந்தக் காலத்து இன்ஸ்பெக்டர் சரிகை டர்பன் வைத்திருப்பார். அட்டகாசத்தின் மறுபெயர் இன்ஸ்பெக்டர் எனலாம்.

இன்ஸ்பெக்டரைக் கண்டதும் ஏட்டய்யா நாய்க்குட்டி போலக் குழைந்தார். இன்ஸ்பெக்டர் மிடுக்காக, ஏட்டய்யாவையும் என்னையும் சேர்த்து மரியாதை யாக என்னடா சொல்றான்? என்றார்.

"144 உத்தரவைக் கேட்கிறான்" என்றார் ஏட்டு

"கேட்டால் கொடுக்க வேண்டியதைக் கொடு" என்றார் இன்ஸ்பெக்டர்.

ஏட்டய்யா "உத்தரவை"க் கொடுத்தார் என்றா நினைக்கிறீர்கள்?

பெஞ்சிமேலேஏறி என் பிடரியில் ஓங்கி ஒரு அறை கொடுத்தார். எதிர்பாராத இந்த அடியால் பெஞ்சிலிருந்து தரையில் குப்புற விழுந்தேன்.

உடனே அங்கு நின்ற நாலைந்து போலீஸ்காரர்களும், "ஐயோ பெரிய இடத்துப் பையன் கீழே விழுந்து விட்டானே " என்று தூக்கி விட்டார்கள் என்றா நினைக்கிறீர்கள்? அவர்கள் சிறந்த கால்பந்தாட்ட வீரர்கள் போலவும் நினைத்து என்னை காலால் உதைத்துத் தூக்கிவிட்டார்கள்.

இவ்வளவு நடந்தும் ''ஏன்'' என்று கேட்பார் யாரும் இல்லை. அங்கு நின்ற ஊர்மக்கள், உறவினர்கள் அனைவரும் ஊமையராய், செவிடர்களாய்-குருடர்களாய் நின்று கொண்டிருந்தார்கள்.

போலீசார் என் கையில் விலங்கை மாட்டி ஒரு சங்கிலியால் அதைப் பிணைத்து நாயை இழுத்துக் கொண்டு செல்வதுபோல் என்னை கொண்டு சென்றார்கள். அப்போது அந்த இன்ஸ்பெக்டர் ''புண்யவான்'' சொன்னார்.

இவனைக்கடைவீதி வழியாக நாலுபேர் பார்க்க இழுத்துச் செல்லுங்கள். அப்பொழுதுதான் ஊரில் மற்றவர்களுக்கும் பயம் இருக்கும். இந்த மாதிரி இனி எந்தப் பயலும் காங்கிரஸ் கீங்கிரஸ் என்று வாலாட்ட மாட்டான் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

பின்னர் போலீஸ் ஸ்டேசனுக்கு கூட்டிச் சென்று என்னை எச்சரிக்கை செய்து விடுதலை செய்து விட்டார்கள். இந்தச் சம்பவத்தின்மூலம் என்னைப் பற்றி ஊரில் பலருக்குத் தெரிய ஆரம்பித்தது. பலர் இதைப் பற்றி ரகசியமாகப் பேசினார்கள். சிலர் தைரியமாக வெளிப்படையாகவும் பேசினார்கள்.

இதற்குப் பிறகு சில இளைஞர்கள் என்னுடன் நட்புக் கொண்டார்கள். அவர்களும் கதர் கட்ட ஆரம்பித்தார்கள்.

சொன்னால் நம்பமாட்டீர்கள் என் முதல் கூட்டம் ஏழு பேரை வைத்து ஆரம்பித்தேன். அதுவே பின்னர் ஏழு நூறாயிற்று. ஏழு ஆயிரமாயிற்று. இப்படி என் அனுபவத்தில் எழுபதாயிரம் மக்கள் கூடிய கூட்டத்திலும் நான் பேசியிருக்கிறேன்.

## பார்க்கர் பேனா

1937 அக்டோபர் மாதம் முதல் தேதியன்று தமிழகத்தில் கள்ளுக்கடைகளை மூடும் திருப்பணியை அன்றைய ராஜாஜி துவக்கினார்.

"விட்டது சனியன் விட்டது சனியன்

விட்டது நம்மை விட்டதடா

கொட்டுக முரசு கொம்பெடுத்தூது

கொடும்பாவி கள்ளைக் கொளுத்தி விட்டோம்"

என்று ஊர் ஊராகத் தெருத் தெருவாக நாமக்கல் கவிஞரின் பாடலைப் பாடிக் கொண்டிருந்தேன்.

உயர்நிலைப் பள்ளியிலும் ஸ்ட்ரைக் செய்ததால் என்னை "ஸ்கூல் பைனல்' எழுத முடியாமல் டிஸ்மிஸ் செய்து விட்டார்கள். அதனால் முழு நேரமும் அரசியல், அரசியல்தான்.

என் தந்தையார் எனது செயல்களை கவலையோடு கவனித்து வந்தார்கள். கடைசியாக என்னைப் பினாங்குக்குப் போகும்படி பணித்தார்கள். பினாங்கில் (மலேயா) எங்களுக்கு ஒரு வட்டிக்கடையும் கொஞ்சம் ரப்பர் எஸ்டேட்டும் இருந்தது. எங்கள் ஏஜெண்டு ஒருவர் இவைகளைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

நாகப்பட்டினத்தில் கப்பல் ஏறி ஐந்து நாட்கள் பிரயாணம் செய்து பினாங்கு போய்ச் சேர்ந்தேன். ஏற்கனவே ஒரு முறை நான் போய் வந்தவனாகையால் எனக்கு எல்லாம் அத்துபடிதான் !

கொஞ்ச நாட்கள் எங்கள் கடையில் சிரத்தையுடன் வேலை செய்தேன். வட்டித் தொழிலில் ஈடுபாடு உண்டாகவில்லை. தினமும் பத்திரிகை படிப்பதிலும் அரசியலிலும் தான் நாட்டம் உண்டாயிற்று. கொஞ்சம் கொஞ்சமாகப் பொது ஸ்தாபனங்களில் தொடர்பு கொள்ள ஆரம்பித்தேன். பல இடங்களில் சொற்பொழிவு செய்யும் வாய்ப்பும் ஏற்பட்டது. கொஞ்சம் பிரபல்யம் உண்டாயிற்று.

ஒருநாள் என் மாமாவின் ரப்பர் எஸ்டேட்டுக்குப் போயிருந்தேன். அங்கிருந்த கள்ளுக்கடை என் கண்ணை உறுத்தியது. தொழிலாளர்களிடம் பேச்சுக் கொடுத்ததில் பெண் மக்கள் பலர் கள்ளுக் கடையை வெறுத்துப் பேசினார்கள்.

ஆண்களும் "கடை இருப்பதினால்தான் குடிக்கிறோம். கடையை மூடிவிட்டால் மறந்து விடுவோம்" என்று கூறினார்கள். கள்ளுக்கடை காண்ட்ராக்டர் கடையை மூட ஒப்புக் கொள்ளவில்லை.

அங்குள்ள தொழிலாளிகள் அனைவரும் தமிழர்களே! கள்ளுக்கடை காண்ட்ராக்டரும் தமிழரே! ஆகவே எனது பிரசாரத்தைத் துவக்கினேன். சுமார் மூன்று மாத காலம் பல எஸ்டேட்டுகளுக்குச் சென்று பிரசாரம் செய்தேன். அமோக ஆதரவு கிடைத்தது. பின்னர் மறியல்-அடிதடி-போராட்டம் இவைகள் நடந்தன.

கடைசியில் ஒரு எஸ்டேட்டில் பெண்கள் எல்லாம் கூடி, கள்ளுக்கடைக்கு நெருப்பு வைத்து விட்டனர். உடனே சங்கிலித் தொடர்பாகப் பல கள்ளுக்கடைகள் கொளுத்தப்பட்டன. இதற்குக் காரணம் நான்தான் என்று காண்டராக்டர்கள் அரசாங்கத்திற்குப் புகார் செய்தனர். உடனே என் மீது 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டது.

போலீசார் நான் தங்கி இருந்த எஸ்டேட்டுக்குப் படையெடுத்து வந்தனர். போலீசாரைத் தொழிலாளர்கள் எஸ்டேட்டுக்குள் நுழைய விடாமல் பலாத்காரத்தில் இறங்கினர். நிலைமை முற்றும்போல் இருந்ததால் நானே வெளிவந்து கைதானேன். என்னைக் கைது செய்து நேராக பினாங்கு கவர்னரிடம் கொண்டு போனார்கள்.

"Where is that man?" (எங்கே அந்த ஆள்) என்று கர்ஜனை செய்து கொண்டு வெள்ளைக்கார கவர்னர் தன் ஆசனத்தில் வந்து அமர்ந்தார். என்னைப் பார்த்ததும் "Oh you are a boy" (ஓ நீ ஒரு பையன்) என்று வியந்தார்.

நான் உடனே, "Sir, I am not a boy, I am father of a boy" (ஐயா நான் பையன் அல்ல, ஒரு பையனுக்குத் தந்தை) என்றேன்.

கவர்னர் கட்டிடம் அதிரச் சிரித்துவிட்டுத் தன் மனைவியைச் சத்தம் போட்டுக் கூப்பிட்டார். என்னவோ ஏதோ வென்று அந்த அம்மையார் ஓடி வந்தார், கவர்னர் தன் மனைவியைப் பார்த்து, Darling. see the fun. This boy is saying that he is a father of a boy (இந்த வேடிக்கையைப் பாரு இந்த பையன் ஒரு பையனுக்குத் தந்தை என்று சொல்லுகிறான்) என்றார்.

உடனே அந்த அம்மையார் என்னைக் கனிவுடன் தன் பக்கத்தில் கூப்பிட்டு, "What is your age?" (உன் வயதென்ன?) என்று கேட்டார்.

Seventeen. (பதினேழு) என்றேன்.

"பதினேழு வயதில் உனக்கு ஒரு பையனா? உனக்கு எப்போது கல்யாணமாயிற்று?" என்றார்.

'பதிமூன்று வயதில்' என்றேன்.

அந்த அம்மையாருக்கு ஒரே ஆச்சரியமாகப் போய் விட்டது. ''பதிமூன்று வயதில் கல்யாணம் செய்து என்ன செய்வது?'' என்றாரே பார்க்கலாம்.

நான் உடனே ''பிள்ளை பெறுவது'' என்றதும் கவர்னரும் அவர் மனைவியும் வெகு நேரம் சிரித்தார்கள். சிரித்துச் சிரித்து அவர்கள் கண்ணில் நீர் வழிந்தது. பிறகு கவர்னர் உன் பையன் பெயர் என்ன? என்றார்.

''இன்னும் பெயர் வைக்கவில்லை, இப்போது அவன் பேபி தானே. நான் ஊருக்குப் போய்தான் அவனுக்குப் பெயர் வைப்பேன்'' என்றேன்.

''உன் குழந்தை உன் மாதிரி சிவப்பாக இருப்பானா?'' என்று கவர்னர் மனைவி கேட்டார்.

என் மனைவி கர்ப்பமாக இருக்கும்போது நான் இங்கு வந்து விட்டேன். அதனால் குழந்தையை இன்னும் பார்க்க வில்லை. ஆனால் குழந்தை அழகாக சிவப்பாக இருக்கிறது என்று என் மனைவி கடிதம் எழுதியிருக்கிறாள் என்று கூறினேன்.

''உன் குழந்தையைப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் உனக்கில்லையா?'' என்று அந்த அம்மையார் கேட்டார். மிகவும் ஆவலாக இருக்கிறது என்றேன்.

''பின்னர் ஏன் இம்மாதிரி எல்லாம் தப்பு செய்கிறாய்?'' என்று கவர்னர் கேட்டார்.

''நான் ஒரு தவறும் செய்யவில்லை, என் நாட்டு மக்கள் கள் குடித்துச் சீரழிவதைத் தடுத்து அவர்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டமென்பதே என் எண்ணம்'' என்றேன்.

"அதற்காகக் கள்ளுக்கடைகளைக் கொளுத்தலாமா?" என்றார். "நான் கொளுத்தவில்லை கொளுத்தச் சொல்லித் தூண்டவுமில்லை. நான் காந்தீயவாதி. பலாத்காரத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. ஆனால் மக்கள் கள்ளுக்கடையை கொளுத்தியது அவர்களது வெறுப்புணர்ச்சியைக் காட்டு கிறதல்லவா?" என்றேன்.

இதற்கு என்ன தண்டனை தெரியுமல்லவா என்று அதட்டினார் கவர்னர்.

"தெரியாது, ஆனால் குற்றம் செய்யாதவனுக்குத் தண்டனை கொடுப்பது நீதியா? என்பதை மேன்மை தங்கிய சீமாட்டியாரிடம் கேட்க விரும்புகிறேன்" என்று கூறி அந்த அம்மையாரைப் பார்த்தேன்.

உடனே அந்த அம்மையார் ஏதோ கவர்னரிடம் கூறினார். கவர்னர் புன்முறுவல் செய்து "சரி உனக்கு வயது பதினேழுதான் ஆகிறது. ஆகவே உன்னை விடுதலை செய்கிறேன். ஆனால் நீ இன்னும் ஒரு மாதத்தில் மலேயாவை விட்டு இந்தியாவுக்குப் போய்விடவேண்டும். அப்படி நீ புறப்படவில்லை என்றால் அதிகாரிகள் உன்னை பலவந்தமாகக் கப்பலில் ஏற்றி விடுவார்கள்" என்று தீர்ப்புக்கூறினார்.

"உன் மகனைப் பார்க்க சீக்கிரம் இந்தியா போய்ச்சேர்" என்று கவர்னரின் மனைவி சிரித்துக்கொண்டே சொன்னார். நானும் விடைபெற்றுக் கொண்டு வந்தேன். அந்த ஒரு மாதமும் அதிகாரிகள் என்னைக் கண்காணித்தார்கள்.

கவர்னர் உத்தரவை அறிந்த, அங்கிருந்த லேவாதேவிக் கடைக்காரர்கள் அனைவரும் அதிகாரிகளைவிட அதிகக் கண்காணிப்பாக இருந்து என்னைக் கப்பலேற்றி விட்டுத்தான் மறு ஜோலி பார்த்தார்கள்.

நான் கப்பலில் நாகப்பட்டினம் வந்து இறங்கிய அன்று, ஹிட்லர் யுத்த பிரகடனம் செய்து குண்டு மாரி பொழிய ஆரம்பித்தான். என் தந்தையார் நான் நாடு கடத்தப்பட்டு வந்தது குறித்து வருத்தப்பட்டாலும், யுத்தகாலத்தில் வெளி நாட்டில் அகப்பட்டுக் கொள்ளாமல் ஊர் வந்து சேர்ந்தது குறித்து மகிழ்ச்சி அடைந்தார்கள்.

அதற்கடுத்து பத்தாண்டு கழித்து மேற்படி கவர்னர் தம்பதிகளை சென்னை அடையாறு எலியட்ஸ் பீச்சில் சந்தித்தேன். நான் அடையாளம் கண்டு கொண்டேன். அவர் களுக்கு முதலில் என்னை அடையாளம் தெரியவில்லை. பின்னர் நான் பழைய விஷயங்களை ஞாபகப்படுத்தியதும் ஒரு அலாதியான அன்பு காட்டினார்கள்.

அந்த அம்மையார் மறக்காமல் என் மகனைப் பற்றி விசாரித்துக் கொண்டார்கள். நான் அவ்விருவரையும் என் இல்லத்திற்குக் கூட்டி வந்து காபி கொடுத்து உபசாரம் செய்தேன் என் மகனையும் காண்பித்தேன்.

இரண்டு மூன்று நாட்கள் அவர்களை மகாபலிபுரம் முதலிய இடங்களுக்குக் கூட்டிபோய் காண்பித்தேன். அவர்கள் இந்தியாவைச் சுற்றிப் பார்க்க வந்திருந்தார்கள். ஓய்வு பெற்றதும் கொஞ்ச காலம் லண்டனில் இருந்துவிட்டு உலகம் சுற்றி வருகிறார்களாம்.

அவர்கள் மீனம்பாக்கம் விமான நிலையத்தில் என்னை விட்டுப் பிரியும்போது அந்த சீமாட்டி எனக்கு ஒரு பார்க்கர் பேனா பரிசளித்தார்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள் இப்போது நான் இதை எழுதிக் கொண்டிருப்பது அந்தப் பேனாவால்தான்!

# இதய ஒலி

ஒரு சமயம் காரைக்குடி கம்பன் திருநாளுக்குப் போய் இருந்தேன். ஸ்ரீ டி.கே.சிதம்பரநாத முதலியார் என்னும் பெரியார் வெகு அருமையாக எல்லோரும் ரசிக்கும்படி கவிதைகள் சொல்லுகிறார்கள் என்று ஏற்கனவே நண்பர்கள் மூலம் கேள்விப்பட்டிருந்தேன். ஆனாலும் அதை நான் நம்பவில்லை.

''இது வெறும் புகழுரையுாய்த்தான் இருக்க முடியும். கவிதைகளையாவது எல்லோரும் ரசிக்கும்படி சொல்லுவதாவது?'' என்று எண்ணிக்கொண்டேன்.

ஸ்ரீ டி.கே.சி. அவர்கள் மேடைக்கு வந்தார்கள். எல்லோரும் அவரைக் கரகோஷம் செய்து வரவேற்றனர். சபையோர் செய்த கரகோஷத்தையும் ஆரவாரத்தையும் வரவேற்பையும் உற்சாகத்தையும் பார்த்தால் சாக்ஷாத் கம்பருக்கு நடந்த வரவேற்பாகவே காணப்பட்டது. டி.கே.சியினுடைய கம்பீரமான மீசையும் சாந்தம் தவழும் முகமும் என்னை மிகவும் வசீகரித்து விட்டன. அவர்கள் 'மைக்'கின் முன் நின்ற நிலையும் எடுப்பான குரலும், பிரசங்க தோரணையும் என்னைப் பிரமிக்கச் செய்துவிட்டன.

அன்று கம்பராமாயணத்திலிருந்து ஒரு முக்கியமான கட்டத்தை டி.கே.சி.அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். விசுவாமித்திரர் ஜனகனிடம் ராமனுடைய வீரச் செயலைப்பற்றிக் கூறும் கட்டம்.

"வரும் வழியில் ஒரு குன்று. அந்தக் குன்றைப் பற்றியும் அதில் வாழும் அரக்கியான தாடகையைப் பற்றியும்

பேசிக்கொண்டிருந்தோம். அப்போது திடீரென்று குன்றின் உச்சியில் தாடகை பயங்கரமான உருவத்தில் தோன்றினாள். குன்றின் சரிவில் இறங்கி நின்று கொண்டு அவள் ஒரு சூலாயுதத்தை எடுத்து எங்கள் மேல் வேகமாக வீசினாள்.

ராமன் ஒரு அம்பை எய்து அந்தச் சூலாயுதத்தைச் சுக்குச் சுக்காக ஆக்கிவிட்டான். பிறகு பெரிய அம்பு ஒன்றை எடுத்து எய்தான். அது என்ன செய்தது? தன் கண்களில் கொல்லுலை போல அக்கினியைக் கொப்புளித்துக் கொண்டிருந்த தாடகையின் மார்பை ஊடுருவிப் போயிற்று.

அலை அலையாக மோதிக் கொண்டிருக்கும் நீலக்கடல் போல் சக்தியும் அற்புதமும் வாய்ந்தவனாய் இருக்கிறான் ராமன். ஜனகனைப் பார்த்து விசுவாமித்திரர் பேசுகிறபேச்சு. இப்போது பாட்டைப் பார்க்கலாம்.

*"அலையுருவக் கடல் உருவத்(து)*
*ஆண்டகை தன் நீண்டுயர்ந்த*
*நிலையுருவப் புயவலியை*
*நீ யுருவ நோக்கையா*
*உலையுருவக் கனல் உமிழ்கண்*
*தாடகை தன் உரம் உருவி-"*

தாடகையின் மார்பை உருவிவிட்டு வேறு என்ன செய்தது அந்த அம்பு? அவளுக்குப் பின்னிருந்த மலையை உருவியது. பிறகு மலைக்குப் பின் பக்கத்தின் சரிவில் வளர்ந்து ஓங்கி நின்ற மரம் ஒன்றையும் உருவியது. தன் காரியங்களை இப்படியாக முடித்துக்கொண்டு அந்த அம்பு கடைசியில் மண்ணுக்குள் பாய்ந்தது. செய்யுள் முழுமையும் பார்ப்போம்:

*அலையுருவக் கடல் உருவத்(து)*

*ஆண்டகை தன் நீண்டுயர்ந்த*

*நிலையுருவப் புயவலியை*

*நீ யுருவ நோக்கையா!*

*உலையுருவக் கனல் உமிழ்கண்*

*தாடகை தன் உரம் உருவி*

*மலையுருவி மரம் உருவி*

*மண் உருவிற்(று) ஒருவாளி*

என்று பாட்டைப்பாடி முடித்தார்கள். ஒவ்வொரு வரியையும் நிதானமாக நிறுத்திப் பல தடவை சொன்னார்கள். அவர்கள் சொன்ன அந்தப் பாட்டிலுள்ள அம்பானது தாடகையின் (உரத்தை) மார்பை உருவியது. மலையை உருவியது. மரத்தை உருவியது, மண்ணை உருவியது. எல்லாம் அப்படியே கண் முன்னால் காட்சியளித்தது.

ஆனால் ஸ்ரீ.டி.கே.சி. அவர்களுடைய அழகிய பிரசங்கமோ முன்னாலிருந்த மைக்கை உருவியது. பின்னர் மின்சாரக் கயிறுகளை உருவியது. அப்புறம் எங்கள் இதயத்தை உருவி மனத்திலே பாய்ந்தது!

இப்படியாக ஓர் அதிசயமான காரியத்தை அன்று டி.கே.சி. செய்து விட்டார்கள். பாட்டு: அதிலும் கம்பன் பாட்டு எவ்வளவு சுலபமாகப் போய்விட்டது. அடடா என்ன எளிமை: இந்த எளிமை இத்தனை நாளாக நமக்குப் புலப்படாமல் போய் விட்டதே என்று ஒரே வருத்தமாகப் போய்விட்டது. அத்துடன் வியப்பும் ஆச்சரியமும் அதிசயமும் போட்டி போட்டுக் கொண்டு என்னைத்

திக்கு முக்காடச் செய்து விட்டது: அதிலிருந்து ரசிகமணி டி.கே.சியின் அடியார்களில் அடியேனும் ஒருவனாகிவிட்டேன்.

பிறகு இரண்டு மூன்று தினங்கள் காரைக்குடியிலேயே தங்கியிருந்து ஸ்ரீ டி.கே.சியின் பிரசங்கங்களைக் கேட்டு அனுபவித்தேன்.

கடைசி நாளன்று டி.கே.சியை நெருங்கி பல விஷயங் களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது, தாங்கள் எழுதிய புத்தகம் ஏதாவது இருக்கிறதா? என்று கேட்டேன். அதற்கு ரசிகமணி அவர்கள் ஆம் இதயஒலி என்ற புத்தகம் ஒன்றை நண்பர்கள் பிரசுரித்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள்.

உடனே எனக்கு அப்புத்தகத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசை உண்டாயிற்று.அப்போது எனக்கு பால்ய வயது. ஸ்ரீ டி.கே.சி. அவர்களின் புத்தகத்தை விலை கொடுத்து வாங்கும் வசதியற்றவனாயிருந்தேன். ஆயினும் எனக்கென்று ஒரு புத்தகம் இருக்க வேண்டும் என்ற ஆசைவிட்ட பாடில்லை.

நான் அப்போது. காரைக்குடி திரு.சா.கணேசன் அவர்கள் வீட்டில் தங்கியிருந்தேன் அவரிடம் நிறைய புத்தகங்கள் இருக்கின்ற விஷயம் எனக்கு ஏற்கனவே தெரியும். எனவே, 'இதயஒலி' யும் இருக்கத்தான் வேண்டும் என்று எண்ணி அவரது புத்தக சாலையை சோதனை போட்டேன். என் முயற்சி வீண் போகவில்லை. இதய ஒலி கிடைத்தது!

எனக்கு ஏற்பட்ட சந்தோஷத்தைச் சொல்லி முடியாது ! ஒன்றிரண்டு பக்கம் வாசித்தேன். ஸ்ரீ.டி.கே.சியே நேரில் வந்து நின்று கொண்டு முகத்தில் புன்னகை தவழப் பேசுவதுபோல் இருந்தது. அந்தப் புத்தகத்தைவிட்டு பிரிய மனம் வரவில்லை. வேறு புத்தகம் வாங்கவும் வசதி இல்லை. என்ன செய்யலாம்? வேறு என்ன இருக்கிறது செய்வதற்கு?

மெதுவாகப் புத்தகத்தை எடுத்து ஒளித்துக் கொண்டு கம்பி நீட்டிவிட்டேன்! நேராகப் பஸ் ஸ்டாண்டிற்குப் போய் ஊரை அடைவதற்குள் என் பாடு வியர்த்து விறுவிறுத்து விட்டது. வீட்டை அடைந்தவுடன் ஓர் அறைக்குள் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு புத்தகத்தை ஒரு முறை பிரித்துப் பார்த்தேன். அதன் அட்டையில்

''அருமை நண்பர்

சா.கணேசன் அவர்களுக்கு....

டி.கே.சி.

என்று எழுதியிருந்தது. அந்தப் புத்தகத்துக்கு உரிய வருடைய பெயரையும் ஒரு முறை வாசித்தேன் அதை அப்படியே வைத்திருந்தால் நம்ம குட்டு வெளிப்பட்டு விடும் என்று பயந்து மேற்படி எழுத்துக்களை மிகவும் கஷ்டப்பட்டு அழித்தேன், பிறகு அதன் மேல் ஒரு வெள்ளைத் தாளை ஒட்டி அதில் என் பெயரை கொட்டை எழுத்தில் எழுதிப் புத்தகத்தைச் சொந்தமாக்கிய பின்பு தான் நிம்மதி உண்டாயிற்று,

அந்தப் புத்தகத்தை நான் எத்தனை தடவை படித்திருப்பேன் என்பதைக் கணக்கிடவே முடியாது!

இதய ஒலி செய்த வேலையோ அபாரம் என்று சொல்லலாம். தமிழ்க் கவிதைகளை, படித்தவர்களும் பாம ரர்களும் அநுபவிக்கலாம் என்று அது சொல்லித் தந்தது. உண்மைக் கவிதை எது, போலிக் கவிதை எது, என்பதையும் இதய ஒலி எடுத்துக் காட்டிற்று.

கம்பன், கலிங்கத்துப் பரணி ஆசிரியர் மகாமகோ பாத்யாய சாமிநாத ஐயர், வெள்ளக்கால் முதலியார், கவிமணி, பாரதியார்,

நந்திக் கலம்பகம் ஆசிரியர் பாலசரஸ்வதி கிருஷ்ணமாச்சாரியார், முத்தொள்ளாயிரம் ஆசிரியர் திருப்பாப் புலியூர் ஞானியார் சுவாமிகள், குற்றாலக் குறவஞ்சி ஆசிரியர் முதலிய அனைவரையும் அறிமுகம் செய்து வைத்து அவர்களின் கவிதைகளை அனுபவிக்கும்படி இதய ஒலி செய்தது.

இதய ஒலியில் உள்ள சங்கீதமும் சாகித்யமும், என்ற கட்டுரையைப் படித்த பிறகு உண்டான ஆவேசம்தான் என்னைத் தேவகோட்டையில் ஒரு தமிழிசை மாநாடு நடத்தும்படி தூண்டியது. தமிழிசைக் கிளர்ச்சிக்கே அந்தக் கட்டுரை தூண்டுகோலாகவும் அமைந்தது.

இப்படிப்பட்ட அற்புதமான காரியங்களைச் செய்த இதய ஒலியின் இரண்டாம் பதிப்பை வெளியிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது.

சொன்னால் நம்ப மாட்டீர்கள், இந்த இரண்டாம் பதிப்பை வெளியிடுவதற்காகத் திருத்திக் கொடுக்கப்பட்ட புத்தகம் நான் காரைக்குடி திரு.சா.கணேசன் அவர்கள் வீட்டிலிருந்து அமுக்கிக் கொண்டு வந்த அதே புத்தகம் என்பதுதான்.

இதய ஒலியைச் சொல்லாமல் எடுத்துக் கொண்டு வந்த குற்றத்திற்குப் பரிகாரமாக நானே ஆயிரக்கணக்கான புத்தகம் போட்டு விநியோகம் செய்யும்படி ஏற்பட்டது எல்லா வற்றையும்விட அதிசயமான விஷயமாகும்.

## தமிழிசை மகாநாடு

தமிழிசை இயக்கம் தோன்றிய நேரம். சிதம்பரத்தில் முதல் தமிழிசை மாநாடு நடைபெற்று பத்திரிகைகளில் பரபரப்பாகச் செய்திகள் வந்து கொண்டிருந்தன. இயற்கையாகவே தமிழ் உணர்ச்சி அதிகமுள்ள எனக்கு, அச் செய்திகள் எனது உள்ளத்தில் ஒரு பெரிய கிளர்ச்சியை உண்டாக்கிற்று.

சிதம்பரத்தில் நடந்தது போல ஒரு பெரிய மாநாடு சொந்த ஊரான தேவகோட்டையில் நடத்த வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. இரவு பகல் அதே கனவு. கண்டவர்களிடமெல்லாம் தமிழ் இசை மாநாட்டைப் பற்றியே பேச்சு. இதில் எனக்கு மிகுந்த உற்சாக மூட்டியவர் என் அருமை நண்பர் திரு.டி.ஆர். அருணாசலம் அவர்கள்.

ஆகவே அவரைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டேன். இருவரும் கையிலிருந்து செலவு செய்து சில நோட்டீஸ்கள் அச்சடித்து தமிழிசை மாநாடு நடைபெறப் போவதாக விளம்பரம் செய்தோம். ஊரில் பரவலாகக் கொஞ்சம் ஆதரவு கிடைக்கும் போலிருந்தது. சங்கீத வித்வான்கள் அனைவருக்கும் கடிதம் போட்டோம்.

இலக்கியப் புலவர்களுக்கும் அழைப்புகள் அனுப் பினோம். அனைவரின் பதில்களும் உற்சாக மூட்டக் கூடிய வகைகளாக இருந்தன. அடுத்தது மாநாட்டிற்காக நிதி வசூல் தொடங்கினோம். வீடு வீடாகச் செல்லும்போதுதான் தமிழிசை யைப் பற்றி பலருக்கு புரியவில்லை என்று தெரிந்தது.

இத்தனைக்கும் அந்த ஊரில் மாதம் தவறாமல் நடைபெறும் பல கல்யாணங்களில் சங்கீத கச்சேரிகள் நடைபெற்று கொண்டிருந்தன.

''எதுக்குத் தமிழில் பாடவேண்டும்?'' ''இதற்கு ஏன் மாநாடு?'' ''தமிழில் பாட முடியுமா?'' ''தமிழில் பாட பாட்டுக்கு எங்கே போவது?'' 'இசையில் ஏன் பாஷை விவகாரம்?'' என்றெல்லாம் கேள்வி மேல் கேள்வி கேட்டுப் பலர் எங்களை அதைரியப் படுத்தினார்கள். ஆனால் எங்களுடைய தமிழுணர்ச்சி அதை எல்லாம் ஒரு பொருட்டாக நினைக்க விடவில்லை.

திட்டங்கள் பிரமாண்டமானதாகப் போடப்பட்டன. ஆனால் நிதி வசூல் எப்படி செய்வதென்று தெரியவில்லை. பல பேர் மாநாட்டை கைவிடும்படி உபதேசம் வேறு செய்ய ஆரம்பித்து விட்டார்கள். என்ன வந்தாலும் சரி, எடுத்த காரியத்தை முடிக்காமல் விடுவதில்லை என்று உறுதி பூண்டோம். சுமார் பத்தாயிரம் ரூபாய் வசூலானால் மாநாடு சிறப்பாக நடைபெறும் என்று திட்டம் போடப்பட்டது.

ரூபாய் பத்தாயிரத்துக்கு எங்கே போவது? இந்நிலையில் மாநாட்டுக் காரியங்களில் தானாக வந்து உற்சாகமாகப் பங்கெடுத்துக் கொண்டு அல்லும் பகலும் எங்களுடன் பணிபுரிந்து வந்த அன்பர் ஒருவர், இராஜா, சர். அண்ணாமலை செட்டியார் அவர்களிடம் சென்று முயற்சிக்கலாமே என்றார்.

நானும் திரு.டி.ஆர்.அருணாசலம் அவர்களும் தீவிர காங்கிரஸ்காரர்கள். பலமுறை ராஜாசர் அண்ணாமலை செட்டியார் அவர்களை மேடையில் தாக்கி பேசி இருக்கிறோம். ஆகவே காங்கிரஸ்காரர்களாகிய நாங்கள் ராஜா சர் அவர்கள் வாசற்படி ஏறுவதே தவறு என்பதாக நினைப்பவர்கள். அப்படியிருக்க, அவரிடம் எப்படிப் போவது? ஆயினும் அந்த அன்பர் விடவில்லை.

'இது காங்கிரஸ் விஷயம் இல்லையே; தமிழ் சம்பந்தப்பட்டதுதானே, தமிழுக்காகச் செல்லலாமே என்றெல்லாம் நியாயங்களை எடுத்துரைத்து, எங்களை ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களிடம் கூட்டிச் சென்றார்.

ராஜா சர் அவர்கள் எங்கள் இருவரையும் வெகு அன்பாக வரவேற்று, எங்கள் தோள்மேல் கைபோட்டு மாநாட்டைப் பற்றிய விவரமெல்லாம் கேட்டார். நாங்கள் நிதி வேண்டுமென்று கேட்க வில்லை. ஏனோ கேட்பதற்கு எங்கள் மனம் துணியவில்லை.

காபி சாப்பிட்டதும் நாங்கள் போய் வருகிறோம் என்று கிளம்பினோம். ராஜா சர் எங்களிடம் ஒரு கவரைக் கொடுத்து "இதில் எனது அன்பளிப்பு இருக்கிறது மாநாட்டைச் சிறப்பாக நடத்துங்கள்" என்று சொன்னார்கள். விடைபெற்றுக்கொண்டு வெளியே வந்தோம்.

கவரைப் பிரித்துப் பார்த்தோம். அப்படியே திகைத்துக் கல்லாய் சமைந்து நின்றோம்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள் அதில் இருந்தது ரூபாய் பத்தாயிரம்.

## ஆயிரம் ரூபாய் பரிசு

தமிழிசை இயக்கம் சுறுசுறுப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த நேரம். தேவகோட்டையில் ஒரு கல்யாண வீட்டில் அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் கச்சேரி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

வெகு நேரம் அரியக்குடி தெலுங்கிலே பாடிக் கொண்டிருந்தார். நான் தமிழிசை இயக்கத்தின் காரியதரிசி. ஆகவே அரியக் குடியிடம், "தயவு செய்து தமிழில் பாடவும்," என்று சீட்டு எழுதிக் கொடுத்தேன்.

அரியக்குடி சீட்டை வாங்கிப் பார்த்து விட்டுப் புன்முறுவல் பூத்தார். பாடுவதாகச் சைகை செய்தார். நான் வெற்றிப் பெருமிதத்துடன் அவர் பாடப்போகும் தமிழ்ப்பாட்டை எதிர்பார்த்திருந்தேன். பாட ஆரம்பித்தார் அரியக்குடி. அதுவும் என்னைப் பார்த்தே பாட ஆரம்பித்தார்.

*"யாரடா குரங்கு நீ-இங்கே வந்த*

*யாரடா குரங்கு நீ."*

அருணாசலக் கவிராயர் கீர்த்தனைதான். நான் அரியக்குடியை முறைத்துப் பார்த்தேன். இது தமிழ் பாட்டுதானே? என்று சொல்லிவிட்டு அதைப் பாடி முடித்தார்.

அந்தப் பாட்டு முடிந்ததும் என்னை அருகில் வரும்படி அரியக்குடி கூப்பிட்டார். சென்றேன். கோபப்படாதீர்கள் சும்மா தமாஷ் செய்தேன். இனி பூராவும் தமிழ்ப் பாட்டுத்தான் என்று

சொல்லி சுமார் இரண்டு மணி நேரம் தமிழிசையை முழக்கிச் சபையை மெய்மறக்கச் செய்தார்.

கச்சேரி முடிந்ததும் நான் அவர் அருகில் சென்று நன்றி சொன்னேன். அரியக்குடி என்னைப் பார்த்து, "இசைக்கு மொழி அவசியமா?" என்று கேட்டார் "அவசியம்தான்," என்றேன்.

"எதனால்?" என்றார்.

நம் முன்னோர்கள் இசையில் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்களே, என்றேன். "எப்படி" என்றார். இசைதான் முக்கியம் என்றால் நம் முன்னோர்கள் வாய்ப் பாட்டுக்காரர்களை நடுவில் வைப்பார்களா? ஒரு சாதாரண வித்வான் பாடினாலும் கும்பகோணம் ராஜமாணிக்கம் பிள்ளை, பாலக்காடு மணி போன்ற பெரியவர்கள் பக்க வாத்திய மாகத்தானே உட்காருகிறார்கள்? இசைதான் முக்கியம்; மொழி முக்கியம் இல்லை என்றால் ராஜமாணிக்கம் பிள்ளையைத் தானே நடுவில் வைக்க வேண்டும். இதிலிருந்தே மொழி முக்கியமென்று தெரியவில்லையா என்றேன்.

அரியக்குடி அன்றிலிருந்து தமிழ்ப்பாட்டு நிறையப் பாட ஆரம்பித்தார். இந்தச் சம்பவத்தை ஒரு சபையில் ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களிடம் அரியக்குடியே சொன்னார். உடனே ராஜா சர் அகமகிழ்ந்து அப்போதே எனக்கு ஆயிரம் ரூபாய் பரிசளித்தார்.

## விடுதலை ஆவேசம்

1942 ஆகஸ்ட் மாதம் முதல் தேதியிலிருந்தே பாரத நாட்டு மக்கள் 'விடுதலைப்புரட்சி'க்குத் தயாரான நிலையில் பரபரப்புடன் இருந்தனர்.

என்னைப் போன்றவர்கள் மக்களிடையே நெருப்புப் பொறி பறக்கப் பேசிய பேச்சுக்கள் புரட்சி எந்த நேரமும் வெடிக்கலாம் என்பதற்கு அறிகுறிகளாய்த் தென்பட்டன.

நான் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் மூலை முடுக்கெல்லாம் சென்று மக்களைத் தட்டி எழுப்பும் விதத்தில் சுதந்திர வேட்கையை உண்டாக்கினேன் ஆங்கில ஆட்சியை அடியோடு ஒழித்துக் கட்ட வேண்டுமென்றும் அதற்காக எதை வேண்டுமானாலும் தியாகம் செய்யலாம் என்றும் மக்களை பக்குவப்படுத்தினேன். எங்கள் ஊரில் நான் பேசும் கூட்டங்களுக்கு மக்கள் ஆயிரக் கணக்கில் வருவதும், இளைஞர்கள் அங்கும் இங்கும் பரபரப்புடன் திரிவதும், அரசாங்கத்தை எதிர்த்துப் பல துண்டுப் பிரசுரங்களை ரகசியமாக மக்களிடம் விநியோகிக்கப்படுவதும் போலீசாருக்குப் பெரும் பிரச்சனையாக இருந்தது.

போலீசார் எந்த இடத்திலும் தனியாக வர முடியாத நிலை ஏற்பட்டு விட்டது. போலீஸ் ஸ்டேஷனில் இருந்து வீட்டிற்கு எந்தப் போலீஸ்காரரும் போக முடியவில்லை. போலீசார் அனைவரும் போலீஸ் ஸ்டேஷனிலேயே தங்க, தூங்க, சாப்பிட வேண்டிய நிலையை ஊரில் உண்டாக்கிவிட்டோம். தந்திக் கம்பிகள் அறுக்கப்பட்டுவிட்டன. டெலிபோன்கள் துண்டிக்கப் பட்டுவிட்டன.

என்னைப் பலமுறை போலீசார் கைது செய்ய முயன்றும் முடியவில்லை. காரணம், எப்போதும் என்னைச் சுற்றி நானூறு, ஐநூறு இளைஞர்கள் இருந்துகொண்டேயிருந்தனர். அதனால் என்னைக் கைது செய்தால் நிச்சயம் கலகம் ஏற்படும் என்று போலீசார் தக்க சமயத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர்.

1942 ஆகஸ்ட் 8ந் தேதி காந்தியடிகள் கைது செய்யப் பட்டார். இச் செய்தி காட்டுத்தீ போல நாடெங்கும் பரவியது. எங்கள் ஊரில் பெரும் புயலுடன் இடியும் மின்னலும் சேர்ந்ததுபோல் மக்கள் மனதில் குமுறல் ஏற்பட்டது. ஊரெங்கும் இதைப்பற்றியே பேச்சு.

''வெள்ளையனே வெளியே போ'' என்ற முழக்கம், தெருவில் அகப்பட்ட ஒரு அப்பாவிப் போலீஸ்காரர் ஒருவரை மக்கள் சூழ்ந்து கொண்டு தாக்கி அவரது காக்கி உடை சிகப்புத் தொப்பி இவைகளைப் பறித்து தீ வைத்துக் கொளுத்திவிட்டனர்.

தேவகோட்டையிலும் அதன் சுற்றுப் புறத்திலும் 144 தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன. தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட அன்று மாலை ஜவஹர் மைதானத்தில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் கூடியிருந்தது. தடை உத்தரவை நான் மீறப்போவதாக அறிவித்திருந்தபடியால் ஊரெல்லாம் ஒரே பரபரப்புடன் கூடியிருந்தது.

போலீசாருக்கு எதிராகக் கொரில்லா போர் செய்வதற்கு மக்கள் தயாராக வந்திருந்தனர். சிலர் அரிவாள் வைத்திருந்தனர். பலர் சுலபமாகக் கொண்டு வரக் கூடிய கற்களை கொண்டு வந்திருந்தனர். இன்னும் சிலர் நல்ல வகையான நெற்றி மட்டக் கம்புகளில் காங்கிரஸ் கொடிகளை மாட்டிக் கொண்டு வந்திருந்தனர்.

கொடி சொருகி இருக்கும் இடம் ''ஈட்டி முனை'' என்றும் ரகசியமாகச் சொல்லிக் கொண்டார்கள். இப்படி மக்கள் போலீசைத் தாக்க தயாராக இருப்பதை அறிந்து நான் வேதனை அடைந்தேன். காந்தீயம் அதுவல்ல. எனக்குத் தெரியும். எனினும் அந்தச் சூழ்நிலையில் நான் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தேன். எனக்கு இள வயது.

ஆகவே 144 உத்தரவை மீறாமல் கூட்டத்தைக் கலைத்தால் மக்கள் என்னைக் கோழை என்றும் துரோகி என்றும் காரி உமிழ்வார்கள். இப்படி நான் நிலை தடுமாறிக் கொண்டு மேடையில் நிற்கையில் 'ஜே ஜே' என்ற மக்கள் ஆரவாரத்தின் மத்தியில் போலீஸ் இன்ஸ்பெக்டர் திரு வீராசாமி ஒரு போலீஸ் படையுடன் வந்து மேடைக்கு முன் அணிவகுத்து நின்றார்.

மக்கள் அவரைச் சுட்டெரித்து விடுவது போல் பார்த்தார்கள். சிலர் 'போலீஸ் ஒழிக' என்றும் 'காட்டிக் கொடுக்கும் கங்காணிகள் ஒழிக' என்றும் 'துரோகிகள் ஒழிக' என்றும் முழக்கம் செய்தார்கள்.

நான் மக்களை அமைதியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டேன். மக்களோ ஒரே குரலாக, ''தலைவர்களை விடுதலை செய்'', ''போலீசே திரும்பிப் போ'' என்று கர்ஜனை செய்தார்கள். இந்நிலையில் இன்ஸ்பெக்டர் திரு.வீராசாமி அவர்கள் மேடைமீது வந்து என்னிடம் 144 தடை உத்தரவை நீட்டினார்.

மக்கள் முழக்கத்தில் நான் ஆவேசத்துடனிருந்தேன். நீட்டிய 144 தடை உத்தரவை இன்ஸ்பெக்டர் கையிலிருந்து பிடுங்கி, ''ஆங்கில அரசாங்கத்தின் 144 தடை உத்தரவுக்கு இந்திய மக்களாகிய நாங்கள் கொடுக்கும் மரியாதை இதுதான்'' என்று கூறி சுக்கு நூறாகக் கிழித்து என் காலில் போட்டு மிதித்தேன்.

உடனே மக்கள் கொதித்தெழுந்து நாற்புறமிருந்து கற்களை வீசத் தொடங்கினர். நான் மைக் முன் வந்து, "மகாத்மா காந்தி மீது ஆணை, யாரும் போலீசாரைத் தாக்கக் கூடாது" என்றேன்.

கூட்டத்தினர் சிறிது அடங்கினர். அச்சமயம் பார்த்து இன்ஸ்பெக்டர் வீராசாமி பின்வாங்கி, தன் ஜவான்களுடன் வண்டியில்ஏறி ஓடிவிட்டார், மக்கள் வண்டியை விரட்டிக் கொண்டே சென்றார்கள்.

அக்காட்சி எனக்கு மக்கள் வெள்ளைக்காரன் ஆட்சியை விரட்டிக் கொண்டு ஓடுவதுபோல் தோன்றியது.

## திருவாடானைச் சிறை

1942 ஆகஸ்ட் மாதம் 8ம் தேதி அன்று இரவு 12 மணிக்கு போலீஸார் என்னைக் கைது செய்தனர். பகல் நேரத்தில் எப்போதும் பெரும் கூட்டம் என்னை சூழ்ந்துகொண்டு இருந்தபடியால் ஒரு வார காலமாக முயற்சி செய்தும் கைது செய்தால் பெரும் கலகம் ஏற்படும் என்று போலீஸார் கைது செய்வதை தள்ளிப் போட்டுக் கொண்டு வந்தனர்.

ஆனால் அன்று 144 தடை உத்தரவை மக்கள் முன்னிலையில் நான் கிழித்தெறிந்ததும் போலீஸ் இன்ஸ் பெக்டரை மக்கள் விரட்டி அடித்ததாலும் அதற்குமேல் என்னை வெளியில் வைத்திருப்பது பெருத்த அபாயம் என்று கருதி, போலீஸார் அன்றிரவே கைது செய்வது என்று முடிவு செய்துவிட்டனர்.

இரவில் அதிகம்பேர் என்னைச் சுற்றி இருக்கமாட்டார்கள், சில பேர்தான் இருப்பார்கள். இருப்பவர்களைச் சமாளித்துக் கொள்ளலாம் என்று போலீஸார் எண்ணி அன்றிரவு என்னைக் கைது செய்வதற்குச் சுமார் பத்து லாரி ரிஸர்வ் போலீஸைக் கொண்டு வந்து நான் தங்கி இருந்த ஐக்கிய சங்கம் என்ற கட்டிடத்தைச் சுற்றி வளைத்து நிறுத்திக்கொண்டு உள்ளே படபடவென்று குதித்தார்கள்.

அப்பொழுது இரவு மணி 12 இருக்கலாம். சப்தம் கேட்டதும் திடுக்கிட்டு விழித்துப் பார்த்தபோது என்னைச் சுற்றிப் பல ரிஸர்வ் போலீஸ் நின்றது தெரிந்தது. "உங்களைக் கைது செய்திருக்கிறோம்" என்று போலீஸார் சொன்னார்கள்.

இன்ஸ்பெக்டர் என் கையில் விலங்கை மாட்டி, பல நூற்றுக் கணக்கான ரிசர்வ் போலீஸார் சூழ 'இராமவிலாஸ்' பஸ் ஒன்றில் என்னை ஏற்றிக் கொண்டு முன்னும், பின்னும் பல போலீஸ் வண்டிகள் தொடர தேவகோட்டையில் இருந்து 22 மைல் தொலைவில் உள்ள திருவாடானை என்ற ஊருக்குக் கொண்டு சென்றார்கள்.

திருவாடானையில் உள்ள சப்-ஜெயிலில் என்னைக் கொண்டுபோய் அடைத்தார்கள். மறுநாள் காலையில் என்னைக் கைது செய்த விஷயம் ஊர் முழுவதும் பரவி மக்கள் கும்பல்கும்பலாகச் சேர்ந்து ஊரே ஒன்றாகத் திரண்டு என்னை விடுதலை செய்யும்படி போலீஸ் ஸ்டேஷனுக்கு முன்னால் சென்று ஆர்ப்பாட்டம் செய்திருக்கிறார்கள். கடைகள் அனைத்தையும் மூடும்படியும் செய்து போலீஸைத் திக்கு முக்காட வைத்து விட்டார்கள்.

என்னை ஏற்றிக் கொண்டு சென்ற இராமவிலாஸ் பஸ்ஸை சூழ்ந்துகொண்டு தீ வைத்துக் கொளுத்தி மேற்படி பஸ்ஸை சாம்பலாக்கி விட்டார்கள். அதன் பின்னர் தேவகோட்டையில் உள்ள சப்-கோர்ட்டை நடத்தக்கூடாது என்று மக்கள் கோஷம் போட்டு இருக்கிறார்கள்.

அதையும் மீறி கோர்ட்டை நடத்தியதால் மக்கள் கோபம் கொண்டு பக்கத்திலிருந்த பெட்ரோல் பங்கில் இருந்து பெட்ரோலைப் பிடித்து கோர்ட் கட்டிடத்தின்மீது ஊற்றி தீ வைத்து விட்டார்கள். போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்தும் கூட்டம் கலையவில்லை.

பல பேர் துப்பாக்கிப் பிரயோகத்தில் இறந்தார்கள். அங்கிருந்த கூட்டம் கோபங்கொண்டு புறப்பட்டு திருவாடானையை நோக்கி வந்தது. திருவாடானை வரும் வழியில் உள்ள

கிராமங்களில் எல்லாம் இளைஞர்களும், பெரியோர்களும், உற்சாகமாக இக்கூட்டத்துடன் சேர்ந்து அவர்களும் திருவாடானையை நோக்கி வந்தார்கள்.

சுமார் 20,000க்கு மேற்பட்ட மக்கள் ஒன்று சேர்ந்து திருவாடானை சப்-ஜெயிலுக்கு என்னை விடுதலை செய்ய வந்து கொண்டு இருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டதும் சப்-ஜெயிலைச் சுற்றி இருந்த சர்க்கார் அலுவலகங்களான மாஜிஸ்ட்ரேட் கோர்ட், தாசில்தார் காரியாலயம், கஜானா அதிகாரி போலீஸ் ஸ்டேஷனில் இருந்த சப்-இன்ஸ்பெக்டர் போலீஸ் கான்ஸ்டெபிள்கள், அனைவரும் என்னை அடைத்து வைத்திருந்த சப்-ஜெயிலுக்கு முன்பு வந்தார்கள். எல்லோரும் என்னிடம் என்ன செய்யலாம் என்று ஆலோசனை கேட்டார்கள்.

நான் சொன்னேன் '20,000' த்துக்கு மேல்பட்ட ஜனங்கள் வருவதால் அவர்களைத் தடுத்து, நிறுத்துவதோ, வன்முறையை உபயோகிப்பதோ இப்பொழுது உள்ள சூழ்நிலைக்குச் சரியாக இருக்காது. இது சுதந்திரப்போராட்ட வேகம். மக்களிடம் ஏற்பட்டிருக்கும் உணர்ச்சியை மதித்து அவர்களுக்கு வழிவிட்டு நில்லுங்கள், அனைவரும் ஒதுங்கிக் கொள்வதுதான் இந்த நேரத்தில் செய்யக்கூடிய புத்திசாலித்தனமான காரியம் என்று அவர்களுக்கு ஆலோசனை கூறினேன்.

அவர்கள் சொன்னார்கள். நாங்களும் எங்கள் குடும்பமும் குழந்தை குட்டிகள் அனைவரும் பக்கத்திலுள்ள லையனில்தான் குடியிருக்கிறோம்,. வருகின்ற கூட்டம் எங்களையும் எங்கள் குடும்பத்தாரையும் கோபப்பட்டுத் தாக்கினால் என்ன செய்வது என்று கேட்டார்கள்.

அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம். அதற்கு நான் பொறுப்பு என்று சொன்னேன். அப்போது அங்கிருந்த

சப்-இன்ஸ்பெக்டரின் பெயர் சூரப்புலி சுந்தரராஜ் ஐயங்கார் என்பது ஆகும்.

எனது ஆலோசனையை ஏற்றுக்கொண்டு நான் சொன்னபடி போலீஸார் தங்கள் உடைகள் அனைத்தையும் கழற்றி நான் இருந்த சப்-ஜெயிலுக்கு முன்னால் போட்டார்கள். எல்லோரையும் அவரவர் வீட்டுக்குப் போய் நிம்மதியாக இருக்கும்படி கூறினேன். அதன்படி அவர்கள் அனைவரும் செய்தார்கள்.

இது நடந்த சிறிது நேரத்திற்கெல்லாம் பல ஆயிரக் கணக்கான மக்கள் கையில் கடப்பாரை, கோடாரி, அரிவாள், ஈட்டி முதலிய ஆயுதங்களுடன் பலத்த கோஷம் போட்டுக் கொண்டு சப்-ஜெயிலை நோக்கி வந்தார்கள். பலர் ஜெயிலை உடை யென்றும் கட்டிடத்திற்கு தீ வை என்றும் பலவாறாகச் சத்தம் போட்டார்கள்.

கூட்டத்திற்குத் தலைமை வகித்து வந்தவர்களில் ஒருவரான எனது நண்பர் திருவேகம்பத்தூர் பால பாரதி செல்லத்துரை அவர்கள் எல்லோரையும் அமைதிப்படுத்தி நான் இருந்த சிறைக்கு முன்னால் உட்கார வைத்தார்கள். அவர் சொற்படி அனைவரும் சப்-ஜெயிலுக்கு முன்னால் இருந்த மைதானத்தில் உட்கார்ந்தார்கள்.

பின்னர் செல்லத்துரை அவர்கள் என்னிடம் வந்து ''இப்பொழுது நாங்கள் என்ன செய்யவேண்டும்? என்று கேட்டார். நீங்கள் என்ன முடிவுடன் வந்திருக்கிறீர்கள் என்று நான் திருப்பிக் கேட்டேன்.

''இந்தச் சிறையை உடைத்து உங்களை விடுதலை செய்ய வந்திருக்கிறோம்'' என்று சொன்னார். ''சரி அப்படியே செய்யுங்கள்'' என்று நான் சொன்னதும், அங்கு நின்ற சிறை

வார்டன் ஓடி வந்து இதோ சாவி இருக்கிறது'' என்று சாவியைக் கொடுத்தார். சாவி வேண்டியது இல்லை. உடைத்துதான் திறப்போம் என்று மக்கள் பெரும் முழக்கம் போட்டார்கள்.

அதன்படியே அவர்கள் கொண்டு வந்திருந்த கடப்பாரை முதலிய ஆயுதங்களால் என்னை அடைத்து வைத்திருந்த சப்-ஜெயில் பூட்டை உடைத்துத் தகர்த்து கதவைத் திறந்தார்கள்.

பட்டப் பகல் 12 மணிக்கு பல ஆயிரக்கணக்கான மக்கள், சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தில் இம்மாதிரி சிறைக் கதவை உடைத்து ஒரு அரசியல் கைதியை விடுதலை செய்தது சரித்திரத்தில் அதுதான் முதல் தடவை.

அந்தச் சரித்திர சம்பவத்திற்கு நான் காரணமாக இருந்தேன் என்று நினைக்கும்போது இன்றும் நான் பெருமைப்படுகிறேன். இந்தியாவில் வேறு யாருக்கும் கிடைக்காத பெருமை எளியேனுக்குக் கிடைத்தது.

மக்களுடைய மாபெரும் சுதந்திர எழுச்சியின் வேகத்தில் நடைபெற்ற சக்தி மிகுந்த இந்தத் திருவாடனை ஜெயில் உடைப்புச் சம்பவம், தமிழகத்தின் ஒரு கோடியில் ராமேஸ்வரம் அருகில் நடைபெற்றதால் இந்தியா முழுவதும் விளம்பரம் இல்லாமல் அமுங்கி விட்டது.

தமிழ்நாட்டுத் தலைவர்களும், இச்சம்பவத்தின் பெருமையை உணரவில்லை. மதிப்பிற்குரிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்கள் 1942 சிறையிலிருந்து தப்பியதே பெரிய வீரச்செயல் என்று நாடுபோற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழகத்தில் திருவாடானையில் மக்கள் திரண்டு சிறைச்சாலையை உடைத்து ஆங்கில ஏகாதிபத்தியம் கைது செய்து வைத்திருந்த ஒரு சுதந்திர போராட்ட வீரனை விடுதலை செய்ததை நாடு முழுமையாக அறிந்து கொள்ளவுமில்லை, பாராட்டவும் இல்லை.

விடுதலை செய்யப்பட்ட என்னைச் சுற்றி இருந்த மக்கள் என்னைத்தோளில் தூக்கிக்கொண்டு ஆனந்தக் கூத்தாடினார்கள். சிலபேர் நான் இருந்த சப்-ஜெயிலுக்குத் தீ வைத்தார்கள். வேறு சிலர் மாஜிஸ்ரேட் கோர்ட்டிற்கும், தாசில்தார் அலுவலகத்திற்கும் தீ வைத்தார்கள்.

அதன் பின்னர் போலீஸ் லைனை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். அப்பொழுது நான் குறுக்கிட்டு "அங்கு ஓடாதீர்கள். அவர்கள் அனைவரும் நமக்காக வேண்டிய ஒத்தாசை செய்திருக்கிறார்கள்" என்று அவர்களிடம் சொன்னேன். சில பேர் போலீஸ்காரர்களை சும்மாவிடக் கூடாது என்றும் அவர்கள் வீடுகளுக்குத் தீ வைக்க வேண்டும் என்றும் சத்தம் போட்டார்கள்.

நான் அவர்களைத் தடுத்து அவர்கள் அனைவரும் நமது சகோதரர்கள், நமது சுதந்திர போராட்டத்திற்கு உறுதுணையாக உள்ளவர்கள். அவர்களை ஒன்றும் செய்யவேண்டாம். இதோ அவர்களது உடைகள் என்று கூறி, போலீஸ்காரர்களுடைய உடைகள் அனைத்தையும் மக்களுக்குக் காண்பித்தேன். அவர்கள் அந்த உடைகளை வாங்கித் தீயில் போட்டு பொசுக்கித் தங்கள் கோபத்தைத் தீர்த்துக் கொண்டார்கள்.

பின்னர் கூட்டத்தினர் அனைவரும் என்னைத் தூக்கிக் கொண்டு ஊர்வலமாகச் சென்றார்கள். அப்பொழுது என்னை அடைத்து வைத்திருந்த சப்-ஜெயிலும், அதைச் சுற்றி இருந்த சர்க்கார் அலுவலகங்களும் கொழுந்து விட்டு எரிந்தன. அச்சமயம் சிலர் போலீஸ் ஸ்டேஷனுக்கு உள்ளே புகுந்து அங்கிருந்த துப்பாக்கிகளை ஒருவரும், துப்பாக்கிக் குண்டுகளை இன்னொருவரும் தூக்கிக் கொண்டு வெளியே வந்தனர். சிலர் துப்பாக்கிகளைக் கையில் ஏந்திக்கொண்டு சிப்பாய்களைப் போல் நடந்தனர்.

மக்கள் என்னை ஊர்வலமாக அழைத்துக் கொண்டு ஊருக்கு வெளியே செல்லும்போது தூரத்தில் போலீஸ் லாரிகள் வருவது தெரிந்தது. போலீஸ் லாரியைப் பார்த்து மக்கள் கோபாவேசப் பட்டார்கள். பலர் போலீஸ் லாரியை அடித்து நொறுக்க வேண்டும் என்று கூச்சல் போட்டார்கள். சிலர் போலீஸ் லாரியை நோக்கி அரிவாளை வீசிக்கொண்டு ஓடினார்கள்.

எல்லோரையும் சமாதானப்படுத்தி ரோட்டுக்கு பக்கமாக இருந்த பனங்காட்டுக்குள் இருக்கும்படி கேட்டுக் கொண்டேன். அதன்படி மக்கள் இருகூறாகப் பிரிந்து ரோடின் இரு மருங்கிலும் உள்ள பனங்காட்டுக்குள் பதுங்கிக் கொண்டார்கள்.

போலீஸ் லாரிகள் மெதுவாக ஊர்ந்து கொண்டு வந்தன. மக்கள் மறைந்திருப்பதை யூகித்தவர்கள் போல் போலீஸார் சுடுவதற்குத் தயார் நிலையில் லாரியில் நின்று கொண்டு இருந்தார்கள். ரோடு ஓரமாக மறைந்திருந்த ஒருவரை போலீஸார் பார்த்து விட்டனர். உடனே அவரை நோக்கிச் சுட்டனர். அவர்கள் சுட்ட குண்டு மேற்படி நண்பரின் தொடையை தொட்டுக் கொண்டு சென்று விட்டது.

உடனே மேற்படி நண்பர் பெரும் கூச்சல் போட்டு "எல்லாம் வெத்து வேட்டு வெளியே வாங்கடா" என்று கலவரப்படுத்தி விட்டார். மறைந்திருந்த மக்கள் அனைவரும் பெரும் கூச்சல் போட்டு கொண்டு வெளியே வந்து போலீசாரைத் தாக்க ஓடினார்கள்.

இச்சமயம் துப்பாக்கி வைத்திருந்தவர்கள் ஒரு பக்கமும், குண்டு வைத்திருந்தவர்கள் மறு பக்கமும் பிரிந்து இருந்தார்கள். அதனால் மக்களிடம் இருந்த துப்பாக்கியினால் போலீஸாரைச் சுட இயலாமல் போய்விட்டது. குண்டுகளைக் கையில் வைத்திருந்த கிராமவாசிகள் மட்டும், மேற்படி குண்டுகளை எறிந்தால்

வெடிக்குமா? வெடிக்காதா? என்று தெரியாததால் அவைகளைச் சரமாரியாக வீசிக்கொண்டு இருந்தார்கள்.

இந்நிலையில் போலீஸார் தங்களைக் காத்துக் கொள்ளச்சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். குண்டுகளை பொழிந்து தள்ளினர். என் இடது கையில் ஒரு குண்டு பாய்ந்தது. மக்களின் முன்னால் நின்ற என் மீது மேலும் குண்டுபடக்கூடாது என்று பலபேர் மாறி மாறி என் முன்னால் நின்று தங்கள் மார்பில் போலீஸாரின் குண்டுகளை ஏற்று வீர மரணம் எய்தினார்கள். இம்மாதிரி தியாகம் செய்த பெரு வரலாற்றை நான் படித்ததும் இல்லை, கேட்டதும் இல்லை. இந்த மாபெரும் தியாகத்தை இன்று நினைத்தாலும் எனது மெய் சிலிர்த்துவிடுகிறது.

பல பேர் ஒரு தேசபக்தனைக் காப்பதற்கு உயிரைக் கொடுப்பது என்பது வீரகாவியமாகப் பாடவேண்டிய அத்தியாயமாகும். எவ்விதப் பிரதி பிரயோசனமும் கருதாமல் தங்கள் இன்னுயிரை ஈந்த அந்த மாபெரும் தியாகிகளுக்கு இந்த நாடு என்றும் தலை தாழ்த்தி வணங்கக் கடமைப்பட்டுள்ளது.

இப்படிப் பல பேரைச் சுட்டு வீழ்த்தி விட்டு போலீஸார் தப்பி ஓடிவிட்டார்கள். சிலர் இறந்து வீழ்ந்ததும் பலர் உடம்பிலிருந்து இரத்தம்தெறித்ததும், அங்கு கூடியிருந்த மக்கள் ஒரு நிமிடத்தில் எங்கே சென்றார்கள் என்று தெரியாமல் ஓடிவிட்டனர்.

நானும் எனது நண்பர் இராமநாதனும் பிணக்குவியலின் மத்தியில் நின்று கொண்டு இருந்தோம். உயிர் போன பலரும், உயிர் போகும் தருவாயில் சிலரும், கை, கால், கண் போன சிலரும் ஒரே இரத்தக்காடாக முனகலும் மரணக் கூச்சலும், நிறைந்திருந்த அந்த இடத்தில் என்ன செய்வது என்று தெரியாமல் திக்பிரமை

பிடித்து 10 நிமிடத்துக்கு மேல் நின்று கொண்டு இருந்தேன். இரவு மணி 7ஆயிற்று. வெளிச்சம் மங்கி இருள் பரவிற்று. பனங்காடு, 'சலசல' என்ற சத்தம். மரத்தினுடன் மரங்கள் உராயும் போது ஏற்பட்ட பயங்கரமான 'கீரிச், கீரிச்' என்ற ஒருவித அச்சமூட்டும் சத்தம். இந்நிலையில் நரியின் ஊளை வேறு, சுற்றிலும் இறந்து கிடந்த தேச பக்த தியாகிகளைப் பார்த்து ஒரு முறை அவர்களின் பாதாரவிந்தங்களுக்கு வணக்கம் தெரிவித்து விட்டு நகர்ந்தேன்.

இருட்டில் மேடு பள்ளம் முள் கல் இவைகளில் தட்டுத் தடுமாறி நடந்தோம். காலெல்லாம் கிழிசல் ஏற்பட்டு ரத்தம் வடிந்து கொண்டே வந்தது. கையில் குண்டு பாய்ந்த இடத்தில் ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. சுமார் நான்கு மைல் வந்ததும் தலை சுற்றியது. மயக்கமாக வந்தது. அதே இடத்தில் கீழே தடால் என்று மயக்கமாக விழுந்து படுத்து விட்டேன். என் நண்பரும் மயங்கிப் படுத்து விட்டார். மயங்கிய நிலையில் நன்றாகத் தூங்கி விட்டோம்.

தூங்கிக் கொண்டிருந்த எங்களை சிலர் தட்டி எழுப்பினார்கள். சுமார் 10 பேர் நின்று கொண்டிருந்தார்கள். போலீசார் என்று நினைத்து விட்டோம். ஆனால் அவர்கள் போலீசார் அல்ல. அதற்கு முன் தினம் இறந்து போன உறவினர் ஒருவருக்குப் பால் ஊற்றி அஸ்தி எடுத்துப் போக வந்திருக்கிறார்கள் அது சரி அவர்கள் ஏன் நாங்கள் படுத்திருந்த இடத்திற்கு வந்தார்கள்? எதற்காக எங்களை எழுப்பினார்கள்?

சொன்னால் நம்பமாட்டீர்கள், நாங்கள் அவர்கள் உறவினரைப் புதைத்திருந்த இடத்திற்கு மேல்தான் அவ்வளவு நேரம் அந்த இரவு முழுதும் படுத்திருந்தோம். இதை அறிந்ததும் எங்கள் மனோநிலை எப்படி இருந்திருக்கும்?

## தலை மறைவு வாழ்க்கை

1942 ஆகஸ்ட் போராட்டத்தில் திருவாடானை சிறையில் இருந்து மக்கள் என்னை விடுதலை செய்தததும், போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றதும் அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் என் கையில் ஒரு குண்டு பாய்ந்ததும், போலீஸ்காரரிடம் இருந்து தப்புவதற்காகப் பல பகுதிகளில் ஒளிந்து மறைந்து கையில் ஏற்பட்ட காயத்துடன் திருச்சிக்கு வந்து சேர்ந்தேன்.

திருச்சியில் திரு.டி.எஸ். அருணாசலம் அவர்கள், இப்போது காமராஜ் மன்றம் என்ற பெயரால் இயங்கி வரும் நூல்நிலையக் கட்டிடம் அப்பொழுது ஜில்லா போர்டு ஆபீஸாக இருந்து வந்தது.

அதில் அவர் தங்கி இருந்தார். நடு இரவில் மேற்படி கட்டிடத்திற்குச் சென்று அவரை எழுப்பினேன்.அவர் என்னைப் பார்த்து திடுக்கிட்டு எப்படி இங்கு வந்தாய்? என்று கேட்டார். நடந்த சம்பவங்களைச் சொல்லிக் கையில் இருந்த காயத்தைக் காண்பித்தேன்.

உடனே என்னை அவர் டாக்டர் ஜகந்நாதன் என்பவரிடம் கூட்டிச் சென்றார். திருச்சி நகரசபை சேர்மனாக இருந்த டாக்டர் ரங்கநாதன் அவர்களுடைய மாமனார்தான் டாக்டர் ஜகந்நாதன். டாக்டர் ஜகந்நாதன் அவர்கள் சிறந்த காங்கிரஸ் அபிமானி, ஆகையால் கையில் பாய்ந்திருந்த துப்பாக்கிக் குண்டை போலீஸுக்கு அறிவிக்காமல் வெளியில் எடுத்து காயத்துக்கு மருந்து போட்டுக் கட்டிவிட்டார்.

அதற்குள் போலீஸார் தேவகோட்டையிலும், திருவாடானையிலும் சிறையில் இருந்த தப்பிய என்னை உயிருடனோ, அல்லது பிணத்தையோ கொண்டு வந்தால் ரூ.10,000 பரிசளிப்பதாகப் பறை சாற்றினார்கள். இது விவரம் தெரிந்ததும் தலைவர் டி.எஸ். அருணாசலம் அவர்கள் என்னை ஒரு பாதுகாப்பான வீட்டில் தலைமறைவாக இருக்கச் செய்தார்கள்.

தலைவர் டி.எஸ்.அருணாசலம் அவர்களும், நானும் பல யோசனைகள் செய்து திருச்சியில் உள்ள காவேரி பாலத்தை வெடி வைத்துத்தகர்ப்பது என்றும் அகில இந்திய ரேடியோ நிலையத்தை பாம் வைத்துத் தகர்ப்பது என்றும் திட்டம் தீட்டி அதற்கு வேண்டிய வெடி மருந்துகள் தயார் செய்வதற்கு ஏற்பாடுகள் செய்தோம்.

இந்தக் காரியத்தை நாங்கள் செய்வதற்கு குறித்த நாளுக்கு முதல்நாள் போலீஸார் திடீரென்று டி.எஸ்.அருணாசலம் அவர்களைக் கைது செய்தனர். அவர் கைது செய்யப்பட்ட செய்தியை அறிந்ததும் நானும் தப்புவதற்காக ஏற்பாடுகள் செய்யும்போது பெரிய கம்மாள தெருவில் ஏராளமான போலீஸார் நடமாட்டம் இருப்பது தெரிந்தது. மேற்படி கம்மாள தெருவில்தான் நான் தலைமறைவாக இருந்தேன்.

அந்த வீட்டுக்கு உடையவர் ஒரு ஏணியை எடுத்து நடுவாசலில் வைத்து ஓட்டின்மீது ஏறச் செய்து வரிசையாக இருந்த வீடுகளின்வழியாக ஓட்டின்மீதே நடந்து அடுத்த தெருவில் உள்ள ஒரு வீட்டிற்கு எல்லா வீடுகளையும் கடந்து குதிக்கச் சொன்னார்.

அவர் சொன்னதுபோல் செய்து நானும் குதித்தேன். அந்த வீட்டுக்காரர் தாயாராக வைத்திருந்த காரில் ஏற்றி என்னை கரூருக்கு அனுப்பி வைத்தார்.

கரூரில் டி.கே.எஸ்., பிரதர்ஸ் நாடகக் குழுவினரின் நாடகம் நடந்து கொண்டு இருந்தது. அந்த நாடகக் குழுவினர்களுடன்

போய் நானும் சேர்ந்துகொண்டேன். டி.கே.எஸ்.சகோதரர்கள் என்னிடம் மிக அன்பாக நடந்துகொண்டு நான் தலைமறைவாக இருப்பதற்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்தார்கள்.

அதற்கும் ஒரு நாள் ஆபத்து வந்தது. நாடகம் பார்க்க வந்ததுபோல் சில போலீஸ் அதிகாரிகள் வந்து நான் இருப்பதைக் கண்டுபிடித்துவிட்டார்கள். இதை அறிந்த திரு.டி.கே.சண்முகம் அவர்கள் சாமர்த்தியமாக என்னை போலீஸ் அதிகாரிகளிடம் இருந்து தப்புவித்து அவர்களுடைய காரிலேயே என்னைச் சென்னையில் கொண்டுவிடும்படி செய்தார்.

சென்னையில் தலைமறைவாக இருந்த திரு.சா.கணேசன் அவர்களைச் சந்தித்தேன். அவர் சென்னையில் இருப்பது ஆபத்து என்று கூறி என்னை காசிக்குப் போய் தலைமறைவாக இருக்கும்படி ஏற்பாடு செய்தார். காசிக்கு என்னை இரயிலில் ஏற்றி விடுவதற்கு சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு தினமணி ஆசிரியர் ஏ.என்.சிவராமன் அவர்கள், திரு.ஏ.கே.செட்டியார் அவர்கள், திரு.கோயங்கா முதலியவர்கள் வந்திருந்தார்கள்.

சென்னையிலிருந்து நானும் எனது நண்பரும் காசிக்கு ரயிலில் சென்றபோது இட்டார்சி என்ற ஊரில் ஒருநாள் மாலையில் இறங்கி மறுநாள் காலையில் ரயில் ஏற வேண்டியிருந்தது.

இட்டார்சி என்பது ஒரு ரயில்வே ஜங்ஷன். யுத்த காலமாக இருந்ததால் ராணுவவீரர்கள் ஏராளமாகத் தென்பட்டனர். இரவு எங்கு தங்குவது என்று தெரியவில்லை. எந்தப் போலீஸ்காரரைப் பார்த்தாலும் சந்தேகமாக இருந்தது. பசி வயிற்றைக் கிள்ளியது. சரி முதலில் ரயில்வே உணவு விடுதியில் சாப்பிடுவோம் என்று சாப்பிடப்போய் உட்கார்ந்தோம்.

அது அசைவ உணவு விடுதி. பரோட்டா, கோழி குருமா, மீன் வறுவல் என்று பலவகையான உணவு வகைகளை இருவரும் ஒரு 'பிடி பிடித்தோம்' பில் வந்தது. ரூபாய் அறுபது. அசந்து விட்டோம். இது வரையில் இம்மாதிரி ஓட்டலில் நாங்கள் சாப்பிட்டதுமில்லை. இவ்வளவு ரூபாய்க்கு பில் கொடுத்தது மில்லை.

எங்கள் கைவசமோ ரூபாய் அதிகமில்லை. இப்போது அறுபது ரூபாய் கொடுத்து விட்டால் என்ன செய்வது என்று நாங்கள் இருவரும் தமிழில் பேசிக் கொண்டோம்.

எங்களுக்கு உணவு பரிமாறி பில் கொடுத்த சர்வர் எங்களை ஆச்சரியமாகப் பார்த்து "ஏன் சார் நீங்கள் தமிழ்நாடா? என்று தமிழில் கேட்டான்.

"ஆமாம் நாங்கள் தமிழ்நாடுதான், ராமநாதபுரம் ஜில்லா" என்றோம். உடனே அவன் நான் கூட ராமநாதபுரம் ஜில்லாகாரன்தான் சார். என் ஊர் சிவகங்கைக்குப் பக்கத்திலுள்ள பார்த்திபனூர்" என்றான்.

"அடடே அப்படியா சங்கதி. ரொம்ப நெருங்கி வந்து விட்டாயே, இங்கே வந்து எவ்வளவு காலமாச்சு?" என்று கேட்டேன். "பத்து வருஷமாச்சு, நம்ம ஊரை எல்லாம் பார்க்க வேண்டுமென்ற ஆசை வரவர அதிமாகிக்கொண்டு வருகிறது" என்று சொன்னவன், தன் குரலைத் தாழ்த்தி, "ஏன் சார், திருவாடானைப் பகுதியில் பெரிய புரட்சியாமே, இங்கிலீஷ் கவர்மெண்டே போச்சாமே, ஜெயிலை உடைத்து காங்கிரஸ் தலைவர்களை ஜனங்கள் விடுதலை செய்து விட்டார்களாமே, நம்ம ஊர் ஆளுங்க செய்யக் கூடியவங்கதான் சார். வீர மறவர் நிறைஞ்ச ஊரில்ல" என்று அடுக்கிக் கொண்டே போனான். நாங்கள் அவனைத் தடுத்து, நீயும் காங்கிரஸ்காரன்தானா?" என்று கேட்டோம்.

''என்ன சார் இப்படிக் கேட்கிறீங்க, என் பெயர் வீரபத்ரன். என் உடம்பிலும் மறவன் ரத்தம் ஓடுது. உண்மையான மறவன் ஒவ்வொருவனும் தேச பக்தி உள்ளவன்தான் சார், தேசத்துக்காக நாங்கள் எதையும் செய்வோம்.

இந்த ஒட்டலுக்கு வெள்ளைக்காரங்க, அதிலும் போலீஸ், ராணுவ அதிகாரிகள் வந்தாங்கன்னா, அவர்களுக்கு நான் சாப்பாடு பரிமாற வேண்டி வந்தால் கட்டாயம் விஷத்தைப் போட்டுக் கொடுத்திடுவேன் சார்''என்றான் ஆவேசமாக.

அவனுடைய தேசபக்தியைப் பார்த்து நாங்கள் பிரமித்து விட்டோம். நாங்கள் யார் என்பதையும் இப்போது எந்த நிலையில் அங்கு வந்திருக்கிறோம் என்பதையும் சொன்னவுடன் அவன் எங்களை அப்படியே கட்டிப் பிடித்துக் கொண்டு தாரை தாரையாகக் கண்ணீர் விட்டான். அவனால் பேசமுடியவில்லை.

திருவாடானை ஜெயிலை உடைத்து மக்களால் விடுதலை செய்யப்பட்டவர்கள் நீங்கள்தானா, நீங்கள்தானா, நீங்கள்தானா என்று எங்களைத் தொட்டுப் பார்த்தான்.

பின்னர் ஓட்டல் முதலாளியிடம் எங்களைக் கூட்டிச் சென்று, எங்களைப் பற்றிய முழு விபரத்தையும் அவரிடம் சொல்லி விட்டான். ''பில்லுக்கு பணம் கொடுக்க வேண்டாம். நானும் ஒரு காங்கிரஸ்காரன் தான். பிழைப்பிற்காக வேறு துணி கட்டியிருக்கிறேன். நீங்கள் பக்கத்திலிருக்கும் அறையில் தங்கிக் கொள்ளுங்கள்'' என்று ஓட்டல் முதலாளி இந்தியில் சொன்னார்.

எல்லாம் வீரபத்ரன் ஏற்பாடுதான். அறையில் தங்கி யிருந்தோம். சுமார் அரைமணி கழித்ததும், அறையைத் திறந்து கொண்டு வீரபத்ரன், ஓட்டல் முதலாளி, முதலியவர்களுடன் ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் உள்ளே நுழைந்தார்.

நாங்கள் திடுக்கிட்டுத் திகைத்தோம். 'ஆகா மோசம் போய் விட்டோம்' என்று நினைத்துக் கொண்டோம். வந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் இனிமையான தமிழில், "தம்பி வீரபத்ரன் எல்லாம் சொன்னான். நீங்கள் எதற்கும் பயப்பட வேண்டாம். இன்று இரவு நமது வீட்டில் தமிழ் நாட்டுச் சாப்பாடு சாப்பிடலாம் வாருங்கள்" என்று கூப்பிட்டார்.

"அப்பாடா" என்று பெருமூச்சு விட்டோம். அந்தப் போலீஸ் இன்ஸ்பெக்டர் பெயர் சுந்தர்சிங் என்றும், அவர் தந்தை மதுரையைச் சேர்ந்தவர் என்றும் காசியில் வியாபாரம் செய்ய வந்த குடும்பம் அங்கேயே தங்கி விட்டார்கள் என்றும் சுந்தர்சிங் முழுப் பெயர் சோமசுந்தரம் என்றும் வடக்கே உத்யோகம் பார்க்க சௌகரியமாக சுந்தர்சிங் என்று பெயரை வைத்துக் கொண்டிருக்கிறார் என்றும் ஒரு பஞ்சாபிப்பெண்ணைத் திருமணம் செய்துகொண்டிருக்கிறார் என்றும் வீரபத்ரன் சொல்லத் தெரிந்து கொண்டோம்.

இன்ஸ்பெக்டர் வீட்டுக்குச் சென்றோம். அவரது பஞ்சாபி மனைவி தூய தமிழில் "வணக்கம்"என்றார். அப்போதே எங்களுக்கு, "அங்கு தமிழ் நாட்டு சாப்பாடுதான்" என்று புரிந்த விட்டது. இரவு சாப்பாடு முடிந்தது. காலையிலும் பலகாரம் தந்தார்கள். இன்ஸ்பெக்டர், ஓட்டல் முதலாளி, வீரபத்திரன் மூவரும் சேர்ந்து ரூபாய் ஐநூறு கொடுத்து செலவிற்கு வைத்துக் கொள்ளச் சொன்னார்கள். நாங்கள் புறப்பட வேண்டிய ரயில் ஏறினோம்.

அப்போது இன்ஸ்பெக்டர் சுந்தர்சிங்கின் மகன் ஐந்து வயதுப் பையன் வெளியூர் சென்றிருந்தவன் அங்கு வந்தான். அவன்தான் அவர் மகன் என்பதைத் தெரிந்து கொண்டு நான், "தம்பி உன் பெயர் என்ன?" என்றேன். சொன்னால் நம்ப மாட்டீர்கள் அவன் சொன்ன பதில் 'காந்தி' என்பதாகும்.

## சுயராஜ்யம் வாங்கியாச்சா?

நான் காசியில் தலைமறைவாக இருக்கும்போது தேவகோட்டையில் என் இல்லத்தில் என் பெரிய தந்தையார் புதல்வர் பழ.லெட்சுமணனுக்குத் திருமணம் நடந்தது. அத்திருமணத்திற்குக் கண்டிப்பாக நான் வருவேன் என்று போலீஸார் நினைத்து திருமணத்தன்று ஏராளமான போலீ ஸாருடன் இன்ஸ்பெக்டர் வீரசாமி ஐயர், திருமண வீட்டிற்குள் நுழைந்தார்.

ஏராளமான பிரமுகர்களும், சொந்தக்காரர்களும் நிறைந் திருந்த திருமணப்பந்தல் போலீஸைக் கண்டதும் குழம்பி விட்டது. போலீஸார் எல்லோரையும் விரட்டி அடித்ததோடு, சமையல் செய்து கொண்டு இருந்த பாத்திரங்கள் அனைத்தையும் தூக்கி எறிந்து, சாப்பாட்டை நாசம் செய்து, பல இடங்களிலும் என்னைத் தேடி இருக்கிறார்கள். அப்போது என் பெரிய தந்தையார், எனது தந்தையார் அனைவரும் போலீ ஸாரால் அடிக்கப்பட்டனர்.

அச்சமயம் என் தாயார் அங்கு வந்து போலீஸ் இன்ஸ்பெக்டர் அவர்களைப் பார்த்து, ''ஐயா, நீங்கள் தேடி வந்த பையன் என் மகன்தான். அவனுக்காக மற்றவர்களை அடிக்காதீர்கள். என்னை அடியுங்கள்; நான்தான் அவன்தாய்'' என்று உருக்கமாகச் சொல்ல; உடனே இன்ஸ்பெக்டர் இன்னும் பத்து நாட்களில் அவனைக்கொண்டு வந்து போலீஸில் ஒப்படைக்காவிட்டால் உங்கள் அனைவரையும் லாக்கப்பில் தள்ளி இந்த வீட்டையும் தீ வைத்துக் கொளுத்தி விடுவேன் என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார்.

உடனே பதறிப் போய் தேவகோட்டையில் இருந்து ஒரு நண்பர் காசிக்கு நேராகப் புறப்பட்டு வந்து என்னிடம் விவரத்தைச் சொன்னார்.

என்னால் எனது உறவினர்களும், தாய் தந்தையர்களும் பட்ட சிரமங்களை எண்ணி மிகவும் மனம் வருந்தினேன். நாம் செய்த காரியத்திற்குத் தண்டனையை மற்றவர்கள் அனுபவிப்பது தவறு என்று எனக்குத் தோன்றியது. ஆங்கில அரசாங்கம் என்ன தண்டனை கொடுத்தாலும் பெற்றுக்கொள்வது, உறவினர் களையும் தாய் தந்தையர்களையும் காப்பாற்றுவது என்ற முடிவுக்கு வந்தேன்.

ஆகவே ஒரு நிமிடம் கூட காசியில் தாமதியாமல் அங்கு இருந்து நேராகப் புறப்பட்டு என்னைக் கூப்பிட வந்த நண்பருடன் தேவகோட்டை வந்து சேர்ந்தேன்.

தேவகோட்டையில் என்னை ஒரு வீட்டில் தலைமறை வாகக்கொண்டு போய்வைத்தார்கள். இரவு 8 மணிக்குமேல் எனது நெருங்கிய உறவினர்களில் பலரும் ஊரின் முக்கிய பிரமுகர்களும், நான் தலைமறைவாக இருந்த வீட்டிற்கு வந்தார்கள்.

என் தாயார் என்னைப் பார்த்ததும் கதறி அழுதார்கள். எல்லோருமாகக் கூடி மறுநாள் காலையில் என்னைப் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைப்பது என்று முடிவு செய்தார்கள்.

அப்போது ஊரின் முக்கிய பிரமுகர் ஒருவர் "ஸ்டேஷனில் கொண்டு போய் ஒப்படைக்கும்போது தம்பி கதர் கட்டாமல் மில் துணியை அணிந்து கொண்டு வந்தால் நல்லது. கதரைக் கண்டால் இன்ஸ்பெக்டருக்கு கோபம் வரும்.

நம் கண் முன்னேயே தம்பியைப் போட்டு அடிப்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியுமா? அதனால் மில் துணியை அணிவதுதான் இந்த நேரத்திற்குச் சரியாக இருக்கும்'' என்று சொன்னார்.

நான் சொன்னேன்: தயவு செய்து மன்னித்து விடுங்கள். இன்று நான் அடிவாங்குவதற்குப் பயந்து கதரை மாற்றி மில் துணியை அணிந்தால், என் பேச்சைக் கேட்டு ஆயிரக்கணக்கான பேர் கதர் கட்டி விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு போலீஸ்காரர்களிடம் அடிபட்டார்களே, அவர்கள் அனைவரும் என்னைத் 'துரோகி' என்று சொல்லமாட்டார்களா? இன்றைக்கு நான் தப்பிக்கலாம்.

நாளை என் பிள்ளைகள் தெருவில் போகும்போது இதோ போகிறார்களே அவர்கள்தான் அந்தத் துரோகியின் பிள்ளைகள் என்று பெயர் வராதா? அந்தக் களங்கத்தை என் சந்ததியாருக்கு ஏற்படுத்திக் கொடுக்க நான் விரும்பவில்லை.

அடிபட்டாலும் உதைபட்டாலும் சாக நேரிட்டாலும் கதர் துணியுடன்தான் சாவேன். நான் இறந்த பிறகு கதர் கொடியையே எனது சடலத்திற்குப் போர்த்த உபயோகப்படுத்த வேண்டும், என்பதே என் விருப்பம் என்று நான் சொன்னேன்.

என் தந்தையார் "அவனைக் கட்டாயப்படுத்த வேண்டாம். அவன் ஒரு உயர்ந்த லட்சியத்திற்காகத் தன்னையே அர்ப்பணித்துக் கொண்டுவிட்டான். உயர்ந்தவன் உயர்ந்த வனாகவே இருக்கட்டும்.'' என்று கூறியதும் எனக்கு மெய்சிலிர்த்தது. மிகப் பயந்த குணம் உடைய என் தந்தையாருடைய உள்ளத்தில் அப்படியொரு உறுதியான உணர்ச்சி ஏற்பட்டது எனக்கு வியப்பாக இருந்தது.

என்னால் சிரமப்பட்ட உறவினர்களிடம் என்னை மன்னிக்கும்படி நான் கேட்டுக் கொண்டபோது அவர்கள் அனைவரும் தங்கள் சிரமத்தைப் பொருட்படுத்தாமல் அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் எல்லாம் விதிப்படி நடக்கிறது, அதற்கு நீ என்ன செய்ய முடியும் என்று தத்துவம் பேசி என்னைச் சமாதானப்படுத்தினார்கள்.

மறுநாள் நான் வாங்கப் போகும் அடி உதை இவைகளைப் பற்றியே என் உறவினர்கள் அனைவரும் கவலைப்பட்டதாகத் தெரிந்தது. நான் சிறிதும் கவலைப்படவில்லை. என் கண் முன்னேயே என்னைக் காப்பாற்றப் பலபேர் துப்பாக்கி குண்டுபட்டு இறந்து, என் மீது சாய்ந்து தங்கள் இரத்தத்தால் எனக்கு அபிஷேகம் செய்தது போல் என் உடம்பெல்லாம் இரத்தத்தைத் தெளித்து அமரநிலை அடைந்த காட்சி என் மனக்கண் முன் நின்றுகொண்டே இருந்தது.

இவ்வளவு மாபெரும் தியாகத்திற்கு முன்னால் ஏதோ சில அடி உதைகள் என் உடம்பில் படுவது ஒரு சாதாரண தூசிக்குச் சமம் என்ற உறுதியான எண்ண அலைகள் என் உள்ளத்தில் மோதிக்கொண்டு இருந்தன.

மறு நாள் காலை ஊர் பிரமுகர்கள் 5 பேர் வந்து என்னைத் தேவகோட்டை போலீஸ் ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டர் இருப்பதைப் பார்த்து மேற்படி ஐவரும் மேல் துண்டை (அங்கவஸ்திரம்) எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு பய பக்தியுடன் இன்ஸ்பெக்டருக்கு முன்னால் போய் நின்றார்கள். இன்ஸ்பெக்டர் வீராசாமி ஐயர் என்ன விஷயம் என்று அதிகாரத் தோரணையில் கேட்டார்.

பையனைக் கொண்டு வந்திருக்கிறோம், என்று பிரமுகர்கள் பவ்யமாகச் சொன்னார்கள்.

"வந்துட்டானா? எங்கே அவன்?" என்ற மிரட்டல் சத்தம் கொடுத்துகொண்டு இருக்கும்போது நான் அவர் பார்க்கும்படியாக முன்னால் வந்து நின்றேன்.

"டேய் சுயராச்சியம் வாங்கிவிட்டாயா?" என்று ஒரு உறுமல் உறுமினார்.

நான் சமாளித்துக் கொண்டு "இன்ஸ்பெக்டர் சார், நீங்களும் எங்களுடன் சேர்ந்து ஒத்துழைத்தால்தான் சுயராச்சியம் கிடைக்கும் போல் இருக்கிறது" என்று சொன்னேன். இன்ஸ்பெக்டர் கடகட என்று சிரித்து "அப்படிச் சொல்லு, சரியாகச் சொன்னாய், நீதாண்டா உண்மையான காங்கிரஸ்காரன்.

எங்க ஒத்துழைப்பு இல்லை என்றால் வெள்ளைக்காரனை நாட்டை விட்டு விரட்ட முடியுமா? இது பலபேருக்குத் தெரியவில்லை. உனக்குத் தெரிந்திருக்கிறது" என்று இன்ஸ்பெக்டர் சொன்னதும் "இதுதான் என்னுடைய அனுபவம்" என்று நான் சொன்னேன்.

இன்ஸ்பெக்டருக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை. வந்திருந்த ஊர் பிரமுகர்கள் அனைவரையும் பார்த்து நீங்கள் எல்லோரும் போகலாம் என்று உத்தரவு கொடுத்தார். அவர்கள் அனைவரும் புறப்பட்டனர்.

சொன்னால் நம்பமாட்டீர்கள். இன்ஸ்பெக்டர் ஒரு போலீஸ் காவலரைப் பார்த்து 'டே 403 உடனே போய் எங்கள் இருவருக்கும் காபி வாங்கிக் கொண்டு வா' என்று சொன்னார். இதைக் காதில் கேட்டுக் கொண்டு ஊர் பிரமுகர்கள் மகிழ்ச்சியாகச் சென்றார்கள்.

காபி வந்ததும் இன்ஸ்பெக்டர் என்னை காபி சாப்பிடச் சொன்னார். அதன் பின்னர் என்னை ஸ்டேஷனில் உள்ள லாக்கப்பில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## தருமம் தலைகாக்கும்

இரவு மணி ஏழு இருக்கலாம். தேவகோட்டை போலீஸ் ஸ்டேஷன் லாக்கப்பில் உட்கார்ந்திருந்த எனக்குப் பலவிதமான சிந்தனைகள்.

திடீரென்று ஒரு பரபரப்பு.

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் பெருங்கூச்சல். போலீஸ் காவலர்கள் பலபேர் சூழ்ந்துகொண்டு ஒருவரை அடித்தும், மிதித்தும், கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டும் வந்து கொண்டிருந்தார்கள்.

லாக்கப்பில் இருந்த எனக்கு நன்றாகத் தெரிந்தது. பல போலீஸ் காவலர்கள் சுற்றி நின்று நடுவில் நின்ற ஒருவரைக் காலால் திருப்பிப் திருப்பி மிதித்தவாறு "கொடு இவனுக்கு சுயராச்சியம்" என்று ஒருவன் கூற, மற்றவர்கள் அவனை மிதிக்க இப்படியாகச் சிறிது நேரம் அவனை அடித்துத்துவைத்து நான் இருந்த லாக்கப்பிற்கு அருகில் கொண்டு வந்தார்கள்.

லாக்கப்பை திறந்து நான் இருந்த இடத்தில் கழுத்தைப் பிடித்து அவனை உள்ளே தள்ளினார்கள். வந்து விழுந்தவன் ஒரு தேசபக்தன். சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவன். உடம் பெல்லாம் இரத்தமயமாக இருந்தது.

அவனை உள்ளே தள்ளிய கான்ஸ்டெபிள்களில் ஒருவர் அந்த மங்கலான வெளிச்சத்தில் கூர்ந்து கவனித்தார். என்னை லாக்கப்பிற்குள் அடைக்கும்போது மேற்படி கான்ஸ்டெபிள்

யாரும் அங்கு இல்லை. அதனால் அவர்களுக்கு நான் உள்ளே இருப்பது தெரிந்திருக்காது.

என்னைக் கூர்ந்து கவனித்த கான்ஸ்டெபிள்''டேய் நீ வந்துட்டியா'' என்று ''தூய தமிழில்'' சில வசைமாரி வார்த்தைகள் பொழிந்து, ''நீ வரும் சமயம் நான் இல்லாமல் போனேன். இருந்திருந்தால் இதோ இவனுக்குச் செய்த பூஜை, நெய்வேதியம், தீபாராதனை உனக்கும் நடத்தி உள்ளே தள்ளியிருப்போம். இருக்கட்டும், எங்கே போய்விடப் போகிறாய்; காலை விடிந்ததும்,

வெளியில்தானே வரவேண்டும் அப்போது எலும்பை எண்ணிக் கையில் கொடுத்து விடுகிறேன். போலீஸ்காரனை நீ எவ்வளவு திட்டு திட்டினாய்; உன் நாக்கை அறுக்காமல் விடமாட்டோம்'' என்று ஆவேசமாகப் பேசிவிட்டு அந்தப் போலீஸ் கான்ஸ்டெபிள் வேகமாகச் சென்றுவிட்டார்.

அவர் பேசியது எனக்குப் பெரிய அதிர்ச்சியாக இருந்தது. அவ்வளவு கொடூரமாக நேருக்கு நேர் பேசியதை நான் கேட்டதில்லை. விடிந்ததும் பலமான அடி காத்திருக்கிறது என்ற நினைப்பில் மனம் சுற்றி வட்டமிட்ட வண்ணம் இருந்தது.

எதிரில் அடிபட்டு விழுந்து கிடந்த அந்த அப்பாவி தியாகியின் இரத்தத்தைத் துடைத்து அவனுக்கு ஆறுதல் சொன்னேன். அவனுக்கு விழுந்த அடிகளைத் திருப்பித் திருப்பிப் பார்க்கும்போது இம்மாதிரி அடிவாங்க நாமும் தயாராக வேண்டியதுதான் என்று நானும் என் மனதைத் திடப்படுத்திக் கொண்டேன்.

நெஞ்சில் ஒரு கலக்கம் இருந்து கொண்டே இருந்தது. இரவு முழுவதும் புரண்டு புரண்டு படுத்ததைத் தவிர ஒரு நிமிடம் கூட கண் அயர முடியவில்லை.

ஒவ்வொரு மணிக்கும் போலீஸ் ஸ்டேஷனில் மணி அடிப்பார்கள். காலை மணி 4 அடிக்கும் சத்தம் கேட்டது. திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன். இன்னும் 2 மணி நேரத்தில் சிறைக்கதவு திறக்கப்படும். போலீஸ்காரர்கள் சுற்றி நின்று கொள்வார்கள், கொடு இவனுக்கு சுயராச்சியம் என்பார்கள்.

சரமாரியாக உதை விழும். பூட்ஸ் காலால் மிதிப்பார்கள். இம்மாதிரி இக்கட்டான சந்தர்ப்பங்களில் கடவுளிடம் பிரார்த்தனை செய்வதைவிட வேறு வழி மனிதனுக்கு ஏது?

நானும் சில பிரார்த்தனைப் பாடல்களை ஆண்டவன்பால் லேசாகப் பாட ஆரம்பித்தேன். சிறு வயதில் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய பக்திப் பாடல்களை எனது தந்தையார் ஆசிரியர் வைத்து படிப்பித்திருக்கிறார். அதனால் எனக்குப் பல பக்திப் பாடல்கள் மனப்பாடம். ஆகவே தெரிந்த பாடல்கள் அனைத்தையும் பாடிக்கொண்டேயிருந்தேன்.

மெதுவாகப்பாடினால் இறைவன் காதில் விழுமோ விழாதோ என்று சிறிது உரக்கவே பாடினேன்.

''யாரடா அவன் கழுதை போல் கத்துவது'' என்று ஒரு இடி முழக்கம் போலீஸ் ஸ்டேஷன் வாசலில் இருந்து கேட்டது. உடனே மற்றொரு குரல் மெதுவாக, ''மரியாதையாகச் சொல்லுடா, பாடுவது யார்தெரியுமா?'' என்று முதல் குரலை அடக்கியது. யாரது என்று முதல் குரல் கேட்டது.

''வருடா வருடம் தீபாவளி அன்று முள்ளிக் குண்டு தோட்டத்திற்குச் சென்று வேஷ்டி, புடவை சாப்பாடு பொட்டலம் வாங்கிக் கொண்டு வருவாயே ஞாபகம் இருக்கிறதா?'' என்று இரண்டாவது குரல் சொன்னது.

''ஆம், அதற்கும், இவனுக்கும் என்ன சம்பந்தம்'' என்று முதல் குரல் அதட்டியது.

"சம்பந்தம் இருக்கிறது. ஆண்டுதோறும் தீபாவளி அன்று தருமம்செய்வாரே அந்தப் புண்ணியவான் தருமப் பிரபு சோமசுந்தரம் செட்டியார், அவருடையதங்கை மகனடா இவர்" என்று இரண்டாவது குரல் பாசத்துடன் கூறியது.

"அப்படியா சோமசுந்தரம் செட்டியார் தங்கை மகனா" என்று முதல் குரல் பணிவாகச் சொல்லியது.

"ஆம் ஜாக்கிரதையாக மரியாதையாகப் பேசு" என்றது இரண்டாவது குரல்.

இந்த இருவரின் சம்பாஷணை என் காதில் தெளிவாக விழுந்தது.

என்னை அதட்டி மிரட்டிய கான்ஸ்டெபிள் பெயர் நாகலிங்கம் என்றும், என் தாய்மாமன் தருமத்தை எடுத்துச் சொல்லி நாகலிங்கத்தை அடக்கிய கான்ஸ்டெபிள் பெயர் ஆறுமுகம் என்றும் தெரிந்து கொண்டேன்.

அன்றைய சூழ்நிலையில் 1942-ல் ஆகஸ்ட் போராட்டம் நடந்துகொண்டிருந்தபடியால் போலீஸ்காரர்கள் கான்ஸ்டெபிள் வீடுகளுக்குச் செல்லாமல் இரவில் போலீஸ் ஸ்டேஷனில் படுத்துக் கொண்டு இருந்தார்கள்.

காலை மணி 6 அடித்தது. சிறைக் கதவைத் திறக்கும் காவலாளி சாவிக்கொத்துக்கள் குலுங்க வந்து கொண்டு இருந்தான். அவன் பின்னால் 10, 15 போலீஸ்காரர்கள் கூடவே வந்தார்கள். முதல் நாள் அந்தி நேரத்தில் என்னை அடிப்பதாக மிரட்டிய மேற்படி நாகலிங்கமும் வந்து கொண்டு இருந்தார். நான் அடி வாங்குவதற்குத் தயாராக மனதைத் திடப்படுத்திக் கொண்டு எழுந்து நின்றேன்.

காவலாளி கதவைத் திறந்தான். போலீஸ்காரர் நாகலிங்கம் முன்னால் வந்து என் தோள்மீது கையை வைத்தார். சரி தீர்ந்தோம் என்று நான் நினைத்தபோது மேற்படி நாகலிங்கம், "தம்பி தர்மபிரபு சோமசுந்தரம் செட்டியார் தங்கை மகன் என்று தெரியாமல் உன்னைத் திட்டிவிட்டேன்.

அதற்காக என்னை மன்னித்துவிடு. ஏனென்றால் உன் தாய் மாமனிடம் பல ஆண்டுகள் நாங்கள் குடும்பத்தோடு வாங்கிச் சாப்பிட்டவர்கள்.

அந்த குடும்பத்தைச் சார்ந்த யாருக்கும் நாங்கள் தீங்கு நினைக்கக் கூடாது" என்று நாகலிங்கம் நா தழுதழுக்கச் சொன்னார்.

எனக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. அடி வாங்கத் தயாராயிருந்த எனக்கு இப்படி ஒரு பெருமையா? என் கண்கள் கலங்கின. என் தாய் மாமன் ஆண்டுதோறும் பல ஆயிரக்கணக்கான ரூபாய்களைத் தருமம் செய்வது வீண் என்று பேசியவன் நான். அவர்களிடம் நான் சண்டைபோட்டிருக்கிறேன்.

ஆனால் தருமம் தலைகாக்கும் என்பதை அன்றுதான் உணர்ந்தேன். அதன் பிறகு அந்த தேவகோட்டை போலீஸ் ஸ்டேஷனில் சில நாட்கள் என்னை வைத்திருந்தார்கள்.

அந்த சில நாட்களும் நாகலிங்கமும் போலீஸ் காவலர்களும், எனக்கு வேண்டிய சௌகரியங்கள் செய்து கொடுத்து ராஜபோகமாக வைத்திருந்தார்கள் என்று சொன்னால் நம்பமாட்டீர்கள்.

# சென்னைக்கு வந்தேன்

சிறு வயதிலிருந்தே கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களின் எழுத்தைப் படித்தே வளர்ந்தவன் நான். கல்கி அவர்கள் ராஜாஜி அவர்களைப் பற்றி எழுதியவை அனைத்தும் என் மனதில் பதிந்துவிட்டது. ராஜாஜி அவர்களை நினைக்கும்போதெல்லாம் எனக்கு ஒரு விதமான தெய்வீக உணர்ச்சி உண்டாகும்.

அவருடைய தூய்மையும் நேர்மையும் அவர் பாதத்தைத் தொட்டு, பலமுறை என்னை வணங்கும்படி செய்திருக்கிறது. அவரை ஒரு அரசியல் தலைவர் என்று சொல்வதைவிட அரசியலில் ஒரு 'ரிஷி' என்று கூறலாம். புராணங்களில் வரும் வசிஷ்டர் போன்ற மகாஞானி அவர்.

1942 ஆகஸ்ட் புரட்சியை ராஜாஜி ஆதரிக்கவில்லை. 'வன்முறை, காந்தீயம் அல்ல' என்று அந்தப் புரட்சியைப் எதிர்த்தார். ஆயினும் மேற்படி புரட்சி தானாக உருவானது. மக்கள் மனதில் ஆங்கிலேய ஆட்சிமீது இருந்த வெறுப்பால் அந்தப் புரட்சி வெடித்தது. ராஜாஜிமீது பற்றும் பாசமும் கொண்டிருந்தாலும் என் போன்ற இளைஞர்கள் அந்த நேரத்தில் வாளாயிருக்க இயலவில்லை.

'செய் அல்லது செத்து மடி' என்ற காந்தியடிகளின் வாக்கே வேதவாக்காக இருந்தது. 'வெள்ளையனே வெளியேறு' என்பதே தாரக மந்திரமாக இருந்தது. ஆகவே ராஜாஜியையும் மீறி நான் ஆகஸ்ட் புரட்சியில் ஈடுபட்டேன். அரசாங்கம் என்னைக் கைது செய்தது.

மக்கள் கோபம் கொண்டு அரசாங்கக் கட்டிடங்களைத் தீக்கிரையாக்கினர். சிறைக் கதவை உடைத்து என்னை விடுதலைசெய்தனர். பலர் உயிர்த்தியாகம் செய்தனர். தலை மறைவாக இருந்தேன். தாய் தந்தையரை விடுவிக்க போலீசில் நான் சரணடைந்தேன்.

144 உத்தரவை மீறியது, மக்களை வன்முறைக்குத் தூண்டியது, போலீசாரை கடமையைச் செய்யவிடாமல் தடுத்தது, பஸ்ஸுக்கு தீ வைத்து சப்-கோர்ட்டைக் கொளுத்தியது, திருவாடானை மாஜிஸ்ட்ரேட் கோர்ட், தாசில்தார் ஆபீஸ், கெஜானா, போலீஸ் ஸ்டேஷன் சப்ஜெயில் இவைகளைக் கொளுத்தியது.

ஜெயிலிலிருந்து தப்பி ஓடியது. ஆயுதம் தாங்கிய சட்ட விரோதமான கூட்டத்தைக் கூட்டி வன்முறையில் இறங்கியது. துப்பாக்கி பிரயோகத்தில் பல பேர் சாவதற்குக் காரணமாக இருந்தது.

இப்படியாகப் பல குற்றச்சாட்டுகளை அடுக்கி விசாரணை என்ற பேரில் பலநாள் இழுத்தடித்து கடைசியாக எனக்கு ஐந்து ஆண்டு கடுங்காவல் தண்டனை கொடுக்கப்பட்டது.

இதை அறிந்த ராஜாஜி உடனே என் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் பற்றி ஆராய்ந்து எனக்காக அப்பீல் செய்தார்கள். பெரிய வழக்கறிஞர்களை வைத்து வழக்கை நடத்தும்படி ஏற்பாடு செய்தார். வக்கீல்கள் பேசுவதற்குரிய 'பாயிண்ட்களை' ராஜாஜி, தன் கைப்பட எழுதிக் கொடுத்தார்.

அதில் அவர் சொல்லியிருந்தார். "144 தடை உத்தரவை மீறியதற்காகக் கைது செய்தார்கள். கைது செய்து தேவகோட்டையிலிருந்து 25 மைல் தூரத்திலுள்ள சப்-ஜெயிலில்

அடைத்துவிட்டார்கள். அதன் பின்னர் வெளியில் நடைபெற்ற தீ வைத்தல், கலவரம் இவைகளுக்கெல்லாம் சிறைக்குள் இருப்பவன் எப்படிப் பொறுப்பாக முடியும்?

ஒரு கைதியைச் சிறைச்சாலையில் வைத்துப் பாதுகாக்க முடியாத அரசாங்கம் எதற்கும் லாயக்கில்லாத அரசாங்கம் ஆகும். சிறையைவிட்டுத் தப்பாவிட்டால் தீயில் வெந்து சாவதா? ஆகவே 144ஐ மீறியதற்கு மட்டுமே தண்டனை கொடுக்க வேண்டும், அதற்கு அதிகபட்சம் தண்டனை என்ன உண்டோ, அதற்கு மேல் தண்டனை அனுபவித்தாயிற்று. ஆகவே விடுதலை தான் செய்யவேண்டும்."

இதுதான் ராஜாஜி கொடுத்த குறிப்பு. இதன்படிதான் வக்கீல்கள் விவாதம் செய்தார்கள். நான் மதுரை சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டேன். விடுதலையாகி வெளியில் வந்ததும் காந்தியடிகள் உண்ணாவிரதம் இருப்பதாகச் செய்தி வந்தது.

போலீஸ் வண்டியும் என் வீட்டு வாசலில் வந்து நின்றது. மீண்டும் நான் கைது செய்யப்பட்டேன். கையில் விலங்கு பூட்டப்பட்டது. என்னை திருப்பத்தூர் (இராமநாதபுரம் மாவட்டம்) சப்-ஜெயிலுக்குக் கொண்டு சென்றார்கள். அங்கு திரு.சா.கணேசன் அவர்கள் கைதியாக சிறையிலிருந்தார். அவருடன் சேர்ந்துகொண்டேன். திருப்பத்தூர் சப்-ஜெயில் ஒரு நரகம் என்றால் மிகையாகாது. சொல்லொணாக் கொடுமைகளை அனுபவித்தோம்.

காந்தியடிகள் உண்ணாவிரதம் நின்றதும் என்னை விடுதலை செய்தார்கள். மீண்டும் வீட்டிற்கு வந்தேன். சிறிதும் நிம்மதி இல்லை. அடிக்கடி போலீஸார் வருவதும் விசாரிப்பதும் இரவில் கதவைத் தட்டி நான் வீட்டில் இருக்கிறேனா என்று சோதிப்பதும் பெரிய தொல்லையாகப் போய்விட்டது.

இந்நிலையில் என் தந்தையார் நான் எவ்விதத் தொழிலும் செய்யாமல் அரசியலில் இப்படி மாட்டிக்கொண்டது குறித்து சண்டை பிடிக்க ஆரம்பித்தார்கள்.

'காலணா சம்பாதிக்க யோக்யதை இல்லை, என்ன அரசியல் வேண்டிக் கிடக்கு?' என்று பலவாறு பேசி விட்டார்கள். அதனால் ரோஷப்பட்டு நானும் என் தந்தையாரிடம் கோபமாக, 'இனி தங்களிடம் காலணா கூட வாங்க மாட்டேன்; எனக்கு வேண்டியதை நானே சம்பாதித்துக்கொள்கிறேன்' என்று கூறி வீட்டை விட்டுப் புறப்பட்டேன். கையில் காலணா காசில்லை. எங்கே போவது என்று யோசித்தேன்.

ராஜாஜி, கல்கி கிருஷ்ணமூர்த்தி முதலியவர்களைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் உள்ளத்தில் இருந்து வந்தது.

என்னைப் பெரிய வழக்கிலிருந்து விடுதலைசெய்து வைத்த ராஜாஜியைப் பார்த்து நன்றி சொல்லவேண்டும் என்று ஏற்கனவே நினைத்து இருந்தேன்.

ஆகவே எதைப் பற்றியும் யோசிக்காமல் தேவகோட்டை ரஸ்தாவில் ரயில்வேஸ்டேஷனை அடைந்து சென்னை செல்லும் ரயிலில் ஏறி உட்கார்ந்தேன். டிக்கெட் இல்லாமல்தான்! ரயில் செட்டி நாடு ஸ்டேஷன் வந்தது. ஸ்டேஷன் ஒரு மள மளப்பாக இருந்தது. என்ன என்று பார்க்க பிளாட்பாரத்தில் இறங்கினேன். குமார ராஜா முத்தையா செட்டியார் அவர்கள் (இப்போதைய ராஜா சர்) இரயிலில் ஏறவந்தார்கள். என்னைப் பார்த்ததும் அன்போடு தன் அருகில் கூப்பிட்டார்கள்.

என் தோள்மீது கை போட்டுக் கொண்டு ''எல்லாம் கேள்விப் பட்டேன். இந்த மட்டில் நீங்கள் விடுதலை அடைந்தது எனக்கு சந்தோஷம். நான் கும்பகோணத்தில் நடைபெறும்

தமிழிசை மாநாட்டிற்குச் செல்கிறேன். நீங்களும் வருகிறீர்களா? 'சரி வருகிறேன்' என்று கூறினேன். உடனே எனக்கு முதல் வகுப்பு டிக்கெட் வாங்கப்பட்டது. 'நல்ல வேளை' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டேன்.

கும்பகோணத்தில் பெரிய வரவேற்பு நடைபெற்றது. தமிழிசை மாநாட்டிற்கு டாக்டர் சுப்பராயன் அவர்கள் தலைமை வகித்தார்கள். ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் மாநாட்டைத் துவக்கிவைத்தார்கள்.

டாக்டர் சுப்பராயன் அவர்கள் பேசும்போது 'காக்கைக்குத் தன் குஞ்சு பொன் குஞ்சுதான்; அதற்காகக் காக்கை குயிலாகி விடாது. அதுபோல தமிழ் நமக்குச் சிறந்ததாகாது' என்று பேசிவிட்டார்.

நான் பேசும்போது டாக்டர் சுப்பராயன் அவர்களை மிகவும் தாக்கிப் பேசி, மேலே சொன்ன கருத்தை அவர் வாபஸ் வாங்க வேண்டுமென்று அங்கேயே ஒரு போராட்டத்தை ஆரம்பித்தேன். மக்கள் என் பக்கம் திரண்டதைப் பார்த்த டாக்டர் சுப்பராயன் அவர்கள் தமிழை இழித்துரைத்ததற்கு வருத்தம் தெரிவித்த பின்னர் மக்கள் என் பேச்சுக்குப் பெருத்த ஆரவாரம் செய்து பாராட்டு தெரிவித்தனர்.

ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்கு இதை யெல்லாம் பார்க்கப் பார்க்க மகிழ்ச்சியாக இருந்தது. அதனால் அவர்கள் நான் சென்னைக்கு வரவேண்டும் என்றும் தன்னுடன் ஒரு மாத காலமாவது தங்க வேண்டுமென்றும் சொன்னார்கள். பழம் நழுவி பாலில் விழுந்ததுடன் அதுவும் நழுவி வாயில் விழுந்தால் எப்படி? அப்படித்தான் என் நிலையுமிருந்தது. 'சரி' என்று சொல்லி ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களுடன் சென்னை வந்து சேர்ந்தேன்.

நான் சென்னை வந்ததும் அந்த வாரக் 'கல்கி' பத்திரிக்கையை என்னிடம் சிலர் கொடுத்து என்னைப் பற்றி எழுதியிருப்பதாகச் சொன்னார்கள். ஆவலுடன் பத்திரிகையைப் பிரித்துப்பார்த்தேன்.

கும்பகோணத்தில் நடைபெற்ற தமிழிசை மாநாட்டைப் பற்றி பிரபல நகைச்சுவை எழுத்தாளர் 'நாடோடி' அவர்கள் எழுதியதில் என்னை மிகவும் புகழ்ந்து எழுதி என்னைக் 'குஷி பேர்வழி' என்று அடைமொழியும் கொடுத்து பிரபல கார்ட்டூனிஸ்ட் சாமா அவர்கள் எழுதிய என் போன்ற கேலிச்சித்திரம் ஒன்றையும் பிரசுரித்திருந்தார்.

அதுதான் முதன் முதலில் என்னைப்பற்றி அம்மாதிரி பத்திரிகையில் வந்தது.

சென்னை 'நாலு பேருக்கு' என்னைத் தெரியும்படி முதலில் செய்தவர் நாடோடிதான். சொன்னால் நம்பமாட்டீர்கள். அதே நாடோடி அவர்கள் நான் தமிழ்ப் பண்ணைப் புத்தகப் பதிப்பகம் வைத்து நடத்துவதைப் பார்த்துவிட்டு, ''எனக்கு ஏதாவது பிழைக்கும் வழி சொல்லித்தரக் கூடாதா?'' என்று கேட்டார்.

''பிழைக்கும் வழி'' என்று ஒரு நகைச்சுவைப் புத்தகம் எழுதுங்கள், அதுதான் நீங்கள் பிழைக்கும் வழி என்றேன்.

சொன்னால் நம்பமாட்டீர்கள் பிரபல நகைச்சுவை எழுத்தாளர் நாடோடி முதலில் எழுதி வெளிவந்த புத்தகத்தின் பெயர் ''பிழைக்கும் வழி'' என்பதாகும். அதை 'நாலுபேர்' புத்தகமாகப் படிக்கும்படி வெளியிட்டவனும் அடியேன்தான்!

## தமிழ்ப்பண்ணை

சென்னைக்கு வந்துவிட்டேன். 'என்ன செய்வது' என்று திகைத்திருக்கையில் திரு.ஏ.கே.செட்டியார் அவர்கள் என்னைத் தன் வீட்டில் கூட்டிக் கொண்டு போய் வைத்துக் கொண்டார்.

திரு.ஏ.கே.செட்டியார் அவர்கள் 'உலகம் சுற்றும் தமிழன்' என்று புகழ் பெற்றவர், பிரயாணக்கட்டுரைகளை மிகவும் சுவாரஸ்யமாக எழுதக்கூடியவர். 'குமரி மலர்' என்ற அற்புதமான மாத இதழ் நடத்திக் கொண்டிருந்தார்.

அவருடன் கூடவே அவர் செல்லுமிடமெல்லாம் கூட்டிச் சென்று என்னை அறிமுகம் செய்து வைப்பார். அடிக்கடி சக்தி காரியாலயத்திற்குச் செல்வோம். சக்தி வை.கோவிந்தன் அவர்கள் எனக்கு ஏற்கனவே பழக்கமானவர். தமிழ்ப் புத்தகங்களை அழகிய முறையில் போடுவதற்கு முன்னோடி அவர் தான். ஏராளமான தமிழ்ப் புத்தகங்களை வெளியிட்டவர். திரு.ஏ.கே.செட்டியார், சக்தி வை. கோவிந்தன் இவர்களுடன் எப்பொழுதும் கூட இருக்கும் நண்பர் சத்ருக்கனன் அச்சுத் தொழிலில் பெரிய திறமைசாலி. இந்த மூவரும் இணை பிரியாத நண்பர்கள், இவர்கள் மூவரும் ஏனோ என்னிடம் மிகுந்த பாசம் காட்டினார்கள். தங்களின் 'செல்லப்பிள்ளை'யாக என்னைக் கட்டிக் காத்தார்கள்.

இவர்கள் அடிக்கடி போகும் இடம் தியாகராய நகரில் உஸ்மான் ரோடில் இருந்த திரு.வெ.சாமிநாத சர்மா அவர்களின்

இல்லத்திற்குத்தான்! இவர்களுடன் நானும் செல்வேன். ஒரு நாள் நாங்கள் பஸ்ஸில் திரு.சாமிநாத சர்மா அவர்களின் இல்லத்திற்குப் போகும்போது தியாகராய நகர் பனகல்பார்க் நாகேஸ்வரராவ் தெருவில் ஒரு சிறு அழகிய கட்டிடம் பூட்டிக் கிடந்தது. அதைப் பார்த்த மூவரும் என்னைக் கூட்டிக் கொண்டு பஸ்ஸை விட்டு இறங்கினார்கள்.

அந்தக் கட்டிடம் காலியாக இருப்பதை விசாரித்து தெரிந்துகொண்டு, இதில் நம் அண்ணாமலைக்கு 'தமிழ்ப் பண்ணை புத்தக நிலையம்' வைத்துக் கொடுக்கலாம் என்று அவர்களுக்குள் பேசி முடிவு செய்தார்கள். என்னிடம் விஷயத்தைச் சொன்னபோது, நான், ''என்னிடம் போதியபணம் இல்லையே, என்ன செய்வது?'' என்று கையைப் பிசைந்தேன்.

அவர்கள் மூவரும் சிரித்துவிட்டு ''நாங்கள் உனக்கு வேண்டிய உதவி செய்கிறோம் தைரியமாகத் தொழிலை ஆரம்பி'' என்றார்கள்.

இடத்தைப் பிடித்துக் கொடுத்தார்கள். பல புத்தகக் கம்பெனிகளில் புத்தகங்களை ஏராளமாக வாங்கிக் கொடுத் தார்கள். புத்தகம் போட பேப்பர் தந்தார்கள். அடடா அவர்கள் செய்த உதவியை நினைத்தால் இப்பொழுதுகூட என் மெய்சிலிர்க்கிறது.

'தமிழ்ப்பண்ணை'யை ராஜாஜி துவக்கி வைத்தார். நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை விளக்கேற்றி வைத்தார். சக்தி வை. கோவிந்தன் புதுக்கணக்கு எழுதினார்.

எழுத்தாளர்கள் அனைவரும் விழாவிற்கு வந்தனர்.

தமிழ்ப்பண்ணையின் முதல் புத்தகமான 'தமிழன் இதயம்' என்ற நூலைப் பார்த்து அனைவரும் பிரமிப்படைந்தனர்.

அப்புத்தகத்தை மிக அழகாகப் போட்டுக் கொடுத்தவர் சக்தி வை. கோவிந்தன் அவர்கள்.

அதன்மேல் அட்டையை கண் கவரும் வண்ணம் அச்சடித்துக் கொடுத்தவர் திரு.சத்ருக்கனன் அவர்கள்.

தமிழ்ப்பண்ணை எழுத்தாளர்களுக்கும், தேச பக்தர்களுக்கும் 'நிழல்' கொடுத்து வந்தது. தமிழ்ப்பண்ணையின் மூலம் அரிய பெரிய காரியங்களைச் சாதிக்க முடிந்தது.

'நாமக்கல் கவிஞருக்குப் பண முடிப்பு அளிக்க முடிந்தது. அதைப் பார்த்த திரு.சி.என்.அண்ணாதுரை அவர்கள் என்னை நேரில் வந்து பாராட்டி விட்டு, தானும் பாரதிதாசனுக்கு அப்படி ஒரு நிதி அளிக்க வேண்டும். அதற்கும் கூடவே இருந்து உதவ வேண்டும்' என்றும் கேட்டுக் கொண்டார்.

பின்னர் பலமுறை திரு.அண்ணாதுரை அவர்கள் சார்பில், திரு.என்.வி. நடராஜன் என்னைப் பலமுறை வந்து சந்தித்து பாரதிதாசன் நிதி அளிப்பு விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள்.

ராஜாஜியின் நூல்கள், கல்கி கிருஷ்ணமூர்த்தி, வ.ரா., டி.எஸ்.சொக்கலிங்கம், பொ.திருகூட சுந்தரம் பிள்ளை, நாடோடி, தி.ஜ.ர. இப்படி ஏராளமானவர்களின் நூல்களை வெளியிட்டு, பெரிய விழாக்கள் நடத்தி எழுத்தாளர்களுக்குக் கௌரவம் செய்யும் வழக்கத்தை ஏற்படுத்தியது தமிழ்ப் பண்ணையே!

ஆண்டுதோறும் பாரதிவிழா, பாரதி பாட்டுப்போட்டி, பேச்சுப் போட்டி நடத்தப்பட்டன. திரு.வி.க. மணிவிழாவை மிகச் சிறப்பாக நடத்தியது தமிழ்ப் பண்ணையே! காந்தியடிகளின் 'ஹரிஜன்' பத்திரிகையைத் தமிழில் நடத்தியதும் தமிழ்ப் பண்ணையே!

தமிழ்ப்பண்ணைக்கு அடிக்கடி புத்தகம் வாங்க வருவார் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள். அவருடன் நெருங்கிய பழக்கம் எனக்கு அப்பொழுதுதான் ஏற்பட்டது.

தமிழ்ப்பண்ணை புத்தகப் பதிப்பகத்திற்கு எல்லாத் தமிழ் எழுத்தாளர்களும் வருவார்கள். தவறாமல் வ.ரா., புதுமைப் பித்தன், தி.ஜ.ர.முதலியவர்கள் வருவார்கள். வ.ரா.சத்தம் போட்டுத்தான் பேசுவார். யாரும் அவருக்கு நிகரில்லை. புதுமைப் பித்தனோ ரொம்பக் கிண்டலாகப் பேசுவார். தி.ஜ.ர.எதுவும் பேசமாட்டார். அப்படிப் பேசினாலும் ரொம்ப மெதுவாகப் பேசுவார்.

ஒருநாள் நான் ஏதோ எழுதிக் கொண்டிருக்கும் போது வ.ரா.வந்தார். ''என்னடா எழுதுகிறாய்'' என்று கேட்டார். ''ஒரு பிரயாணக் கட்டுரை எழுதுகிறேன்'', என்றேன். ''கொடு பார்ககலாம்'' என்றார். கொடுத்தேன். ''டேய்!'' நீ பெரிய ஆளுடா, என்னமா எழுதியிருக்கிறாய்!'' என்று சத்தம் போட்டுக் கொண்டிருந்தபோது தி.ஜ.ர. வந்து விட்டார். ''பார்த்தியா, இதைப் பார்த்தியா'' என்று தி.ஜ.ர.விடம் நான் எழுதியதைக் காட்டி வ.ரா.புகழ ஆரம்பித்தார்.

தி.ஜ.ர.அதைப் படித்துப் பார்த்து, ''நன்றாகத்தான் இருக்கிறது'' என்றார். ''சும்மா சொல்லி விட்டுப் போகாதே. 'சக்தி' பத்திரிகையில் இவனிடம் கட்டுரை வாங்கிப் போடு'' என்று வ.ரா. சொன்னார். எனக்கு மெய் சிலிர்த்தது. அவர் பெரிய எழுத்தாளர் மட்டுமல்ல, பெரிய மனது உடையவர், நான் எழுதிய அந்தக் கட்டுரையின் ஆரம்பம் இது தான்.

''கட்டுரையாகட்டும் கதையாகட்டும்'' வேகமாகவும்

விறுவிறுப்பாகவும் இருக்க வேண்டுமென்று அறிஞர்கள்

கூறுகிறார்கள். அதனால் இக்கட்டுரையைத்

திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸில் ஆரம்பிக்கிறேன்''

அவர் சொற்படி பின்னர் 'சக்தி' பத்திரிகையில் எனது கட்டுரையை தி.ஜ.ர.நிறைய வெளியிட்டார். அதன் பின்னர் கல்கி பத்திரிகையில் எனது கதைகளும் கட்டுரைகளும் வெளி வந்தன. எனது முதல் புத்தகத்தின் பெயர் ''சீனத்துச் சிங்காரி''

சொன்னால் நம்பமாட்டீர்கள் அந்தப் புத்தகத்திற்கு முன்னுரை எழுதியவர் பேராசிரியர் சீநிவாசராகவன் அவர்கள். அவர் என்னை ஒரு ''சிறுகதை மன்னன்'' என்று நிரூபிப்பதற்கு பெரிய ஆராய்ச்சி செய்து ஒரு அருமையான கட்டுரையை முன்னுரையாக அதில் எழுதியிருக்கிறார்.

# திரு.ம.பொ.சி.

சென்னையில் நான் தமிழ்ப்பண்ணை நூல் நிலையம் ஆரம்பித்த சில மாதங்கள் கழித்து ஒரு நாள்-மதிக்கத்தக்க ஒருவர்-மெலிந்த உடல்-சிவந்த முகம்-கூரிய -கண்கள் அடர்த்தியான மீசை - கதராடை அணிந்து வறுமைச் சாயல் வீச பண்ணைக்குள் நுழைந்தார்.

வந்தவர் திரு.ம.பொ.சிவஞானம் என்பதை அறிந்து அன்புடன் வரவேற்றேன். அவர் அப்போதுதான் சிறையிலிருந்து பரோலில் விடுதலை ஆகி வந்திருந்தார். 1942 புரட்சிப் போராட்டத்தில் ஈடுபட்ட அவரை ஆங்கில அரசாங்கம் மத்திய மாகாணத்திலுள்ள அமரோட்டி சிறையில் நம் தலைவர்களுடன் வைத்திருந்தது. அந்த சீதோஷ்ண நிலை திரு.ம.பொ.சி. அவர்களை மிகவும் பாதித்துக் கொடிய வயிற்று வலியை ஏற்படுத்தி விட்டது.

அவரது நோய் முற்றியது கண்டு பயந்து அவரை தஞ்சைச் சிறைக்கு மாற்றினார்கள். அச்சிறையில் அவர் அடைந்த துன்பம் பல முறை ‘எமலோகம்’ எட்டிப் பார்க்க நேர்ந்தது. இனி பிழைக்க மாட்டார் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்மானித்து ம.பொ.சி.அவர்களை விடுதலை செய்தது.

அந்நிலையில்தான் அவர் தமிழ்ப்பண்ணைக்கு என்னைப் பார்க்க வந்தார். நான் ரொம்பப் பெரிய மனிதன் என்பதற்காக என்னைப் பார்க்க வரவில்லை. தமிழ் உணர்ச்சி அவரை அங்கு

இழுத்து வந்தது. ''தமிழ்ப் பண்ணை'' வைத்து தமிழ் வளர்க்கும் ஒரு நிலையம் சென்னையில் இருப்பதைச் சிறையிலிருக்கும் போதே அவர் அறிந்திருக்கிறார்.

சிறையிலிருந்து விடுதலையாகி; சென்னைக்கு வரும் ஒவ்வொரு தேச பக்தரும் அப்போது தமிழ்ப்பண்ணைக்கு வராமல் ஊருக்குப் போவதில்லை. அதுவும் திரு.ம.பொ.சி. அவர்களுக்குத் தெரியும். ஆகவேதான் அவர் தமிழ்பண்ணைக்கு வந்தார்.

அதற்கு முன் நான் அவரைப் பார்த்ததில்லை. பிரமாதமாகக் கேள்விப்பட்டதுமில்லை. அப்போது அவர் பெயர் சென்னை நகரத்தில் அதுவும் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுந்தான் தெரிந்திருந்தது. ஆயினும் அவரைப் பார்த்ததும் என் மனதில் ஒரு பெரிய எண்ணம் உருவானது. அவரும் நானும் முதன் முதலில் விழித்துக் கொண்ட வேளை-என்னைப் பொறுத்தவரையில் 'மிக நல்ல வேளை' என்பது என் அபிப்பிராயம்.

திரு.ம.பொ.சி.அவர்கள் தமிழ்ப்பண்ணை மூலம் வெளி வந்த நூல்களை எல்லாம் பார்த்தார். அதன் அழகிய தோற்றம் அவரைக் கவர்ந்தது. தமிழ்ப் புத்தகத்தையும் இவ்வளவு அழகாக வெளியிட முடியுமா என்று ஆச்சரியப்பட்டுப் பரவசமடைந்தார்.

பின்னர், தான் கொண்டு வந்திருந்த ஒரு புத்தகத்தை என்னிடம் கொடுத்தார். திரு.ம.பொ.சி.

அது ஒரு சிறு புத்தகம். சாணி நிறத் தாளில் அச்சிடப் பட்டிருந்தது. விலை எட்டணா போட்டிருந்தது. புத்தகத்தின் தலைப்பு ''வ.உ.சிதம்பரம் வாழ்க்கை வரலாறு'' என்பதாகும்.

மேற்படி புத்தகத்தை திரு.ம.பொ.சி.மிகவும் சிரமப்பட்டு வெளியிட்டாராம். விற்பனைசெய்து அது சம்பந்தமாகப் பணம்

கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுக்கலாம் என்று நினைத்தாராம். ஆனால் அவர் நினைத்தபடி புத்தகங்கள் விற்கவில்லை. என்ன செய்யலாம் என்று கேட்டார்.

கையிருப்பு இருக்கும் புத்தகம் பூராவும் கொண்டு வரச் சொன்னேன்-விற்பனைக் கமிஷன் கழித்து மிச்ச ரூபாயை கணக்குச் செய்து திரு.ம.பொ.சி.அவர்களிடம் கொடுத்து விட்டேன்.

பின்னர் அந்தப் புத்தகத்தின் மேல் அட்டையை அகற்றி விட்டு, புதிதாக மேலட்டை, ஒன்று தயார் செய்து அழகிய முறையில் கப்பலோட்டிய தமிழன் என்று பெயர் கொடுத்து, அந்த மேலட்டையைப் புத்தகத்திற்குப் போட்டு அதே எட்டணா புத்தகத்தை ஒரு ரூபாய் விலை போட்டு, தகுந்த விளம்பரம் செய்து மேற்படிப் புத்தகங்கள் அனைத்தையும் விற்றேன். பின்னர் அந்த நூலையே திரு.ம.பொ.சி.அவர்களை விரிவாக எழுதச் சொல்லி, மேலும் அழகு சேர்த்து வெளியிட்டு மூன்று ரூபாய் விலைக்கு விற்க ஏற்பாடு செய்தேன்.

அதே ''கப்பலோட்டிய தமிழன்'' என்ற நூல் பின்னர் பல பதிப்புகள் வெளிவந்து தமிழகம் முழுவதும் வ.உ.சியின் புகழைப் பரப்பியதோடு ம.பொ.சியின் புகழையும் பரப்பியது.

தமிழ் உணர்ச்சி என்னையும் திரு.ம.பொ.சி. அவர் களையும் ஒன்றாக இணைத்தது. அரசியலில் நானும் திரு.ம.பொ.சி.அவர்களும் மிக நெருக்கமாக இணையக் காரணமாக இருந்தவர் ராஜாஜி.

''காங்கிரசிற்கு ராஜாஜி வேண்டாம்'' என்று திருகாமராஜ் அவர்களும் மற்றும் சிலரும் வாதாடினார்கள். ''ராஜாஜி வேண்டும்'' என்று தமிழகம் முழுவதும் சுற்றிப் பிரசாரம்

செய்வதில் ம.பொ.சியும் நானும் ஒன்றாக இணைந்தோம். அப்போது அவருடன் இணைந்த நான், அவருடன் பல ஆண்டுகள் ஒன்றாகவே சேவை செய்தேன்.

இன்று திருத்தணி தமிழ் நாட்டோடு இருக்கிறது. அது தமிழகத்தின் வடக்கெல்லை. கன்யாகுமரி தமிழகத்தில் இருக்கிறது. அது தெற்கெல்லை. சென்னை தமிழகத்தின் தலை நகராக இருக்கிறது. தமிழ்மொழி தமிழ் நாட்டில் ஆட்சி மொழியாக இருக்கிறது.

இத்தனையும் திரு.ம.பொ.சியின் உழைப்பால் வந்தது. அவருக்கு உறுதுணையாக நின்று உழைத்த பல தொண்டர்களில் நான் கொஞ்சம் நெருங்கிய தொண்டன் என்பதில் எனக்கு என்றைக்கும் பெருமை உண்டு.

அன்று திரு.ம.பொ.சி."வேங்கடத்தை விட மாட்டோம்" என்று முழங்கியிரா விட்டால் இன்று திருத்தணி ஆந்திர மாநிலத்தில் இருந்திருக்கும்.

அதே போல் "குமரியை கொள்ளை கொடோம்" என்று கர்ஜனை செய்திரா விட்டால் இன்று கன்யாகுமரி கேரளத்தில் இருந்திருக்கும்.

"தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" என்ற ம.பொ.சியின் தமிழ் முழக்கம் ஏற்பட்டிராவிட்டால் இன்று சென்னை இரண்டாகக் கூறு போடப்பட்டு ஆந்திராவிற்குப் பாதி, தமிழகத்திற்குப் பாதி என்றல்லவா இருந்திருக்கும்?

தமிழை ஆட்சி மொழியாக்க ம.பொ.சி.பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. இத்தனை சிறந்த சேவையில் நானும் சம்பந்தப் பட்டிருந்தேன் என்று நினைக்கும்போது தமிழ் இனத்திற்கு என் கடமையைச் செய்த பெருமிதம் எனக்கு ஏற்படுகிறது.

ஆனால் இவ்வளவு அரும் பெரும் காரியங்கள் செய்த திரு.ம.பொ.சி. அவர்களுக்குத் தமிழ்இனம் தகுந்த பெருமை செய்ய வில்லையே என்று இன்னும் நினைத்து மிகவும் மனம் வருந்துகிறேன்.

''கப்பலோட்டிய தமிழன்'' புத்தகம் வெளி வந்ததும் திரு.ம.பொ.சி. அவர்களின் புத்தகத்திற்குத் தமிழகத்தில் நல்ல வரவேற்பு ஏற்பட்டது. அவர் எழுதிய 'கட்டபொம்மன் ' என்ற நூல் பலபதிப்புகள் வெளி வந்திருக்கிறது. சிலப்பதிகாரத்தைப் பற்றிய ம.பொ.சி. அவர்களின் ஆராய்ச்சிக்குப் புலவர்கள் மத்தியில் பெரிய மரியாதை ஏற்பட்டிருக்கிறது.

சிலம்புச் செல்வர் ம.பொ.சியின் 71வது பிறந்த நாள் நடைபெற்றபோது அவர் எழுதிய ''வந்தே மாதரம்'' என்ற நூலை வெளியிட்டு அதன் முதல் பிரதியை என்னிடம் கொடுத்தார்கள். அதைப் பற்றி ம.பொ.சி. அவர்கள் கூறும்போது, ''எனது முதல் நூலை வெளியிட்டவர் சின்ன அண்ணாமலை. சிறந்த தேசபக்தர்,'' அதனால் இந்த 'வந்தே மாதரம்' என்ற நூலின் முதல் பிரதியை அவருக்கு அளிக்கச் சொன்னேன்'' என்றார்.

திரு.ம.பொ.சி.அவர்களின் அன்பை நினைத்துப் பெருமிதம் கொண்டேன்.

## தமிழ் ஹரிஜன்

மகாத்மாஜி கடைசியாகச் சென்னைக்கு வந்திருந்தபோது அவரிடம் ராஜாஜி என்னை அறிமுகப்படுத்தி வைத்தார். ''பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் பகல் 12 மணிக்கு மக்களால் பகிரங்கமாகச் சிறையை உடைத்து விடுதலை செய்யப்பட்ட முதல் ஆள் இவர்'' என்று கூறினார்.

மகாத்மாஜி ''எந்த ஊரில் நடந்தது?'' என்றார். ''திருவாடானையில் '' என்றேன் நான் சுருக்கமாக. ''இவர் இப்போது சிறந்த தமிழ்ப் புத்தகங்கள் வெளி யிட்டுக் கொண்டிருக்கிறார். தங்கள் 'ஹரிஜன்' பத்திரிகையைத் தமிழில் வெளியிட விரும்புகிறார்.'' என்று ராஜாஜி சொன்னார்.

காந்திஜி சிரித்துக்கொண்டு ''அச்சா அச்சா!'' என்று சொல்லி ''நஷ்டம் வராமல் நடத்துவாயா?'' என்று கேட்டார்.

அதற்கு ராஜாஜி, ''இவரும் உங்களைப் போல வைசிய சமூகத்தைச் சேர்ந்தவன்தான். அதனால் அதைப்பற்றிக் கவலை வேண்டாம்,'' என்றார். உடனே மகாத்மாஜி ''அச்சா'' என்று கூறி இப்போதே, 'தமிழ் ஹரிஜன்' துவக்க விழா நடத்தி விடலாமே, எனக்கு 10 நிமிஷம் ஓய்விருக்கிறதே?''என்றார். எனக்குக் கையும் காலும் ஓடவில்லை.

ராஜாஜி தலைமையில் காந்திஜியே 'தமிழ் ஹரிஜன்' பத்திரிகையைத் துவக்கும் முதல் நடவடிக்கையாக, 'தமிழ் ஹரிஜன்' என்று தமிழில் எழுதித் துவக்கி வைத்தார். நான் அதைப் பக்தியுடன் பெற்றுக் கொண்டு நன்றி கூறினேன்.எப்படி நன்றி கூறினேன் என்று நினைக்கிறீர்கள். காந்தியடிகள் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்காரம் செய்து அவர் பாதத்தைக் கண்ணில் ஒற்றிக்கொண்டேன்.

அதன் பின்னர் தமிழ் ஹரிஜன் பத்திரிகையைத் துவக்கி னேன். சிறந்த தேசபக்தரும்-அறிஞருமான திரு.பொ.திரு கூட சுந்தரம் பிள்ளை அவர்கள் தமிழ் ஹரிஜன் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார்கள். காந்திஜி அமரராகும் வரை அந்தப் பத்திரிகையை விடாமல் நடத்தினேன். மகாத்மாஜி என்னை சென்னையில் சந்தித்த மறுவாரம் ஹரிஜன் பத்திரிகையில் என்னைப்பற்றி கீழ்க்கண்டவாறு ஒரு குறிப்பு எழுதினார்.

"ஹரிஜன் பத்திரிகையைத் தமிழில் நடத்துவதற்கு ஒரு இளைஞரை ஸ்ரீ ராஜாஜி சென்னை இந்தி பிரசார சபையில் எனக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அந்த இளைஞர் பெயர் 'சின்ன அண்ணாமலை என்று ராஜாஜி சொன்னார். அதன் பின் ஸ்ரீ சின்ன அண்ணாமலையைப் பற்றி ஸ்ரீ சத்யநாராயணா மூலம் பல விஷயங்களைத் தெரிந்து கொண்டேன்.

சுதந்திரப் போராட்டத்தில் பல முறை சிறை சென்றவர் என்றும், குறிப்பாக 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் இவர் இருந்த திருவாடானைச் சிறையை உடைத்து, மக்கள் இவரை விடுதலை செய்தனர் என்றும் அறிந்து ஆச்சரிய மடைந்தேன்.

அந்தப் போராட்டத்தில் பல பேர் உயிர் இழந்தனரென்றும் ஸ்ரீ சின்ன அண்ணாமலை கையில் துப்பாக்கிக் குண்டு பாய்ந்து உயிர் தப்பியவர் என்றும் கேள்விப்பட்டேன். இப்படிப்பட்ட இளைஞர்களை நினைத்துப் பெருமை அடைகிறேன். ஸ்ரீ ராஜாஜி சாதாரணமாக யாரையும் சிபாரிசு செய்யமாட்டார். ஸ்ரீ சின்ன அண்ணாமலையைச் சிபாரிசு செய்திருப்பது ஒன்றே அவர் ரொம்பப் பொருத்தமானவர் என்பதில் சந்தேகமில்லை.

எனவே 'ஹரிஜன்' பத்திரிகையைத் தமிழில் நடத்த ஸ்ரீ சின்ன அண்ணாமலைக்கு நான் அனுமதி வழங்கி என் வாழ்த்துதலையும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். -**எம்.கே.காந்தி**

## கல்கி தந்த கார்

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சென்னையில் அடையாறு பங்களாவில் வசித்து வந்தார். நான் தினமும் மாலை 4 மணிக்கு அவரைப் பார்க்கப் போவேன். இருவரும் பல விஷயங்களைப் பற்றிப் பேசுவோம். பின்னர் விடை பெற்றுக்கொண்டு நான் வீட்டிற்கு செல்வது வழக்கம். சில சமயம் இரவு 8 மணி கூட ஆகும்.

ஒரு நாள் இரவு 10 மணி ஆகிவிட்டது. கல்கியிடம் விடைபெற்றுக்கொணடு புறப்பட்டேன். மாடியிலிருந்தபடியே அவர் நான் செல்வதைப் பார்த்துக்கொண்டிருந்தார். கேட் அருகில் நான் சென்றதும், என்னைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு, ''கார் எங்கே?'' என்று கேட்டார்.

''காரா? கார் ஏது'' என்றேன்.

''சரி இங்கே வாங்கோ,'' என்றார். மீண்டும் மாடிக்குப் போனேன்.

''தினமும் மாம்பலத்திலிருந்து எப்படி வருகிறீர்கள்?'' என்றார்.

''பஸ் மூலம்தான். லஸ் வந்து பஸ் மாறி அடையாறு வருவேன்'' என்றேன்.

''ஓகோ அப்படியா?'' என்று கேட்டுவிட்டுத் தன் மைத்துனனைக் கூப்பிட்டு என்னைக் காரில் வீட்டுக்குக் கொண்டுபோய் விடும்படி சொன்னார். மறுநாள் வழக்கம் போல்

நான் கல்கி அவர்கள் வீட்டுக்குப் போனேன். போனதும் கல்கி என்னைப் பார்த்து, ''உங்களுக்கு கார் ஓட்டத் தெரியுமா?'' என்றார்.

''ஓட்டுவேன்'' என்றேன்.

''சரி கீழே வாங்கோ'' என்று என்னைக் கூட்டிக் கொண்டு கீழே வந்தார். அங்கு ஒரு போர்டு ஆங்கிலியா கார் நின்று கொண்டிருந்தது.

''இதை ஓட்டுங்கள் பார்க்கலாம்,'' என்று கூறி அவரும் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டார். நான் காரை ஓட்டினேன். பீச்ரோடு வழியாக கார் சென்றது.

''பேஷ் பேஷ்! பிரமாதமாக ஓட்டுகிறீர்களே'' என்று கூறி ராயப்பேட்டை கபாலி பெட்ரோல் பங்கில் நிறையப் பெட்ரோல் போடச் சொல்லி அவர் கணக்கில் கையெழுத்துப் போட்டார். பிறகு அவர் வீட்டுக்குப் போனோம். சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு நான் விடைபெற்றேன்.

சொன்னால் நம்பமாட்டீர்கள். கல்கி என் கையில் மேற்படி கார் சாவியையும், ஆர்.சி. புத்தகத்தையும் கொடுத்து ''இந்தக் காரை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள், உங்களுக்குத்தான் வாங்கியிருக்கிறது'' என்றார்.

எனக்கு எதுக்குக் கார், மேலும் இதற்குக் கொடுக்கக்கூடிய பணமும் என்னிடம் இல்லையே, என்றேன்.

கல்கி சிரித்துக் கொண்டே, பணத்தைப் பற்றி கவலைப்படாதீர்கள். காருக்குக் கொடுக்க வேண்டிய பணம் பூராவும் கொடுத்தாயிற்று. நீங்கள் தினமும் என்னைப் பார்க்க வரவேண்டியிருக்கிறது. எனக்கும் அன்றாடம் உங்களைப் பார்க்காவிட்டால் என்னவோ போலிருக்கிறது.

"என் ஆப்த நண்பராகிய நீங்கள் பஸ்ஸிலும் நடையிலும் என்னைப் பார்க்க வருவதை நான் தெரிந்துகொண்டும் சும்மா இருந்தால் அந்த நட்பு உண்மை நட்பு ஆகாது. ஆகவேதான் இந்த ஏற்பாடு. நம் நட்பின் அடையாளமாக இந்தக் கார் உங்களையும் என்னையும் தினமும் சேர்த்து வைக்கும், " என்று சொன்னார்.

சொல்லும்போதே அவர் கண்களில் நீர் பனித்தது. என் கண்களோ குளமாயின.

கல்கியின் நட்பு எனக்கு அவரது கடைசிக் காலம் வரையில் சிரஞ்சீவியாக இருந்து வந்தது. என்றைக்கும் என்னிடம் ஒரே மாதிரியாக 'தாயன்பு' காட்டி வந்த பேரறிவாளர் அவர்.

என் தாய் இறந்தபோது கூட எனக்கு அழுகை பொங்கி வரவில்லை. ஆனால் காந்திஜி இறந்த போதும் கல்கி இறந்தபோதும்தான் நான் விக்கி, விக்கி அழுதேன். ஏனெனில் காந்திஜிதான் என்னைத் தேசபக்தனாக்கினார், கல்கி என்னை உயர்த்தி உலகுக்குக் காட்டினார்.

## வேலைக்காரி

நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளைக்கு நான் சென்னையில் நிதி அளிப்பு விழா நடத்தியதை அறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் பாராட்டினார். அதிலிருந்து என்னிடம் அவருக்குத் தனியான அன்பு ஏற்பட்டிருந்தது.

அண்ணா அவர்களின் வேலைக்காரி என்ற திரைப்படம் வெளிவந்து தமிழகத்தில் ஒரு புதிய புரட்சியைச் செய்தது. அதன் நூறாவது நாள் விழா கோவை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் நடைபெற்றது. ஜுப்பிடர் பிக்சர்ஸ் சோமு அவர்களும் மொகைதீன் அவர்களும் மேற்படி நூறாவது நான் விழாவிற்கு யாரைக் கூப்பிடலாம் என்று அண்ணாவிடம் கேட்டார்களாம்.

அண்ணா அவர்கள் விழாவிற்கு நாமக்கல் கவிஞர் தலைமை வகிக்கட்டும். சின்ன அண்ணாமலை பாராட்டிப் பேசட்டும் என்று சொன்னாராம். அதன்படி நானும் நாமக்கல் கவிஞர்அவர்களும் விழா விற்கு கோவை சென்றோம்.

அப்பொழுதெல்லாம் அண்ணா அவர்களை காங்கிரஸ் காரர்களாகிய நாங்கள் மிகச் சாதாரணமாக நினைத்து, துச்சமாகப் பேசுவோம்.

ஆனால் அதைப் பற்றி எல்லாம் அவர் கவலைப் பட்டுக்கொள்ளுவதில்லை. கோபப்படுவதுமில்லை. அன்று வேலைக்காரி விழாவில் நான் பேசும்போது, "நான் அண்ணா மலை-அவர் அண்ணாதுரை.

நானோ மலை அவரோ துரை. மலையிலிருந்து தான் நீர் வீழ்ச்சி வருகிறது. அது துறையில்தான் தங்குகிறது. இந்தத் துறையில் ர. தவறிக் கிடக்கிறது. இதைப் போல அண்ணாவின் கொள்கைகள் தவறிக் கிடக்கின்றன. 'திராவிட நாடு' என்று அவர் சொல்வதெல்லாம் ஒரு நாளும் நடக்காத காரியம்.

அதற்காக அவர் செய்யும் முயற்சி, செலவிடும் நேரம் எல்லாம் வீண். அவரது சமுதாய சீர்திருத்தக் கொள்கைகளில் பல எனக்கு உடன்பாடுடையவை. ஆனால் அவரது அரசியல், அபத்தம் என்பது எனது உறுதியான கருத்து. நல்ல வேளை, இந்த வேலைக்காரி படத்தில் அவரது சமுதாய சீர்திருத்த எண்ணங்களை மட்டுமே புகுத்தி இருக்கிறார்.

அரசியல் வாடை இல்லை. நமது சமூகத்தை சீர்திருத்தச் செய்யவேண்டுமென்றால் நூறு வேலைக்காரி படம் வந்தாலும் சிரமம்தான். சட்டத்தின் மூலமே நமது சமூகத்தை சீர்திருத்த முடியும்.

ஜனநாயக யுகத்தில் சமூகப் பழக்க வழக்கங்களுக்கு மாறாகச் சட்டம் செய்தால் தேர்தலில் வெற்றி பெறுவது சிரமமே! அதனால் வேலைக்காரி போன்ற படங்கள் மக்களின் மனோநிலையைப் பக்குவப்படுத்தும் கைங்கரியத்தைச் செய்யும்.

சிறிது சிறிதாகத்தான் ஜனநாயகத்தில் சமூக சீர்திருத்தச் சட்டங்களைக் கொண்டுவர முடியும். ஆகவே அண்ணாவின் வேலைக்காரி நூறு நாள் ஓடியதை நான் வரவேற்கிறேன். அண்ணாவை மனதாரப் பாராட்டுகிறேன,'' என்று பேசினேன்.

பின்னர் அண்ணா பதில் கூறும்போது சிறிதும் முகம் சுளிக்காமல், 'சின்ன அண்ணாமலை பல தியாகங்கள் செய்தவர். புரட்சி செய்து சிறைக் கதவுகளை மக்கள் உடைக்க விடுதலையானவர்.

தமிழ் வளர்க்கத் தமிழ்ப்பண்ணை நடத்துகிறார். அவரது கருத்துக்களை அலட்சியப்படுத்திவிட முடியாது.

அவர் நகைச்சுவையாகவே பேசிவிடுவதால் அவர் எங்களைத் தாக்கினாலும் நாங்கள் சிரித்து மகிழ்வோம்,'' என்று இந்த விதமாக என்னைப் பாராட்டிப் பேசினார்.

அரசியல் மேடையில் எவ்வளவோ காரசாரமாக அண்ணாவை நான் தாக்கிப் பேசியிருக்கிறேன். ஆயினும் அண்ணா நேரில் சந்திக்கும்போது அதையெல்லாம் கண்டு கொள்ள மாட்டார். கோபப்படமாட்டார். அதற்கு மாறாக எங்கு என்னைச் சந்தித்தாலும் மகிழ்ச்சி பொங்கப் பேசுவார்.

ஒருமுறை திருவல்லிக்கேணியில் நடைபெற்ற பம்மல் சம்பந்த முதலியார் விழாவில் அண்ணா அவர்கள் தலைமையில் நான் பேச வேண்டி வந்தது. அப்பொழுது அண்ணா அவர்கள், ''எனது அன்பிற்குரிய நண்பரும், மக்களை மகிழ்விப்பதற்காகவே சொற்பொழிவாற்றுபவருமான திரு.சின்னஅண்ணாமலை இப்பொழுது பேசுவார்'' என்று அறிவித்தார்.

இந்த மாதிரி, மாற்றுக் கருத்துக் கொண்டவர்களையும் தன் வயப்படுத்தக் கூடிய ஆற்றல் அண்ணா அவர்களுக்கு இருந்தது. யாரிடம் திறமை இருந்தாலும் அதை அனுபவிக்கும் அறிவு அவருக்கு இருந்தது.

வேலைக்காரி நூறாவது நாள் விழாவில், அண்ணா அவர்கள் பேசும் பொழுது, ''நாமக்கல் கவிஞரின் ஆற்றலை நாடறியச் செய்தவர், என் நானறியச் செய்தவர் சின்ன அண்ணாமலை. எனது 'வேலைக்காரி' நாடகம் சிறப்பான திரைப்படமாக உருவெடுத்து நூறு நாள் ஓடியிருக்கிறது. அதற்காக நான் அகந்தை அடையவில்லை. என்னைவிட மிகச் சிறந்த கதை எழுதக்கூடியவர் நாமக்கல் கவிஞர்.

அவர் எழுதிய "மலைக்கள்ளன்" என்ற நாவலைப் படித்து நான் பிரமிப்படைந்தேன். ஆங்கிலத்தில் உள்ளதுபோல் தமிழில் அழகாக நாவல் எழுத முடியுமா? என்று பலர் என்னைக் கேட்டதுண்டு. அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வேன், "மலைக்கள்ளனை" ஒரு முறை படித்துப் பாருங்கள் என்று!

இந்த மலைக்கள்ளன் நாவல் கவிஞரால் எழுதப் பட்டு பல ஆண்டுகளாக, கேட்பாரற்றுக் கையெழுத்துப் பிரதியாகக் கிடந்திருக்கிறது.

கவிஞரின் ஆற்றலை அறிந்த சின்ன அண்ணாமலை, இந்த அரிய கருவூலத்தைத் தேடி எடுத்து, கண்கவரும் அழகிய நூலாகத் தமிழ்ப்பண்ணை மூலம் வெளியிட்டிருக்கிறார்.

வேலைக்காரியை விடப் பலமடங்கு சிறப்பான கதை மலைக்கள்ளன். அதை யாராவது நல்ல முறையில் திரைப்பட மாக்கினால் நிச்சயம். தமிழ் திரைப்படத் துறைக்கு ஒரு வெற்றிகரமான தமிழ்ப்படம் கிடைக்கும்.

ஆற்றல் மிக்கவர் நாமக்கல் கவிஞர். அவரது ஆற்றலை உலகறியச் செய்தவர் சின்ன அண்ணாமலை, ஆகவேதான் இவ்விருவரையும் இந்த விழாவிற்கு அழைக்கச் சொன்னேன்" என்று அண்ணா அவர்கள் அன்று மிக அருமையாகப் பேசினார்கள்.

சொன்னால் நம்பமாட்டீர்கள், அன்று மாலையே நாராயணன் கம்பெனி திரு.நாராயண அய்யங்கார் அவர்கள் என்னைப் பட்சிராஜா ஸ்டுடியோவிற்குக் கூட்டிக்கொண்டு போய் ஸ்ரீராமலு நாயுடு அவர்களிடம் "மலைக்கள்ளன்" கதையைச் சொல்லச் சொன்னார்கள். சொன்னேன். கதை பிடித்தது. படமாக எடுத்தார்கள்.

திரு.எம்.ஜி.ஆர், பானுமதி நடித்தார்கள். படம் பிரமாதமான வெற்றியடைந்தது.

எம்.ஜி.ஆருக்கும் சினிமாத் துறையில் அப்படத்தின் மூலம் புதிய திருப்பம் ஏற்பட்டது. மலைக்கள்ளன், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மற்றும் பல மொழிகளிலும் திரைப்படமாக எடுக்கப்பட்டது. அத்தனையும் வெற்றிதான்!

மலைக்கள்ளன் திரைப்படமாவதற்குக் காரணமாக இருந்த அண்ணா அவர்களை, நானும் நாமக்கல் கவிஞரும் சந்தித்து அவருக்குப் பொன்னாடை போர்த்தி, மாலை மரியாதை செய்து மகிழ்ந்து எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொண்டோம்.

## நாடோடியாக நடித்தேன்

பிரபல எழுத்தாளர் 'நாடோடி' அவர்களை பெங்களூரில் பாரதி மண்டப நிதி அளிப்பு விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு நிதியைப் பெற்று வருவதற்கு கல்கி ஆசிரியர் திரு.கிருஷ்ண மூர்த்தி அவர்கள் ஏற்பாடு செய்திருந்தார்.

புறப்பட வேண்டிய கடைசி நிமிஷத்தில் நாடோடி அவர்களால் புறப்பட இயலவில்லை.' ஆனால் நிகழ்ச்சி ஏற்பாடு செய்தவர்கள் தடுமாறிவிடக் கூடாதே என்று கல்கி என்னைப் பெங்களூருக்குப் போகும்படி கேட்டுக் கெண்டார்.

நாடோடி பெயரால் 'ரிசர்வ்' செய்யப்பட்ட டிக்கட்டிலே நான் பிரயாணம் செய்ய நேர்ந்தது. பெங்களூர் கண்டோன்மென்ட் ரயில்வே ஸ்டேசன் வந்ததும் சிலர் மாலையும் கையுமாக ஓடிவந்தனர்.

'நாடோடி' என்ற பெயர் எழுதியிருந்த ரயில் பெட்டியைக் கண்டுபிடித்து அதன் அருகில் ஓடி வந்தார்கள். வண்டியிலிருந்து இறங்கிய என்னைக் கண்டதும், ''நாடோடி வாழ்க'' ''வாழ்க'' என்று கோஷம் போட்டு வரவேற்று மாலை அணிவித்தார்கள். நானும் புன்னகையுடன் மாலை மரியாதைகளைப் பெற்றுக் கொண்டேன்.

நான் யார் என்பதை அவர்களிடம் அப்போது சொல்லிக் கொள்ளவில்லை. அப்படியே எல்லோரும் என்னை 'நாடோடி' என்றே நினைக்கும்படி மாலைவரை சமாளித்துக் கூட்டத்தில் விஷயத்தை உடைத்துச் சபையைத் திகைக்க வைக்க வேண்டு மென்பது என் திட்டம்.

என்னை வரவேற்று கூட்டிக்கொண்டு போனவர்கள் பெங்களூர் காந்தி நகரில் ஒரு வீட்டில் இறக்கினார்கள். அந்த வீடு திரு.சாமி என்பவருடையது. திரு.சாமி அவர்களின் புதல்வர்கள் மூன்றுபேர், புதல்வியவர் ஐந்து பேர். எல்லோரும் உயர்ந்த படிப்பு படித்தவர்கள். 'கல்கி'யின் விசிறிகள்.

என்னை 'நாடோடி' என்று நினைத்துக் கொண்டு போட்டி போட்டுக் கொண்டு பிரமாதமாக உபசாரம் செய்தார்கள். என்னுடைய நகைச்சுவை வெடிகளைக் கேட்டு, சிரி சிரி என்று சிரித்தார்கள். 'நாடோடி' எழுதிய பல விஷயங்களைக் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

எனக்கு அவைகள் எங்கே ஞாபகத்திலிருக்கும்? ஆனால் நான் சமாளித்து, மழுப்பி ஒரு வழியாக கூட்டத்திற்குப் போகும்வரை 'நாடோடி'யாகவே நன்றாக நடித்தேன் என்றுதான் சொல்லவேண்டும்.

மாலையில் கூட்டம் துவங்கியது. எல்லோரும் என்னை 'நாடோடி' என்று நினைத்தே பலவாறாகப் பேசினர், பேசினர், அப்படிப் புகழ்ந்து பேசினர். எட்டயபுரம் பாரதி மண்டப நிதிக்கு ரூ.2000/- கொடுத்தார்கள். நிதியைப் பத்திரப்படுத்திக் கொண்டேன்.

கடைசியில் என் முறை வந்தது. சுமார் ஒரு மணிநேரம் நகைச்சுவை வெள்ளத்தில் கூடியிருந்தவர்களை மிதக்க வைத்து இப்போது சபை என் 'கைக்குள்' வந்துவிட்டதை உணர்ந்தேன்.

நான் இன்னும் நாடோடியாகவே பேசிக்கொண்டிருந்தேன். கடைசியாக சபையோரிடம் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். ''நான் இப்போது என் பேச்சை முடிக்க விரும்புகிறேன்'' முடிக்கு முன்பு ஒரு உண்மையச் சொல்ல விரும்புகிறேன். அந்த உண்மையை நீங்கள் கேட்டால் திடுக்கிட்டுப் போவீர்கள். 'ஆகா' என்று ஆச்சரியப்படுவீர்கள்.

ஆனால் அந்த உண்மையை நான் இலவசமாகச் சொல்ல விரும்பவில்லை. நீங்கள் அனைவரும் பாரதி மண்டப நிதிக்கு ஆளுக்கு நான்கணா தருவதாகச் சொன்னால், சொல்கிறேன்'' என்ற கூறினேன்.

''பேஷாகத் தருகிறோம், ஆனால் நீங்கள் சொல்லப் போகும் உண்மை எங்களுக்குத் தெரிந்ததாக இருந்தால் என்ன செய்வது'' என்று கூட்டத்திலிருந்த ஒருவர் கேட்டார்.

''ஒருக்காலும் உங்களுக்குத் தெரிந்திருக்க முடியாது'' என்றேன்.

''தெரியும்'' என்று பல குரல்கள் கேட்டன.

''என்ன தெரியும்?'' என்று நான் கேட்டேன்.

''நீங்கள் நாடோடி அல்ல, சின்ன அண்ணாமலை என்பது தெரியும். இதைத் தவிர வேறு ஏதாவது உண்மை உண்டா?'' என்று கேட்டார்களே பார்க்கலாம். நான் அப்படியே அசந்து போனேன், பின்னர் விசாரித்ததில் கூட்டத்தின் செயலாளருக்கு, ''நாடோடி வர இயலவில்லை, சின்ன அண்ணாமலை வருகிறார்'' என்று கல்கி தந்தி கொடுத்திருக்கிறார் என்று தெரிய வந்தது.

அதை வேண்டுமென்றே செயலாளர் மறைத்து விட்டுக் கடைசியில் நான் பேசிக் கொண்டிருக்கும்போது சிலரிடம் பிரஸ்தாபித்திருக்கிறார். அது சபை பூராவும் பரவி விட்டது. ஆக நான் நடித்ததைவிட சபையோர் சிறப்பாக நடித்து விட்டார்கள். ஆயினும் சபையோர் என்னைக் கௌரவிக்கத் தயங்கவில்லை. என் சொற்பொழிவு அவர்களை எல்லாம் மிகவும் கவர்ந்து விட்டது போலும்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள், கூட்டத்திற்கு வந்திருந் தவர்கள் அப்போது தனித்தனியாக வந்து கொடுத்த காசுகளைக் கூட்டிப் பார்த்ததில் ரூ.650/- இருந்தது.

## அன்னையின் பிரிவு

1945 ஆம் ஆண்டு சென்னை தியாகராயநகர் நானா ராவ் நாயுடு தெருவில் 6-ம் எண் இல்லத்தில் நான் குடியிருந்த சமயம். எனக்கு மிகவும் வேண்டியவர்களான பெங்களூர் சுவாமி அவர்களின் மூத்த புதல்வன் வேலுவிற்குத் திருமணம் செய்யப்பெண் பார்க்கும்படி என்னைக் கேட்டுக் கொண்டார்கள்.

நானும் பல இடங்களில் பெண் பார்த்து, கடைசியில் அடையாறு ஔவை இல்லம் சென்று திருமதி முத்துலட்சுமி ரெட்டி அவர்களிடம் விஷயத்தைச் சொன்னேன்.

திருமதி முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் என்னிடம் மிகவும் பிரியமுடையவர்கள். அடிக்கடி என்னை ஔவை இல்லத்திற்கு அழைத்து சொற்பொழிவு ஆற்றும்படி செய்வார்கள்.

என் நகைச்சுவைப் பேச்சுகளைக் கேட்டு மாணவிகள் கலகலவென்று சிரிப்பதை மிகவும் விரும்புவார்கள். வாழ்க்கையில் துன்பத்தையே கண்ட மேற்படி மாணவிகள் ஒரு மணி நேரம் அம்மாதிரி சிரித்துக் குதூகலமாக இருப்பது திருமதி ரெட்டி அவர்களுக்கு பெருத்த ஆறுதலாக இருந்தது. அதனால் என்னை அவர்களுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

ஆகவே அவர்கள் எனக்காக சிரத்தை எடுத்து ஔவை இல்லத்தில் படித்துக் கொண்டிருந்த ஒரு நல்ல பெண்ணைத் தேர்ந்தெடுத்துச் சொன்னார்கள். அதன் பின்னர் மாப்பிள்ளை வீட்டார் பெண் பார்த்தார்கள். பரஸ்பரம் சம்மதம் தெரிவித்ததும்

என் வீட்டில் மறுநாள் நிச்சயதார்த்தம் வைத்துக் கொள்வது என்று முடிவாயிற்று.

மறுநாள் காலை 11மணி- நிச்சயதார்த்தத்திற்கு அனைவரும் வந்துவிட்டனர். திருமதி முத்துலட்சுமி ரெட்டி அவர்கள் உட்பட பல பிரமுகர்கள் வந்திருந்தார்கள்.

நிச்சயதார்த்தம் நடக்கும் சமயத்தில் எனக்கு ஒரு தந்தி வந்தது. நான் வெளியில் வந்து தந்தியை வாங்கினேன். வாங்கிப் படித்தேன். பலர் என்ன தந்தி? என்று விசாரித்தார்கள். 'நிச்சய தார்த்தத்தை வாழ்த்தி தந்தி வந்திருக்கிறது' என்று அனைவருக்கும் கூறினேன்.

நிச்சயதார்த்தம் முடிந்து விருந்து அமர்க்களமாக நடந்தது. எல்லோரையும் முகமலர்ச்சியுடன் திருப்தியாகவிசாரித்து விழா வைச் சிறப்பாகமுடித்தோம்.

எனது நெருங்கிய குடும்ப நண்பர் களான பெங்களூர் சுவாமி குடும்பத்தாரைத் தவிர மற்ற அனைவரும் சென்று விட்டனர். அவர்கள் அன்று இரவு இரயிலில் புறப்படுவதாக இருந்தார்கள்.

நான் அவர்களிடம், 'நீங்கள் அனைவரும் இரவு ஊருக்குப் புறப்படுங்கள். நான் இப்போதே காரில் எனது ஊருக்குப் புறப்பட வேண்டியிருக்கிறது' என்றேன்.

"ஏன் என்ன, தந்தி வந்த விஷயமாகவா" என்றெல்லாம் அவர்கள் கேட்டார்கள்.

"ஆம் என் அம்மாவுக்கு உடல் நிலை சரியில்லை என்று தந்தி வந்திருக்கிறது " என்றேன்.

'சரி, அப்படி என்றால் உடனே புறப்படுங்கள், என்று வேகமாக என்னைப் பயணம் செய்ய வைத்தார்கள்.

நானும் காரில் புறப்பட்டு சைதாப்பேட்டை தாண்டியதும் 'ஓ' வென்று வாய்விட்டுக்கதறி அழுதேன்.

டிரைவர் பயந்து போய் வண்டியைநிறுத்திவிட்டு என்ன என்னவென்று கேட்டான். அவனிடம் தந்தியைக் காட்டினேன்.

சொன்னால் நம்பமாட்டீர்கள் அந்தத் தந்தியில் 'என் அன்னை இறந்து விட்டாள். உடனே புறப்படு' என்று இருந்தது.

''இதை ஏன் அப்போதே சொல்லவில்லை'' என்றான் டிரைவர்.

கல்யாண நிச்சயதார்த்தம் நடக்கும் சமயத்தில் நமது துக்கத்தை வெளிக்காட்டக் கூடாதல்லவா? சரி சரி எடு காரை என்று சொல்லி பிரயாணத்தைத் தொடங்கினேன்.

1947 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்தது. மேற்கு வங்காளத்தின் முதல் கவர்னராக ராஜாஜி அவர்கள் பதவி ஏற்றுக்கொண்டார். அந்த வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ரசிகமணி டி.கே.சிதம்பரநாத முதலியார் அவர்களும் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களும் நானும் கல்கத்தா சென்றோம்.

கல்கத்தாவில் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டோம். அதில் ஒரு நிகழ்ச்சியில் கல்கி. ரா.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் படத்தைத் திறந்து வைத்து பேசும்படி என்னைப் பணித்தார்கள். நானும் மிக்க மகிழ்ச்சியுடன் கல்கியின் திரு.உருவப்படத்தைத் திறந்து வைத்து விட்டுப் பேசலானேன்.

"தமிழ் நாட்டில் மதுரை மாநகர் மிகவும் பிரசித்தி பெற்றது. அறுபத்து நான்கு திருவிளையாடல்கள், பாண்டிய மன்னர்களின் ஆட்சித் திறமை, தமிழ் வளர்த்த சங்கம்-இவைதான் அதற்குக் காரணமாகும்.

இதெல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழ் மக்களின் நாகரீகத்தையே உலகிற்கு எடுத்துக் காட்டுவது போன்ற விண் மறைக்கும் கோபுரமாகவும், வினை மறக்கும் கோயிலாகவும், கண்ணமைந்த காட்சியாகவும் மீனாட்சி அம்மன் ஆலயம் மதுரை மாநகரத்தின் நிரந்தரமான சிறப்புக்குச் சிகரம் வைத்தது போல அமைந்திருக்கிறது.

தற்போது மதுரை அரசியல் துறைகளிலும் பிரசித்த மடைந்திருக்கிறது. தேசீய இயக்கத்தில் மதுரை எப்போதும்

முன்னணியில் நின்று வருகிறது. ஆலயப் பிரவேசம் கூட முதன் முதலில் மதுரையில்தான் நடந்தது.!

இப்படி எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கும் மதுரை, சங்கீத விஷயத்திலும் முன்னணியில் நிற்பதில் ஆச்சரியமில்லை.

பிரபல சங்கீத வித்வான் புஷ்பவனம் அய்யர், மதுரை மணி அய்யர், ஸ்ரீமதி எம்.எஸ்.சுப்புலக்ஷ்மி முதலிய முதல்தர வித்வான்களைத் தமிழ் நாட்டுக்கு ஈந்த பெருமை மதுரைக்குத் தான் உண்டு.

இத்தகையப் பிரசித்திவாய்ந்த மதுரை மாநாகரத்தில் ''பொற்றாமரைக் குளம்'' என்று ஒரு குளம் இருக்கிறது. அந்தக் குளத்தில் வெகுகாலத்துக்கு முன்பு 'சங்கப் பலகை' என்பதாக ஒரு பலகை இருந்ததாம்.

அந்தப் பலகைக்குத் தயை தாட்சண்யம் என்பது கொஞ்சமும் கிடையாதாம். தகுதியுள்ளவர்களை ஏற்றுக் கொள்வதும், மற்றவர்களைத் தள்ளிவிடுவதும் அதன் பிடிவாத துர்க்குணமாக இருந்ததாம்!

இதனால் அநேகர் அதில் ஸ்தானம் பெறமுயன்றும் முடியாமற் போய்விட்டது. சங்கப் பலகை அங்கீகரித்த வித்வான்கள்தான் வித்வான்கள் என்றும் மற்றவர்கள் எல்லாம் 'போலி' என்றும் ஆகிவிடுமாம்.

ஆகவே சங்கப் பலகையால் ஏற்றுக் கொள்ளப்படாத பண்டிதர்கள், கவிஞர்கள் கலைஞர்கள் அனைவரும் கோபம் கொண்டு மேற்படி பலகையைச் சுக்கு நூறாக்கிவிட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டார்கள்.

ஒரு சிலர் பொற்றாமரைக் குளத்தில் படகேறிச் சென்று சங்கப் பலகையில் தொத்திக்கொள்ள முயன்றார்கள். சிலர் கட்டு மரம் கட்டிக் கொண்டு போய்ப் பலகையைத் துண்டு துண்டாக வெட்டிவிடவேண்டுமென்று கோடாலியுடன் புறப்பட்டார்கள்.

சிலர் ஜலத்துக்குள் கண் மறைவாக நீந்திப்போய் முக்குளித்துப் பலகையில் ஏறிவிடப் பிரயத்தனப்பட்டனர். ஒன்றும் பலிக்கவில்லை. ஏமாற்றத்துக்குள்ளான பண்டிதர்கள் பலர் ஆத்திரமடைந்து, பலகையைப் பொசுக்கிவிட நெருப்புப் பந்தத்துடன் கிளம்பினார்கள். நெருப்புதான் அணைந்ததே ஒழியப் பலகையைப் பொசுக்க முடியவில்லை.

கடைசியாக, ''இது தெய்வீக சக்தி வாய்ந்தது. தமிழ் மக்களின் தரத்தையும் தகுதியையும் அறிந்து கொள்ளத் தமிழ்க் கடவுளால் அளிக்கப்பட்ட தராசு. இதில் ஏறுவதற்கு நம்மை நாம் தகுதியாக்கிக் கொள்ள வேண்டுமே ஒழியப் பலகை மீது கோபப்படுவதில் பயனொன்றுமில்லை'' என்று கண்டு கொண்டார்கள்.

இப்படி மக்களுக்கு மிகவும் உதவியாக இருந்த் மேற்படி சங்கப்பலகை திடீரென்று ஒரு நாள் காணாமற்போய்விட்டது. சங்கப் பலகை எப்படி மறைந்தது எங்கே போயிற்று என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

அனைவரும் கையை நெரித்துக் கொண்டார்கள். செம்படவர்களை வரவழைத்துப் பொற்றாமரைக் குளத்தில் வலைபோட்டுப் பார்த்தார்கள். ஊஹூம்! சங்கப் பலகை கிடைக்கவேயில்லை.

சில ஆண்டுகளுக்கு முன் 'கர்நாடகம்' என்ற பெயரில் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கலைகளைப் பற்றி விமர்சனம்

செய்ய ஆரம்பித்தார்கள். நாடகம், சங்கீதம், நாட்டியம் சம்பந்தமாக அவர் எழுதிய விமரிசனங்களைப் படிக்கப் படிக்கத் தமிழ் மக்களுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

"இப்படியும் தராதரம் அறிந்து எழுத முடியுமா? " என்று அதிசயித்து மூக்கின் மேல் விரல் வைத்தார்கள்! தமிழ் நாட்டில் காணாமற்போன சங்கப் பலகைதான் இப்படி மனித உருவத்தில் 'கர்நாடகம்' (கல்கி) என்ற பெயரில் தோன்றித் தமிழர்களுக்குத் தராசாக இருக்கிறதோ என்றுகூடச் சந்தேகிக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய சந்தேகம் நாளடைவில் ஊர்ஜிதமாயிற்று.

"தமிழ்க்கடவுள் 'சங்கப் பலகை'க்கு வேறு எந்த தேசமும் லாயக்கில்லை. அது தங்குவதற்குரியஇடம் தமிழ்நாடுதான்" என்று முடிவு கட்டியிருக்க வேண்டும். எனவே, மேற்படி பலகைக்கு மனித ரூபமளித்து கல்கியை 'கர்நாடகம் ' என்ற பெயருடனே தமிழ் மக்களின் இதயத்திலே மிதக்க விட்டிருக்கிறார்கள்.

அன்று முதல் கல்கி ஏற்றுக்கொண்ட கலைஞர்தான் உண்மையான கலைஞர் என்ற மனப்பான்மை தமிழ் மக்களுக்கு உண்டாகியிருக்கிறது.

ஆம்; தெளிந்த நீரோட்டத்தைத் தெளிந்த நீரோட்ட மென்றும் பாசி பிடித்த குட்டையைப் பாசி பிடித்த குட்டை என்றும் கர்நாடகம் (கல்கி) எப்போதும் சொல்லத் தயங்கியதே கிடையாது. தம்முடைய ஊரில் ஓடும் சாக்கடையாயிற்றே என்பதற்காக அவர் அதற்கு விஷேச சலுகை காட்டி அதைப் புண்ணிய தீர்த்தம் என்றும் கூறுவது கிடையாது. கல்கியின் பாரபட்சமற்ற கலை விமரிசனங்களுக்குத் தகுந்த உதாரணங்களும் உண்டு.

ஒரு சமயம் காங்கிரஸ் வாதியும் கதர் அபிமானியுமான ஒரு பெண்மணியின் திரைப்பட நடிப்பு சுகமில்லை என்று கல்கி

எழுதினார். உடனே சிலர், "அடடா! அந்த பெண்மணி எப்போதும் கதர் அணிபவராயிற்றே, தேர்தல் கூட்டத்தில் வந்துகூட பாடுவாரே! அவரைப் பற்றி இப்படி எழுதலாமா?" என்று கேட்டார்கள்.

அதற்கு கல்கி "அந்தக் கதரபிமானமுள்ள பெண்மணி காங்கிரஸ் அபேட்சகராக எங்கேயாவது தேர்தலுக்கு நின்றால், 'அவருக்கு ஓட்டுக் கொடுங்கள்' என்று பிரச்சாரம் செய்வேன்.

ஆனால் ஒருவர் காங்கிரஸ்வாதி என்பதற்காக அவருடைய அபஸ்வரங்களை ஸுஸ்வரங்கள் என்றோ; மோசமான நடிப்பை நல்ல நடிப்பு என்றோ நான் ஒப்புக் கொள்ள முடியாது. அம்மாதிரி நிலைமை ஏற்பட்டுவிட்டால் அப்புறம் டாக்டர் ராஜன் பாட்டுக் கச்சேரி செய்தால் நன்றாயிருக்கிறதென்று சொல்ல வேண்டும். ஸ்ரீ முத்துரங்க முதலியார் கதாகாலட்சேபம் செய்தால் அதற்கும் பலே போடவேண்டும்.

ஸ்ரீமதி ருக்மணி லக்ஷ்மிபதி பரதநாட்டியம் ஆடினால் கூடத் தலையை ஆட்டவேண்டி நேரும், இப்படியெல்லாம் வந்துவிட்டால் தமிழ்நாட்டில் கலைகள் உருப்பட்டாற் போலத்தான்?" என்றார்.

பரத நாட்டியத்திலும் சங்கீதத்திலும் அவருக்குள்ள அபிமானம் காரணமாகத் -தமிழ் நாட்டில் காலைத் தூக்கிக் குதிப்பவர்களையெல்லாம் உயர்ந்த நாட்டியக்காரர்களென்றோ, வாயைத் திறந்து பாடுபவர்களையெல்லாம் சிறந்த சங்கீத வித்வான்களென்றோ, வேஷம் போட்டு மேடையில் தோன்று பவர்களையெல்லாம் சிறந்த நடிகர்களென்றோ கூறிவிடமாட்டார்.

ஒரு வித்வானுடைய சங்கீதம் கல்கிக்குப் பிடிக்கிறது என்று வைத்துக் கொள்வோம். ஆனால், மேற்படி வித்வான்

பிடிவாதமாய் "தமிழ்ப் பாட்டுப் பாடமாட்டேன் வேறு பாஷையில்தான் பாடுவேன்" என்றால் அதற்காக அவருடைய சங்கீதம் நன்றாயில்லையென்று சொல்லும் வழக்கம் கல்கிக்குக் கிடையாது. "ஐயரோ! இந்தப் பாவி மனிதர் இவ்வளவு நன்றாகப் பாடுகிறாரே, இவர் தமிழ் அபிமானியாகவும் இருக்கக்கூடாதா?" என்று எண்ணித்தான் வருந்துவார்.

திரு.ரா.கிருஷ்ணமூர்த்தி (கல்கி) அவர்கள் சிறு பையனாக இருந்தபோது, நமது இந்திய தேசம் அவருடைய சேவை யில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறது என்ற விஷயமே அவருக்குத் தெரியாமலிருந்ததாம். அப்போதெல்லாம் அவர் மனதறிந்து தேசத்திற்காக ஒருவிதச் சேவையும் செய்த தில்லையாம். ஒரே ஒரு தடவை செய்ய முயன்ற சேவையும் விபரீதமாக முடிந்ததாம்.

அந்தக் காலத்தில் ஒருநாள் தேசம் அவருடைய பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலிருந்த பாழும் கிணற்றில் விழுந்து விட்டதாம்!, முழுகுவதற்கு வேண்டிய தண்ணீர் இல்லாமல் தேசம் தத்தளித்துக் கொண்டிருந்த சமயம் பக்கத்திலிருந்த தேசபக்தர்கள் சிலர் கல்கியைப் பார்த்து, "அப்பா தேசத்தைக் காப்பாற்ற ஒரு துரும்பையாவது நீ எடுத்துப் போடக் கூடாதா?" என்று சொன்னார்களாம்.

"உடனே கல்கி துரும்பு என்னத்திற்கு? கல்லைத் தூக்கியே போடுகிறேன் " என்று கூறிவிட்டு ஒரு கல்லைத் தூக்கிக் கிணற்றுக்குள் போட்டாராம். உடனே, தேசம் அந்த நாலு விரற்கடைத் தண்ணீரில் தலை கீழாக அமிழ்ந்து பிராணனை விட்டுவிட்டதாம்!

இதன் பலனாக கல்கியின் தகப்பனார் ஒரு வராகன் தண்டம் கொடுக்கும்படி நேர்ந்ததாம். தகப்பனாரிடம் மூன்றரை ரூபாய்

வாங்கிக் கொண்டு போய் புதிய இந்தியா தேசப் படம் ஒன்றை வாங்கி வந்து பள்ளிக்கூடத்துச் சுவரில் மாட்டிய பிறகுதான் உபாத்தியாயர் அவரைப் பெஞ்சுமேலேயிருந்து கீழே இறக்கினாராம்.

அதற்குப் பிறகு வெகுகாலம் வரையில் தேசம் என்றாலே கல்கி வெறுப்புக் கொண்டிருந்தாராம். அப்புறம் ஒரு நாள் தற்செயலாக "தேசத்திற்காக உழைக்க ஜென்மம் எடுத்தோம்" என்ற பாட்டை அவர் கேட்க நேர்ந்ததாம். உடனே ஜன்ம தேசத்திற்கு உழைக்க வேண்டுமென்ற ஆசை அவர் பிடரியைப் பிடித்து உந்தியதாம்.

மேல் சட்டை, மேல் வேஷ்டி எல்லாவற்றையும் கழற்றித் தலையைச் சுற்றி எறிந்து விட்டு, காந்திஜிக்கு ஒரு கடிதம் எழுதினாராம்.

மாகத்மாஜி ! நான் தேசத்திற்கு உழைக்கத் துணிந்து விட்டேன். அவ்விடம் நான் வரட்டுமா? அல்லது தேசத்தை இங்கே அனுப்பிவைக்கிறீர்களா? என்று கேட்டாராம்.

மகாத்மாஜி, கேட்டதற்குப் பதில் சொல்லாமல், கைராட்டையில் தினம் இரண்டாயிரம் கெஜம் நூல் நூற்றுவா! உன் மனது தெளிவடையும் என்று பதில் கடிதம் எழுதினாராம்.

ரொம்ப லட்சணம்! நான் தேசத்துக்கு உழைக்க வந்தேனா? நூல் நூற்க வந்தேனா? என்று கல்கி தமக்குத்தாமே கேட்டுக் கொண்டு மகாத்மாஜியை விட்டுவிட்டாராம்.

பின்னர், திடீரென்று தம் உடையை மாற்றினாராம். ஒரு கதர் ஜிப்பாவும், அதன் மேல் கம்பளி 'வெயிஸ்ட் கோட்டும்' அணிந்து தலையில் ஒரு காந்திக் குல்லா தரித்துக் கொண்டாராம். உடனே அச்சமயம் காங்கிரஸ் தலைவராயிருந்த பண்டித ஜவஹர்லால் நேருவுக்குக் கடிதம் எழுதினாராம்.

"தேச சேவைக்குத் தயார் ! காங்கிரஸ் தலைமைப் பதவி வகிப்பது சிரமமாயிருந்தால் தந்தியடிக்கவும்; உடனே புறப்பட்டு வருகிறேன்! " என்று குறிப்பிட்டிருந்தாராம். ஜவஹர்லால்ஜி யிடமிருந்து பதில் வந்ததாம்.

"தற்சமயம் இந்தியாவுக்குச் சேவை சீனப் போர்க்களத்தில் செய்யவேண்டும். உடனே புறப்பட்டு போகவும்" என்பதுதான் அந்தப் பதில்.

இதைப் பார்த்ததும் கல்கிக்கு கோபம் கோபமாய் வந்ததாம். உடனே வெயிஸ்ட் கோட்டையும் காந்திக் குல்லாவையும் எடுத்தெறிந்து விட்டுத் தலையில் உச்சிக்குடுமி வைத்துக் கொண்டாராம். கறுப்புக் கண்ணாடியும் வாங்கி மாட்டிக் கொண்டாராம். பின்னர் நமது சொந்த மாகாணத் தலைவர் ராஜாஜிக்குக் கடிதம் எழுதினாராம்.

"தேசத்திற்காக உயிரைவிடக் கங்கணம் கட்டிக் கொண்டு விட்டேன். எவ்விடத்தில் ஆரம்பிக்கலாம்?" என்று யோசனை கேட்டிருந்தாராம்.

"கள்ளுக்கடையில் ஆரம்பிக்கலாம். ஒரு குடிகாரனைக் குடியை விடும்படி செய்தால், ஒன்பது தடவை உயிரை விடுவதைவிட அதிகப்பலன் உண்டு என்று ராஜாஜி பதில் எழுதினாராம்.

"இதென்ன பிரமாதம்? ஒரு குடிகாரனைக் குடியை விடும்படி செய்து ஒன்பது தடவை தேசத்திற்கு உயிர் விடுவோம்" என்று தீர்மானித்துக் கொண்டு கல்கி அவர்கள் திருச்செங் கோட்டுக்கு ராஜாஜியிடம் போய்ச் சேர்ந்தாராம்.

ராஜாஜி இவரைப் பார்த்தவுடன் "ஓ நீங்கள்தானா தேசத்திற்காக உயிரைவிடக் கங்கணம் கட்டிக் கொண்டிருப்பவர்?

உம்மிடம் உயிர் இருப்பதாகவே தெரியவில்லையே; பின் எப்படி அதை விடப் போகிறீர்?'' என்றாராம்.

உடனே கல்கி, ''அதுவா? ரயிலில்-பஸ்ஸில் வண்டியில் வரும்போது பத்திரமாக இருக்கவேண்டுமென்பதற்காகப் பெட்டியில் வைத்திருக்கிறேன் என்று சொல்லிப் பெட்டியிலிருந்து சில துண்டுப் பிரசுரங்கள், சின்னப் புத்தகங்கள் முதலியவற்றை எடுத்து வெளியில் போட்டாராம்.

ராஜாஜி அவற்றைப் படித்துவிட்டு ''பேஷ்! இதை நீர் உம்முடைய உயிர் என்று சொன்னது சரிதான்! '' என்று மெச்சிவிட்டு அதைப்போல நிறைய எழுதும்படி கல்கியைத் தூண்டினாராம்.

கல்கி தமிழ் எழுத ஆரம்பித்தார்!

அடடா! தமிழ் மொழிக்கு யோகமல்லவா பிறந்து விட்டது!

கல்கியின் எழுத்துப் பைத்தியத்தை ராஜாஜி போலவே ஆசிரியர் திரு.வி.கலியாணசுந்தர முதலியாரும் வளர்த்து வந்தார்.

''தமிழ் நாட்டில் பலர் செய்வதுபோல என்னுடைய தமிழ் நடையைக் 'காப்பி' அடித்துக் கெட வேண்டாம்; உன் போக்கிலேயே செல்'' என்று திரு.வி.க.அவர்கள் கல்கிக்கு போதனை செய்தார்.

இதெல்லாம் ஒரு புறமிருக்க, தமிழ் மக்களாகிய நாம் மிஸ்டர் வாரன் என்னும் ஆங்கில துரை மகனாருக்கு ஒரு கோவில் கட்டிக் கும்பாபிஷேகமும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம், ஏனெனில் கல்கியைத் தமிழ் எழுத்தாளராக ஆக்கியதற்கு முக்கியப் பொறுப்பாளி அவர்தான்!

1922-ம் ஆண்டிலே கூடலூர் சிறைச்சாலைக்கு கல்கியை மேற்படி துரைமகனார் அனுப்பி வைக்கப் போக, -அங்கே சும்மா இருப்பதற்கு முடியாமல் கல்கி தமிழ் எழுத ஆரம்பிக்க, பின்னர் தமிழும் கல்கியும் ஒருயிரும் ஈருடலுமாகி, 'தமிழ் என்றால் கல்கி-கல்கி என்றால் தமிழ்' என்பது போன்ற பொய்யா மொழிகளும் உண்டாகி விட்டன.

தமிழ் வாழ்க! அதை வாழ்விக்க வழி செய்த வாரன் துரை மகனாரும் வாழ்க; என்று வாழ்த்துவோமாக!

கம்பன் பிறந்த தமிழ்நாடு என்றும், வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு என்றும், நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு என்றும், தமிழ் நாட்டின் பெருமைகளைப் பலர் பலவிதமாகச் சொல்லிப் பாராட்டி மகிழ்கிறார்கள்.

''கல்கி பிறந்த தமிழ்நாடு'' என்று சொன்னாலும் மிகையாகாது. ஏனெனில் கம்பரும், வள்ளுவரும், இளங்கோவும், பாரதியும், கல்கியின் உருவத்தில் தமிழ்நாட்டில் உலாவுகிறார்கள். ஆகவே 'கல்கி' பிறந்த தமிழ் நாடு என்று கூறுவதுதான் சரி.

என் பேச்சு முடிந்ததும் சபை மகிழ்ச்சியில் திளைத்தது. பலர் மேடைக்கு வந்து கைகுலுக்கினார்கள். சிலர் மாலை அணி வித்தார்கள். ஒரு பெண்மணி ஒரு டாலருடன் கூடிய தங்கச் சங்கிலி ஒன்றைப் பரிசாக அளித்தார்.

உடனே பெண்மணிக்கு நன்றி தெரிவித்து விட்டு, ''கல்கியைப் பற்றி நான் பேசியதற்குக் கிடைத்தது இந்தப் பரிசு. இதை நான் கல்கி அவர்கள் சேர்க்கும் பாரதி மண்டப நிதிக்கு அளிக்கிறேன்.

இதை கல்கி அவர்களே ஏலத்திற்கு விட்டு, கிடைக்கும் பணத்தை நிதியில் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறேன்'', என்று சொல்லி பலத்த கரகோஷத்துக்கிடையில் கல்கி அவர்களிடம் மேற்படி தங்கச் சங்கிலியைக் கொடுத்தேன்.

கல்கி அவர்களும் தனக்கே உரித்தான நகைச் சுவை கலந்த சிறிய சொற்பொழிவு ஒன்றைச் செய்து மேற்படி தங்கச் சங்கிலியை ஏலத்துக்கு விட்டார். சங்கிலி எவ்வளவு தொகைக்கு ஏலம் போயிற்று என்று நம்புகிறீர்கள்?

சொன்னால் நம்பமாட்டீர்கள். ரூபாய் ஐயாயிரத்துக்கு ஏலம் போயிற்று. அதைவிட அதிசயம் ஏலம் கேட்ட மற்றவர்களும் எங்களுக்குச் சங்கிலி மேல் ஆசையில்லை. பாரதி நிதிக்கு நாங்களும் பணம் தருகிறோம் என்று கூறித்தாங்கள் கேட்ட ஏலத்தொகையை அவரவர்களும் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதையும் சேர்த்து மொத்தத்தொகை ரூ.9780 சேர்ந்தது.

கல்கத்தா தமிழர்களின் பாரதி பக்தியைக் கண்டு நாங்கள் வியப்படைந்தோம்.

## ராஜாஜியின் மதிநுட்பம்

இதுவரையில் நான் ஏராளமாகச் சொற்பொழிவு செய்திருப்பேன். நான் தமிழில் பேசி ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்லப்பட்ட சொற்பொழிவு ஒன்றே ஒன்றுதான்.

சொற்பொழிவு நடந்த இடம் கவியரசர் ரவீந்திரநாத் தாகூரின் சாந்திநிகேதன். ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் ரசிகமணி டி.கே.சி.

வங்காள கவர்னராக ராஜாஜி 1947ல் பதவி ஏற்றபோது நாங்கள் கல்கத்தா சென்றிருந்தோம். ராஜாஜியின் விருந்தினராகத் தங்கும் பாக்கியம் கிடைத்தது. சாந்திநிகேதனில் ராஜாஜிக்கு ஒரு வரவேற்பு நடந்தது.

மிகவும் ரம்யமான வரவேற்பு வங்காளத்தின் பெரிய பெரிய அறிஞர்கள் எல்லாம் கூடியிருந்த அந்தச் சபையில் என்னைப் பேசும்படி தலைமை வகித்த திரு.பி.சி.கோஷ் (அப்போதைய வங்காள முதன் மந்திரி) அழைத்தார். நான் திடுக்கிட்டுப் போனேன். ராஜாஜியைப் பரிதாபகரமாகப் பார்த்தேன்.

''சும்மா தமிழிலேயே பேசுங்கள். ரசிகமணி டி.கே.சி. ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பார் '' என்று ராஜாஜி கூறினார். ''சரி'', என்று ''மைக்'' அருகில் வந்தேன்.

திடீரென்று ராஜாஜியே எழுந்து ஒரு மாலையை என் கழுத்தில் போட்டார். சபையோரின் கரகோஷம் அடங்கக் கொஞ்ச

நேரமாகியது. நான் ராஜாஜியின் அன்பினால் திணறித் திக்குமுக்காடிப் போய் பேச்சை ஆரம்பித்தேன்.

"ராமபிரானுடைய ஆண்மையும், கிருஷ்ணனுடைய ராஜதந்திரமும், புத்தருடைய தூய்மையும், சிபிச்சக்ரவர்த்தியின் தியாகமும், ராமானுஜரின் மதப் பக்தியும், வள்ளுவரின் வாய்மையும் சேர்ந்து உருவெடுத்து வந்திருப்பவர் ராஜாஜி."

"ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் மூலம் இந்து மதத்திற்குப் புத்துயிர் உண்டாயிற்று. தமிழ்நாடு அப்பொழுது விழித்தெழுந்தது. அவர்கள் இருவரும் இந்த வங்காளத்தில் பிறந்தவர்கள்.

பின்னர் மற்றொரு வங்காள வீரர் விபின் சந்திரபாலர் சென்னைக்கு விஜயம் செய்து தம்முடைய ஆறு பிரசங்கங்களின் மூலம் தமிழ் நாட்டில் தேச பக்தியை உண்டாக்கினார்.

"தேசபந்து தாஸ் வக்கீல் தொழிலை விட்டு நாடு முழுதும் பெரிய கிளர்ச்சியை உண்டாக்கினார். ராஜாராம் மோகன்ராய், ரவீந்திரநாத் தாகூர், நேதாஜி போஸ் முதலியோர்களால் தமிழ் நாட்டுக்கு எவ்வளவோ லாபம் ஏற்பட்டிருக்கிறது"

"சென்ற பல வருஷ காலமாக வங்காளம் எங்களுக்கு எத்தனையோ நன்மைகளைச் செய்திருக்கிறது. அப்பேர்ப்பட்ட வங்கத்திற்கு நாம் என்ன கைமாறு செய்யலாம். செய்ய முடியும் என்று ஏங்கிக் கொண்டிருந்தோம்.

"ஆனால் அதெற்கெல்லாம் வட்டியும் முதலுமாக எங்கள் ராஜாஜியை உங்களுக்குக் கவர்னராகக் கொடுக்கிறோம். ராஜாஜியை கவர்னராக அடைய இவ்வங்காளம் 100 வருஷ காலம் தவம் செய்திருக்க வேண்டும், " என்று கூறியபோது, "ராஜாஜிக்கு ஜே!" என்ற கோஷம் வானை அளாவியது.

நானும் மரியாதையாக அத்துடன் பேச்சை முடித்துக் கொண்டேன். விழா முடிந்தது. கல்கத்தா திரும்பும்போது ராஜாஜி அவர்களிடம் நான், "என்னை எதற்குப் பேசும்படி பணித்தீர்கள். ரசிகமணி டி.கே.சி.பேசினால் போதாதா? " என்றேன்.

அதற்கு ராஜாஜி "ரசிகமணி ஆங்கிலத்தில் பேசுவதாக இருந்தது. ஆகவே நம் தமிழ் மொழியை வங்காளிகள் தெரிந்து கொள்ள வேண்டுமல்லவா?அதற்காகத்தான் உங்களைப் பேசச் சொன்னது" என்று சொல்லிய பிறகு சிறிது மௌனமாக இருந்து விட்டு, "நானே உங்களுக்கு மாலை போட்டது ஏன் தெரியுமா? " என்ற கேள்வியும் போட்டு பதிலையும் சொன்னார்.

"உங்களை இங்கு ஒருவருக்கும் தெரியாது. நீங்கள் பேசும்போது யாரோ என்று அசிரத்தையாக வங்காளிகள் இருந்துவிட்டால் உங்கள் தமிழை யாரும் கவனித்துக் கேட்க முடியாது.

நான் மதித்து மாலை போடக்கூடிய ஆள் என்று தெரிந்து விட்டால் எல்லோரும் கவனமாகக் கேட்பார்கள் அல்லவா? அதற்காகத்தான்" என்று கூறினார்.

ராஜாஜியின் பெருந்தன்மையை நினைத்து உருகிப் போனேன்.

# தொல்காப்பிய மாநாடு

மேடையில் நன்றாகப் பேசத் தெரிந்தவர்களுக்கு எல்லா விஷயங்களும் தெரிந்திருக்கும் என்று பலர் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

ஒரு சமயம் ஒரு வேடிக்கையான அனுபவம் ஏற்பட்டது. கோயமுத்தூர் நகரத்தில் நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்களைப் பாராட்டி நிதி அளிப்பதற்காக ஒரு விழா நடத்த வேண்டுமென்று திரு.ஜி.ஆர். கோவிந்தராஜுலு நாயுடு அவர்களும் சர்.ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்களும் என்னை கோவையில் சில காலம் தங்கும்படி செய்தார்கள்.

விழா சம்பந்தமான வேலைகளில் நான் ஈடுபட்டிருந்தேன். சமயம் கிடைக்கும்போதெல்லாம் கோவையிலும், சுற்றுப் புறங்களிலும் அரசியல்-இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்த்திக் கொண்டிருந்தேன்.

இச்சமயத்தில் கோவை கல்லூரி ஒன்றில் ‘தொல்காப்பிய மாநாடு’ ஒன்று நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. மாநாட்டை நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை அவர்கள் துவக்கி வைக்க ஒப்புக்கொண்டார்கள்.

மேற்படி மாநாட்டன்று நாமக்கல் கவிஞர் அவர்களுக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டபடியால் நாமக்கல்லிலிருந்து கோவைக்கு அவரால் வர இயலவில்லை.

அதனால் ஒரு 'வாழ்த்துக் கவிதை' எழுதி, என்னை மாநாட்டுச் செயல்ாளரிடம் கொடுக்கும்படி எழுதியிருந்தார். அதன்படி கொடுக்க நான் மாநாட்டுக்குச் சென்றேன். செயலாளர் என்னை மிக்க அன்புடன் வரவேற்று முதல் வரிசையில் உட்கார வைத்தார்.

சிறிது நேரத்தில் மாநாட்டுச் செயலாளரும் வேறு சிலரும் என்னிடம் வந்து, "நாமக்கல் கவிஞர் வர இயலாததினால் மாநாட்டை தாங்கள் துவக்கி வைக்க வேண்டும்" என்று கேட்டார்கள்.

நான் சொன்னேன், "உங்கள் அன்பிற்கு நன்றி. ஆனால் தொல்காப்பியத்தைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது, அதனால் வேறு யாராவது விஷயம் தெரிந்தவர்களைத் துவக்கி வைக்கச் சொல்லுங்கள்"

எனது பதில் அவர்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை.

உங்களுக்குத் தெரியாத விஷயம் உலகில் உண்டா? அடக்கம் காரணமாக தாங்கள் மறுக்க வேண்டாம். தாங்கள்தான் துவக்கி வைக்க வேண்டும் என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்கள்.

உண்மையிலேயே தொல்காப்பியம் என்ற பெயர் தெரியுமே ஒழிய அதன் உள்விவரங்கள் எனக்கொன்றும் தெரியாது. ஆயினும் நான் எல்லாம் தெரிந்தவன் என்று நினைப்பவர்கள் மத்தியில் வேறு என்ன செய்ய முடியும்?

தொல்காப்பிய மாநாட்டை துவக்கி வைக்க எழுந்தேன். மாலை, மரியாதை வரவேற்பு பாராட்டு புகழுரை இவைகள் முடிந்ததும் பேசலானேன்.

"தொல்காப்பியம் மிகச் சிறந்த நூல்"

"தமிழுக்கு இதுவே முதல் நூல் ஆகும் இதைப் போன்ற நூல் வேறு எந்த மொழியிலும் கிடையாது."

இந்த மாதிரி பொதுப்படையாகவே பேசிக் கொண்டு போனேன். நான் மேலே கூறியவைகளை யார் மறுக்க முடியும்? இதற்கு மேல் தொல்காப்பியத்தைப் பற்றி ஓங்கி ஒரு அடி அடித்தேன். அதாவது 'தொல்காப்பியத்தில் 11 சமஸ்கிருத வார்த்தைகள் இருக்கின்றன'

இதை நான் சொன்னதும் சபை அசந்து விட்டது. "ஆகா, என்ன ஆராய்ச்சி" என்ன ஆராய்ச்சி, என்று பலர் வியந்தனர்.

இப்படியாக என் துவக்க உரை முடிந்தது.

அதன் பிறகு பேசிய ஒவ்வொருவரும் என்னைப் பார்த்து 'தமிழ்க்கடலே' என்றும் 'ஆராய்ச்சி அருவி' என்றும் 'புலவர் சிகாமணி' என்றும் புகழ்ந்துரைத்தனர். ஒரு புலவர் பேசும்போது, 'துவக்க உரை நிகழ்த்திய தமிழ்ப் பெருந்தகையாளர் தொல்காப்பியத்தில் 11 சமஸ்கிருத வார்த்தைகள் இருப்பதாகக் கூறினார்கள்.

நான் ஆராய்ந்த வரையில் 7 வார்த்தைகள்தான் இருக்கின்றன. பாக்கி நான்கு வார்த்தைகள் என்ன என்பதை அறிய மிக ஆவலாக உள்ளேன்' என்று போட்டார் ஒரு போடு.

எனக்கு சப்த நாடியும் அடங்கிவிட்டது. ஆகா வசமாக மாட்டிக் கொண்டோம். இதிலிருந்து எப்படித் தப்புவது? என்று நான் விழித்துக் கொண்டிருக்கையில் வேறு ஒரு புலவர் மேடைமீது பேச வந்தவர், "நான் ஆராய்ச்சி செய்தவரையில் தொல்காப்பியத்தில் 14 சமஸ்கிருத வார்த்தைகள் இருக்கின்றன" என்று என் காதில் தேன் வந்து பாய்வதுபோல் சொன்னார்.

''அப்பா தப்பித்தோம் ஒரு புலவர் ஆராயச்சியில் 7 சமஸ்கிருத வார்த்தைகளும், மற்றொரு புலவர் ஆர்ாய்ச்சியில் 14 வார்த்தைகளும் தொல்காப்பியத்தில் இருக்கின்றன.

என்னுடைய ஆராய்ச்சியில் சொன்ன 11 வார்த்தைகளும் அதனுள் அடக்கம்தானே ''என்று நிம்மதியடைந்தேன். 7 வார்த்தை புலவர், பாக்கி 4 வார்த்தைகள் என்ன வென்று என்னிடம் கேட்டால் 14 வார்த்தை புலவரிடம் அனுப்ப வேண்டியதுதானே?

மாநாடு முடிந்ததும் பலர் என் தொல்காப்பியச் சொற்பொழிவு பிரமாதம் என்றும் அபாரம் என்றும் புகழ்ந்தார்கள்.

நடந்த நிகழ்ச்சிகளை சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்களிடம் கூறினேன். அவர்கள் 'ஒகோ' வென்று சிரித்துவிட்டு, 'சொற்பொழிவில் நீ கடைப்பிடிக்கும் முறைதான் நம் மக்களுக்குச் சுலபமானது.

உப்தேசம் செய்வது எளிது. சிறிது நேரம் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கும்படி செய்வதுதான் பெரிய சாதனை. இதை நீ சுலபமாகச் செய்கிறாய், என்றைக்கும் இதே வழியைக் கடைப்பிடி என்று உபதேசம் செய்தார். அவருடைய அறிவுரைப்படி இன்றும் நான் மக்களைச் சிரிக்க வைப்பதே என் சொற்பொழிவின் லட்சியமாக வைத்திருக்கிறேன்.

## பாரதி நிதி

எட்டயபுரம் பாரதி மண்டப நிதிக்காக கல்கி கிருஷ்ண மூர்த்தி அவர்களும் நானும் கோயம்புத்தூர் சென்றிருந்தோம். இலக்கிய ரசிகர்கள் நிரம்பிய கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டோம். ரசிகர்கள் நிதி கொடுத்துக் கொண்டிருந்தார்கள்.

கூட்டத்திலிருந்த ஒரு ரசிகர்எழுந்து கல்கி அவர்களே- தாங்கள் எழுதும் 'சிவகாமியின் சபதம் 'நீண்டு கொண்டே போகிறதே ?'' என்று சொல்லிக்கொண்டு வரும்போதே நான் இடைமறித்து ''ஆமாம், நீண்டு கொண்டுதான் போகிறது.

ஐயா, குரங்கிற்குத்தான் வால் நீண்டுகொண்டு போகக் கூடாது. மயிலுக்குத் தோகை நீண்டால் என்ன?'' என்று ஒரு போடு போட்டேன்.

அதைக் கேட்ட உடனே மேற்படி ரசிகர், ''தங்கள் பதில் என்னைப் பரவசமடையச் செய்து விட்டது. நான் பாரதி நிதிக்குப் பத்து ரூபாய்தான் கொடுக்கலாம் என்று வந்தேன். இப்போது இதோ நூறு ரூபாய் கொடுக்கிறேன்,'' என்று கூறி ரூ.100 பாரதி நிதிக்குக் கொடுத்தார்.

## வெள்ளி மணி

1946ஆம் ஆண்டு வெள்ளி மணி என்ற பத்திரிகையைத் துவக்கினேன். நான் பத்திரிக்கை துவக்கிய அதே தினத்தில்தான் குமுதம் பத்திரிக்கையும் துவக்கப்பட்டது. குமுதம் மாதம் இருமுறையாக முதலில் வெளிவந்தது.

பிறகு மும்முறையாக வெளிவந்தது, அதன் பின்னர் சில ஆண்டுகள் கழித்து வாரப்பத்திரிக்கை ஆக்கினார்கள். நான் எடுத்த எடுப்பிலேயே வெள்ளிமணியை வாரப் பத்திரிக்கையாக்கினேன். சாவி அவர்கள் அதன் ஆசிரியராக இருந்து வந்தார். பத்திரிகை நல்ல பரப்பரப்பாக நடந்து வந்தது.

ஆனந்த விகடன், கல்கி, முதலிய பத்திரிக்கைகள் வெளியிடும் தீபாவளி மலரைப் போல் வெள்ளி மணியிலும் ஒரு தீபாவளி மலர் அதிகச் செலவு செய்து நல்ல முறையில் வெளியிட்டோம்.

ஆனந்த விகடன், கல்கி தீபாவளி மலர்கள் விற்பனை ஆனதுபோல் வெள்ளி மணி தீபாவளி மலர் விற்பனை ஆகவில்லை. ஏராளமான நஷ்டம் ஏற்பட்டுவிட்டது. சொந்த அச்சகம் இல்லாமல் பத்திரிக்கை நடத்தியது பெருந்தவறு என்று தெரிந்தது.

ராஜா. சர். முத்தையா செட்டியார் அவர்களுக்குச் சொந்தமான கம்மர்ஷியல் பிரிண்டிங் அண்டு பப்ளிஷிங் ஹவுஸ் என்ற அச்சகத்தில்தான் வெள்ளி மணி அச்சாகிக் கொண்டிருந்தது.

பத்திரிக்கை நஷ்டம் ஏற்பட்டு நிறுத்தும்படி ஆகிவிட்டது. அச்சகத்துக்கு 18,000 ரூபாய் பாக்கி நின்று விட்டது. பலமுறை அவர்கள் பாக்கியை கேட்டுப் பார்த்தார்கள்.

என்னால் கொடுக்க இயலாமல் இருந்தது. அதனால் அவர்கள் என்மீது வழக்கு தாக்கல் செய்து கோர்ட் சம்மன் அனுப்பினார்கள். முதன் முதலில் நான் பெற்ற கோர்ட் சம்மன் அதுதான். அது வரையில் கடனுக்காக கோர்ட் சம்மன் பெற்றதில்லை.

அதனால் கையும் காலும் ஓடவில்லை. என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து என்னிடம் எப்பொழுதும் அன்பும் ஆதரவும் காட்டி வரும் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் சென்றேன்.

கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சம்மனைப் பார்த்துவிட்டு ஒன்றும் கவலைப்படவேண்டாம். இப்பொழுதே ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களைப்பார்த்து இது விஷயமாகப் பேசி கோர்ட்டுக்குப் போகாமல் முடிவு செய்யலாம் என்று சொன்னார்.

சிறிதும் தாமதியாமல் கல்கி என்னை அடையாறில் உள்ள ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களின் பங்களாவிற்கு அழைத்துச் சென்றார். கல்கி அவர்கள் ராஜா சர்ரிடம் என்னைப் பற்றி மிகவும் பாராட்டிச் சொல்லி முன்னுக்கு வந்திருக்கும் ஒரு இளைஞனுக்கு நாம் உதவி செய்ய வேண்டும். அதனால் இந்தக் கடனை நீங்கள் தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு ராஜா சர் அளித்த பதில் ''கடனை வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுப்பதுதானே முன்னேற்றத்திற்கான

வழி.ஆகவே சீக்கிரமாகவே திருப்பிக் கொடுக்கச் சொல்லுங்கள். சிறிது காலம் வேண்டுமானால் நான் பொறுத்துக் கொள்கிறேன்," என்று சொல்லி விட்டார்.

கல்கி அவர்கள் மிகக் கோபமாக எழுந்து வந்து விட்டார்கள். உடனே என்னிடம் இன்று இரவு ரயிலில் நாம் இருவரும் கோயம்புத்தூர் செல்கிறோம். இது விஷயமாக திரு.ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்களைச் சந்தித்து ஆவன செய்வோம் என்று சொன்னார்.

அதன்படி மறு நாள் காலை கோவைக்கு சென்று திரு.ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்களைச் சந்தித்தோம்.

திரு.ஆர்.கே.எஸ்,. அவர்கள் என்னிடம் மிகுந்த அன்பு கொண்டவர்கள், ஆண்டுதோறும் கோடைக் காலத்தில் ஊட்டிக்கு என்னைக் கூட்டிச்சென்று சுமார் ஒரு மாத காலம் தன் இல்லத்தில் பல பிரமுகர்களுடன் என்னையும் இருக்கச் செய்வார். தினமும் இலக்கிய சர்ச்சைகள், கேளிக்கை, விளையாட்டுகள், பல பொழுதுபோக்கு அம்சங்கள் இவைகள் நடைபெறும்.

இதில் என்னுடைய பங்கு கணிசமான அளவு இருக்கும். எனது நகைச்சுவையை அனைவரும் ரசித்துச் சிரிப்பார்கள். இப்படி ஒரு மாதம் சிரிப்பும் கொம்மாளியுமாகக் கழியும். ஆகவே ஆர்.கே.எஸ்.அவர்களுக்கு என்னிடம் ஈடுபாடு உண்டு.

என் விஷயமாகக் கல்கி அவர்கள் எடுத்துச் சொன்னதைக் கேட்டதும், சரி நான் பார்த்துக் கொள்ளுகிறேன் என்று சொல்லி நாம் அனைவரும் இன்றே சென்னைக்குப் புறப்படுவோம் என்றார் ஆர்.கே.எஸ்.

அதன்படி மறுநாள் காலை சென்னைக்கு வந்து சேர்ந்தோம். சென்னைக்கு வந்ததும் திரு. ஆர்.கே.எஸ்.கல்கியைப்

பார்த்து நீங்கள் வீட்டுக்குப் போகலாம் என்று சொல்லி அனுப்பிவிட்டு என்னைத் தன்னுடன் கூட்டிக் கொண்டு சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள தனது வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அங்கு சென்றதும் உடனடியாக டெலிபோனில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்களைத் தன் வீட்டிற்கு வரும்படி சொன்னார்.

ராஜா சர் அவர்களும் சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்தார். இருவரும் தனிமையில் பேசினார்கள். சிறிது நேரத்தில் ராஜா சர் முத்தையா செட்டியார் அவர்கள் அங்கிருந்து புறப்பட்டுச் சென்று விட்டார்.

அதன் பின்னர் திரு.ஆர்.கே.எஸ். என்னைக் கூப்பிட்டு ரூ.18,000 பாக்கி இருப்பதாக முத்தையா சொல்லுகிறார். உங்களால் ரூ.6,000ந்தான் கொடுக்க முடியும் என்று நான் சொல்லி விட்டேன்.

அவர் "சரி" என்று சொல்லி ஒப்புக் கொண்டு விட்டார்.

11 மணிக்கு பணம் கொண்டு வந்து கொடுப்பீர்கள் என்று சொல்லிவிட்டேன். அதனால் சரியாக 11 மணிக்கு, பணத்தைக் கொண்டு போய் கொடுத்து விடுங்கள் என்று கூறினார்.

நான் சரி என்று...கொஞ்சம்...இழுத்துபடி சொன்னேன். எனது முகபாவத்தையும் என் பதிலில் உள்ள வழ வழ கொழ கொழ தன்மையையும் பார்த்த ஆர்.கே.எஸ். அவர்கள் உன் கையில் பணம் இல்லையா என்று கேட்டார்.

தற்சமயம் கைவசம் பணம் இல்லை என்றேன்.

அடடே அப்படியா சமாசாரம்....சரி நான் 11 மணிக்கு நீ பணம் கொண்டு வந்து கொடுப்பாய் என்று சொல்லி இருக்கிறேன்.

அதனால் சொன்ன வார்த்தைப் படி நடந்து கொள்ள வேண்டும். செக் எழுதித் தருகிறேன்.

அதை மாற்றிப் பணத்தைக் கொடுத்து ரசீது பெற்றுக்கொள் என்று சொல்லி செக் எழுதி கொடுத்தார்.

எனக்கு என்ன சொல்வது என்று தோன்றவில்லை. திரு.ஆர்.கே.எஸ். அவர்கள் சொல்லியபடி செக்கை மாற்றி பணத்தைக் கொண்டு போய் கட்டிரசீதைப் பெற்றுக் கொண்டு நேராக கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் சென்றேன்.

அவரிடம் சென்று நடந்த விஷயங்களைச் சொன்னதும் , சேச்சே அவாள்டே போய் பணம் வாங்கி விட்டீர்களே !அவர்களெல்லாம் நமக்கு எதிர் கட்சிக்காரர்கள் அல்லவா? நாளை ஏதாவது ஒரு விஷயத்தில் சொல்லிக் காட்டுவார்கள். அதனால் அந்தப் பணத்தை உடனே திருப்பிக் கொடுத்து விடவேண்டும், என்று சொன்னார்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள், வீட்டினுள் சென்று ரூ.6,000 கொண்டு வந்து என்னிடம் கொடுத்து, உடனே இதைக் கொண்டு போய் ஆர்.கே.எஸ். அவர்களிடம் கொடுத்து விடுங்கள் என்று சொன்னார்.

அவர் சொல்லியபடி பணத்தை திரு.ஆர்.கே.எஸ். அவர்களிடம் அன்று மாலையே திருப்பிக் கொடுத்து விட்டேன். அதன் பின்னர் சிறுகச் சிறுக அந்தப் பணத்தை கல்கி அவர்களிடம் திருப்பிக் கொடுத்தேன்.

## பூட்டை உடையுங்கள்

1942 போராட்டத்தில் நான் சிறையிலிருந்து விடுதலை அடைந்ததும் சென்னை தியாகராய நகரில் தமிழ்ப்பண்ணை என்ற புத்தக வெளியீட்டகம் துவக்கினேன். அப்போது பல தலைவர்களும் தொண்டர்களும் விடுதலையாகாமல் சிறையிலிருந்தார்கள்.

அவர்களை எல்லாம் விடுதலைசெய்து தேசத்தில் ஏற்பட்டிருக்கும் முட்டுக்கட்டையைத் தகர்க்க வேண்டும் என்ற கருத்துடன், "பூட்டை உடையுங்கள்" என்று ஒரு நூல் வெளியிட்டேன். இந்தத் தலைப்பைப் பார்த்த ஆங்கிலேய அரசு, சிறைப்பூட்டை உடைக்கும்படி தூண்டுகிறேன் என்று கூறி என்னைக் கைது செய்தது. இத்துடன் "வங்காளப் பஞ்சம்-" "ஜப்பான் வருவானா?" என்ற புத்தகங்களை வெளியிட்டதற்காகவும் கைது செய்யப்பட்டேன்.

வழக்கு எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் நடைபெற்றது. மாஜிஸ்ட்ரேட் ஒரு தெலுங்கர், பெயர் கோடீஸ்வர ராவ், சுத்தமாகத் தமிழ் தெரியாது.

"பூட்டை உடையுங்கள்" என்பதை அவருக்கு Break open the lock என்று மொழி பெயர்த்துக் கொடுத்து விட்டார்கள். இதை வைத்துக் கொண்டு அவர் "எதுக்கு மேன் ஜெயில் பூட்டை உடைக்கும்படி சொன்னே?" என்று கேட்டார்.

நான் அவருக்குப் பணிவுடன், "பூட்டை உடையுங்கள் என்பதற்கு நான் கொள்ளும் அர்த்தம் Desolve the dead lock என்பதாகும்." என்றேன்.

அவர் அதை ஒப்புக் கொள்ளாமல், ''பூட்டை'' என்றால் ''lock?'' ''உடை'' என்றால் "Break" என்று அர்த்தம் செய்து சொன்னார். சர்க்கார் வக்கீலும் என்னைக் கைதுசெய்த இன்ஸ்பெக்டரும் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தலையாட்டினார்கள்.

உடனே நான்.Kicked the bucket என்றால் இறந்து போனான் என்று அர்த்தமே தவிர பக்கெட்டை உதைத்தான் என்றா சொல்வது? என்றேன். கோர்ட் சிரித்தது. மாஜிஸ்ட்ரேட்டும் சிரித்து விட்டு "வேறு ஏதாவது சொல்ல வேண்டுமா?" என்று கேட்டார்.

உடனே நான் ''நீங்கள் தெலுங்கர், உங்களுக்குச் சரியாகத் தமிழ் தெரியவில்லை. என்னைக் கைது செய்த இன்ஸ்பெக்டேரோ கன்னடக்காரர். அவருக்கும் தமிழ் தெரியாது. கேஸ் நடத்த வந்த சர்க்கார் வக்கீலோ மலையாளி நான் வெளியிட்டிருக்கும் புத்தகமோ தமிழ்ப் புத்தகம். ஆகவே தமிழ் தெரிந்தவர்கள் இந்த வழக்கை நடத்தவேண்டுமென்று விரும்புகிறேன்'' என்றேன்.

மாஜிஸ்ட்ரேட்டுக்கு கோபம் வந்துவிட்டது ''வாட் டமில்-டமில்!'' என்று கூறி ஆறு மாதம் சிறைத் தண்டனை என்று தீர்ப்பு வழங்கிவிட்டார் என்னைக் கைது செய்த இன்ஸ்பெக்டரே என்னிடம் வந்து ''காரியத்தைக் கெடுத்துவிட்டீர்களே!'' மாஜிஸ்ட்ரேட் மூன்று மாதம்தான் தண்டனைக் கொடுப்பதாக இருந்தது. ஆனால் நீங்கள் தமிழ் கிமிழ் என்று பேசி ஆறுமாதம் வாங்கிக் கொண்டீர்கள் என்று அனுதாபப்பட்டார்.

நான் சென்னை சிறைக்குப் போனதும் அங்கிருந்த பேராசிரியர் என்.ஜி.ரங்காவிடம் மாஜிஸ்ட்ரேட் விஷயம் சொன்னேன். அவர் கூறியது: "தாய் நாட்டுப் பற்றுக்காக மூன்று மாதம், தாய் மொழிப் பற்றுக்காக மூன்று மாதம். ஆக ஆறு மாதம் சரிதான்'' என்றார்.

# நான் ஒரு முஸ்லிம்

சொன்னால் நம்ப மாட்டீர்கள்! பம்பாயில் வகுப்புக் கலவரம் நடைபெற்ற சமயம். ஒருநாள் இரவு சினிமா பார்த்து விட்டு நான் தங்கியிருந்த வீட்டுக்குத் திரும்ப அனேகம் டாக்சிக் கரர்களை கூப்பிட்டேன்.

மாதுங்கா போக வேண்டு மென்றவுடன் ''அங்கே போக வேண்டுமானால் ரொம்ப நேரமாகும். வழியில் கலகப் பிரதேசம் இருக்கிறது 'கர்ஃப்யு' ஆர்டர் வேற இருக்கிறது. மணியோ ஒன்பது ஆகிவிட்டது.

ஆகையால் வர இயலாது. அப்படி வந்தாலும் யார் என்னைத் திருப்பிக் கொண்டுவந்து விடுவார்கள்? துணை யில்லாமல் நான் தனியாக எப்படித் திரும்ப முடியும்? என்று ஒவ்வொரு டாக்சி டிரைவரும் சொல்லி விட்டார்.

நேரமாக ஆக எனக்கோ நெஞ்சு 'பக்பக்' என்று அடித்துக்கொண்டது. ''சரி இன்று தீர்ந்தோம்'' என்று முடிவு செய்து, ஞாபகத்திற்கு வந்த சுவாமிகளை எல்லாம் வேண்டிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது ஒரு டாக்சி வந்தது. அந்த டிரைவரிடம் போய் அரைகுறை இந்துஸ்தானியில், ''மாதுங்கா போகவேண்டும்'' என்று சொன்னேன். அவனும் பழைய கதையைத் திருப்பிச் சொன்னான்.

பிறகு நான் அவனிடம் கெஞ்சுதலாக, ''நானும் ஒரு இந்து , நீயும் ஒரு இந்து. உதவி செய்ய வேண்டாமா? '' என்றேன்.

உடனே டாக்ஸி டிரைவர், ''ஆமாம், இந்துவுக்கு உதவி செய்யத்தான் வேண்டும். சரி ஏறு காரில் என்று ஏற்றிக் கொண்டு போய் மாதுங்காவில் நான் தங்கியிருந்த வீட்டின் முன் பத்திரமாக இறக்கி விட்டு விட்டு,

''சாப், நான் இந்துவல்ல, ஒரு முஸ்லிம். உண்மையான முஸ்லிம் யாருக்கும் தீங்கு செய்யக் கூடாதென்பது குரான் வாக்கு'' என்று கூறிவிட்டுக் கம்பீரமாகச் சென்றான்.

நான் கல்லாய் சமைந்து நின்றேன்.

## சிவாஜி தந்த கைக்குட்டை

பம்பாயில் பாரதிவிழா நடைபெற்றது. விழாவிற்கு நடிகர் திலகம் சிவாஜி அவர்களையும் என்னையும் அழைத்திருந்தனர். சிவாஜி வருகிறார் என்றால் கூட்டத்திற்குக் கேட்கவா வேண்டும்.

சிவாஜி பேசும்போது அவர் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து கல்வி கற்றதில்லை என்றும் அந்தப் பாக்யம் தனக்குக் கிடைக்கவில்லை என்றும் சொன்னார்.

நான் பேசும்போது வேடிக்கையாக ,''நான் பள்ளியில் படிக்கும்போது...'' என்று சொல்லி நிறுத்திவிட்டு சிவாஜியைப் பார்த்து, ''நான் பள்ளியில் படித்தவன்'' என்று சொல்லிவிட்டு மேலே பேசினேன்.

கடைசியாக சிவாஜி பேசும்போதும், ''சிலர் செய்த காரியங்களை அவர்கள் சொன்னால்தான் நமக்குத் தெரிகிறது. உதாரணமாக என் நண்பர் சின்ன அண்ணாமலை என்னுடன் பல ஆண்டுகாலம் பழகி வருகிறார்.

இதுவரையில் அவர் பள்ளியில் படித்தவர் என்பது எனக்குத் தெரியவில்லை. மொத்தத்தில் படித்தவரா என்பதும் நான் அறிந்து கொள்ள முடியவில்லை.

இன்று அவரே பள்ளியில் படித்ததாகச் சொன்னதும்தான், 'ஓகோ இவர் படித்தவரா' என்று எண்ணிக்கொண்டேன்,'' என்றாரே பார்க்கலாம். சபையில் கரகோஷம் வானைப் பிளந்தது.

சிவாஜி என் அருகில் வந்து, ''என்ன நண்பரே, முகத்தில் அசடு வழிகிறதே, இந்தக் கைக்குட்டையால் துடைத்துக் கொள்ளுங்கள்'' என்று தன் கைக் குட்டையை என்னிடம் கொடுத்தார்.

மரியாதைக்கு அதை வாங்கி பின்னர் அவரிடமே அதைத் திருப்பிக் கொடுத்தேன். அதனால் அவர் தன் முகத்தைத் துடைத்துக் கொண்டார்!

## பத்திரிகை ஆசிரியர்

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் எப்போதும் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள்.

கல்கி அவர்களும் ரெட்டியார் அவர்களிடம் பக்தி உடையவர்.

ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் முதன் மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றதும் கல்கி அலுவலகத்தில் ஒரு விருந்து நடைபெற்றது.

விருந்துக்கு ராஜாஜி, டி.கே.சி. போன்ற மேதைகளும் அரசியல் இலக்கிய அறிஞர்களும் வந்திருந்தார்கள்.

விருந்து முடிந்ததும் ஓமந்தூர் ரெட்டியார் அவர்கள் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்களைப் பார்த்து 'தாங்கள் எனது மந்திரி சபையில் ஒரு மந்திரியாக இருந்து சேவை செய்ய வேண்டுமென்பது என் விருப்பம்' என்று சொன்னார்.

உடனே சிறிது நேரம் மௌனம் நிலவியது. நிசப்தத்தைக் கலைத்து நான் 'பத்திரிகை ஆசிரியராக இருந்து கொண்டு மந்திரியாக இருக்க முடியுமா?' என்று கேட்டேன். 'அது முடியாது' என்றார், ராஜாஜி.

'அப்படியானால் கல்கி பத்திரிகை ஆசிரியர் பதவியை விட்டுவிட்டு மந்திரிபதவி ஏற்றால் ஆசிரியர் பதவியை விட மந்திரி பதவி உயர்ந்தது என்று தானே அர்த்தம்' என்றேன்.

உடனே கல்கி கிருஷ்ணமூர்த்தி, 'மந்திரி பதவி என்பது ஐந்து ஆண்டுகள்தான். அதிலும் அரசியல் சூழ்நிலையைப் பொறுத்தது.

ஆனால் பத்திரிகை ஆசிரியர் பதவி என் கடைசி மூச்சு வரை உள்ளது.

நான் மந்திரி பதவியைவிட பத்திரிகை ஆசிரியர் பதவியைத்தான் உயர்வாகக் கருதுகிறேன்' என்றார்.

ரசிகமணி டி.கே.சி.அவர்கள் 'பேஷ் , பேஷ் நன்றாகச் சொன்னீர்கள்' என்று பேச்சை முடித்தார்கள்.

வீடு தேடிவந்த மந்திரி பதவியை வேண்டாம் என்று சொன்னவர் கல்கி.

## அரசவைக் கவிஞர்

ஓமந்தூர் திரு.ராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது ''தமிழுக்கு நீங்கள் ஏதாவது செய்யக் கூடாதா?'' என்று கேட்டேன். ''என்ன செய்யலாம், நீங்களே சொல்லுங்கள்'' என்றார்.

''ஏன் நாமக்கல் கவிஞரை ''அரசவைக் கவிஞர்'' என்று செய்யலாமே, அதுவும் தமிழுக்கு ஒரு பெருமை தானே '' என்றேன். ''சரி யோசிக்கிறேன்'' என்றார்.

சில நாட்கள் கழித்து எனக்கு ஒரு அரசாங்க அழைப்பு வந்தது. அதில் நாமக்கல் கவிஞருக்கு அரசவைக் கவிஞர் என்ற பட்டமளிப்பு விழா ராஜாஜி மண்டபத்தில் நடைபெறும். அவசியம் வந்து கலந்து கொள்ள வேண்டுகிறேன், என்று முதலமைச்சரே கையெழுத்திட்டு அனுப்பியிருந்தார். மிக்க மகிழ்ச்சியாக விழாவிற்குச் சென்றேன்.

கவர்னரும் நகரப் பிரமுகர்களும் கூடியிருந்தனர். முதலமைச்சர் ஓமந்தூர் ரெட்டியார் துவக்க உரை நிகழ்த்துகையில், ''இந்த அரசவைப் புலவர்'' என்ற பட்டத்தைத் தேசீயக் கவி நாமக்கல் இராமலிங்கம் பிள்ளைக்கு அளித்து, தமிழுக்கு இதன் மூலம் பெருமை கிடைக்கும்படி செய்ய வேண்டுமென்று இந்த யோசனையை எனக்குக் கூறியவர் திரு. சின்ன அண்ணாமலை அவர்கள்தான். அவருக்கு அரசாங்கத்தின் சார்பில் நன்றி தெரிவிக்கிறேன்'' என்று சொன்னார். சபையோர் உற்சாகமாக கரகோஷம் செய்தார்கள். நான் ஓமந்தூர் ரெட்டியாரின் நேர்மையை நினைத்து மகிழ்ந்தேன்.

## கம்பராமாயணப் பதிப்பு

சர் ஆர்.கே.சண்முகம் செட்டியார் அவர்கள் என்னிடம் ரொம்பப் பிரியம் உள்ளவர்கள். என்னை ஊட்டிக்குக் கூட்டிக் கொண்டு போய் சுமார் ஒரு மாதகாலம் தன் விருந்தாளியாக வைத்துக் கொண்டார். தினமும் அங்கு பல அறிஞர்கள் வருவார்கள்.

உரையாடல்கள் நடைபெறும். ஒரு நாள் திரு. ஆர்.கே.எஸ், கூடியிருந்தவர்களை ''தமிழுக்கு ஏதாவது செய்ய வேண்டு மென்றிருக்கிறேன். நல்ல யோசனைகள் இருந்தால் கூறலாம்'' என்றார். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான யோசனை களைச் சொன்னார்கள். அவைகள் திரு.ஆர்.கே.எஸ். அவர் களைக் கவரவில்லை. என் முறை வந்ததும், ''உன் யோசனை என்ன?'' என்றார்கள்.

''இரண்டு காரியங்கள் செய்யலாம். ஒன்று கம்ப ராமாயணம். இதுவரை நல்ல முறையில் அச்சிடப்படவில்லை. அதை அண்ணாமலை சர்வ கலாசாலை மூலம் சிறந்த தமிழ் அறிஞர்கள் குழுவொன்று ஏற்படுத்தி, அச்சுப் பிழை இல்லாமல் வெளியிடலாம்.''

மற்றொன்று, நாகர்கோவிலில் இருக்கும் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் உடல் நலமில்லாம லிருக்கிறார். அவர் எங்கும் பிரயாணம் செய்ய முடியாது. தமிழகம் இன்னும் அவருக்குத் தகுந்த முறையில் மரியாதை

செய்யவில்லை. ஆகவே தங்கள் தலைமையில் நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெரியோர்கள் நாகர்கோவிலுக்கே சென்று கவிமணிக்கு மரியாதை செலுத்தலாம்'' என்றேன்.

மலையிலிருந்து கீழே இறங்கியதும் முதல் வேலையாக திரு.ஆர்.கே.எஸ். செய்தது, அண்ணாமலை சர்வகலாசாலை மூலம் திரு.வையாபுரி பிள்ளை-பி.ஸ்ரீ.முதலியோர்களைப் பதிப்பாசிரியர்களாக நியமித்து கம்பராமாயணத்தைப் பிழை இல்லாமல் எல்லோரும் படிக்கும் வண்ணம் நல்ல முறையில் அச்சிட்டதாகும். இரண்டாவது கவிமணிக்கு மரியாதை செய்ய நாகர்கோவிலுக்குப் புறப்பட்டதாகும்.

திரு.ஆர்.கே.எஸ். தலைமையில் நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெரியோர்கள் கார்மூலம் நாகர்கோவில் நோக்கிப் புறப்பட்டார்கள். நானும் கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனும் இவர்களை எல்லாம் நாகர் கோவிலில் வரவேற்றோம்.

கவிமணிக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். 'போற்றி போற்றி' என்று தமிழறிஞர்கள் வாழ்த்தினார்கள்.

அந்தக் கூட்டத்தில் திரு.ஆர்.கே.எஸ்., கம்பராமாயணம் புதிய பதிப்பின் முதல் பிரதியை கையில் வைத்துக்கொண்டு, ''இந்த அரிய பொக்கிஷத்தைப் பதிப்பிக்கும்படி என்னைத் தூண்டி, கவிமணிக்குச் சிறப்புச் செய்யும் யோசனையையும் சொல்லி இந்த விழாவிற்கு மூலகாரணமான திரு. சின்ன அண்ணாமலைக்கு இந்த நூலை அளிக்கிறேன்'' என்று கூறி மேற்படி கம்பராமாயணம் பிரதியை என்னிடம் அளித்தார்.

அதில் திரு.ஆர்.கே.எஸ். திரு.வையாபுரி பிள்ளை, திரு.பி.ஸ்ரீ. முதலியவர்களின் கையெழுத்துகள் முத்து முத்தாக இருக்கின்றன. அதை அரிய பொக்கிஷமாகக் காப்பாற்றி வருகிறேன்.

## கலைவாணருடன் போட்டி

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் அவர்கள் எனது நெருங்கிய நண்பர். எனது நகைச்சுவைப் பேச்சுகள் அவரை மிகவும் கவர்ந்திருந்தன. பல ஊர்களுக்கு அவரும் நானும் பிரயாணம் செய்திருக்கிறோம். பல பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டிருக்கிறோம்.

மகாத்மா காந்தியடிகள் அமரரானபோது சென்னை தியாகராய நகரிலுள்ள தக்கர் பாபா வித்யாலயத்தில் 30 நாட்கள் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது. 30வது நாள் கலைவாணரும் நானும் பேசுவதாக ஏற்பாடு.

மேற்படி கூட்டத்தில் பேசுவதற்காக இருவரும் ஒரே காரில் சென்றோம். அப்போது என்.எஸ்.கே.சொன்னார். 'இன்று நான் பேசிய பிறகு நீங்கள் பேச வேண்டும், முடியுமா?' என்றார். 'முடியும்' என்றேன்.

'நான் பேசிவிட்டால் கூட்டம் இருக்காதே' என்றார். 'கூட்டத்தை இருக்கும்படிச் செய்யலாம்' என்றேன். 'தோல்வி அடைவீர்கள்' என்றார். 'பார்க்கலாம்' என்றேன்.

'நான் பேசிய பிறகு கூட்டத்தை நிறுத்தி வைத்து அரைமணி நேரம் நீங்கள் பேசினால் ரூ.1000/- தருகிறேன்' என்றார்.

'ரூபாய் ரெடியாக இருக்கட்டும்' என்றேன்.

இருவரும் கூட்டத்திற்குச் சென்றோம். சுமார் 3000 பேர் கூடியிருந்தனர். பிரார்த்தனை முடிந்ததும் ஏற்கெனவே நாங்கள் திட்டமிட்டபடி கலைவாணர் என்.எஸ்.கே. பேசினார். அரை மணி நேரம் மிக உருக்கமாகப் பேசினார். இயற்கையாக அவருக்குள்ள நகைச்சுவையும் ஆங்காங்கே வெளிப்பட்டது.

அவர் பேசி முடிந்ததும் கண் மூடிக் கண் திறப்பதற்குள் நான் எழுந்து கம்பீரமான குரலில் "சங்க நாதம் கேட்குது, சாந்த காந்தி சத்தியத்தின் சங்க நாதம் கேட்குது" என்று பாட ஆரம்பித்தேன்.

எதிர்பாராதவிதமாக இப்படி நான் திடீரென்று பாட ஆரம்பித்ததும் சபை அப்படியே நிசப்தமாகி வெகு கூர்மையுடன் என் பாட்டை கேட்டுக் கொண்டிருந்தது. பாட்டுப் பாடி முடிய பத்து நிமிடங்கள் ஆயின. பாட்டு முடிந்ததும் பலத்த கரகோஷம், அடுத்த வினாடி மக்களைப் பார்த்து நான் ஒரு கேள்வி கேட்டேன்.

உங்களில் யார் யார், காந்தி பக்தர்கள் தயவு செய்து கையைத் தூக்குங்கள் பார்க்கலாம் என்றேன். அனைவரும் கை தூக்கினார்கள். அப்படியானால் காந்தியடிகள் பிரார்த்தனை செய்தது போல் நாமும் கூட்டுப் பிரார்த்தனை செய்யலாமா? என்று கேட்டேன். அனைவரும் ஒரே குரலில் சரியென்றார்கள், ரகுபதிராகவ ராஜாராம் பிரார்த்தனை பத்து நிமிடம் நடத்தினேன்.

அதன் பின்னர், மக்களிடம் சொன்னேன், "கலைவாணர் என்.எஸ்.கே.அவர்கள் உங்களை மிகவும் நேசிக்கிறார். அதைப் போலவே நீங்களும் அவரை நேசிக்கிறீர்கள். அதனால் நான் அவரிடம் சொன்னேன்.

நீங்கள் முதலில் பேசி விட்டால் மக்கள் கலைந்து விடுவார்கள். ஆகவே நான் முதலில் பேசி விடுகிறேன்., என்று கேட்டுக் கொண்டேன். அதற்கு அவர், நீங்கள் நினைப்பது தவறு.

இன்று கூட்டத்திற்கு வருபவர்கள் எனக்காகவும், உங்களுக்காகவும் வருபவர்கள் அல்ல; காந்தி மகாத்மாவின் பக்தர்கள். ஆகவே கூட்டம் முடியும் வரையில் இருப்பார்கள் என்று சொன்னார்.

அவர் சொன்னதை நம்பித்தான் நானும் அவர் பேசிய பிறகு பேசிக்கொண்டிருக்கிறேன். நீங்கள் கலைவாணர் சொல்லியபடி கடைசி வரையில் இருப்பீர்களா? என்று கூட்டத்தைப் பார்த்துக் கேட்டேன். ''

'கண்டிப்பாக இருக்கிறோம்' என்று ஏகோபித்த குரலில் மக்கள் பதில் கொடுத்தார்கள்.

உடனே என்.எஸ்.கே.எழுந்து அவருக்கும் எனக்கும் ஏற்பட்ட பந்தயத்தைப் பற்றி மக்களிடம் விளக்கிச் சொல்லி, 'பந்தயத்தில் சின்ன அண்ணாமலை ஜெயித்து விட்டார்' நான் சொன்னபடி ரூ.1000/- த்தை இப்போதே கொடுக்கிறேன், என்று பணத்தைக் கொடுத்தார்.

நான் அதை வாங்கி தக்கர் பாபா வித்யாலயத்திற்கு நன்கொடையாக வழங்கினேன்.

## —திராவிடக் கழகத்தினர் கலாட்டா—

1947-ல் நமது நாட்டுக்குச் சுதந்திரம் வந்தது. தமிழ் நாட்டில் காங்கிரஸ் மந்திரிசபை நடந்தாலும் காங்கிரஸ் கட்சி கலகலத்திருந்தது. திராவிடக் கழகம் பலம் பெற்று கொண்டிருந்தது. காங்கிரஸ் தொண்டர்கள் தெருவில் நடந்தால் திராவிடக் கழகத்தவர் அவர்களை நையாண்டி செய்வார்கள். வீண்வம்பிழுப்பார்கள். ''ஆறு அவுன்ஸ்'' என்றும் ''ஐந்து ஏக்கர்'' என்று கேலி செய்வார்கள். காங்கிரஸ் கூட்டங்களை நடத்த விடாமல் திராவிடக் கழகத்தினர் கலாட்டா செய்வார்கள்.

இம்மாதிரி செய்யும் திராவிடக் கழகத்தினரைத் தட்டிக் கேட்க ஆள் இல்லாமல் போய் விட்டதனால் அந்தத் தம்பிகள் சண்டப்பிரசண்டம் செய்து கொண்டிருந்தார்கள். போலீசாரும் ஏன் என்று கேட்கவில்லை. காங்கிரஸ் அரசாங்கமும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நானும் என்னைப் போனற சில காங்கிரஸ் பேச்சாளர் களும், திரு.ம.பொ.சி.அவர்களும்தான் ஆங்காங்கே நடக்கும் காங்கிரஸ் கூட்டங்களில் திராவிடக் கழகத்தைத் தாக்கிப் பேசுவோம். நான் பெரியார் ஈ.வெ.ரா. அவர்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசுவேன். அதனால் திராவிடக் கழகத்தினர் என் மீது ரொம்பவும் காட்டமாக இருந்தனர்.

ஒரு நாள் சென்னை மயிலாப்பூரில் ஒரு நண்பரின் வீட்டுக்குச் சென்று விட்டு, குளக்கரையிலுள்ள பஸ் நிலை யத்திற்குச் சென்று கொண்டிருந்தேன். என் பின்னே சிறு

கூட்டமாகச் சிலர் வந்து என்னை மிகக் கேவலமாகத் திட்டினார்கள். பேச்சும் போக்கும் அவர்கள் திராவிடக் கழகத்தினர் என்பது தெளிவாகத் தெரிந்தது.

லோகநாதன் என்ற ஒரு இளைஞர் என் சட்டையைப் பிடித்து இழுத்துக் கிழித்து, "ஏண்டா நீ தானே கூட்டங்களில் பெரியாரைத் தாறுமாறாகப் பேசுகிறாய்." இனி அம்மாதிரி பேசினால் காலை கையை ஒடித்துவிடுவோம்.

இப்போது நீ ஒரு தமிழன் என்பதினால் (பிராமணன் அல்லாதவன்) உன்னை உயிரோடு விடுகிறோம்" என்று கூறினார். இம்மாதிரி இம்சைகளுக்கிடையே பஸ் ஏறினேன். பஸ்ஸை சுற்றி நின்று கொண்டு மேற்படி நபர்கள் பலவாறு கூச்சலிட்டார்கள். பஸ் கண்டக்டரும் அவர்களுடன் சேர்ந்து கொண்டு, "பேமானி" என்றும் "கழுதை " என்றும் திட்டி, காங்கிரஸ் மீது வசை பாடினார்.

இவ்வளவையும் பொறுமையாகக் கேட்டுக் கொண்டு கிழிந்த சட்டையுடன் தலைவர் காமராஜ் இல்லத்திற்குச் சென்றேன். என் அலங்கோல நிலையைப் பார்த்துப் பதறிப்போன காமராஜ் விஷயத்தை விசாரித்துத் தெரிந்து கொண்டார். அவருக்கு அபார கோபம் வந்து விட்டது.

டெலிபோனை எடுத்து அப்போதைய முதலமைச்சராக இருந்த திரு.குமாரசாமி ராஜா அவர்களைக் கூப்பிட்டு, "என்ன கவர்ன்மெண்ட் நடத்துறீங்கண்ணே, கதர் சட்டை போட்டவன் வீதியிலே நடக்க முடியலே, மந்திரிங்க மட்டும் காருலே கொடி போட்டுக்கிட்டு போனாபோதுமான்னேன்" என்று கூறி என் சம்பந்தமாக நடந்ததைச் சொல்லி, "இதற்கு உடனே ஏதாவது செய்தாகணும் " என்று சொல்லிவிட்டு 'டக்' கென்று போனை வைத்து விட்டார்.

நான் உடனே, ஐயா இது என் விஷயம் மட்டுமல்ல, தமிழ் நாடு பூராவும் காங்கிரஸ் தொண்டர்கள் இந்த மாதிரி அவஸ்தைக்குள்ளாகி இருக்கிறார்கள். அதற்கு மொத்தமாக நாம் கட்சி ரீதியாக ஏதாவது செய்ய வேண்டும்.

போலீஸ் நடவடிக்கை இதற்கு நிரந்தர பரிகாரமாகாது'' என்றேன். ''என்ன செய்யலாம், சொல்லுங்க'' என்றார். ''திராவிடக் கழகத்தை எதிர்த்து ஒரு இயக்கம் நடத்தினால் காங்கிரஸ் தொண்டர்களுக்குப் புதிய தெம்பு உண்டாகும். கட்சிக்கும் புதிய பலம் உண்டாகும்'' என்றேன்.

ஒரு கட்சியை எதிர்த்து இயக்கம் நடத்துவது, அரசியல் ரீதியாகசரியாகச் இருக்காதே, திராவிடக் கழகம் பிரிவினைக் கட்சிதானே; அதனால் ''பிரிவினை எதிர்ப்பு இயக்கம்'' என்று நடத்தினால் என்ன?'' என்று கேட்டார்.

''பிரிவினை எதிர்ப்பு'' என்று நடத்தினால் பரபரப்பு இருக்காது. ''திராவிட இயக்க எதிர்ப்பு'' என்று நடத்தினால்தான் பரபரப்பு இருக்கும்'' என்று சொன்னேன்.

''சரி, அப்படியானால் உடனே வேலையைத் தொடங் குங்கள், '' என்று சொல்லி ஆயிரம் ரூபாயை எடுத்துக் கொடுத்து, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு போன் செய்து, எனக்கு ஒரு செவர்லட் வான் ஒன்றைக் கொடுக்கும்படியும், டிரைவர் ஏழுமலை என்பவரை வண்டியை ஓட்டும்படியும் ஏற்பாடு செய்தார்.

''டிரைவர் ஏழுமலை சிறந்த காங்கிரஸ் தொண்டர். உணர்ச்சி உள்ளவர். கலகம் வந்தாலும் உங்களுக்கு. பாதுகாப்பாக இருக்கக் கூடியவர்'' என்று காமராஜ் சொன்னார், மேலும், பிரிவினை எதிர்ப்பு என்றால் நானே தலைமை வகித்து இயக்கத்தை நடத்தலாம்.

அது அரசியல் ரீதியாக சரியாக இருக்கும். திராவிட இயக்க எதிர்ப்பு என்றால் நான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவராக இருந்து கொண்டு ஒரு கட்சிக்கு எதிர்ப்பு என்ற இயக்கத்தை நடத்தக் கூடாது. ஆகவே இதை நீங்களே நடத்துங்கள்; நான் என்ன உதவி வேண்டுமானாலும் செய்கிறேன்'' என்றார்.

''அப்படியானால் ம.பொ.சி. அவர்களைக் கேட்கட்டுமா?'' என்றேன். ''சரியான பொருத்தமானவர்தானே. உடனே வேண்டியதை அவரை ஆலோசித்துச் செய்யுங்கள்,'' என்றார். நான் தலைவர் காமராஜ் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டிற்கு வந்தேன். வீட்டில் மயிலாப்பூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து காத்துக் கொண்டிருந்தார்.

போலீஸ் கமிஷனர் கூட்டிக் கொண்டு வரச் சொன்னதாகச் சொன்னார், கமிஷனரைப் போய்ப்பார்த்தேன். மயிலாப்பூரில் நடைபெற்ற விஷயங்களைச் சொன்னேன். ''ஆட்களை ஞாபகமிருக்கிறதா?'' என்று கமிஷனர் கேட்டார். ''ஞாபக மிருக்கிறது'' என்றேன். ''அப்படியானால் கலாட்டா செய்த பகுதி வழியாக மீண்டும் செல்லுங்கள். கலாட்டா செய்தவர்கள் தட்டுப்பட்டால் அவர்களைக் கூப்பிட்டு வம்பிழுங்கள்'' என்றார் போலீஸ் கமிஷனர். அவர் சொன்னபடியே செய்தேன்.

கலாட்டா செய்த லோகநாதனைக் காணோம். ஆனால் மற்றவர்கள் இருந்தார்கள். மீணடும் என்னை வந்து சுற்றிக் கொண்டார்கள். அப்போது சாதாரண உடையில் (மப்டியில்) இருந்த போலீசார் பலர் நாலாபக்கமிருந்தும் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து மேற்படி கலாட்டாக்காரர்களைச் செம்மையாக உதைத்துப் போலீஸ் வேனில் ஏற்றி, போலீஸ் ஸ்டேஷனுக்குத் தள்ளிக் கொண்டு போய் விட்டார்கள்.

என்னைப் போலீஸ் கமிஷனர் தன் வண்டியில் ஏற்றி என் வீட்டில் விட்டுவிட்டுச் சென்றார். இரவு 10 மணி இருக்கும்.

தலைவர் காமராஜ் அவர்கள் வீட்டிலிருந்து, உடனே வரும்படி எனக்கு போன் வந்தது. போனேன். அங்கு சுமார் இருபது குடும்பத்தினர். வயதான ஆண்கள், பெண்கள், குழந்தைகள் கூடியிருந்தார்கள்.

என்னைப் பார்த்ததும் தலைவர் காமராஜ், "இவங்கள்ளாம் இன்று கைது செய்யப்பட்டிருக்கும் திராவிடக் கழகக்காரர்களின் குடும்பத்தினர். கைது செய்யப்பட்டவர்களில் சிலர் கார்பொரேஷனிலும், அரசாங்கத்திலும் வேலை செய்பவர்களாம். தண்டிக்கப் பட்டால் வேலை போய்விடுமாம். அந்தப் பிள்ளை களை நம்பித்தான் இவர்கள் குடும்பம் இருக்கிறது என்கிறார்கள்."

இனிமேல் இம்மாதிரி நடக்காமல் நாங்கள் பார்த்துக் கொள்ளுகிறோம் என்கிறார்கள். முதலமைச்சர் குமாரசாமி ராஜாவைப் பார்த்தார்களாம். அவர் என்னைப் போய் பார்க்கும்படி சொன்னாராம். சம்பந்தப்பட்டவர் தாங்கள். ஆகவே தங்களைக் கேட்காமல் எதுவும் நான் சொல்லக் கூடாதல்லவா? அதனால்தான் கூப்பிட்டு விட்டேன். "என்ன, மன்னிச்சு விட்டு விடலாமா?" என்று மடமடவென்று கேட்டார் தலைவர் காமராஜ்.

"சரி, இனிமேலாவது காங்கிரஸ் தொண்டர்களைக் கேவலப் படுத்தாமல் இருந்தால் போதும்" என்றேன். காமராஜ் அவர்களின் கட்டளைப்படி கலாட்டா செய்த தோழர்கள் இரவே விடுதலை செய்யப்பட்டார்கள். மறுநாள் காலை. மயிலாப்பூர் திராவிடக் கழக பிரமுகர் லோகநாதன் அவர்கள் என் வீட்டிற்கு வந்து நடந்ததற்கு வருத்தம் தெரிவித்தார்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள். அதே லோகநாதன் சில ஆண்டுகளில் காங்கிரசில் சேர்ந்து எனது நெருங்கிய நண்பராக இறக்கும் வரை இருந்தார். காமராஜரின் பக்தராகக் கடைசி வரை இருந்தார். காமராஜரிடம் அவர் பக்தி கொள்ளக் காரணமாக இருந்தது, நான் மேலே குறிப்பிட்ட சம்பவமும் காமராஜ் அவர்களின் மன்னிக்கும் குணமுமேயாகும்.

## திராவிட இயக்க எதிர்ப்பு

தமிழகம் முழுவதும் காங்கிரஸ் தொண்டர்களையும் காங்கரஸ் கட்சியையும் கேவலப்படுத்தும் திராவிடக் கழகத்தாரை எதிர்த்து 'போர்' தொடுக்கும் வேலையை ஆரம்பித்தேன்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.அவர்களும் நானும் இன்னும் சில நண்பர்களும் ஆலோசனை செய்து ஒரு மாபெரும் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு நடத்துவது என்றும் தமிழ்நாடு முழுவதும் உள்ள தேசீய தொண்டர்கள் அனைவரையும் திரட்டுவது என்றும் முடிவு செய்தோம்.,

சென்னையில் இப்போது சத்தியமூர்த்திபவன் இருக்கும் இடம் அப்போது கட்டிடம் இல்லாமல் வெறும் காலி இடமாக இருந்தது. அந்த இடத்தில் மாபெரும் பந்தல் போடப்பட்டது. பந்தலுக்கு 'கண்ணகி பந்தல்' என்று பெயரிடப்பட்டது. முதல் நாள் 'சிலப்பதிகார மாநாடு' என்றும் மறுநாள் 'திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு'என்றும் நடத்தப்பட்டது.

சிலப்பதிகார மாநாட்டிற்குப் பன்மொழிப் புலவர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் தலைமை வகித்தார். மு.வரத ராசனார் போன்றவர்கள் கலந்து கொண்டார்கள். திராவிட இயக்க எதிர்ப்பு மாநாட்டிற்கு திரு.ம.பொ.சி. தலைமை வகித்தார்.

இரண்டு நாள் மாநாட்டிலும், பூரா நாளும் இருந்து தலைவர் காமராஜ் ஆதரவு கொடுத்தார். டி.கே.எஸ். சகோதரர்கள் நாடகமும் நடைபெற்றது. தமிழகம் முழுவதுமிருந்த தேசீயத் தொண்டர்கள் திரண்டு வந்திருந்தனர். அவர்களுக்கு மாநாடு தைரியத்தையும் ஆவேசத்தையும் கொடுத்தது. அதன் பிறகு காங்கிரஸ் கூட்டங்கள்

மளமளவென்று நடக்க ஆரம்பித்தது. காங்கிரசிற்குப் புதிய பலம் ஏற்பட்டது. பல இடங்களில் தலைவர் ம்.பொ.சியும் நானும் தாக்கப்பட்டோம். எங்கள் கூட்டங்களில் புகுந்து திராவிடக் கழகத்தினர் கலாட்டா செய்து பார்த்தார்கள். காங்கிரஸ் தொண்டர்களும் சளைக்க வில்லை.

அவர்களும் பதிலடி கொடுத்தார்கள். பட்டுக்கோட்டையில் நானும் திரு.ம.பொ.சி. அவர்களும் பேசிவிட்டுத் திரும்பும்போது இரவு 12 மணி அளவில் ஒரு வெறி பிடித்த கூட்டம் ஊருக்கு வெளியே மறைந்து நின்று எங்களைக் கொல்லக் காத் திருந்தார்கள்.

நாங்கள் வந்த காரை அடித்து நொறுக்கினார்கள். டிரைவர் ரொம்ப தைரியசாலி, காமராஜ் தேர்ந்தெடுத்துக் கொடுத்த டிரைவர் ஏழுமலையல்லவா? அதனால் அடி, உதை, வெட்டு, குத்து, இவைகளுக்கு மத்தியில் எங்களைப் பத்திரமாகக் கொண்டு வந்து சேர்த்தார். இப்படி தலைவர் ம.பெர்.சி.அவர்களும் நானும் எவ்வளவோ தமிழகத்திற்குச் செய்து வந்திருக்கிறோம்-இன்னும் செய்து கொண்ருக்கிறோம்.

தலைவர் ம.பொ.சி.அவர்களைப் பற்றி நான் தனியாக ஒரு நூல் எழுதினால்தான் என் மனதில் இருக்கும் அனைத்தையும் நான் கூற முடியும். ஆனால் சுருக்கமாக ஒரு விஷயத்தை நான் சொல்லவேண்டும். நான் பழகிய வரையில் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் சிறந்த காந்தீயவாதி-மற்ற எல்லாவற்றையும் விட ஒழுக்க சீலர்.

நான் ராஜாஜி அவர்களுடனும் ம.பொ.சி. அவர்களுடனும் மிக நெருங்கிப் பழகியிருக்கிறேன்: பல நாட்கள் தொடர்ந்து கூடவே இருந்திருக்கிறேன். நான் அறிந்த வரை தமிழகத்தில் சிறந்த அரசியல் தலைவர்களில் ராஜாஜியும், ம.பொ.சியும் தெய்வீகப் பிறவிகள் !

## மந்திரி பதவி

1952-ல் ராஜாஜி இரண்டாவது முறையாகத் தமிழ் நாட்டுக்கு முதல் மந்திரியாகப் பதவியேற்ற நாள், அன்று பலர் வந்து ராஜாஜியைப் பார்த்து "மந்திரிப் பதவி வேண்டும்" என்று கேட்டுக் கொண்டேயிருந்தார்கள்.

நானும் சிலம்புச் செல்வர் ம.பொ.சியும் ராஜாஜி அருகில் உட்கார்ந்திருந்தோம். டாக்டர் சுப்பராயன் வந்தார்.

அவர் வந்ததும் ராஜாஜி "பாருங்கள் டாக்டர், எல்லோரும் வந்து மந்திரி வேலை வேண்டுமென்று கேட்டுக் கொண்டே யிருக்கிறார்கள்.

சிலர்தான் மந்திரி வேலையே வேண்டாமென்றிருப் பவர்கள். என் கஷ்டம் உங்களுக்குத் தெரிந்திருக்கிறது," என்று கூறினார்,.

சிறிது நேரத்தில் சுப்பராயன் எழுந்து போய்விட்டார். அவர் போனதும் ராஜாஜி, ம.பொ.சியிடம் "பார்த்தீர்களா, டாக்டரும் மந்திரி வேலைக்குத்தான் வந்தார், சமாளித்து விட்டேன்" என்றார்.

"தங்களிடம் அன்புள்ளவர்களை ஏமாற்றலாமா?" என்றார் ம.பொ.சி.

அன்புடையவர்களுக்கு அன்புதான் காட்டலாம். எல்லோருக்கும் மந்திரி பதவி தர முடியுமா" என்றார் ராஜாஜி.

## பதவிக்குரிய தகுதி

சென்னை சட்டசபைக்குச் சபாநாயகர் தேர்தல் நடப்பதற்குச் சில தினங்களுக்கு முன்னால் ராஜாஜியிடம் திரு.சிவசண்முகம் பிள்ளை வந்திருந்தார். வந்தவர் ராஜாஜியைப்பார்த்து, தாம் சபாநாயகர் தேர்தலுக்கு நிற்கப் போவதாகவும் தம்மை ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்கு ராஜாஜி, ''அந்தப் பதவிக்கு இன்னும் யார் போட்டி போடுகிறார்கள்?'' என்று கேட்டார். தென்னேட்டி விஸ்வநாதன் போட்டி போடுவதாக சிவசண்முகம் பதிலளித்தார்.

உடனே , ராஜாஜி ''விஸ்வநாதனைக் காட்டிலும் தாங்கள் எந்த விதத்தில் அந்தப் பதவிக்குத் தகுதி?'' என்று சிவசண்முகம் பிள்ளையைப் பார்த்து வெகு அமைதியுடன் கேட்டார்.

மேற்படி கேள்வியானது அருகிலிருந்த என்னை ஒரு உலுக்கு உலுக்கியது. நான் நிதானம் அடைவதற்கு முன் திரு.சிவசண்முகம், ராஜாஜியின் கேள்விக்குப் பளிச்சென்று பதில் கூறினார்.

நான் சென்னை நகரசபையின் மேயராக இருந்து சபை நடத்தி அனுபவம் பெற்றிருக்கிறேன். திரு.விஸ்வநாதனுக்கு அத்தகைய அனுபவம் கிடையாது. ஆகையால் நான் அவரைவிட தகுதியுடையவன்'' என்று கூறினார்.

''பேஷ்! அப்படியானால் சரி, தாங்கள் தேர்தலுக்கு, நிற்பதில் எனக்கு மிகவும் சந்தோஷம் என்று ஆசீர்வதித்து அனுப்பினார் ராஜாஜி.

திரு.சிவசண்முகம்பிள்ளை ராஜாஜியிடம் விடைபெற்றுக் கொண்டு போன பிறகு, ராஜாஜி என்னைப் பார்த்து ''பார்த்தீர்களா? சிவசண்முகம்பிள்ளை ''நான் ஒரு ஹரிஜன், ஆகையால் சபாநாயகர் பதவியை எனக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற பலவீனமான பதிலைச் சொல்லாமல், 'எனக்குச் சபை நடத்திய அனுபவமிருக்கிறது.

ஆகையால் நான் அதிகத் தகுதியுடையவன்'' என்று கூறினார். சரியான பதிலைச் சொல்லுகிறாரா என்று பார்ப்ப தற்காகவே மேற்படிக் கேள்வியைக் கேட்டேன்.

ஹரிஜன் வகுப்பைச் சேர்ந்தவர்களானாலும் சரி, வேறு யாராகயிருந்தாலும் சரி, இப்படித்தான் தங்கள் தகுதியில் நம்பிக்கையுடையவர்களாக இருக்க வேண்டும்;

திரு.சிவ சண்முகம்பிள்ளை உண்மையான ஹரிஜனத் தலைவர்; சட்டசபையையும் நன்றாய் நடத்துவார், '' என்று சொன்னார். அவர் சொல்லியபடியே திரு. சிவசண்முகம் சிறந்த சபாநாயகராக விளங்கிப் புகழ் பெற்றார்.

## மஞ்சள் பத்திரிகை

1952-ல் மீண்டும் ராஜாஜி முதலமைச்சரான போது 'இந்து நேசன்' என்ற மஞ்சள் பத்திரிகையும் மற்றும் அது போன்ற பத்திரிகைகளும் கடைக்கு கடை ஏராளமாக விற்பனையாகிக் கொண்டிருந்தன. மேற்படி பத்திரிகைகளில் ஆண் பெண் உறவு சம்பந்தமான விஷயங்கள் அப்பட்டமாக எழுதப்பட்டன.

ஒருநாள் நான் மேற்படி பத்திரிகைகள் அனைத்தையும் சேகரித்து முதலமைச்சர் ராஜாஜி அவர்களின் மேஜையின்மீது வைத்தேன்.

இதெல்லாம் என்னவென்று முதலமைச்சர் ராஜாஜி கேட்டார்.!

''தாங்கள் முதலமைச்சராக இருக்கும் ராச்சியத்தில் வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ் இலக்கியங்கள்'' என்று சொன்னேன். உடனே ராஜாஜி மேலாக இருந்த இந்து நேசன் பத்திரிகையை எடுத்துப் பார்த்தார். அதில் முதல் பக்கத்தில் கொட்டை எழுத்தில் ''அஞ்சலிக்கு அது இருக்கா?''என்று எழுதியிருந்தது.

''அது இருக்கா என்றால் என்ன அர்த்தம் '' என்று ராஜாஜி குழப்பமாகக் கேட்டார். ''தாங்கள் பெரிய மேதை ; உயர்ந்த விஷயங்களையே சிந்திப்பவர்கள். அதனால் தான் இதன் அர்த்தம் உங்களுக்குச் சட்டென்று பிடிபடாது. 'செக்ஸ்' சம்பந்தமான மிக மட்டமான கருத்துடன் இந்தப் பத்திரிகையில் எழுதியிருக் கிறார்கள்.

இதைவிட இன்னும் அசிங்கமான விஷயங்கள் இப்பத்திரிகை முழுவதும் இருக்கின்றன. இப்பத்திரிகை நிறைய விற்பனை ஆகிறது என்பதைத் தெரிந்து கொண்ட சிலர் பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் இம்மாதிரி பத்திரிகைகள் நிறைய வெளியிடுகிறார்கள்'' என்று சொன்னேன்.

'ஓ!' "Yellow Magazine!' (மஞ்சள் பத்திரிகை!) என்று சொல்லிவிட்டு அப்பத்திரிகைகள் அனைத்தையும் வேறு பக்கம் தூக்கி போட்டு விட்டார். நானும் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தேன்.

''போலீஸ் கமிஷனர் பார்த்தசாரதி ஐயங்கார் டெலி போனில் பேசினார்கள். தங்களைப் போனில் பேசச் சொன்னார்கள்'' என்று வீட்டில் உள்ளவர்கள் சொன்னார்கள். போலீஸ் கமிஷனருக்கு போன் செய்தேன்.

''இன்று ராஜாஜியிடம் என்ன ரிப்போர்ட் செய்தாய்?'' என்று கேட்டார். ''மஞ்சள் பத்திரிகைப் பற்றி சொல்லி யிருக்கிறேன்'' என்று கூறினேன். ''சரி மாலையில் சந்திப்போம் ''என்று சொல்லிவிட்டு போனை வைத்துவிட்டார்.

மாலையில் அவரைச் சந்தித்தபோது முதலமைச்சர் ராஜாஜி அவரை நேரில் வரச் சொல்லி சொன்னாராம். அதன்படி போலீஸ் கமிஷனர் முதலமைச்சர் முன் ஆஜரானார். நான் கொண்டு போய் கொடுத்த பத்திரிகைகள் அனைத்தையும் முதலமைச்சர் போலீஸ் கமிஷனரிடம் கொடுத்து இந்தப் பத்திரிகைகள் இனிமேல் கடைகளில் விற்கவும் கூடாது. அச்சகத்தில் அச்சாகவும் கூடாது. அதற்கு என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ அதை உடனே எடுக்கும்படி உத்தரவிட்டாராம்.

போலீஸ் கமிஷனர் சிறிது தயக்கத்துடன் எந்தச்சட்டத்தை வைத்து பத்திரிகையைத் தடுத்து நிறுத்த இயலும் என்று

கேட்டாராம். அதற்கு ராஜாஜி ''சமூகத்தின் நன்மைக்காகச் செய்யப்படுவதுதான் சட்டம்.

சமூகத்தின் நன்மைக்காக நாம் எதைச் செய்தாலும் அது சட்டந்தான். உங்களுக்குள்ள அதிகாரத்தை வைத்து உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இன்னும் ஒருவாரத்தில் இம்மாதிரிப் பத்திரிகைகள் ஒன்று கூட நம் தமிழ் நாட்டில் இருக்கக்கூடாது '' என்று கண்டிப்பான உத்தரவு போட்டாராம்.

உடனே போலீஸ் கமிஷனர் ஒவ்வொரு ஸ்டேஷனுக்கும் உத்தரவு போட்டு கடைகளில் உள்ள மஞ்சள் பத்திரிகைகளை பறிமுதல் செய்யும்படியும் இனிமேல் இம்மாதிரி பத்திரிகைகள் விற்றால் கைது செய்வோம் என்று மிரட்டியும் இரண்டே நாட்களில் ஒரு மஞ்சள் பத்திரிகைகள் கூட இல்லாமல் செய்துவிட்டார்.

பின்பு ஒவ்வொரு அச்சகத்திற்கும் போலீஸார் நேரடியாகச் சென்று மஞ்சள் பத்திரிகைகள் அச்சடித்தால் அச்சகங்களை மூடும்படி செய்வோம் என்று எச்சரிக்கை செய்ததையொட்டி எந்த மஞ்சள் பத்திரிகையும் தமிழ்நாட்டில் அச்சாகாமல் அவ்வளவும் நின்று விட்டன.

ஆனால் இந்துநேசன் பத்திரிகை மட்டும் பெங்களூரில் இருந்து அச்சாகித் திருட்டுத்தனமாக தமிழ்நாட்டுக்கு விற்பனைக்கு வந்தது. அதையும் போலீஸார் தடுத்து நிறுத்தி எந்தவிதமான மஞ்சள் பத்திரிகையையும் தமிழ் நாட்டில் தலைகாட்டாதபடி செய்துவிட்டார்கள்.

அதன் பின்னர் பல முக்கிய பிரமுகர்கள் மஞ்சள் பத்திரிகைகளை ஒழித்தது குறித்து போலீஸ் கமிஷனர் திரு.பார்த்தசாரதி ஐயங்கார் அவர்களைப் பாராட்டிய போது அவர் கூறிய பதில் அவ்வளவு பாராட்டுதலுக்கும் உரியவர் சின்ன அண்ணாமலைதான் என்பதாகும்.

## போலீஸ் அதிகாரி

ராஜாஜி முதலமைச்சராக இருந்த சமயம். படித்த ஹரிஜன் இளைஞர்களுக்கு உத்யோகம் பண்ணி வைப்பதில் பெருமுயற்சி எடுத்துக் கொண்டார்.

வகுப்பு வாரியாகச் சர்க்கார் உத்தியோகங்களைக் கொடுக்க வேண்டுமென்ற விதி ஒன்று ஏற்பட்டிருக்கிறதல்லவா? இந்த விதியானது ஒவ்வொரு சாதியாகத் தாண்டி ஹரிஜனங்களிடம் வரும்போது பயனில்லாமல் போய்விடுவது வழக்கம்.

அதாவது அந்த உத்யோகத்துக்குத் தகுந்த ஹரிஜன் அபேட்சகர் இல்லை என்று காரணம் சொல்லி விட்டு, 'மேல் சாதி'க்காரர்களுக்குக் கொடுத்து விடுவது வழக்கம்.

ஒரு சமயம் போலீஸ் டெபுடி சூபரின்டெண்ட் வேலைக்கு ஹரிஜன் வகுப்பின் உரிமை வந்தது. வழக்கம்போல் 'ஹரிஜனர் ஒருவரும் இல்லை', என்று ஒரு சாதி இந்துவுக்கு' வேலையைக் கொடுக்க சிபாரிசு வந்தது.

ராஜாஜி அதை ஒப்புக் கொள்ளாமல் அப்போது சபாநாயகராக இருந்த திரு. சிவசண்முகம் பிள்ளையையும் இன்னும் சில ஹரிஜன் தலைவர்களையும் கூப்பிட்டனுப்பி விஷயத்தைச் சொல்லி தகுதியான ஆளைக் கூட்டி வரும்படிச் சொன்னார்.

அவ்விதமே ஹரிஜனத் தலைவர்கள் பி.ஏ.பாஸ் செய்த ஒரு ஹரிஜன் இளைஞரைக் கொண்டு வந்தார்கள். அவரைக் காரியாலயத்திற்கு வரச்சொல்லி அங்கேயே பரீட்சை செய்யும்படி சொன்னார்.

திரு.சிவசண்முகம் பிள்ளையையும் தன் அருகிலேயே இருக்கும்படி செய்தார்.

பரீட்சை முடிந்தவுடன் மேற்படி அதிகாரி, "மற்ற தகுதி யெல்லாம் இருக்கிறது; ஆனால் ஆள் ரொம்பவும் மெலிவாக இருக்கிறார். போலீஸ் உத்தியோகத்திற்கு ஆள் ஆஜானு பாகுவாக இருக்கவேண்டும்" என்றார்.

அதற்கு ராஜாஜி "இவர் ஏழை ஹரிஜன் இளைஞர். இதுவரை சரியான சாப்பாடே இவருக்குக் கிடைத்திராது. ஆகையால் இப்படி மெலிந்திருக்கிறார்.

உத்யோகத்தைக் கொடுத்தால் சந்தோஷத்தினாலேயே சீக்கிரம் பருத்து விடுவார், "என்று கூறியதும் இன்ஸ்பெக்டர் ஜெனரல் "சரி" என்று சொல்லி, அந்த ஹரிஜன் இளைஞருக்கு வேலையைக் கொடுத்தார்.

ராஜாஜி சொன்னது போலவேதான் நடந்தது. மேற்படி இளைஞர் உத்யோகம் ஏற்றுக் கொண்ட ஆறுமாதத்திற்குள் கட்டி பிடிக்க முடியாதபடி பருத்துப் போய்விட்டார். மிகத் திறமையான போலீஸ் ஆபீசராக, இப்போதும் பணியாற்றி வருகிறார்.

அவர்தான் சென்னை நகரின் போலீஸ் கமிஷனராக இருந்த திரு.சிங்காரவேலு அவர்கள்.

## தம்பி தயங்காதே

நாகர்கோவிலில் பெரிய இலக்கிய விழா நடைபெற்றது. பசும்பொன் திரு.முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் கடல்மடை திறந்ததெனச் சொல்மாரி பொழிந்தார். அவர் பேசும்போது, ''ஆயிரத்தெட்டு நரம்புகளுள்ள இந்த உடம்பிலே முப்பத்து மூவாயிரம் தடவை மூச்சுவிடும் மனித சரீரத்திலே, நாளொன்றுக்கு நாலாயிரம் தடவை இமைக்கும் கண்களிலே... என்று இந்த மாதிரி புள்ளி விபரங்களை அடுக்கி, சபையோரைத் திணற அடித்துவிட்டார்.

அடுத்தபடியாகப் பேசவேண்டியவன் நான். தேவருக்காக எழுந்த கரகோஷம் இன்னும் அடங்கவில்லை. அவருடைய பேச்சே எல்லோருடைய காதிலும் ரீங்காரம் செய்து கொண்டி ருக்கிறது. இந்த நிலையில் நான் மைக்கின் முன்வந்து நின்றேன். ''தலைவர் அவர்களே, சபையோர்களே '' என்று எதுவும் சொல்ல வில்லை.

''ஆயிரத்து ஐநூத்தி ஐம்பத்து ஐந்து கால்கள் உள்ள இந்தப் பந்தலிலே, மூவாயிரத்து முன்னூற்று முப்பத்தி மூன்று தென்னங் கீத்து வேய்ந்துள்ள'' இக்கொட்டகையில் பதினாரா யிரத்துப் பதினைந்து பேரே உள்ள இந்தக் கூட்டத்தில்...'' என்று ஆரம்பித்தேனோ இல்லையோ, 'கலகல' வென்று சிரிப்பொலியும் கரகோஷமும் என்னை மேற்கொண்டு பேச முடியாமல் செய்து விட்டன. தேவர் கோபப்படுகிறாரோ என்று அச்சத்துடன் அவரைத் திரும்பிப் பார்த்தேன். தேவர் சட்டென்று எழுந்தார். ''தம்பி தயங்காதே, பேசு. வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு. நீ நம்ம ஜில்லா என்பதில் எனக்கு ரொம்ப பெருமையாக இருக்கிறது,'' என்று கூறி, தான் மேலே போர்த்தியிருந்த கதர் சால்வையை எடுத்து எனக்குப் போர்த்தினார்.

## விளம்பர வெற்றி

கிங்காங்-தாராசிங் என்ற மல்யுத்த வீரர்களை மறந்திருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். 1952-53-ல் தமிழகத்தில் மிகப் பரபரப்பாக அவர்களின் மல்யுத்தப்போட்டி நடைபெற்றது.

உலகத்தின் பல பாகங்களிலிருந்து மல்யுத்த வீரர்கள் வந்து ஒருவரோடு ஒருவர் மோதியிருக்கிறார்கள். சென்னை, மதுரை, கோவை, திருச்சி, வேலூர், பெங்களூர் முதலிய இடங்களில் மல்யுத்தம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

அந்தச் சிறப்பில் எனக்கும் சிறப்பான பங்குண்டு, மல்யுத்தப் போட்டிக்கு விளம்பரம் செய்வதில் பல, புதுமை களைப் புகுத்தினேன். மக்களின் ஆர்வத்தை மிகவும் தூண்டியதினால் தினம் தினம் பார்க்கப் பெருங்கூட்டமாக மக்கள் வந்து கொண்டிருந்தார்கள்.

இதையெல்லாம் கவனித்த கிங்காங் என்னுடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். என்னுடைய விளம்பரத் தோரணை களும், மல்யுத்தம் பற்றி அரங்கத்தில் நகைச்சுவையாக ஒலி பெருக்கியில் விமர்சனம் செய்யும் விதமும் அவருக்கு ரொம்பவும் பிடித்தது.

கிங்காங் ஹங்கேரி நாட்டைச் சேர்ந்தவர். சிங்கப்பூரில் வசித்து வந்தார். அதனால் அவரும் நானும் மலாய் மொழியில் சரளமாய் பேசிக் கொள்வோம்.

''தமிழ்நாட்டில் மல்யுத்தப்போட்டி முடிந்ததும் பம்பாயில் நடைபெறப் போகிறது. கண்டிப்பாக அங்கு வர வேண்டும்'' என்று கிங்காங் சொன்னார். அதன்படி இரண்டு மாதம் கழித்து பம்பாய் போய்ச் சேர்ந்தேன்.

பம்பாயில் மலபார் ஹில்ஸ் 'நாஸ் ஓட்டல்' வைத்திருக்கும் ஒரு பெரிய செல்வந்தர் மல்யுத்தப் போட்டி காண்டராக்ட் எடுத்து நடத்திக் கொண்டிருந்தார்.

அவரிடம் கிங்காங் என்னை அறிமுகப்படுத்தி'' இவரை சாமான்யமாக நினைக்க வேண்டாம். நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேனே அவர்தான் இவர். பெரிய விளம்பர மாக்னெட்'' என்று சொன்னார்.

''உங்கள் திறமையைச் சோதிக்க விரும்புகிறேன்'' என்று கூறிய நாஸ் ''பம்பாய் இந்தியாவிலேயே மிகப் பெரிய நகரம். செல்வம் புரளும் நகரம். படேல் ஸ்டேடியத்தில் மக்கள் முக்கால்வாசி நிறைந்தால் கூட நாள் ஒன்றுக்கு 5 லட்சம் வசூல் ஆகும்.

இது வரை ஒரு நாள் கூட வசூல் 2 லட்சத்தை எட்டவில்லை. வரும் ஞாயிறு அன்று கிங்காங் தாராசிங் மல்யுத்தம் நடைபெறப்போகிறது. இதுதான் போட்டியிலே பெரிய போட்டி.

இதில் வசூல் ஆகும் பணத்தின் அளவைப் பொறுத்துத்தான் தொடர்ந்து மல்யுத்தப்போட்டி நடத்துவதா இல்லையா என்று முடிவு செய்ய வேண்டும்.

ஆகவே அன்று பெரிய வசூலுக்கு ஏதாவது ஏற்பாடு செய்ய முடியுமா?'' என்று கேட்டார் நாஸ்.

''எவ்வளவு வசூல் ஆக வேண்டுமென்று எதிர் பார்க்கிறீர்கள்'' என்று கேட்டேன். ''குறைந்தது மூன்று லட்சம் ரூபாயாவது வசூல் ஆக வேண்டும்'' என்றார் முயற்சிக்கிறேன். எனது வழி கொஞ்சம் மாறுபட்டது.

அதற்கு ஆகும் செலவைத் தாங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்றேன். சரி என்றார் நாஸ்.

நானும் கிங்காங்கும் கலந்து பேசினோம். எனது யோசனையை கிங்காங் ஒப்புக் கொண்டார். அதன் படி அந்தச் சனிக்கிழமை காலை 11 மணி அளவில் பம்பாயில் உள்ள பெரிய கடைத்தெரு ஒன்றுக்கு நானும் கிங்காங்கும் சென்றோம்.

பெரிய கடை ஒன்றுக்குள் நுழைந்தோம். கிங்காங் சில கண்ணாடி டம்ளர்கள் மற்றும் வேறுசில சாமான்கள் வாங்கினார்.

அச்சமயம் பார்த்து தாராசிங் அக்கடைக்குள் நுழைந்தார். தாராசிங்கைப் பார்த்ததும் கிங்காங் தாவிக் குதித்து, 'இந்திய நாயே, என்னைத் தொலைத்து விடுவதாகச் சொன்னாயாமே' என்று தாராசிங்கைத் தூக்கி எறிந்தார். சாமான்கள் உருண்டன, பறந்தன.

தாராசிங் எழுந்து நின்று, 'ஹங்கேரிப் பன்றியே!' எங்கள் நாட்டில் வந்து என்னைக் கேவலப்படுத்துகிறாயா?

உன்னைப் பாரத மண்ணிலேயே சமாதி வைக்காமல் விடமாட்டேன்!' என்று கிங்காங் மேல்பாய, கிங்காங் தாராசிங் மேல்பாய, பெரிய மோதல் உண்டாகி விட்டது.

இதைப் பார்க்க லட்சக்கணக்கில் மக்கள் கூடி விட்டார்கள். அதற்குள் மற்ற மல்யுத்த வீரர்களை நாஸ் அவர்கள் காரில் கூட்டிக்கொண்டு வந்தார்.

அவர்கள் கிங்காங் தாராசிங்கைப் பிரிக்க மிகவும் சிரமப்பட்டார்கள்.

ஏற்கனவே தயார் செய்து வைக்கப்பட்டிருந்த ஜீப் ஒன்றில் தாராசிங் ஏறி நின்று கொண்டு கூடியிருந்த மக்களிடம் 'பாரத நாட்டு மக்களே! ஹங்கேரியிலிருந்து வந்திருக்கும் ஒரு மாமிசப் பிண்டம் என்னை மல்யுத்தப் போட்டியில் ஜெயித்து என் ரத்தத்தைக் குடிப்பேன் என்று சபதம் செய்திருக்கிறான்.

நான் அவனை டார் டாராகக் கிழித்து பாரத மண்ணிலே புதைப்பேன். இந்தியாவை கேவலப் படுத்தியவனைச் சும்மாவிட மாட்டேன். நாளை ஞாயிறு அன்று எனக்கும் அவனுக்கும் மல்யுத்தம் நடக்கப்போகிறது.

அதில் அவனை ஒரே அடியில் வீழ்த்தி அவன் பிணத்தின் மீது நின்று வெற்றி வாகை சூடுவேன், 'ஜெய்ஹிந்த் ' என்று ஆவேசமாகப் பேசிவிட்டு ஜீப்பில் சென்று விட்டார்.

வேறு ஒரு ஜீப்பில் வந்த கிங்காங்கைப் பார்த்து மக்கள் கை கொட்டிச் சிரித்தார்கள். உடனே கிங்காங் மக்களைப் பார்த்து காரித்துப்பி, 'மானங்கெட்ட இந்தியர்களே! யாரைப் பார்த்துச் சிரிக்கிறீர்கள்.

உங்கள் தாராசிங் குடலை உருவி நாளைக்கு நான் மாலையாகப் போட்டுக் கொண்டு ஹங்கேரி நடனம் ஆடுவேன்'என்று சொல்லி மற்றும் மக்களுக்குக் கோபம் வருவது போல சில வார்த்தைகளைச் சொல்லித் திட்டி, அடிக்கடி மக்கள் மீது எச்சிலைத் துப்பி கலாட்டா செய்து மக்கள் அவரை அடிக்க ஓடிவர ஜீப்பில் வேகமாகச் சென்று விட்டார்.

அதன் பின்னர் நானும் திரு.நாஸ் அவர்களும் கடைக்காரரிடம் உடைந்த சாமான்களுக்கு பில் போடச் சொன்னோம். பில் ரூ.17000/- வந்தது. பணத்தைக் கட்டி விட்டுச் சென்றோம்.

சனிக்கிழமை அன்று பம்பாய் முழுவதும் இதே பேச்சு. கிங்காங் தாராசிங் எதிர்பாராமல் ஒரு கடையில் சந்தித்து விட்டதாகவும் பெரிய ரகளை ஆகிவிட்டதாகவும் ஞாயிறு மல்யுத்தப் போட்டியில் கண்டிப்பாகக் கொலைதான் விழும் என்றும் இன்னும் கற்பனையாகப் பல கதைகளும் பேசப்பட்டன.

ஞாயிறு அன்று டிக்கட் வாங்க படேல் ஸ்டேடியத்தில் காலை 6 மணியிலிருந்து 'கியூ' நிற்க ஆரம்பித்தது. கூட்டம் அலைஅலையாக மோதிற்று. டிக்கட் கிடைக்காமல் ஏராளமான மக்கள் வெளியிலே நின்றார்கள்.

மல்யுத்தம் விறுவிறுப்பாக இருந்தது. எல்லோரும் தாராசிங் பக்கமே இருந்தார்கள். கிங்காங்கை அடி, கொல்லு, குத்து என்று சப்தம் போட்டார்கள். தாராசிங் கிங்காங் நெற்றியில் பட்பட் என்று பல அடிகொடுத்தார். நெற்றியிலிருந்து ரத்தம் பீறிட்டு வந்தது.

மக்கள் ஆவேசமாகக் கொல்லு, கொல்லு என்று கத்தினார்கள். கடைசியில் கிங்காங் மயக்கமாக விழுந்தார். மக்கள் ஒரே ஆரவாரம் செய்தார்கள். கிங்காங்கை ஸ்டச்சரில் வைத்துத் தூக்கிக் கொண்டு போனார்கள். மல்யுத்தப் போட்டி முடிந்து மக்கள் கலைந்து செல்ல, சுமார் 6 மணி நேரம் பிடித்தது.

அன்றைய வசூல் என்னவென்று நினைக்கிறீர்கள்? சொன்னால் நம்பமாட்டீர்கள் ரூ.ஏழு லட்சத்தி அறுபத்து மூவாயிரம் ஆகும்.

## ராஜாஜி-காமராஜ்

''காங்கிரசிற்கு ராஜாஜி வேண்டாம்'' என்று தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்களில் ஒரு பகுதியினர் கிளர்ச்சி நடத்தினர். இந்தக் கிளர்ச்சியைத் தலைவர் காமராஜ் ஆதரித்தார். மற்றும் பல காங்கிரஸ் தலைவர்களும் அதே எண்ணங்கொண்டு தொண்டர் களைத் தூண்டி வந்தனர்.

''காங்கிரசிற்கு ராஜாஜி வேண்டும்'' என்று தலைவர்களில் ஒரு சாராரும்...தொண்டர்களில் சிறுபான்மையினரும் வாதாடி னார்கள்.

நான் சிறுவயது முதற்கொண்டே ராஜாஜியின் அடிச் சுவட்டைப் பின்பற்றி வந்தவன். அரசியலிலும் சரி-தமிழ்த் தொண்டிலும் சரி ராஜாஜி உடன் இருந்து பல காரியங்கள் செய்து வருபவன். ஆகவே ''ராஜாஜி வேண்டும்'' என்ற கோஷ்டியில் நான் சேர்ந்து பணிபுரிவது இயற்கையே! ஆனால் காமராஜ் என்மீது தனி அபிமானம் கொண்டிருந்தார். 1942 போராட்டத்தில் எனது 'சாகசம்' அவரைக் கவர்ந்திருந்தது. எனது நகைச்சுவைப் பேச்சு அவருக்கு மிகவும் பிடிக்கும்.

ஒரு நாள் நான் காமராஜ் அவர்களைப் பார்க்கப் போயிருந்தபோது என்னிடம் மிகவும் கோபமாக பேசினார் 'ராஜாஜி 1942 போராட்டம் செய்தவர்களை எல்லாம் குண்டர்கள்-பலாத்கார வாதிகள்' என்றெல்லாம் ஏசிப்பேசி நமது போராட்டத்தை எதிர்த்தாரே மறந்து விட்டீர்களா? 1942

போராட்டத்தை நடத்திய நீங்கள் குண்டரா- நான் குண்டாவா- இப்படிப்பட்டவர்களைக் காங்கிரசில் வைத்துக் கொள்ளலாமா? 1942 ஆகஸ்டில் தியாகம் செய்யாதவர்கள் காங்கிரசிற்கே வேண்டாம்" என்று பொரிந்து தள்ளினார்.

நான் அமைதியாகச் சொன்னேன்; "ராஜாஜியை ஆகஸ்ட் "தியாகி இல்லை என்று சொல்லுகிறீர்கள். அதனால் என்ன, அவர் செப்டம்பர் தியாகி, அக்டோபர் தியாகி, நவம்பர் தியாகி, டிசம்பர் தியாகி-பல ஆண்டுகளாகப் பல மாதங்கள் தியாகம் செய்த பெரியவரை-சிறந்த அறிஞரை நான் இழக்க விரும்பவில்லை" என்றேன்.

காங்கிரஸ் தொண்டர்கள் பெரும்பாலோர் வேண்டாம் என்று சொல்லும்போது நீ மட்டும் ஏன் கிறுக்கனாக இருக்கிறாய் என்றார். "எனக்கு காந்தி கிறுக்கு-காந்தியடிகளை நம்பி காங்கிரசிற்கு வந்தவன். மகாத்மாஜி ' ராஜாஜியை வேண்டாம்' என்று சொல்லவில்லையே, ராஜாஜியை ஏற்றுக் கொள்ளும் படிதானே "ஹரிஜன்" பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

நீங்கள் எல்லாம் ஏன் காந்திஜி பேச்சை மீறுகிறீர்கள்? காந்திஜிக்கு விரோதமான இக்காரியம் செய்யும் உங்களுடன் நான் ஒருக்காலும் ஒத்துழைக்க மாட்டேன். காந்தியடிகளின் விருப்பத்தைத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பிரசாரம் செய்வேன்" என்றேன்.

"சரி சரி போ-போய் அந்தக் கிழவனைக் கட்டிக் கொண்டு அழு " என்று சீறினார். நான் அமைதியாக வந்துவிட்டேன்.

அதன் பின்னர் "ராஜாஜி வேண்டும்" "வேண்டாம்" கிளர்ச்சி பெரிதாக நடந்தது. ராஜாஜியை காங்கிரஸ் உறுப்பினராக அகில இந்திய காங்கிரஸ் கமிட்டித் தலைவர் அபுல்கலாம் அசாத்

அவர்கள் சேர்த்துக் கொண்டார். 'ராஜாஜியை வேண்டாம்' என்று சொல்பவர்களை 'கிளிக்' என்று மகாத்மாஜீ ஹரிஜன் பத்திரி கையில் எழுதினார்.

உடனே காந்திஜீயைக் கண்டனம் செய்து காங்கிரஸ் தொண்டர்கள் பலர் பேசினார்கள். சில ஊர்களில் காந்தியடிகளின் படங்கள் கூட எரிக்கப்பட்டன. இப்படியாகத் தமிழ்நாட்டில் காங்கிரஸ் அல்லோல கல்லோலப்பட்டது.

கடைசியில் ஒரு வழியாக ராஜாஜி மத்திய அரசில் மந்திரியானார், அத்துடன் அந்தப் பிரச்னை தீர்ந்தது. ஆனால் திரு.காமராஜ் அவர்கள் அதன் பின்னர் ராஜாஜியை ஆதரித்தவர்களை நம்புவதில்லை. காங்கிரஸ் கமிட்டிகளில் எதிலும் வந்து விடாதபடி பார்த்துக் கொண்டார்.

நான் எப்போதும்போல் காங்கிரஸ் பிரசாரம் செய்து கொண்டிருந்தேன். நாளாக ஆக, தலைவர் காமராஜ் அவர்கள் பழையபடி என்னுடன் சுமூகமாகப் பழக ஆரம்பித்தார்கள்.

ராஜாஜி வங்காள கவர்னராகி-அதன் பின்னர் இந்தியாவின் முதல் இந்திய கவர்னர் ஜெனரலாகி மிகுந்த புகழுடன் பதவி விட்டு சென்னை வந்து தங்கியிருந்தார்.

1952 தேர்தலில் காமராஜ் சுற்றுப்பயணம் செய்யும்போது என்னைக் கூடவே கூட்டிக்கொண்டு போனார். ரொம்பவும் அன்பு காட்டினார். நானும், ''இனி காமராஜ் நம்பிக்கையைப் பெற்றுவிடலாம் என்று மகிழ்ந்திருந்தேன். தேர்தலில் முதலமைச்சர் குமாரசாமி ராஜா தோற்றார். காங்கிரஸ் பெரும் பான்மை இழுபறியாகிவிட்டது. காமராஜ் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்நிலையில் காங்கிரஸ்மந்திரிசபை அமைப்பதானால் ராஜாஜியைத் தவிர வேறு யாராலும் சமாளிக்க முடியாது என்று குமாரசாமி ராஜா கருதினார். மீண்டும் ராஜாஜியை முதலமைச்சராகக் கொண்டு வருவதை காமராஜ் எதிர்த்தார்.

கடைசியில் சர்தார் வல்லபாய்படேலும், நேருஜியும் ராஜாஜிதான் முதலமைச்சராக இருக்க வேண்டும் என்று தீர்மானமாகக் கூறிவிட்டார்கள். காங்கிரஸ் மேலிடம் உத்தர விட்டால் காங்கிரஸ்காரர்கள் கீழ்ப்படிய வேண்டியதுதானே? ஆனால் காமராஜ் எதுவும் கூறாமல் மௌனமாக இருந்து வந்தார்.

ராஜாஜி மந்திரிசபை அமைத்தார். கம்யூனிஸ்டுகள் வன்மையாக எதிர்த்தார்கள். ''ராஜாஜி மந்திரிசபை எதிர்ப்புக் கூட்டம்'' என்று மூலைக்கு மூலை போட்டார்கள். அவர்களுடன் காங்கிரஸ் எதிரிகள் அனைவரும் சேர்ந்து கொண்டார்கள்.

இந்நிலையில் காங்கிரஸ் கமிட்டிகள் மௌனமாகவே இருந்தன. காமராசரும் நமக்கென்ன என்பது போல வாளாவிருந்தார். இதை என்னால் கொஞ்சங்கூட பொறுக்க முடியவில்லை. நேராக காமராஜரிடம் போனேன். ''இப்படி இருந்தால் எப்படி?'' என்றேன்.

''என்ன செய்யச் சொல்கிறீர்கள்?''என்றார். ''மந்திரிசபை காங்கிரஸ் மந்திரி சபைதானே. அதை ஆதரித்து நாம் கூட்டம் போட்டு எதிர்க்கட்சிகளின் போக்கை அம்பலப்படுத்த வேண்டாமா?'' என்றேன்.

''ராஜாஜியை எவன் கொண்டுவந்தானோ அவன் செய்யட்டும். நான் ஒன்றும் செய்யப்போவதில்லை'' என்றார்.

''நீங்கள் காங்கிரஸ் கட்சித் தலைவர். நடப்பது காங்கிரஸ் மந்திரிசபை. இதை ஆதரிப்பது ஒரு காங்கிரஸ்காரன் கடமை அல்லவா?'' என்றேன்.

''ஆமா கடமைதான். நீ வேண்டுமானால் உன் கடமையைச் செய்'' என்று கோபமாகப் பேசினார்.

''கடமையைக் கண்டிப்பாகச் செய்வேன்'' என்று கூறிவிட்டு, திரு.ம.பொ.சி.யிடம் போனேன். பின்னர் சி.சுப்ரமண்யத்தைச் சந்தித்தேன். கல்கி கிருஷ்ணமூர்த்தி-முதலியவர்களையும் சந்தித்துப் பேசினேன்.

அதன் பலன் சென்னை கடற்கரையில் திரு.ம.பொ.சி. தலைமையில் ராஜாஜி மந்திரிசபை ஆதரிப்புக் கூட்டம் பிரம்மாண்டமான முறையில் நடந்தது. ராஜாஜியும் வந்து கலந்து கொண்டார்.

பின்னர் பட்டி தொட்டிகளிலெல்லாம் மந்திரிசபைக்கு ஆதரவுக்கூட்டம் நடந்தது. கம்யூனிஸ்டுகள் ஒருவாறு அடங்கினார்கள். இவைகள் எதிலும் காமராஜ் அவர்கள் கலந்து கொள்ளவில்லை. என்மீது மீண்டும் அவர் கோபங்கொண்டார்.

ராஜாஜிக்கு இக்கட்டான நிலைமை உண்டானது. புதிய கல்வித் திட்டத்தைத் திரித்துக் கூறி ராஜாஜியை திராவிடக் கழகம்-முன்னேற்றக் கழகம் எல்லாம் எதிர்த்தார்கள். அப்போதும் தலைவர் காமராஜ் ராஜாஜிக்கு ஆதரவாக இருக்கவில்லை. அதனால் ராஜாஜி தன் பதவியை ராஜிநாமா செய்தார். பின்னர் காமராஜ் முதன் மந்திரியானார்.

ராஜாஜி பத்து ஆண்டுகளுக்குப் பிறகு திரு அண்ணாதுரை அவர்களுடன் கூட்டுச் சேர்ந்து 1967 தேர்தலில் காமராஜ் அவர்களையும் தோற்கடித்து, காங்கிரஸ் கட்சியையும் தோற்கடித்தார்.

ராஜாஜி - காமராஜ் சண்டையினால்தான், காங்கிரஸ் நாளாவட்டத்தில் பலவீனமடைந்தது. தேசிய சக்திகள் குன்ற, தேச விரோத சக்திகள் பலமடைந்தன.

காமராஜ் அவர்களை முறியடிக்க ராஜாஜி அவர்கள் செய்த முயற்சியில், தி.மு.க. ஆட்சியில் அமர்ந்து விட்டது.

பின்னர் ராஜாஜி -காமராஜ் இருவரும் ஒன்று சேர்ந்தும்கூட தி.மு.க. வைத் தோற்கடிக்க முடியவில்லை.

தேசீய சக்திகள் மீண்டும் தமிழகத்தில் தலைதூக்க முடியாதபடி ராஜாஜி-காமராஜ் பகை செய்து விட்டது.

அரசியலில் ராஜாஜி காமராஜ் அபிப்பிராய பேதம் கொண்டிருந்தார்களே ஒழிய, தனிப்பட்ட முறையில் இருவரும் ஒருவரை ஒருவர் மிகவும் மதித்தார்கள்.

ராஜாஜி தன் கடைசி காலத்தில் தமிழக அரசை காமராஜரிடம் ஒப்படைக்க வேண்டுமென்று மிகவும் விரும்பினார்.

காமராஜரைப் போன்ற நாணயமான வாழ்க்கை உடையவர்கள் அரசியலில் கிடைப்பது அரிது என்று ராஜாஜி கருதினார். இதைப் பகிரங்கமாக எழுதினார். பேசினார்.

ஆனால் ராஜாஜியின் எண்ணம் நிறைவேறவில்லை. அவர் அமரரானார். சொன்னால் நம்பமாட்டீர்கள். யாருக்கும் கண்ணீர் விடாத காமராசர், ராஜாஜியின் சடலத்தைப் பார்த்ததும் 'பொல பொல' வென்று கண்ணீர் சிந்தினார்.

# இரண்டு அல்வா
# இரண்டு வடை

1967 தேர்தலில் காங்கிரஸ் தோற்றதும், கட்சித் தொண்டர்கள் சோர்வடையாமல் இருக்கவும், அவர்களுக்கு உற்சாக மூட்டவும் தமிழ்நாடு முழுவதும் நானும் கவிஞர் கண்ணதாசன் அவர்களும் சுற்றுப் பயணம் செய்தோம்.

கவிஞர் கண்ணதாசன் பல அபூர்வ ஆற்றல்கள் நிறைந்தவர். சினிமாவிற்குப் பாடல்கள் எழுதி பிரசித்தி பெற்றுவிட்டதால், அவரது கவிதை நயம் பலரால் இன்னும் உணரப்படவில்லை. ஒரு சிறந்த கவிஞர், சிறந்த பேச்சாளராக இருப்பது அபூர்வம்.

கண்ணதாசன் கூட்டத்தில் பேச ஆரம்பித்தால் சகல நயங்களும் துள்ளி வரும்! சங்கீதத்தின் பின்னணியில் ஒரு சுருதி இழையோடுவதுபோல, அவர் பேச்சின் மத்தியில் ஒரு சப்தம் வந்து கொண்டேயிருக்கும்.

தலைவர் காமராஜ் ரஷ்யா சென்று வந்த சமயம். எல்லா ஊர்களிலும் பெரிய வரவேற்பு நடந்தது. நானும் கவிஞர் கண்ணதாசன் அவர்களும் சிதம்பரத்தில் நடைபெற்ற வர வேற்பைப் பார்க்கச் சென்றோம்.

நாங்கள் சென்ற சமயம் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது தமிழ் நாடு காங்கிரஸ்

கமிட்டித் தலைவராக இருந்த திரு.ரா.கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் வெகு சுவாரஸ்யமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

எங்கள் இருவரைக் கண்டதும் கூட்டம் ஆரவாரத்துடன் கரகோஷம் செய்தது. ''என்ன'' வென்று தலைவர் காமராஜ் திரும்பிப் பார்த்தார். எங்கள் இருவரைப் பார்த்ததும் அவரும் ஒரு புன்னகை புரிந்து, திரு.கிருஷ்ணசாமி நாயுடு அவர்களைப் பார்த்து,

''சரி சரி நிறுத்துங்க, அவங்க இரண்டு பேரும் வந்துட்டாங்க, இனி ஒங்க பேச்சு எடுபடாது'' என்று சத்தம் போட்டுச் சொன்னார்.

கூட்டம் 'கொல்' என்று சிரித்தது.

தலைவரும் கலகலவென்று சிரித்தார். 'சடக்'கென்று நாயுடு அவர்கள் உட்கார்ந்தார், படக் கென்று என் கையைப்பிடித்து தலைவர் காமராஜ் எழுப்பி விட்டார்.

நான் பேசும் கூட்டத்தில் காமராசர் இருந்தால், என் பேச்சைக் கடைசி வரையில் இருந்து கேட்டுரசிப்பார், சிரிப்பார், கைதட்டுவார்.

சேலத்தில் ஒரு சமயம் ஒரு மாபெரும் கூட்டம் தலைவர் காமராசருக்காகக் கூடியிருந்தது, அக்கூட்டத்தில் பேசுவதற்காக நானும் மேடையிலிருந்தேன். காமராசர் மேடைக்கு வந்ததும், மழைக்காற்று வீசிற்று.

அதை உணர்ந்த தலைவர் நேராக 'மைக்' அருகில் வந்து நின்று, ''மழை வரும் போலிருக்கிறது. அதனால் வேறு யாரும் பேச வேண்டாம்.

நம்ம சின்ன அண்ணாமலை பேசினால் போதும். காங்கிரஸ் கொள்கைகளை-சாதனைகளை அவர் நீங்கள் ரசிக்கும்படி பேசும் சக்தி உள்ளவர். நானும் இருந்து கேட்கிறேன். அவர் பேசிய பிறகு மழை இல்லை என்றால் நான் பேசுவேன் '' என்று சொல்லி அமர்ந்தார். அந்த மாதிரி பெருமையை எனக்கு அவர் அளித்தது இன்றும் என் மனதில் பசுமையாக இருக்கிறது.

அன்றும் சிதம்பரத்தில் அப்படிச் செய்து மக்களிடம் அவர் என்னிடம் கொண்டிருக்கும் அன்பை வெளிப்படுத்தினார். பின்னர் கண்ணதாசன் பேசிய பேச்சு சபையை உலுக்கிவிட்டது. அப்போது திரு.கிருஷ்ணசாமி நாயுடு தன்னை மறந்து எழுந்து கவிஞரைக் கட்டித் தழுவிப் பாராட்டினார்.

திரு.ரா.கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் பரம ரசிகர். அவரும் ஒரு கவிஞர், குழந்தை உள்ளம் கொண்டவர்.

பண்டிதநேருஜி அமரரானதும் நான் நேராக சத்யமூர்த்தி பவனம் சென்றேன். அங்கு திரு.ரா.கிருஷ்ணசாமி நாயுடு இருந்தார். என்னைப் பார்த்ததும் 'கோ' வென்று கதறி அழுது,

''ஐயோ, நம் தலைவர் போய்விட்டாரே, போய்விட்டாரே'' என்று தலையிலும் மார்பிலும் அடித்துக் கொண்டார். அவ்வளவு உண்மையான 'பக்தி' கொண்டவர் நாயுடு அவர்கள்.

தேர்தல் தோல்வியைச் சரிப்படுத்த நானும் கண்ணதாசனும் சுற்றுப் பயணம் வந்தபோது ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்றோம். தேர்தலில் சாத்தூர் தொகுதியில் நின்று திரு.ரா.கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் தோல்வி அடைந்திருந்தார்.

ஆகவே அவரைப் பார்ப்பதற்காக மாலை 4 மணி அளவில் அவர் இல்லம் சென்றோம். எப்பொழுதும் தாம்பூலம் தரித்துக் கொண்டிருக்கும் பழக்கமுடையவர் திருநாயுடு அவர்கள்.

நாங்கள் போன நேரத்திலும் வெற்றிலை போட்டுக் கொண்டிருந்தார். எங்களைக் கண்டதும் ஏக உப்சாரம் செய்து வரவேற்றார்.

நாங்கள் தேர்தல் தோல்வி பற்றி பேசி ஒருவருக்கொருவர் தைரியமூட்டிக் கொண்டிருந்தோம். நாங்கள் புறப்படலாமென்று நினைத்தபோது, திரு.நாயுடு அவர்கள், அங்கிருந்த ஒரு பையனைப் பார்த்து, ''டேய், போய் இரண்டு அல்வா, இரண்டு வடை, இரண்டு காபி சீக்கிரம் வாங்கிக் கொண்டு வா'' என்று உத்தரவிட்டார். பையன் போன வேகத்தில் சொன்னவைகளை வாங்கி வந்து திரு.நாயுடு அவர்கள் முன்னிலையில் வைத்தான்.

அச்சமயம் நாயுடு அவர்கள் தேர்தலில் துரோகம் செய்தவர்களைப் பற்றி ரொம்ப ஆக்ரோஷமாகப் பேசிக் கொண்டிருந்தவர், அல்வா பொட்டலத்தை அவிழ்த்து அல்வாத் துண்டைக் கையிலெடுத்து, ''நாம் எவ்வளவு உண்மையாக இருந்தாலும் முஸ்லிம்கள் நம்மை நம்பவில்லை'' என்று கோபமாகச் சொல்லி தன்னை மறந்து மேற்படி அல்வாத் துண்டை வாயில் போட்டுக் கொண்டார். அதன் பிறகு ஹரிஜனங் களைப்பற்றி கோபமாகப் பேசி இன்னொரு அல்வாத் துண்டையும் தின்றுவிட்டார்.

உடனே நான் பொய்க் கோபமாக ''தலைவர் சார், எங்களுக்கு வாங்கி வந்த இரண்டு அல்வாத் துண்டையும் நீங்களே தின்றுவிட்டீர்கள். இந்த ஊரில் எங்களுக்கு ஓட்டு இருந்தால் நாங்கள் கூட உங்களுக்கு ஓட்டுப்போட மாட்டோம். ஆகவே நீங்கள் தோற்றது ரொம்ப நியாயம்'' என்றேன்.

அப்போதுதான் திரு.நாயுடு அவர்கள் தன் நிலைக்கு வந்து, ''அடடா'' என்று வருந்தினார்.

''பின்னர் விடாப்பிடியாக அன்று இரவு சாப்பிட்டுத்தான் போகவேண்டும் என்று வற்புறுத்தி தடபுடலானவிருந்து செய்து கௌரவித்தார். ''

## சிவாஜி ரசிகர் மன்ற உதயம்

1950ஆம் ஆண்டில் காங்கிரஸ் கட்சிக்குத் தமிழ் நாட்டில் பலவீனம் ஏற்பட்டது. அப்போது திரு.குமாரசாமி ராஜா அவர்கள் முதலமைச்சராக இருந்தார்.

திராவிட இயக்கத்தினர் செய்த ஆர்ப்பாட்டம், எதிர்ப்புப் பிரசாரம், இவைகளைத் தாக்குப் பிடிக்க முடியாமல் காங்கிரஸ் தலைவர்கள் திணறிக் கொண்டிருந்தார்கள்.

நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கிய காங்கிரஸ் தொண்டர்களும் தலைவர்களும் திராவிடஇயக்கத்தினரால் பெரிதும் கேவலப்படுத்தப்பட்டார்கள். ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு பொதுக்கூட்டம் போட்டு திராவிட இயக்கத்தினர் நாக்கில் நரம்பில்லாமல் திட்டினார்கள்.

கதர் கட்டியவனைக் கண்டால் ஏளனம் செய்தார்கள்.

பதிலுக்கு, காங்கிரஸ் தொண்டர்கள் கூட்டம் போட்டால் மக்கள் சேருவதில்லை. ஆனால் திராவிட இயக்கக் கூட்டங்களுக்கோ பெருவாரியாக மக்கள் கூடினார்கள். காங்கிரஸ் மந்திரிகளாக இருந்தவர்கள் காலத்திற்கேற்றபடி பேசத் தெரியாமல் செல்வாக்கிழந்து கொண்டு வந்தார்கள்.

திராவிட இயக்கத்தர்களோ, பேச்சில் வல்லவர்களாகவும், புதிய பாணியைக் கையாண்டு மக்களைத் தம் பக்கம் இழுக்கக்

கூடியவர்களாகவும் திகழ்ந்தார்கள். திரு.அண்ணாதுரை அவர்களின் பேச்சுப்பாணி மாணவர்களையும், இளைஞர் களையும் மிகவும் கவர்ந்தது. அதனால் இளைஞர் சமுதாயம் அவர்கள் பக்கம் சாய்ந்தது.

இவைகளைச் சமாளிக்க முடியாமல் இப்படி காங்கிரஸ் கட்சி திணறிக் கொண்டிருந்த போதுதான் நானும் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் முன்வந்து திராவிட இயக்கத் தினருக்கு அவர்கள் பாணியிலேயே பதலடி கொடுத்து, காங்கிரஸ் தொண்டர்களுக்குத் தைரியமூட்டி தமிழகத்தில் காங்கிரஸ் கட்சிக்குப் புதிய வலிவும் பொலிவும் கொடுத்தோம். எத்தனையோ ஊர்களில் எங்களுக்கு கல்லடி, சொல்லடி, செருப்படி கிடைத்தது. எலக்ட்ரிக் பல்ப், செங்கல் முதலியவை களை திராவிட இயக்கத்தினர் எறிந்தனர். கூட்டத்தில் விளக்கு களை அணைத்துக் கலகம் விளைவித்தனர்.

''வந்தேமாதரம்'' என்று நாங்கள் சொன்னால், ''அரகர மகாதேவா'' என்று பதிலுக்கு திராவிட இயக்கத்தினர் ஊளை யிட்டனர்.

இவ்வளவையும் திரு.ம.பொ.சி. அவர்களும் நானும் மற்றும் எங்கள் தோழர்களும் ஓரளவு சமாளித்து வெற்றி கண்டோம்.

ஆனால் காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் என்னையும் திரு.ம.பொ.சி.அவர்களையும் கருவேப்பிலையாக கருதினார்கள். அதைப் பற்றி நாங்கள் கவலைப்படாமல் கட்சி வேலையை பரபரப்பாகவே செய்து வந்தோம்.

எங்களைப் போல மக்களிடம் கூட்டங்களில் கவர்ச்சியாக, நகைச்சுவையாக, உணர்ச்சியாகப் பேசக் கூடியவர்களுக்கு காங்கிரஸ் கட்சியில் எந்த வாய்ப்பும் கொடுக்கப்படவில்லை. நாங்கள் வெறும் பேச்சாளர்களாகவே கட்சித் தலைவர்களால் மதிக்கப்பட்டோம்.

பேசத் தெரியாதவர்களும், மக்களிடம் செல்வாக் கில்லாதவர்களும், தலைவர்களையே சுற்றி வந்தவர்களும் இச்சகம் பேசித் திரிபவர்களுக்கு மட்டுமே கட்சியில் பொறுப்பான பதவிகளும், ஆட்சியில் பொறுப்பும் கொடுக்கப்பட்டன.

எதிர் கட்சிகளுக்கு மண்டையில் அடித்தாற்போல் பதில் சொல்லத் தெரியாத மந்திரிகளும், செய்த சேவையை மக்களுக்குத் தோரணம் கட்டி விளம்பரப் படுத்திப் பேசத் தெரியாத கட்சித் தலைவர்களும், நாளுக்கு நாள் காங்கிரஸ் கட்சியை பலவீனமாக்கிக் கொண்டே வந்தார்கள்.

1967 தேர்தலில் ராஜாஜி அவர்கள் காமராஜ் அவர்களைப் பழிதீர்த்துக் கொள்ள திரு.அண்ணாதுரையை முன்னால் நிறுத்தி ஒரு விநோதமான கூட்டணியை உண்டாக்கி காங்கிரசை படுதோல்வி அடையச் செய்து தலைவர் காமராஜ் அவர்களையும் விருதுநகரில் தோற்கும்படி செய்தார்.

காமராஜ் தோற்று, காங்கிரசும் தோற்று, காங்கிரசின் பரமவைரியான தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. இந்தத் தடவை சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் காங்கிரஸ் தலைவர்கள் தனக்கு இழைத்த அநீதியை மனதில் கொண்டு தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நின்று வெற்றி பெற்றார்.

இதில் எனக்கு வருத்தமெல்லாம், திரு.ம.பொ.சி. அவர்கள் காங்கிரசை எதிர்த்து நின்றதைப் பற்றி அல்ல, ஆனால் காலமெல்லாம் ஆக்ரோஷமாக எதிர்த்த தி.மு.கவுடன் சேர்ந்து, அதுவும் 'உதய சூரியன்' சின்னத்தில் நின்று ஓட்டுக் கேட்டதுதான்!

திரு.ம.பொ.சியின் அருமை பெருமையை திரு.காமராஜ் உணர்ந்து அவருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்கவில்லை.

இத்தனைக்கும் திரு.காமராஜ் அவர்களின் பெருமையை திரு.ம.பொ.சி. நாடு நகரமெல்லாம் பேசிப் பரப்பினார்.

ஆனால் திரு.அண்ணாதுரை, திரு.மு.கருணாநிதி இவர் களை எவ்வளவோ தாக்கி திரு.ம.பொ.சி. பேசியிருக்கிறார். மா.பொ.சி.யின் உண்மையான நாட்டுப்பற்றையும், தமிழுணர்ச்சி யையும் தமிழ் இனப் பற்றையும் மதித்து அண்ணா அவர்களும் கலைஞர் மு.க.அவர்களும், ம.பொ.சிக்கு அவர்களால் முடிந்த பெருமையையும் கௌரவத்தையும் செய்திருக்கிறார்கள். அது குறித்து நான் மிக்க மகிழ்ச்சி அடைந்திருக்கிறேன்.

1967 தேர்தலில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்ததும் மீண்டும் காங்கிரஸ் தொண்டர்களிடையே சோர்வு ஏற்பட்டது. தி.மு.க தோழர்கள் வெற்றி விழாக் கொண்டாட்டம் என்ற பேரில் ஊரெல்லாம் முழக்கினார்கள். இப்போது அவர்களுடன் ம.பொ.சி., ராஜாஜி வேறு இருந்தார்கள். கேட்க வேண்டுமா அமர்க்களத்தை !

இச்சமயம் இளைஞர்கள் யாரும் காங்கிரசைச் சீண்ட வில்லை. ஒரு ஆண்டு, இரண்டாண்டு பொறுத்துப் பார்த்தேன், காங்கிரசில் யாரும் புதிய வேகம் கொடுக்கக் கூடியவர்கள் தென்படவில்லை.

கட்சித் தொண்டர்கள் நாளுக்கு நாள் உற்சாகமிழந்து வந்தனர்.

ஒருநாள் நான் மதுரை சென்றிருந்தேன். எனது நண்பர் திரு.ஆனந்தன் அவர்கள் (மதுரைநகர முன்னாள் துணை மேயராக இருந்தவர்) என்னைப் பார்க்க வந்தார். அவரிடம் தமிழ்நாட்டில் காங்கிரசின் நிலை பற்றியும், காங்கிரசிற்கு இளைஞர்களைக் கொண்டு வருவது எப்படி என்பதைப்பற்றியும் ஆலோசனை செய்தேன்.

அவர், ''தமிழ்நாடு முழுவதும் இளைஞர்கள் பலர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ரசிகர் மன்றம் வைத்திருக்கிறார்கள். இவர்கள் தனித்தனியாக இருக்கிறார்கள். இவர்களை ஒன்று சேர்த்தால் காங்கிரசிற்கு புதிய பலம் கொண்டு வரலாம்'' என்று கூறினார்.

''மதுரையில் அப்படி எத்தனை மன்றங்கள் இருக் கின்றன?'' என்று கேட்டேன். ''இப்போது சுமார் 60 மன்றங்கள் இருக்கின்றன'' என்றார் அவர். ''முதலில் அவர்கள் அனை வரையும் ஒரு இடத்தில் கூட்டுங்கள். பேசிப் பார்ப்போம்'' என்று சொன்னேன். ''சரி'' என்று திரு ஆனந்தன் மறுநாளே மதுரையிலுள்ள சிவாஜி ரசிகர் மன்றங்களை ஒரு இடத்தில் கூட்டினார். சுமார் 500 இளைஞர்கள் கூடினார்கள்.

அவர்களிடம் பேசியதில், ''அதில் இந்திய ரீதியில் ஒரு சிவாஜி மன்றம் துவக்கி, இந்தியா முழுவதிலுள்ள சிவாஜி ரசிகர்களை ஒன்று திரட்டி காங்கிரஸ் கட்சிக்குக் கொண்டு வரலாம்'' என்ற எண்ணம் உதயமாயிற்று. காங்கிரஸ் கட்சிக்கு நேரடியாக வரவிரும்பாத இளைஞர்கள் பலர், சிவாஜி ரசிகராக முதலில் சேர்ந்து அதிலிருந்து காங்கிரசிற்கு நிச்சயம் வருவார்கள் என்று நான் உறுதியாக நம்பினேன்.

அதனால் காங்கிரஸ் கட்சிக்கு நிறைய இளைஞர்களைக் கொண்டு வரவேண்டுமென்ற ஆசையால்தான் 1969 ஆகஸ்டு மாதம் ''அகில இந்திய சிவாஜி கணேசன் ரசிகர் மன்றம்'' என்ற அமைப்பை உருவாக்கினேன்.

1969 அக்டோபர் முதல் தேதி அன்று நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 43வது பிறந்த தினவிழாவும், அகில இந்திய சிவாஜி கணேசன் ரசிகர் மன்ற முதல் பேரவையும் சென்னை எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்றது. அதற்கு நடைபெற்ற ஊர்வலம் சென்னையில் புதிய சரித்திரத்தை உண்டாக்கியது.இந்தியா முழுவதிலுமுள்ள இளைஞர்கள் அதற்கு வந்த வேகம்போல் வேறு

எதற்கும் இதுவரையில் வரவில்லை.

தி.மு.க.அரசு ஸ்தம்பிக்கும்படியாக, பஸ்களும், லாரிகளும் சென்னையில் குவிந்தன. தென்னாட்டு நட்சத்திரங்களும், வடநாட்டு நட்சத்திரங்களும் வந்து அலைமோதினார்கள். இவ்வளவும் எதற்காக?காங்கிரசைப் பலப்படுத்த நான் மறைமுகமாகச் செய்த ஏற்பாடு!

இந்தக் கூட்டத்திற்கு வர தலைவர் காமராஜ் அவர்களை நான் ரொம்பவும் கெஞ்ச வேண்டியதாயிற்று! காரணம் இளைஞர் களின் மனப்போக்கு எப்படி இருக்கிறது என்பதைக் கண்டு பிடிக்கவோ, அல்லது அதை ஜீரணிக்கவோ காங்கிரஸ் தலைவர் களுக்கு நாட்டம் இல்லாமல் போய் விட்டது! அதனால் காங்கிரசிலே பலபேர், நான் சிவாஜி ரசிகர் மன்றம் ஆரம்பித்து அமர்க்களப்படுத்தியதைத் தாங்கிக் கொள்ள முடியாமல் கட்சிக்குள் எனக்கு செல்வாக்கு இல்லாமல் செய்து கொண்டு வந்தனர்.

நான் அதை எல்லாம் லட்சியம் செய்யாமல் நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து சுமார் 15000 சிவாஜிகணேசன் ரசிகர் மன்றங்கள் அமைத்து, அதை ஒரே தலைமையின் கீழ் கொண்டு வந்து, இன்று ஒரு பெரிய ஆலவிருட்சமாக அது வளர்ந்தோங்கி நிற்கிறது. காங்கிரசின் கவசமாக அது என்றும் நின்று பணி புரியும்.

ஏழு ஆண்டுகள் அதன் தலைவராக இருந்து, தொடர்ந்து நாமே தலைவராக இருந்து வருவது சரியாகாது என்று கருதி, அகில இந்திய சிவாஜி கணேசன் ரசிகர் மன்ற தலைவர் பதவியிலிருந்து விடுவித்துக் கொண்டேன்.

இரண்டுமுறை தமிழகக் காங்கிரஸில் தொய்வு விழுந்தநேரத்தில் நானும் தோள்கொடுக்க வாய்ப்புக் கிடைத்தது குறித்து நான் பெருமை அடைகிறேன்.

## — வடக்கு எல்லைப் போராட்டம் —

1955-ம் ஆண்டு தலைவர் காமராஜ் முதன் மந்திரியாக இருந்த நேரம். தமிழரசுக் கழகத்தின் வடக்கெல்லைப் போராட்டம் மீண்டும் துவக்கப்பட்டது. என் தலைமையில் சுமார் 50 தோழர்கள் சத்யாக்கிரகம் செய்யப் புறப்பட்டோம். அப்போது சட்டசபை இப்போதைய 'கலைவாணர் அரங்கு' இருக்கும் இடத்தில் நடந்துகொண்டிருந்தது. சட்டசபை வழிகளை எல்லாம் சுவர் வைத்ததுபோல போலீசார் அடைத்துக் கொண்டிருந்தார்கள்.

எனக்கோ சட்டசபைக்குள் சத்தியாக்கிரகிகளுடன் போய் விட வேண்டும் என்ற எண்ணம், போலீஸ் வியூகத்தை உடைத்துக் கொண்டு எப்படிப் போவது என்ற சிந்தனையோடு சத்தியாக் கிரகிகளுடன் நடந்து கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு வழி புலப்பட்டது.

எங்கள் போராட்டக்குழுவில் திருமதி. சரோஜினி நாராயணசாமியும் திரு.கு.சா.கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய மனைவியாரும் வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் இரு வரையும் முன்னால் வரச்செய்து அவர்கள் தலைமை தாங்கிச் செல்வது போல ஏற்பாடு செய்தேன்.

இரு பெண்மணிகளும் முன்னால் செல்ல, நாங்கள் பின்னால் வந்து கொண்டிருந்தோம். போலீஸ் காவல் புரியும் கேட் அருகில் வந்ததும் திருமதி.சரோஜினியிடம் நிற்காமல் தயங் காமல் நடந்து செல்லுங்கள் என்று மெதுவாகக் கட்டளை யிட்டேன்.

திருமதி.சரோஜினி நல்ல துணிச்சல் உள்ளவர். ஆகவே கொஞ்சமும் தயங்காமல் போலீசாரைப் பிளந்து கொண்டு செல்லமுனைந்தார். பெண்மணிகள் இருவர், தங்களை இடிப்பது போல் வருவதைப் பார்த்த போலீசார் கொஞ்சம் கூச்சப்பட்டு இலேசாக ஒதுங்கிக் கொடுத்தார்கள்.

அவ்வளவுதான் சத்தியாகிரகிகள் அத்தனைபேரும் கோஷம் செய்து கொண்டு ஒரே ஓட்டமாக சட்டசபைக்குள் கண்மூடிக் கண் திறப்பதற்குள் நுழைந்துவிட்டோம்.

சட்டசபை நடந்து கொண்டிருக்கிறது. திரு.கோபால மேனன் சபாநாயகர். திரு.காமராஜ் முதல் மந்திரி, திரு.சி.சுப்ரமணியம் நிதி மந்திரி மற்றும் மந்திரிகள். சட்டசபை அங்கத்தினர்கள் எல்லோரும் அசந்து போனார்கள். நாங்களோ சட்டசபைக்குள்ளே நின்றுகொண்டு ''வேங்கடத்தை விட மாட்டோம்' என்றெல்லாம் முழக்கம் செய்தோம்.

சபாநாயகர் உத்தரவு இல்லாமல் சபைக்குள் போலீசார் வர முடியாது. அதனால் போலீசார் வெளியே நின்று கொண்டு துடித்துக் கொண்டிருந்தார்கள். சபாநாயகர் கோபாலமேனன் என்னைப் பார்த்து''சபைக்குள் வரக் கூடாது. சட்ட விரோதம், வெளியே போங்கள்'' என்றார்.

உடனே திருமதி சரோஜினி, ''நீங்கள் ஒரு மலையாளி...இது தமிழர் பிரச்சினை. மந்திரி சபையின் கவனத்தைக் கவரவே நாங்கள் உள்ளே வந்திருக்கிறோம்'' என்றார்.

உடனே முதலமைச்சர் காமராசர் எங்களிடம், ''சரி, எல்லோரையும் கூட்டிக் கொண்டு வெளியே வந்து சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்'' என்றார், வெளியே வந்தோம். எங்களுடைய கோரிக்கையைச் சொன்னோம். ''சரி. என்னால் செய்யக் கூடியதைக் கட்டாயம் செய்கிறேன்'' என்று சொன்னார்.

அவர் அந்தப் பக்கம் போனதும் போலீசார் எங்களை வளைத்துப் பிடித்து கைது செய்து வேனில் ஏற்றில் வேப்பேரி போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய் வைத்திருந்தார்கள்.

கவிஞர் கு.சா. கிருஷ்ணமூர்த்தியின் மனைவியாருக்கு இதெல்லாம் புதிய அனுபவம். கொஞ்சம் கலவரப்பட்டதுபோல இருந்தார்கள். நான் கு.சா.கி. அவர்களிடம் ''எதுக்கய்யா மனைவியைக் கூட்டிக் கொண்டு வந்தீங்க? அவங்க ஜெயிலுக்குப் போகப் பயப்படுவாங்க போலிருக்கே'' என்றேன்.

அவர் உடனே ''இப்ப நான் கூட்டிக் கொண்டு வந்ததாலே தேச சம்பந்தமாக ஜெயிலுக்குப் போகப் போறா, வீட்டிலே விட்டு வந்திருந்தா கிரிமினல் சம்பந்தமா அடிதடி சண்டைக் கேசுக்காக ஜெயிலுக்கு வந்து நிற்பாளே'' என்றார்.

''என்ன விஷயம்'' என்றேன். அவர் சொன்ன விஷயம் ரொம்ப தமாஷாக இருந்தது. அதாவது அவருக்கு இரு மனைவிகள். இருவரும் ஒரே வீட்டில் குடித்தனம். ஒரு மனைவி மேல் மாடியில் வசிக்கிறார். இன்னொரு மனைவி கீழ் வீட்டில் வசிக்கிறார். தாங்கள் எங்கே வசிப்பது? என்று நடுவில் ஒரு கேள்வி போட்டேன்.

''நான் மாடிப்படியில்தான் வசிக்கிறேன், அதனாலே மேலே இருப்பவள் கீழ் வராமலும், கீழே இருப்பவள் மேலே போகாமலும் தடுத்துக் கொண்டிருக்கிற சக்தி நான்தான். விஷயம் இப்படி இருக்கிறபோது நான் மட்டும் போராட்டத்திற்கு வந்து விட்டால் மேலே இருக்கிறவள் கீழே வர, கீழே இருக்கிறவள் மேலே போக, கடைசியில் அடிதடி சண்டைக் கேசில் ஜெயிலுக்குத் தானே வரவேண்டும். அதனால்தான் ஒருத்தியை என்னுடன் கூட்டிக் கொண்டு வந்துவிட்டேன் என்றார். ''

எல்லோரும் தாமாஷாகச் சிரித்தோம். ஜெயிலுக்கு வந்தவர்களை மனம் தளராமல் கவிஞர் கு.சா.கி. இப்படி

தமாஷாகப் பேசி உற்சாகமூட்டிக் கொண்டிருப்பதில் வல்லவர். பிறருக்கு எந்தத் தீங்கும் நினைக்காத நல்லவர்.

எங்களையெல்லாம் போலீஸ் கமிஷனர் முன் ஆஜர் செய்தார்கள். முதலில் என் பெயரைச் சொன்னதும் நான் கமிஷனர் எதிரில் நின்றேன். அப்போது கமிஷனராக இருந்தவர் திரு.அருள் அவர்கள் என்னை நிமிர்ந்து பார்த்து, புன்னகை செய்துவிட்டு ஏதோ எழுதப்போனார். நான் உடனே ''சார்'' எழுதும்போது 'பி' கிளாஸ் போட்டு எழுதுங்கள். இல்லாவிட்டால் நாங்கள் உள்ளேபோய் வேறு போராட வேண்டியதிருக்கும்.'' என்றேன்.

''பி-கிளாஸ் போடுகிறேன் '' என்று சொல்லி சிரித்துக் கொண்டே எழுதினார். எழுதி முடித்ததும் ''சரி நீங்கள் போகலாம்'' என்றார்.

''சார் இன்னொரு விஷயம்'' என்றேன் ''என்ன?'' என்றார்.

''இப்போது மணி ஒன்று. எங்களைச் சிறைக்குள் கொண்டு போகும்போது மணி நான்காகிவிடும் சிறையில் சடங்குகள் முடிந்து எங்கள் அறைகளுக்குச் செல்லும்போது மணி ஆறாகலாம்.

ஆகவே நாங்கள் இப்போது சாப்பிடாமல் சிறைக்குச் சென்றால் இன்று பூரா பட்டினி கிடக்க நேரிடும். அதனால் எங்கள் எல்லோருக்கும் நல்ல சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றேன். கமிஷனர், சிரித்துக் கொண்டே ''எத்தனை முறை சிறைக்குச் சென்றிருக்கிறீர்கள்? '' என்றார்.

''நான்கு'' ஐந்து முறை சென்றிருக்கிறேன்'' என்றேன். ''அதனால் உங்களுக்கு எல்லாம் தெரிந்திருக்கிறது. சரி நீங்கள் போகலாம்'' என்று சொல்லி எங்களுடன் வந்த சார்ஜண்டைக் கூப்பிட்டு தன் கைப்பணத்தை (ரூ.200) கொடுத்து நல்ல சாப்பாடு போட்டு பிறகு ஜெயிலுக்குக் கொண்டு போகும்படி உத்தரவிட்டார்.

# கட்டபொம்மன்,
# கப்பலோட்டிய தமிழன்

சிலம்புச் செல்வர் ம.பொ.சி.அவர்களுடன் நான் தமிழரசுக் கழகத்தில் தொண்டு செய்துகொண்டிருந்தபோது, தங்கமலை ரகசியம் என்ற திரைப்படக் கதை ஒன்றை பத்மினி பிக்சர்ஸ் உரிமையாளர் திரு.பி.ஆர்.பந்துலு அவர்களிடம் சொன்னேன்.

கதை, நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் நடிப்ப தற்காகவே சொல்லப்பட்டது.

வசனம் மிகச்சிறப்பாகப் பேசி அற்புதமாக நடிக்கும் ஆற்றல் பெற்ற சிவாஜி அவர்கள், வாய் பேசாமலே சிறப்பாக நடிப்பதற்காக பாதிக் கதை வரையில், வாய் பேசத் தெரியாத வாலிபனாகவும், பின்னர் பேசத் தெரிந்தவனாகவும் ஒரு கதாபாத்திரத்தை சிருஷ்டி செய்தேன்.

கதாநாயகன் குழந்தையாக இருக்கும்போது சூழ்ச்சியின் காரணமாகக் காட்டில் வீசப்படுகிறான். அக்குழந்தையை யானைகள் எடுத்து வளர்ப்பதாக கதை.

யானைகள் எப்படி எப்படி ஒரு குழந்தையை வளர்க்கும்-யானைகள் என்னென்ன வேலை செய்யும் என்பதை எல்லாம் இதற்காக நான் பல சர்க்கஸ் கம்பெனிகளில் விசாரித்து ஓரளவு தெரிந்து வைத்திருந்தேன். அதனால் திரு.பந்தலு அவர்கள் என்னையும் தன் கூடவே இருந்து படப்பிடிப்பிற்கு உதவியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.

திரு.பி.ஆர்.பந்துலு அவர்கள் முதன் முதலில் டைரக்ட் செய்த படமும் அதுதான்!

'தங்கமலை ரகசியம்' படிப்பிடிப்பின்போதுதான் பந்தலு அவர்களின் உள்ளத்தில் 'வீரபாண்டிய கட்டபொம்மன்', 'கப்பலோட்டிய தமிழன்' ஆகிய இருவரின் சரிதத்தைப் படமாக்க வேண்டுமென்ற விதையை ஊன்றினேன்.

திரு.ம.பொ.சி. அவர்களைப் பற்றி பந்துலு அவர்களுக்கு அடிக்கடி சொல்லிக்கொண்டேயிருப்பேன்.

என்னுடைய தூண்டுதலுக்கு மிகவும் ஆதரவாக நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் இருந்தார்.

பத்மினி பிக்சர்ஸுக்கு பாட்டு எழுதிக் கொண்டிருந்த கவிஞர் திரு.கு.மா.பாலசுப்ரமணியமும் தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்தவராகையால் அவரும் என் பேச்சை ஆமோதித்துக் கொண்டிருந்தார்.

'தங்கமலை ரகசியம்' தமிழில் பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. அதுவே 'ரத்னகிரி ரகசியம்' என்ற பெயரில் கன்னடத்தில் வெளிவந்து அதுவும் பெரிய வெற்றிப் படமாக அமைந்தது.

இச்சமயத்தில்தான் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களும் நானும் மற்றும் தமிழரசுக் கழகத் தோழர்களும் கட்டபொம்மன் பற்றித் தமிழகமெங்கும் தீவிரப் பிரசாரம் செய்து கொண்டிருந்தோம்.

தமிழ் மக்கள் கட்டபொம்மனைப் பற்றிய உண்மைகளைத் தெரிந்து கொண்டார்கள். அவனுடைய வீரம்-தியாகம் இவைகளை மிகவும் போற்றினார்கள்.

இச்சூழ்நிலையில் நடிகர்திலகம் சிவாஜிகணேசன் அவர்கள் 'வீர பாண்டிய கட்டபொம்மன்' என்ற அற்புதமான நாடகத்தை அரங்கேற்றம் செய்தார்.

அந்த நாடகம் தமிழகத்தில் ஒரு புதிய புரட்சியை ஏற்படுத்தியது.

திரு.பி.ஆர். பந்துலு உள்ளத்திலும் ஒரு புதிய வேகத்தை ஏற்படுத்தியது.

நாடகம் முடிந்து நாங்கள் வீடு திரும்பும்போது திரு.பந்துலு அவர்கள், என்னிடம், "சரி, உங்கள் விருப்பப்படி கட்டபொம்மன் பட வேலையை நாளையே துவக்குங்கள்" என்றார்.

நான் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

மறுநாள் முதலில் நான் செய்த காரியம் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்கள் வீட்டுக்கு பி.ஆர்.பந்துலுவைக் கூட்டிக் கொண்டுபோய், ம.பொ.சி. அவர்களுக்கு மாலை மரியாதை செய்து "கட்டபொம்மன் படம் தயாரிக்கச் சிறந்த ஆலோசனைகள் அடிக்கடி சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டதுதான்."

அதுபோல திரு.ம.பொ.சி.அவர்கள் கட்டபொம்மன் படம் முழுவதற்கும் கூடவே இருந்து உதவி செய்தார்கள். கட்டபொம்மன் படப்பிடிப்பு சென்னை கோல்டன் ஸ்டுடியோவில் ஆரம்பமானது. முருகன் கோவில் செட் போட்டிருந்தோம். விளக்கேற்றி வைத்து ஆரம்பிக்க வேண்டிய பணியை என்னைச் செய்யும்படி திரு.பி.ஆர். பந்துலு சொன்னார்.

பக்கத்திலிருந்த அனைவரிடமும் இந்தப்படம் எடுக்க என்னைத் தூண்டியவர் சின்ன அண்ணாமலைதான். அதனால் அவர் விளக்கேற்றி வைப்பதுதான் முறை, என்று சொல்லி எனக்கு மாலை அணிவித்தார்.

கட்டபொம்மன் படம் மிகப்பெரிய வெற்றிப்படமாக அமைந்தது. தமிழ்த் திரைப்படத்துறைக்கு ஒரு மறுமலர்ச்சியை உண்டாக்கியது.

'ஆசியாவிலே சிறந்த படம்' என்ற பரிசை கெய்ரோவில் அதற்குக் கொடுத்தார்கள்.

இதை எல்லாம் பார்த்து நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். என்னைப்போலவே திரு.ம.பொ.சி. அவர்களும் பெரு மகிழ்ச்சி அடைந்தார்கள். கட்டபொம்மன் படத்தைப் போலவே 'கப்பலோட்டிய தமிழன்' என்ற திரைப்படத்தை திரு.பி.ஆர். பந்துலு எடுப்பதற்கு மூல காரணம் எனது முயற்சியே.

பந்துலு கூடவே நான் இருந்தபடியால் அவரிடம் அடிக்கடி பேசக்கூடிய வாய்ப்பு இருந்தது. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் 'கப்பலோட்டிய தமிழன்' பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தேன்.

என் உள்ளத்தில், கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன் போன்றவர்களைப் பற்றி பதியவைத்தவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி.தான்.

திரு.ம.பொ.சி. இந்த முயற்சி எடுக்கவில்லை என்றால் கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழனுக்கு இவ்வளவு பேரும் புகழும் வந்திருக்குமா, என்பது சந்தேகமே!

பின்னர் பி.ஆர்.பந்துலு கப்பலோட்டிய தமிழன்' என்ற திரைப்படத்தை எடுத்தார்.

நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் வ.உ. சிதம்பரனாராக நடித்து இறவாத புகழ் பெற்றார்.

இந்தப் படம் தயாரித்து வெளியிட்டபோது இதை ஒரு காங்கிரஸ்காரன் கதை என்று சிலர் பிரசாரம் செய்துவிட்டார்கள். அதனால் அப்போது படம் பெரிய வெற்றி பெறவில்லை. ஆனால் இப்போது அந்தப் படத்திற்குப் பெரிய வரவேற்பு மக்களிட மிருக்கிறது.

இன்னும் நாளாக ஆக கப்பலோட்டிய தமிழன் படமும் கட்டபொம்மன் படமும் மக்களால் பெரிதும் விரும்பிப் பார்க்கப்படும் என்பதில் ஐயம் இல்லை.

'கட்டபொம்மன்-கப்பலோட்டிய தமிழன்' ஆகிய இந்த இரண்டு திரைப்படங்களும் தமிழில் வெளிவர அஸ்திவாரம் நான்தான் என்பது பலருக்குத் தெரியாது.

''அஸ்திவாரம் எப்போதும் கண்ணுக்குத் தெரியாது'' என்பது அனைவருக்கும் தெரியும்.

## சிவாஜிக்கு என்ன தொழில்?

கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் தமிழகத்தின் தவப்பயனால் அவதரித்தவர். நாஞ்சில் நாட்டில் (கன்யாகுமரி மாவட்டம்) தோன்றிய அந்த மாபெரும் கவிஞர் குழந்தை உள்ளம் கொண்டவர்.

நீண்ட நாட்களாக நோய்வாய்ப்பட்டு வீட்டினுள்ளே இருந்து வந்தார். நான் குமரி மாவட்டம் செல்லும்போதெல்லாம் 'பாட்டாவை' பார்க்கத் தவறுவதில்லை. நாஞ்சில் நாடு முழுவதும் கவிமணியைப் 'பாட்டா' என்றே அன்புடன் அழைப்பார்கள்.

கவிமணி வெளி உலகம் பற்றி அதிக அக்கறை எடுத்துக் கொள்வதில்லை. தமிழ் இலக்கியத்திலே ஊறித் திளைத்துக் கொண்டிருப்பவர். தமிழ் உண்டு; கவிதாதேவி அருள் உண்டு; இப்படித்தான் அவர்கள் வாழ்க்கை.

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு நாள் நானும் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் அவர்களும் இன்னும் சில நண்பர்களும் கன்யாகுமரி சென்றபோது கவிமணி அவர்களைப் பார்க்கச் சென்றோம்.

எல்லோரையும் கவிமணி அன்புடன் வரவேற்றார்கள். 'இவர்தான் சிவாஜிகணேசன்' என்று அறிமுகப்படுத்தினேன், உடனே கவிமணி மிக்க மகிழ்ச்சி அடைந்து "அப்படியா, தம்பிக்கு

எந்த ஊரு, என்ன தொழில் செய்கிறார்?'' என்றாரே பார்க்கலாம். வந்தவர்கள் அனைவர் முகத்திலும் ஈயாடவில்லை.

நான் உடனே சமாளித்துக் கொண்டு ''பாட்டா'' அவர்கள் சினிமா பார்ப்பதில்லை. அதனால் அப்படிக் கேட்டுவிட்டார்கள்'' என்று சமாளித்து கவிமணி அவர்களைப் பார்த்து 'பாட்டா இவர் உலகிலே சிறந்த நடிகர், தமிழ்நாட்டின் தவப்புதல்வர், சினிமாவில் இவர்தான் இமயம்'' என்றேன்.

'ஓ அப்படியா மகிழ்ச்சி' என்று சொல்லி நடிகர் திலகத்தை வாழ்த்தினார். நாங்கள் கவிமணியிடம் விடைபெற்றுக் கொண்டு வெளியில் வந்ததும் நடிகர் திலகம் சிவாஜி அவர்கள், ''இன்னும் பெரிய அறிஞர்கள் நம்மைப் பற்றி தெரிந்து கொள்ள வில்லை.''

நாம் அதிகமாக உழைத்து அறிஞர்களின் கவனத்தையும் ஈர்க்க வேண்டும். நாம் அதிகமாக புகழடைந்து விட்டோம் என்ற கர்வத்திற்கு இன்று சரியான சாட்டையடி கிடைத்தது'' என்று கூறினார்.

சொன்னால் நம்பமாட்டீர்கள் அதற்குப்பின் ஒரு மாதத்தில் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் நடிகர்திலகம் சிவாஜி அவர்கள் நடித்த சினிமா ஒன்றைப் பார்த்தார்கள். அந்தப் படத்தின் பெயர் ''கப்பலோட்டிய தமிழன்.''

படத்தைப் பார்த்து பரவசமடைந்து சிவாஜி அவர்களை வாழ்த்தி ஒரு அருமையான கடிதம் ஒன்று பாராட்டி எழுதியிருந்தார்கள்.

## பெரியார் தந்த பத்து ரூபாய்

பெரியார், ஈ.வெ.ரா. அவர்களை மிகவும் தாக்கிப் பேசுவது என் சுபாவம். சொல்லப் போனால் என் அளவு தாக்கிப் பேசுபவர் வேறு யாரேனும் இருக்கிறார்களா என்பதே சந்தேகம். இருந்தாலும் பெரியாரின் தைரியத்தைக் கண்டு அவரிடம் எனக்குத் தனி மரியாதை உண்டு.

ஒரு சமயம் திருச்சிக்குப் போயிருந்தபோது பெரியாரைப் பார்க்கப் போனேன். அதுதான் முதன் முறை நான் அவரைச் சந்திப்பது.

என்னைக் கண்டதும் அந்தத் தள்ளாத வயதிலும் எழுந்து நின்று அன்புடன் வரவேற்று உபசாரம் செய்தார்.

''நான் உங்களை அதிகமாகத் தாக்கிப் பொதுக் கூட்டங்களில் பேசி வருகிறேன்; மன்னிக்க வேண்டும்,'' என்று கூறினேன்.

''இதுக்கு எதுக்கு மன்னிப்பு?'' உங்க எண்ணத்தை நீங்க சொல்றீங்க. எதாயிருந்தாலும் பயப்படாம சொல்லுங்கள். ஆமா-கதையெல்லாம் சொல்லிப் பேசுவீங்களாமே?'' என்று பெரியார் கேட்டார்.

''ஏதோ சில கதைகள், பேசும்போது தானாக வரும், நான் அதிகம் படித்தவன் அல்ல,'' என்றேன்.

''எனக்குக் கூட அந்தப்பாணி ரொம்பப் பிடிக்கும் . ரொம்ப படிச்சவன் மனசு திறந்து பேச மாட்டான். உங்க பேச்சை நான் ஒரு நாள் கேட்கணுமே'' என்றார்.

''ஐயாவுக்கு முன்னாலே நான் என்ன பேச முடியும்? '' என்றேன்.

''ஏன் என்னைத் தாக்கிப் பேசுங்கள். நான் கோப்ப் படமாட்டேன். ரசிப்பேன்'' என்றார்.

''சரி, சந்தர்ப்பம் வந்தால் பார்க்கலாம்,'' என்று கூறிவிட்டு அன்புடன் விடைபெற்றுக் கொண்டேன்.

அடுத்த ஒரு மாதத்தில் 'பெரியார் பிறந்த தினவிழா பொதுக்கூட்டம்' ஒன்றில் பேச அழைப்பு வந்தது. அழைப்பை ஏற்றுக் கொண்டுவிட்டு அதன் பிறகு கொஞ்சம் குழப்பமடைந்தேன். பெரியாரை நேரில் வைத்துக் கொண்டு அவரையே எப்படித் தாக்குவது? என்ற யோசனையில் ஆழ்ந்தேன். எனினும் கூட்டத்திற்குப் பெரிய விளம்பரம் செய்து விட்டார்கள். 'வந்தது வரட்டும்' என்று கூட்டத்துக்குப் போய்ச் சேர்ந்தேன்.

கூட்டடத்திற்கு வந்திருந்த மக்களில் பெரும்பாலோர் பெரியார் பக்தர்கள். பலர் கறுப்புச் சட்டை வேறு போட்டு பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள்.

எதிரில் உட்கார்ந்திருந்த சிலருடைய மீசை அச்சத்தைக் கொடுத்தது. இத்தனைக்கும் மத்தியில் இருட்டில் பூரண சந்திரன் போல பெரியார் ஒரு பறங்கிப் பழமாகக் காட்சியளித்தார்.

அன்புடன் என்னை அவரும் அவர் அருமையாக வளர்க்கும் நாய்க்குட்டியும் வரவேற்றார்கள். பலர் பெரியாரைப் புகழ்ந்து பேசினார்கள். கூட்டம் ஒரே உற்சாகமாக இருந்தது. என் முறை வந்ததும் நான் எழுந்தேன். என்னைக் கண்டதும் சபையில் ஒரு கலகலப்பு ஏற்பட்டது. பேச ஆரம்பித்தேன்.

"தலைவர் அவர்களே, பெரியார் அவர்களே, நான் என்ன பேசினாலும் பொறுமையுடன் கேட்பது என்ற சங்கல்பம் எடுத்துக் கொண்டு வந்திருக்கும் பெரியார் பக்தர்களே," என்று ஆரம்பித்ததும் சபையில் களைகட்டியது.

"நான் ஒரு முட்டாள்" என்றதும் மீண்டும் கரகோஷம், "ஆமாம், நான் அறிவாளியாக இருந்தால் இந்தக் கூட்டத்திற்கு வந்து மாட்டிக்கொள்ளுவேனா?" என்றதும் , பெரியார், "முட்டாளைத்தான் நாங்க மதிப்போம். இங்கே எல்லோரும் முட்டாள்கள்தான் , " என்றாரே பார்க்கலாம். கூட்டத்தில் வெடிச் சிரிப்பு ஏற்பட்டது.

"பெரியார் கடவுள் இல்லை என்பவர், நான் கடவுள் உண்டு என்று நினைப்பவன். தமிழ் மக்கள் பலர் கொண்டிருக்கும் எண்ணங்களுக்கு நேர் மாறான எண்ணம் கொண்டவர் பெரியார். இவருடைய செய்கை பலருக்குப் பிடிக்காது. இவர் சொல்வது அநேகருக்கு வேம்பாக இருக்கிறது.

ஆயினும் தமிழ் மக்கள் இவரிடம் தாயன்பு காட்டு கிறார்கள். எதிரிலிருப்பவர்களை முண்டங்களே என்கிறார். 'முட்டாள்கள்' என்கிறார். ஆயினும் மக்கள் அன்பு காட்டுகிறார்களே எப்படி? அதுதான் தாயன்பு.

"என் நண்பர் ஒருவருக்கு ஒரு மகன் இருந்தான், அவன் தாயாரைத் தொந்தரவு செய்து பணம் நகை முதலியவற்றை வாங்கிச் சென்று செலவழிப்பது வழக்கம். ஒரு சமயம் அவனுடைய தாய், பணமும் இல்லை, நகைகளும் இல்லை என்று சொல்லிவிட்டாள். உடனே அந்தச் சத்புத்திரனுக்குக் கோபம் வந்து விட்டது. ருத்ரமூர்த்தியாகித் தாயின் தலைமயிரைப் பிடித்து இழுத்து வீதியில் போட்டு நாலு மொத்து மொத்திவிட்டு ஓடிவிட்டான்.

காலையில் ஓடிப்போன பையன் வீட்டுக்கு வரவே யில்லை, சாப்பிடவும் இல்லை. அடிபட்ட தாயாருக்குத் தான் அடிப்பட்டது கூட மறந்து போய்விட்டது. 'பையன் இன்னும்' சாப்பிட வரவில்லையே?' என்ற கவலை வந்து விட்டது.

உடனே பக்கத்து விட்டுக்காரரிடம் போய், தம்பி, நம்ம குப்புசாமி காலையில் சாப்பிடாமல், வெளியே போனவனை இன்னும் காணோம்.

நீங்கள் கொஞ்சம் பார்த்துக் கூட்டிக் கொண்டு வருகிறீர்களா? உங்களுக்கு ரொம்பப் புண்ணியம் உண்டு' என்று கெஞ்சினாளாம்.

''அது யாரு குப்புசாமி? இன்று காலையில் உன்னைப் போட்டு அடித்தானே அந்தச் சண்டாளப் பயலா? அவன் சாப்பிடவில்லை என்று கவலைப்படுகிறாயாக்கும். போ, போ,'' என்று பக்கத்து வீட்டுக்காரர் ரொம்பவும் கோபமாய்ப் பேசினார்.

ஆனாலும் அந்த அம்மாள் விடாமல், ''ஐயோ? அவன் ரொம்ப சின்னப் பிள்ளைங்க, தெரிஞ்சது அவ்வளவுதானுங்க. நீங்க கொஞ்சம் தயவு பண்ணி அவனைத் தேடிக் கூட்டியாங்க,'' என்று காலில் விழுந்து கெஞ்சினாளாம்.

தாயன்பு என்பது அப்படிப்பட்டது. தமிழ் மக்கள் அந்தத் தாயன்பைத்தான் பெரியாரிடம் காட்டுகிறார்கள்.

''தமிழ் மக்களை அவர் முட்டாள் என்றாலும் முண்டங்களே என்றாலும் தமிழ் காட்டுமிராண்டி மொழி யென்றாலும் திருக்குறள் மட்டமான நூல் என்றாலும் கம்பனைக் கடிந்தாலும் முருகனை, ராமனை, சீதையைக் கேவலமாகப் பேசினாலும் தமிழ் மக்கள் பெரியாரிடம் அன்பு காட்டுகிறார்கள். இதுதான் தாயன்பு என்பதாகும்'' என்று கூறி, பெரியாரைக் கொஞ்சமும் தாட்சண்யம் பார்க்காமல் தாக்கிப் பேசினேன்.

பெரியாரும் மகிழ்ச்சியாக என் பேச்சைக் கேட்டு ரசித்தார். நான் பெரியாரிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்படலானேன். "இந்தாங்க, இதைப் பெட்ரோலுக்கு வைத்துக் கொள்ளுங்கள்" என்று 10 ரூபாய் கொடுத்தார். நான் மறுத்தும் கேளாமல் என் பையில் போட்டுவிட்டார்.

சிலமாதங்கள் கழித்து, கும்பகோணத்திற்கு நானும் கவிஞர் கண்ணதாசன் அவர்களும் ஒரு கூட்டத்திற்குப் போயிருந்தோம். எங்களுக்குக் கும்கோணம் ஏ.ஆர்.ஆர். சீவல் கம்பெனி அதிபர் திரு.இராமசாமி அவர்கள் வீட்டில் மதிய உணவுக்கு ஏற்பாடாகி இருந்தது.

நாங்கள் அங்கு சென்றபோது பெரியார் ஈ.வே.ரா. அவர்களும் அங்கு வந்திருந்தார்கள். பெரியாருடன் ஒவ்வொரு வராகப் போட்டோ எடுத்துக் கொண்டு, அதற்காகப் பத்து ரூபாய் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள்.

நானும் பெரியாருடன் ஒரு போட்டோ எடுத்துக் கொண்டேன். எல்லோரைப் போலவே ரூபாய் பத்து நானும் பெரியாரிடம் கொடுத்தேன். "நீங்களுமா?" என்றார் பெரியார்.

"ஆமா இந்த பத்து ரூபாய் உங்களுடையதுதான். திரும்பி உங்களிடமே வருகிறது" என்றேன். "ரொம்ப மகிழ்ச்சி" என்று சொல்லிப் பெரியார் சிரித்துக் கொண்டார்.

# கொதிக்கும் சோற்றுப்பானை

பெயசுக் கோளாறு காரணமாக என் நண்பர் ஒருவருக்கு ஒரு பெண் சிநேகிதமானாள். மிக நெருங்கிய நட்புக் கொண்டதனால் நண்பருக்குப் பணச் செலவும் அதிகமாயிற்று. இரண்டு மூன்று ஆண்டுகள் இந்நிலை தொடர்ந்து இருந்தது. செய்வது தவறு என்று என் நண்பருக்குத் தெரிந்தாலும் உறவை முறித்துக் கொள்ள முடியவில்லை.

'பெண் மயக்கம்' ஏற்படும்போது யாருடைய உபதேசமும் செவியில் ஏறாது. எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் 'பெண் ' விஷயத்தில் இடறி விழுந்து விடுவது இயற்கை. சிலருடைய விவகாரம் வெளியில் தெரிந்து விடுகிறது. பலருடைய விவகாரம் தெரிவதில்லை. புராணத்தில், இதிகாசத்தில், சரித்திரத்தில், சமூகத்தில் இதற்கு எத்தனையோ சான்றுகள் கூறலாம்.

நண்பருக்கு ஏற்பட்ட பெண் மயக்கம் தெளியப் பலவாறு முயன்றேன். ''எப்படி இதிலிருந்து விடுபடுவது?'' என்று சிந்தித்துக் கொண்டே நண்பர் தன்னை அறியாமல் மீண்டும் ''அங்கேயே'' வட்டமிட்டார். இந்நிலையில் ஒருநாள் ஒரு நகைக் கடையிலிருந்து என் நண்பரின் காதலி டெலிபோனில் உடனே அங்கு வரும்படி நண்பரைக் கூப்பிட்டாள்.

அவரும் அவசரமாகப் போனார். சுமார் 3000 ரூபாய்க்கு தங்க நகைகள் (காப்பு, சங்கிலி, போன்றவைகள்) எடுத்து வைத்திருந்தாள் காதலி, என்ன விஷயம் என்று நண்பர் கேட்டார்.

அவளுக்குச் சொந்த ஊரில் ஒரு பெரியம்மா, பெரியம்மாவின் மகளுக்குக் கலியாணம். மணப்பெண்ணுக்குப் போட சில நகைகள் தேவை. இந்த நகைகளைக் காட்டி, அவர்களுக்குப் பிடித்தால் பணம் கொடுத்து வாங்கி கொள்ளலாம். நகையை எடுத்துப் போக நண்பர் கையெழுத்துப் போட்டால் கடைக்காரர் சம்மதிப்பார். இதுதான் விஷயம் என்று காதலி சொன்னாள்.

'பூ ஒரு கையெழுத்துத்தானே' என்று நண்பர் மறு பேச்சு பேசாமல் கையெழுத்தைப் போட்டு விட்டு, நகையை வாங்கி அவளிடம் கொடுத்து விட்டார். அன்று முழுவதும் காதலி வீட்டில் ஒரே குதூகலம். நண்பருக்குக் கோலாகலம்.

அவள் சொன்னபடி தன் குடும்பத்தாருடன் பெரியம்மாவின் ஊருக்குப் புறப்பட்டுப் போனாள். அந்த ஊர் சென்னையிலிருந்து 400 மைல் தொலைவிலுள்ளது.

ஒருவாரம் கழித்துத் திரும்பி வந்தாள். குடும்பத்தினருடன் வந்தது தெரிந்து நண்பர் ஆர்வத்துடன் காதலியைக் காணச் சென்றார். நண்பரைக் கண்டதும் அந்த காதலியின் குடும்பத்தினர் அனைவரும் விம்மலும் விக்கலும் விசும்பலுமாக அழுகையுடன் கொண்டுபோன நகை திருட்டுப் போய்விட்டது என்று பிரலாபித்தார்கள். நண்பருக்குச் சந்தேகம் தோன்றி விட்டது.

அவர் எதுவும் பேசவில்லை. இரண்டு மூன்று நாட்கள் எப்போதும் போல் அந்த வீட்டுக்குப் போய் வந்து கொண்டிருந்தார். நகை அவர்கள் வீட்டில்தான் இருக்கிறது என்பதும் நண்பருக்கு நிச்சயமாயிற்று.

இந்நிலையில் நகைக் கடைக்காரர் போலீசில் 'கிரிமினல் கம்பிளைண்ட்' கொடுத்து விட்டார். நண்பர் அவர் அன்புக்

காதலியிடமும் அவள் குடும்பத்தாரிடமும் நிலைமை மோசமாகப் போகும், நகையைத் திருப்பிக் கொடுத்து விடுங்கள் என்று எவ்வளவோ மன்றாடினார். அவர்கள் சாதித்து விட்டார்கள்.

நண்பரிடம் அப்போது பணம் கைவசம் இல்லை. அதனால் நேராக என்னிடம் வந்து விஷயத்தைச் சொன்னார். நான் நண்பரை போலீஸ் கமிஷனரிடம் கூட்டிச் சென்றேன். உண்மையைச் சொன்னேன். நகை நிச்சயமாக அவர்கள் வீட்டில் தான் இருக்கிறதா? என்று கமிஷனர் கேட்டார்.

''ஆமா'' என்றோம் அழுத்தமாக.

உடனே ஒரு போலீஸ் அதிகாரியைக் கூப்பிட்டு அந்தப் பெண்ணின் வீட்டைச் சோதனை போடும்படி உத்தரவிட்டார்.

போலீஸ் அதிகாரி பெண்ணின் வீட்டிற்குப் போனதும் அவருக்கு ஏக உபசாரம் நடைபெற்றிருக்கிறது. வந்த விஷயத்தை அதிகாரி சொல்லியிருக்கிறார். ''அதற்கென்ன நன்றாகப் பாருங்கள்'' என்று அங்குள்ள பெண்கள் அனைவரும் குழைந்திருக்கிறார்கள்.

அதிகாரி வீட்டைச் சோதனை போட்டு விட்டு ''நகைகள் ஒன்றும் இல்லை'' என்று வந்து விட்டார்.

மேற்படி அதிகாரி உஷாரானவர்தான். எதற்கும் மசியக்கூடியவரல்ல. இருந்தும் அவர் ஏமாந்து விட்டார் என்றுதான் நாங்கள் நினைத்தோம்.

போலீஸ் கமிஷனரிடம் நான் வாதாடினேன். கமிஷனர் எங்களுக்காக மிகவும் பரிதாபப்பட்டார். இரண்டு நாள் தவணை கொடுங்கள். நான் கண்டு பிடித்துச் சொல்கிறேன்'' என்று அவரிடம் தவணை வாங்கிக் கொண்டு சென்றேன்.

என் நண்பரின் காதலி வீட்டில் ஒரு சமையல் ஆள் உண்டு. அவளுக்கு நண்பர் நிறையச் செய்திருக்கிறார். அவள் மார்க்கட்டுக்குப் போகும் நேரம் நண்பருக்குத் தெரியும். மார்க்கெட்டுக்கு அருகில் நானும் நண்பரும் காத்திருந்தோம். சமையல்காரி வந்தாள். அவளிடம் ரூ.100 கொடுத்தோம்.

நைசாகப் பேசி அன்று அதிகாரி வந்தபோது நகையை எங்கே ஒளித்து வைத்திருந்தார்கள் என்ற விஷத்தையும் தெரிந்து கொண்டேம். சமையல்காரியும் நாங்களும் சந்தித்ததை யாரிடமும் சொல்வதில்லை என்று சத்தியம் செய்து கொண்டோம்.

மறுநாள் போலீஸ் கமிஷனரைச் சந்தித்தேன். தயவு செய்து இன்று மீண்டும் அந்த வீட்டைச் சோதனை செய்யும்படி உத்தர விட வேண்டும் அதிகாரியுடன் நானும் செல்ல அனுமதி வேண்டும். என்றேன். கமிஷனர் அவர்கள் 'அருள்' கூர்ந்து அப்படியே செய்தார்கள்.

அதிகாரியும் நானும் மேற்படி பெண்ணின் வீட்டிற்குச் சென்றோம். எங்கள் இருவருக்கும் பலத்த உபசாரம் நடந்தது. அதிகாரி பல இடங்களில் தேடினார்' நானும் கூடவே இருந்தேன். பெண்களும் ஆர்வத்துடன் பீரோ, மேஜை,பெட்டி எல்லாவற்றையும் திறந்து காட்டினார்கள்.

ஒரு இடத்திலும் நகை இல்லை. அதிகாரி என்னைப் பார்த்தார். நான், "சரி சமையற் கட்டில் தேடலாம்" என்று கூறிச் சட்டென்று சமையல் அறைக்குள் நுழைந்தேன். அங்குள்ள டப்பாக்கள், பெட்டிகள் எல்லாவற்றையும் அதிகாரி சோதனை செய்தார். ஒன்றும் கிடைக்கவில்லை.

"இனி என்ன செய்வது?" என்றார் அதிகாரி.

"இதனுள்தான் இருக்கிறது" என்று அடுப்பில் சோறுவெந்து கொண்டிருக்கும் தவலையைக் காட்டினேன்.

"உலை கொதிக்கும் தவலையிலா இருக்கும்?" என்று அதிகாரி கேட்டார்.

அதற்குள் பெண்கள், "சோறு வேகிறது, அதற்குள் நகை எப்படி இருக்க முடியும்" என்று அதிகாரியை ஒட்டி உரசிப் பேசினார்கள். நான் ஒரே அடியாக, "சோற்றுத் தவலையைக் கீழே இறக்கிச் சோதனை போடுங்கள்" என்று சத்தம் போட்டேன்.

அதிகாரியும் வேறு வழியின்றிச் சோற்றுத் தவலையைக் கீழே இறக்கச் சொல்லி சோற்றை கீழே கவிழ்த்தார்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள், அத்தனை நகைகளும் பொலபொலவென்று கொதிக்கும் சோறுடன் சேர்ந்து கொட்டின!

அன்றே என் நண்பரின் பெண் மயக்கம் தீர்ந்தது. சோதனை போட வேண்டிய இடங்களில், இனி சோறு கொதித்துக் கொண்டிருக்கும் பானைக் குள்ளும் சோதனை போட வேண்டும் என்ற புதிய விஷயம் ஒன்ற போலீசாருக்கும் புலனாயிற்று.

## திருடாதே

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் ராஜா ராணி கதைகளில் நடித்து புகழ் பெற்றுக்கொண்டிருந்த சமயம்.

அவர் நடித்துக்கொண்டிருந்த 'சக்ரவர்த்தி திருமகள்' என்ற திரைப்படத்தில் பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தது.

'சக்ரவர்த்தித் திருமகள்' ஒரு ராஜா ராணி கதைதான்.

திரு.எம்.ஜி.ஆர். அவர்கள்தான் அதில் கதாநாயகன். திருமதி அஞ்சலிதேவி கதாநாயகி.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்-மதுரம் அதில் நடித்தார்கள்.

கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் அவர்களுடன் எனக்கு முன்னமேயே நல்ல பழக்கம் உண்டு.

திரு.எம்.ஜி.ஆர். அவர்களுடன் நான் நெருங்கிப் பழகியது 'சக்ரவர்த்தித் திருமகள்' படப்பிடிப்பின் போதுதான்.

படப்பிடிப்பின் இடைவேளையில் அரசியலைப் பற்றி சலிக்காமல் விவாதம் செய்வார். படப்பிடிப்புக் காலங்களில் தினமும் நாங்கள் ஒன்றாகவே சாப்பிடுவோம். அதனால் எம்.ஜி.ஆருடன் மிக நெருங்கிப் பழகவும்-மனம் விட்டுப் பேசவும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

ஒரு நாள் எம்.ஜி.ஆரிடம், ''நீங்கள் ஏன் ராஜா- ராணி கதையிலேயே நடித்துக் கொண்டிருக்கிறீர்கள், நல்ல சமூகக் கதையில் நடித்தால் என்ன?'' என்று கேட்டேன்.

"சந்தர்ப்பம் வந்தால் பார்க்கலாம்" என்று சொல்லிப் பேச்சை வேறு திசைக்குக் கொண்டு சென்று விட்டார்.

அப்போது எம்.ஜி.ஆர்.'பாகவதர் கிராப்' தான் வைத்திருப்பார். எம்.ஜி.ஆருக்கு ஒரு பலகீன மனப்பான்மை இருக்கிறது என்று நான் யூகித்தேன். அதாவது தனக்கு 'சமூகக் கதைக்கு ஏற்ற முகம் இல்லை. தற்கால கிராப் வைத்தால் பார்க்க நன்றாக இராது. கத்திச் சண்டை முதலியவைகள் சமூகக் கதையில் போட முடியாது. ' அம்மாதிரி சண்டை இல்லை என்றால் படம் ஓடாது," என்று எண்ணிக்கொண்டுதான் சமூகக் கதையில் நடிக்க முயற்சிக்கவில்லை என்று நான் எண்ணினேன்.

பின்னர் ஒரு நாள் எம்.ஜி.ஆரிடம், "நான் ஒரு சமூகக் கதை எடுக்கலாம் என்றிருக்கிறேன். தாங்கள்தான் அதில் நடிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன்.

திரு.எம்.ஜி.ஆர்.சிறிதுநேரம் யோசித்து, "சரி தாங்களுக்கு தைரியமிருந்தால் எனக்கொன்றும் ஆட்சேபனை இல்லை, நல்ல கதையாகப் பாருங்கள்" என்று சொன்னார்.

நான் முன்னமே இந்திப் படமான 'பாக்கெட்மார்' என்னும் கதையைத் தேர்ந்தெடுத்து வைத்திருந்தேன். ஆகவே அப்படத்தைப் போட்டு எம்.ஜி.ஆருக்குக் காண்பித்தேன்.

அவருக்கு அந்தக் கதை மிகவும் பிடித்திருந்தது. "சரி இந்தக் கதையையே எடுக்கலாம். இது எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது" என்று சொன்னார்.

மறுநாள் சியாமளா ஸ்டூடியோ மேக்அப் அறையில் எம்.ஜி.ஆர். மேக்அப் போட்டுக் கொண்டிருக்கும் போது நானும் எனது கூட்டாளியான வி.அருணாசலம் செட்டியார் அவர்களும் சென்று, "சாவித்திரி பிக்சர்ஸ் " என்ற பெயரில் ஒரு கம்பெனி

துவங்கியிருக்கிறோம். அதில்தான் தாங்கள் நடிக்கும் படத்தை எடுக்க் முடிவு செய்திருக்கிறோம். என்று சொன்னோம்.

எம்.ஜி.ஆர். மகிழ்ச்சியடைந்து மிகவும் குறைந்த சம்பளத்தில் நடிப்பதற்கு ஒப்புக் கொண்டு,''எனக்கு படங்கள் அதிக மிருக்கிறபடியால் ஆறு மாதத்திற்கு அவைகளுக்கெல்லாம் கால்ஷீட் கொடுத்து விட்டேன்.

ஆனால் 'கால்ஷீட்' நேரம் பூராவும் காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரைதான் கொடுத்திருக்கிறேன். அதனால் தினமும் மாலை 6 மணியிலிருந்து இரவு 10 மணி வரை சூட்டிங் நடத்தினால் படத்தைச் சீக்கிரம் முடிக்கலாம்.

அதற்குத் தகுந்தாற்போல நடிகர் நடிகைகளை போட வேண்டும். குறிப்பாக கதாநாயகியை புதுமுகமாகப் போட்டால்தான் நம் சௌகரியம் போல் சூட்டிங் நடத்தலாம்'' என்று சொன்னார்.

நான் அப்போது திரு.பி.ஆர்.பந்தலு அவர்களின் பத்மினி பிக்சாஸ் கம்பெனியில் 'தங்கமலை ரகசியம் ' என்ற திரைப்படத் தயாரிப்பில் ஈடுபட்டிருந்தேன். 'தங்கமலை ரகசியம் ' எனது கதையாதலால் என்னைக் கூடவே திரு.பி.ஆர்.பந்தலு வைத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் சென்னைக் கடற்கரையில் தனிமையாக உட்கார்ந்து கொண்டிருந்தேன். அப்போது அங்கு டைரக்டர் திரு.சுப்ரமணியம் அவர்களின் புதல்வி பத்மா சுப்ரமணியம் வந்தார். அவர் கூடவே ஒரு பெண்ணும் வந்தாள்.

என்னைக் கண்டதும் பத்மா அங்கேயே உட்கார்ந்தார். பல விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டு வரும்போது நான் 'தங்கமலை ரகசியம்' என்ற திரைப்படத்துக்குக் கதை

எழுதியிருப்பதையும் அதில் வேலை செய்து வருவதையும் சொன்னேன்.

உடனே பத்மா, "இந்தப் பெண் பெங்களூரைச் சேர்ந்தவள்." தாய் மொழி கன்னடம். கன்னடப் படத்திலும் நடித்திருக்கிறாள். தமிழ்ப் படத்தில் நடிக்க வேண்டுமென்பது ஆசை. ஏதாவது தமிழ்ப் படத்தில் ஒரு சிறு 'சான்ஸ்' கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று கேட்டுக் கொண்டார்.

"தங்கமலை ரகசியம் படத்தில் அழகு மோகினி, யௌவன மோகினி என்ற இரண்டு பெண்கள் நடனமாடும் காட்சி வருகிறது. அதில் ஒரு நடன மணியாகப் போடலாம். நான் பந்துலு அவர்களிடம் சொல்கிறேன்" என்று சொன்னேன்.

பத்மா சிபாரிசு செய்த பெண் மாநிறமாக இருந்தாள் அவ்வளவு அழகு என்று சொல்ல முடியாது எனினும் கண் கேமிராவுக்கு ஏற்றதாகத் தோன்றியது.

மறுநாள் பந்துலு அவர்களிடம் அப்பெண்ணைச் சிபாரிசு செய்தேன். மேற்படி பெண்ணைக் கூட்டி வந்தார்கள். நடன மணிகளில் ஒருத்தியாகப் போட பந்துலு சம்மதித்தார்.

அழகு மோகினி, யௌவன மோகினி சூட்டிங் ரேவதி ஸ்டூடியோவில் நடந்தது.

படத்தின் டைரக்டர் பந்துலு, நடிகர் திலகம் சிவாஜி நடிக்கும் பேறு காட்சிகளைப் படம் பிடித்துக் கொண்டிருந்த படியால், மேற்படி நடனக் காட்சியை டைரக்ட் செய்யும்படி திரு.ப.நீலகண்டன் அவர்களை ஏற்பாடு செய்திருந்தார்.

பத்மா சிபாரிசு செய்த பெண் மேக்கப்போட்டு அலங்காரம் செய்து கொண்டு வந்து காமிரா முன் நின்றாள்.

காமிரா மூலம் அந்தப் பெண்ணின் உருவத்தைப் பார்த்த திரு.நீலகண்டன் என்னைத் தனியாகக் கூப்பிட்டு, 'இந்தப் பெண், காமிராவுக்கு' ரொம்பவும் நன்றாக இருக்கிறாள். கொஞ்சமும் யோசியாமல் மூன்று படத்திற்கு ஒப்பந்தம் செய்து வைத்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னார்.

பின்னர் நடனக் காட்சி படமாக்கப்பட்டு, தியேட்டரில் போட்டுப் பார்த்தோம்.

எல்லோரும் 'ஆகா' என்று சொல்லும் அளவுக்கு அந்தப் பெண் காட்சி அளித்தாள். அந்தப் பெண் வேறு யாருமல்ல, பின்னர் தமிழ் நாட்டில் மிகப் பெரிய கதாநாயகியாக விளங்கிய சரோஜாதேவிதான்!

சொன்னால் நம்பமாட்டீர்கள், ''தங்கமலை ரகசியம்'' படத்தில் நடனம் ஆடியதற்கு சரோஜா தேவிக்கு அப்போது பந்துலு அவர்கள் கொடுத்த பணம் ரூபாய் இருநூற்றி ஐம்பதுதான்! பின்னர் அதே பந்துலு அதே சரோஜாதேவிக்கு லட்சக் கணக்கில் பணம் கொடுத்ததும் உண்டு. டைரக்டர் நீலகண்டன் அவர்கள் சொல்லியபடி உடனே மூன்று படங்களுக்கு சரோஜாதேவியை ஒப்பந்தம் செய்தேன்.

ஒவ்வொரு படத்திற்கு பணம் எவ்வளவு என்று நினைக்கிறீர்கள்?

முதல் படத்திற்கு ரூபாய் மூவாயிரத்து ஐநூறு. இரண்டாவது படத்திற்கு ரூபாய் ஏழாயிரம். மூன்றாவது படத்திற்கு ரூபாய் பத்தாயிரம்.

மேற்படி ஒப்பந்தம் முடிந்ததும். எம்.ஜி.ஆர். அவர்களிடம் சென்று புதுமுகம் சரோஜாதேவி பற்றி சொன்னேன். ''ஒரு டெஸ்ட்' எடுங்கள் பார்க்கலாம்'' என்று சொன்னார். 'சரி என்று சிட்டாடல் ஸ்டூடியோவில் ஒரு 'டெஸ்ட் எடுத்தோம்'.

'டெஸ்ட் எடுப்பது' என்பது பலமாதிரி நடிக்கச் சொல்லிப் படமாக எடுப்பது.

'டெஸ்டை' எம்.ஜி.ஆர்.பார்த்தார். கூட நாங்கள் சிலரும் பார்த்தோம்.

சரோஜாதேவி நடந்து போகும் போது ஒரு கால் தாங்கித் தாங்கி நடந்து சென்றதைச் சிலர் எம்.ஜி.ஆரிடம் சுட்டிக் காட்டினார்கள். அதற்கு எம்.ஜி.ஆர். அதுவும் ஒரு செக்ஸியாகத் தானே இருக்கிறது. இந்தப் பெண்ணையே கதாநாயகியாகப் போட்டு விடுங்கள்' என்று சொன்னார்.

எங்களது சாவித்திரி பிக்சர்ஸ் என்ற நிறுவனத்தின் மூலம் 'பாக்கெட்மார்' என்ற இந்திப் படக் கதையை தமிழில் எடுப்பது என்றும் அதில் எம்.ஜி.ஆர், சரோஜாதேவி இணைந்து நடிப்பதென்றும், திரு.ப.நீலகண்டன் டைரக்ட் செய்வதென்றும், திரு.ஏ.எல்.சீனிவாசன் அவர்கள் 'நெகடிவ் ரைட்ஸ்' வாங்கிக் கொள்வதென்றும் முடிவு செய்து வேலையைத் துவங்கினோம்.

படத்திற்கு என்ன தலைப்பு வைப்பது என்று சிந்தித்தபோது எம்.ஜி.ஆர் "எவ்வளவு லட்சம் செலவு செய்து படம் எடுக்கிறோம். அந்த படத்தின் மூலம் மக்களுக்கு ஏதாவது நல் நீதிகள் கிடைக்க வேண்டும், அதே போல் நாம் தேர்ந்தெடுக்கு. படத்தின் பெயர் ஒரு நீதியைப் போதிப்பதாக அமையவேண்டும் பணம் செலவு செய்து 'போஸ்டர்' ஒட்டுகிறோம்.

பத்திரிகையில் விளம்பரம் போடுகிறோம். ஏதாவது நல்ல கருத்தைச் சொல்லும் பெயராக இருந்தால் நாம் செலவு செய்வதற்குப் பலன் உண்டல்லவா? அப்படிப்பட்ட ஒரு பெயரைப் படத்திற்கு வைக்கவேண்டுமென்றார். அத்துடன் அப்படி யார் நல்ல பெயர் சொல்லுகிறார்களோ அவர்களுக்கு ரூ.500 பரிசு அளிப்பதாகவும் கூறினார்.

எல்லோரும் சுறுசுறுப்பாக யோசனை செய்தார்கள். கடைசியில் எங்கள் குழுவைச் சேர்ந்த திரு.மா.லெட்சுமணன் அவர்கள் மேற்படி படத்திற்கு ''திருடாதே'' என்று பெயர் வைக்கலாம் என்று சொன்னதை அனைவரும் ஒருமுகமாக ஆதரித்தோம்.

எம்.ஜி.ஆர். அவர்களுக்கும் அப்பெயர் ரொம்பவும் பிடித்தது. திரு.மா.லெட்சுமணனுக்கு ரூ.500ஐ எம்.ஜி.ஆர். கொடுத்தார்.

''திருடாதே'' படம் வேகமாக வளர்ந்து வந்தது. திரு.எம்.ஜி.ஆர் அவர்களும் ''திருடாதே'' படத்தை மிக நன்றாகத் தயாரிக்க ரொம்பவும் உதவியாக இருந்து வந்தார்.

இந்நிலையில் ஒரு நாள் எம்.ஜி.ஆர் நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக கால் ஒடிந்து விட்டது. படுத்த படுக்கையாகி விட்டார். நானும் அடிக்கடி போய் அவரைப் பார்த்துபேசிவிட்டு வருவேன்.

ஒரு நாள் எம்.ஜி.ஆர் என்னிடம், ''என் கால் குணமாகி நான் படப் பிடிப்பிற்கு வர எவ்வளவு நாள் ஆகுமென்று தெரியாது., அதுவரையில் நீங்கள் காத்திருந்தால் உங்களுக்கு வீண் சிரமம் ஏற்படும். படத்தின் மீது வாங்கியிருக்கும் கடன்களுக்கு வட்டி அதிகமாக ஏறிப்போகும்.

ஆகவே படத்தை திரு.ஏ.எல்.எஸ். அவர்களுக்கே கொடுத்து விடுங்கள். உங்களுக்கு நான் லாபமாக ஒரு நல்ல தொகை தரச் சொல்கிறேன்'' என்று சொன்னார்.

நான் சிறிது யோசித்தேன். அவர் விடவில்லை. ''என் பேச்சைக் கேளுங்கள்'' என்று விடாப்பிடியாகச் சொன்னார். 'சரி' என்று ஒப்புக்கொண்டேன். அவர் சொன்னபடியே எல்லாம் செய்து கொண்டோம்.

'திருடாதே' படத்திற்காக எனக்குக் கிடைத்த பணத்தை வைத்துத்தான் 'கடவுளின் குழந்தை' என்ற படத்தை நான் எடுத்தேன்.

அதன் பின் திருடாதே ஏ.எல்.எஸ். வெளியீடாக மூன்று ஆண்டு கழித்து வெளிவந்தது. மிகப்பெரிய வெற்றிப் படமாக ஓடியது. அதன் வெற்றிக்கு நான்தான் அஸ்திவாரம் என்ற உண்மை பலருக்குத் தெரியாமல் போயிற்று.

ஆனால் சரோஜாதேவிக்கு எல்லாம் தெரியும். அதனால் 'திருடாதே' நூறாவது வெற்றி விழா நடைபெற்ற அன்று நூறு தேங்காய், நூறு மாம்பழம், நூறு வாழைப்பழம் கொண்டு வந்து என்னைப் பார்த்து வணக்கம் தெரிவித்துக் கொடுத்துவிட்டுச் சென்றார்.

வாழ்க அவர் பண்பு!

## —பனகல்பார்க் காய்கறி அங்காடி—

சென்னை தியாகராய நகர், பனகல் பார்க் அருகில்தான் தமிழ்ப் பண்ணை, அதன் எதிர் பிளாட்பாரத்தில் சிலர் காய்கறி விற்றுப் பிழைத்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் திடீரென்று ஒரு போலீஸ் லாரி நிறைய போலீசார் வந்து காய்கறி விற்றவர்களை அடித்துக் காய்கறிகளைத் தெருவில் வீசி எறிந்து கொண்டிருந்தார்கள். நான் ஓடிப் போய் போலீசாரின் செய்கையை எதிர்த்தேன், மக்கள் என் பக்கம் சேர்ந்ததும் சார்ஜண்ட் என்னைக் கைது செய்வதாகச் சொல்லி லாரியில் ஏற்றிக் கொண்டு போனார்.

ஒரு மணி நேரம் கழித்து விடுதலை செய்வதாகச் சொன்னார். ''நான் விடுதலையாக முடியாது. வாருங்கள் கமிஷனரிடம் போவோம், இல்லையென்றால் முதலமைச்சர் காமராஜரிடம் போவோம், '' என்று சென்னேன். பின்னர் சார்ஜண்ட் என்னை முதல் அமைச்சர் வீட்டில் கொண்டு வந்துவிட்டார்.

காமராசர் அப்போதுதான் வெளியில் புறப்படும் தறுவாயிலிருந்தார். என்னைக் கண்டதும், ''என்ன சங்கதி?'' என்றார்.

காய்கறி விற்கும் ஏழைகளுக்கு ஏற்பட்ட கதியைச் சொன்னேன்.

"அப்படியா, பின்னே ஏறுங்க காரிலே, அவங்களுக்கு ஏதாவது உதவி செய்ய முடியுமா என்று பார்ப்போம்," என்று கூறிப் புறப்பட்டார். குறிப்பிட்ட இடத்திற்கு வந்ததும் விவரம் பூராவும் சொல்லி, இந்த ஏழைகள் மானமாகப் பிழைக்க ஏதாவது வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். அங்கே நின்ற ஏழை எளியவர்களையும் தெருவில் கிடக்கும் காய்கறிகளையும் பார்த்துவிட்டு "இதற்கு என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

"என்மீது தங்களுக்கு நம்பிக்கை உண்டல்லவா?" என்றேன்.

"நிச்சயமாக" என்றார்.,

"அப்படியானால் நான் சொல்லும் இடத்தில் மார்க்கெட் வைக்க உத்தரவிடுங்கள், இந்த ஏழைகளை வாழ வைக்கலாம்" என்றேன்.

அப்போது அங்கு வந்தசேர்ந்த போலீஸ் கமிஷனரை காமராஜர் கூப்பிட்டு, "இவருடன் கலந்து மார்க்கெட் வைக்க ஏற்பாடு செய்யுங்கள், ஏழைகள் பிழைக்க வேண்டும்" என்று உத்தரவிட்டார்.

காமராஜ் அவர்களின் உத்தரவுப்படி போலீஸ் கமிஷனர் அவர்களும் நகரசபை கமிஷனர் அவர்களும் நானும் கலந்து பேசி பனகல் பார்க்கை ஒட்டிய உஸ்மான் ரோடு பிளாட்பாரத்தில் வரிசைக் கிரமமாக எண் கொடுத்து ஒவ்வொரு வியாபாரிக்கும் இடம் ஒதுக்கி மார்க்கெட் நடத்தச் சட்டப்பூர்வமாகச் செய்தோம்.

பின்னர் அதே மார்க்கட் இடத்தை மாநகராட்சி ஏலத்திற்கு விட்டு அதில் நல்ல வருமானமும் தேடிக் கொண்டது.

அதன் பிறகு திரு. பக்தவத்சலம் முதல்வராக வந்ததும் பார்க்குக்குள் சிறிது தள்ளி நல்ல கட்டிடமாகக் கட்ட அரசாங்கம் அனுமதியளிக்கும்படி செய்தேன்.

பின்னர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களைக் கொண்டு அடிக்கல் நாட்டச் செய்து கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு அப்போதைய முதல்வராக இருந்த திரு.மு.கருணாநிதி அவர்களால் பனகல் பார்க் மார்க்கட் திறந்து வைக்கப்பட்டது.

சொன்னால் நம்ப மாட்டீர்கள், இன்றும் நான் மார்க்கட்டுக்குள் போனால் அங்குள்ள நன்றியுள்ளம் படைத்த வியாபாரிகள்-பெண்கள்-குழந்தைகள் உட்பட அனைவரும் எழுந்து நின்று வணக்கம் செலுத்துகிறார்கள்.

# டி.கே.சண்முகம் அடைந்த பேரின்பம்

1960 -ல் ''கடவுளின் குழந்தை'' என்ற திரைப் படம் எடுத்தேன். அதில் சிவஞான பாரதி என்ற ஒரு தமிழ் ஆசிரியர் வேடம். தமிழை மூச்சாகக் கொண்டு தமிழ் பரப்பிவரும் கதாபாத்திரம். ''தமிழனென்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' என்ற பாடலைப் பாடும் சிறந்த வேடம்.

அந்த வேடத்தை யாருக்குக் கொடுப்பது என்று யோசித்தேன். அப்போது தமிழரசுக் கழகத்தில் என்னுடன் மிகவும் ஈடுபாடு கொண்டு தமிழ்த்தொண்டு செய்து கொண்டிருந்த முத்தமிழ் கலாவித்வரத்ன அவ்வை டி.கே.சண்முகம் அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்று முடிவு செய்தேன்.

இதை திரு.சண்முக அண்ணாச்சி அவர்களிடம் நான் சொன்னபோது மிக்க மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டார்.

''நடிப்பதற்குப் பணம் எவ்வளவு வேண்டும்'' என்று கேட்டேன். ''படம் முடிந்ததும் பணம் கொடுக்கலாம்'' என்று சொல்லி விட்டார். அதன் பிறகு படத்திற்குப் பல யோசனைகள் சொன்னார். கூடவே இருந்து நடித்துப் படத்தை வெற்றிகரமாக முடித்தும் கொடுத்தார். படம் முடிந்து வெளி வந்தது. படத்திற்கு நல்ல பேரும் கிடைத்தது.

அதன் பிறகு நான் ஒரு நாள் திரு. சண்முக அண்ணாச்சி அவர்களிடம் சென்று படம் தான் முடிந்து விட்டதே, "தங்களின் ஒத்துழைப்பை நான் ஒரு நாளும் மறக்க மாட்டேன். இப்போதாவது சொல்லுங்கள் எவ்வளவு பணம் வேண்டும்" என்று கேட்டேன்.

உடனே அண்ணாச்சி சண்முகம் அவர்கள் சொன்னதைச் சொன்னால் நம்ப மாட்டீர்கள்,

"நான் பெரிய பணக்காரன் அல்ல, எனக்கு பணம் தேவைதான், ஆயினும் நீங்கள் கொடுத்த வேடம் என் மனதிற்கு மிகவும் பிடித்த வேடம்.

நமது கொள்கையைப் பரப்புவதற்கு நீங்கள் செலவு செய்து சினிமா எடுத்திருக்கிறீர்கள்.

இதில் என் பங்கும் இருக்கிறது என்ற பேரின்பம் ஒன்றே எனக்குக் கோடி கொடுத்தாற்போல . ஆகவே எனக்குப் பணம் வேண்டாம்" என்று தீர்மானமாகச் சொல்லி விட்டார்.

## அறிஞர் அண்ணாவுடன்

திருச்சியில் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசி விட்டு சென்னைக்கு ரயில் ஏற ஜங்ஷனுக்கு வந்தேன். முதல் வகுப்பு டிக்கட் கையிலிருந்தாலும் அந்த வண்டியிலே இடமில்லாமல் அங்குமிங்கும் போய்க் கொண்டிருந்தேன். திடீரென்று ஒரு போலீஸ் ஆபீஸர் என் முன்னால் வந்து "உங்களை சி.எம். கூப்பிடுகிறார்" என்றார்.

"யார் திரு. அண்ணாதுரை அவர்களா?" என்றேன்.

"ஆம்" என்றார்.

'சரி' என்று அவரைப் பின்பற்றி அண்ணா இருந்த கம்பார்ட்மெண்ட்டுக்குப் போனேன். அண்ணா என்னை அன்புடன் வரவேற்று, "சென்னைக்குத் தானே" என்றார்.

"ஆம்," என்றேன்,

"என்னுடனே பிரயாணம் செய்வதில் ஆட்சேபமில்லையே?" என்றார்.

"ஆட்சேபமில்லை; ஆனால் தங்களுக்கு அசௌகரியமாக இருக்குமே", என்றேன்.

"எனக்கு ஒரு அசௌகரியமுமில்லை. சொல்லப் போனால் உங்களுக்குத்தான் அசௌகரியமாக இருக்கும்" என்றார்.

"எனக்கென்ன அசௌகரியம்?" என்றேன் நான்.

"சீக்கிரத்தில் தூங்கவிடாமல் வெகு நேரம் நான் பேசிக் கொண்டிருப்பேனே" என்றார்.

''தங்கள் பேச்சைக் கேட்க எவ்வளவோ பேர் தவம் கிடக்கிறார்கள். வலிய வரும் சீதேவியை இழந்து விடுவேனா?'' என்று சொல்லி அவருடன் பிரயாணத்தைத் துவங்கினேன். ரயில் நகர ஆரம்பித்ததும் ''தங்களிடம் முதல் வகுப்பு டிக்கட் இருக்கிறதா?'' என்று கேட்டார்.

''வித் அவுட்டில் வருவதாக நினைத்துவிட்டீர்களா? '' இதோ எனது முதல் வகுப்பு டிக்கட்'', என்று டிக்கெட்டைக் காண்பித்தேன்.

''என் தம்பிமார்களில் சிலர் இப்படி என்னுடன் ஏறிக்கொண்டு அந்தத் தைரியத்தில் டிக்கட் வாங்காமல் பிரயாணம் செய்ததுண்டு. அவர்களுக்காக நான் டிக்கட் வாங்கிவிடுவது வழக்கம்'' என்றார்.

''நான் உங்களை நம்பிப் பிரயாணம் செய்பவனில்லையே'' என்றேன்.

''நீங்கள் சொல்லும் அரசியல் கருத்து எனக்குப் புரிகிறது. திருச்சிக்கு எங்கே வந்தீர்கள்?'' என்று கேட்டார்.

''ஒரு காங்கிரஸ் பொதுக் கூட்டத்திற்காக வந்தேன்'' என்றேன்.

''ரொம்பத் தாக்கிப் பேசினீர்களோ?'' என்று சொல்லிவிட்டு, ''நீங்க தாக்கிப் பேசினாலும் நானும் என் தம்பிமார்களும் கோபப்படுவதில்லை. ஏனென்னறால் அதிலுள்ள நகைச்சுவை எங்களைச் சிரிக்க வைத்து விடுகிறது,'' என்றார்.

''வஸிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி பட்டம்'' என்றேன்.

''அது சரி. தி.மு.க ஆட்சி எவ்வளவு நாள் நீடிக்குமென்று நினைக்கிறீர்கள்?'' என்று ஒரு எக்கச்சக்கமான கேள்வியைக்

கேட்டார். நான் சிறிது யோசனை செய்தேன். ஆனால் அண்ணாவோ, "எதற்கு யோசனை செய்கிறீர்கள்? உங்கள் மனதில் இருப்பதைச் சொன்னால்தானே எனக்கும் சில விஷயங்கள் புரியும்" என்றார்.

"நூல் தீருகிறவரை கழி சுற்றிக் கொண்டேயிருக்கும்" என்றேன்.

"விளக்கம் தேவை" என்றார்.

"இந்தி எதிர்ப்பு என்ற மாயை தீரும்வரை தி.மு.க.ஆட்சி இருக்கும்," என்றேன்.

"இதுதான் காங்கிரஸ்காரர்களுடைய அபிப்பிராயமா?" என்றார்.

"பெரும்பாலோருடைய எண்ணம்", என்றேன்.

"அது சரி. 67 தேர்தலில் காங்கிரஸ் தோற்றதற்கு என்ன காரணம் என்று சிந்தித்தீர்களா?" என்றார்.

"என் சொந்த அபிப்பிராயம் 62 தேர்தலில் தங்களைக் காஞ்சீபுரத்தில் தோற்கடித்ததுதான் 67-ல் காங்கிரஸ் தோற்றதற்குக் காரணம்," என்றேன்.

"எப்படி" என்றார்.

"தங்களை 62-ல் வெற்றி பெற விட்டிருந்தால் தாங்கள் இவ்வளவு முனைப்பாக வேலை செய்து, தங்களுக்குப் பரம எதிரியான ராஜாஜி முதலியவர்களுடன் சேர்ந்து கூட்டணி அமைத்திருக்கமாட்டீர்கள். எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டிருந்திருப்பீர்கள். காலம் ஓடியிருக்கும். இதை நான் அப்போதே காமராசரிடம் சொன்னேன். காஞ்சிபுரம் தேர்தல் கூட்டங்களில் பேசவும் மறுத்துவிட்டேன்," என்றேன்.

"தாங்கள் சொல்வது மனித இயல்பை ஒட்டிய சங்கதிதான். இருந்தாலும், மக்கள் எங்களை ஆட்சியில் அமர்த்திய பிறகு மக்களுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டாமா?" என்றார்.

"'மக்களுக்கு மதிப்புக் கொடுப்போம். ஆனால் உங்கள் கட்சியை நாங்கள் மதிக்க முடியவில்லையே, " என்றேன்.

"பந்தை காங்கிரஸ்காரர்களாகிய நீங்கள் எங்கோ வீசி எறிய, அது உங்கள் மீதே வந்து தாக்கும் போது நீங்கள் வேறு யாரையும் குறை கூறிப் பயன் இல்லை," என்றார்.

பின்னர் இருவரும் படுத்துத் தூங்கிவிட்டோம். காலை எழுந்ததும் செங்கற்பட்டு ஸ்டேஷனில் அன்புடன் எனக்குக் காலை ஆகாரத்தை அவரே பரிமாறினார். அது முடிந்ததும், என்னிடமிருந்த ஒரு புத்தகத்தை வாங்கிப் பார்த்தார்.

அது நான் எழுதிய ஒரு நாவல். தலைப்பு "மானமே பெரிது என்பதாகும்."இந்த நாவல் நம் சந்திப்பின் நினைவாக என்னிடமே இருக்கட்டும். அதில் அன்பளிப்பு என்று எழுதிக் கையெழுத்துப் போட்டுத் தாருங்கள்," என்று புத்தகத்தை நீட்டினார். கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன்.

மாம்பலம் ஸ்டேஷன் வந்ததும் அண்ணாவிடம் விடைபெற்றுக்கொண்டு ரயிலைவிட்டு இறங்கினேன்.

சொன்னால் நம்ப மாட்டீர்கள், உண்மையில் என் மனத்தில் அது வரையில் அண்ணாவைப் பற்றி இருந்த துவேஷ எண்ணம், ஸ்டேஷனைவிட்டு ரயில் போனதைப்போல் என் இதயத்தை விட்டுப் போய் விட்டது.

## அன்பிற்கு அளவுண்டோ?

சக்கரவர்த்தி திரு.ராஜகோபாலசாரியார் அவர்களிடம் எனக்குச் சிறு வயது முதற்கொண்டு அதிகப்படியான ஈடுபாடு உண்டு. காரணம் சிறுவயதிலேயே கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் எழுதியவைகளைப் படித்து, அதை மனதில் பதிய வைத்துக் கொள்ளும் பழக்கம் எனக்கு ஏற்பட்டது.

கல்கி அவர்கள் அடிக்கடி ராஜாஜி அவர்களைப் பற்றி எழுதும் கட்டுரைகள் என் மனதில் ஆழமாகப் பதிந்து அரசியலில் ராஜாஜியைப் பின்பற்றுபவனாக என்னை அறியாமலேயே நான் மாறிவிட்டேன்.

ராஜாஜியிடம் ஒரு தெய்வீகப் பக்தியை கல்கி அவர்களின் எழுத்து எனக்கு ஊட்டியது. நான் சென்னைக்கு வந்து குடியேறியபோது ராஜாஜி அவர்களின் அன்பை நம்பியே வந்தேன்.

ராஜாஜி அவர்களும் என்னிடம் மிகுந்த பிரியம் காட்டி என்னுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கு வழிகாட்டியாக இருந்து வந்தார்கள். சென்னையில் தியாகராய நகர் பனகல் பார்க் எதிரில் 'தமிழ்ப் பண்ணை' என்ற புத்தக வெளியீட்டுப் பதிப்பக நிலையம் துவக்கியபோது ராஜாஜி அவர்களின் ஆசியுடன் துவக்கினேன்.

அப்போது அரசியலில் குறிப்பாக, காங்கிரஸ் கட்சியில் ஒரு சிக்கலான நிலைமை உருவாகி இருந்தது. காங்கிரஸ்

தலைவர்களும் ஊழியர்களும் பெரும்பாலோர் 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் சிறைச் சாலையில் இருந்தார்கள்.

ராஜாஜி அவர்கள் ஆகஸ்ட் புரட்சியை ஆதரிக்காததினால் அவர் மட்டும் வெளியில் இருந்தார் கட்சி வேலைகளோ அரசியல் வேலைகளோ எதுவும் இல்லாததினால் இலக்கியத்தில் மனதை செலுத்திக் கொண்டு இருந்தார். அதனால் நான் தமிழ்ப்பண்ணை ஆரம்பித்தது அவருக்கு ஒரு வாய்ப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது.

ஆகவே தினம் தினம் தமிழ்ப் பண்ணைக்கு வந்து சிறிது நேரம் புத்தகங்களின் நடுவில் பொழுதுபோக்குவதை ஒரு வழக்கமாகக் கொண்டு இருந்தார்.

தினம் தினம் ராஜாஜி அவர்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்றதனால் பல உயர்ந்த விஷயங்களை அவரிடம் அப்போதைக்கப்போது நான் கற்றுக் கொள்ள ஏதுவாக இருந்தது. திடீரென்று ஒருநாள் ராஜாஜி அவர்கள் என்னுடைய இல்லத்திற்கு வந்தார்கள். அப்போது நான் காலைச் சிற்றுண்டி அருந்திக் கொண்டு இருந்தேன்.

ராஜாஜி வந்தது அறிந்ததும் வேகமாக கை அலம்பி விட்டு ஓடி வந்தேன். அதற்குள் ராஜாஜி நான் சிற்றுண்டி அருந்தும் இடத்திற்கு வந்து விட்டார். பாதி சாப்பிட்டதுடன் எனக்காக எழுந்திருக்க வேண்டாம். உட்கார்ந்து சாப்பிடுங்கள் என்று சொன்னார்.

தாங்களும் ஏதாவது சாப்பிடுவதாக இருந்தால் நானும் சாப்பிடுவேன் என்று அடக்கமாகப் பதில் கூறினேன்.

"செட்டி நாட்டு இட்லி பூப்போல் இருக்கும் என்று சொல்வார்களே. உங்கள் வீட்டு இட்லி எப்படி இருக்கும். இரண்டு கொடுங்கள்" என்று சொன்னார்.

வாழை இலையைப்போட்டு இரண்டு இட்லி எடுத்து வைத்து என் மனைவி, ''பிராமணர்கள் எங்கள் வீட்டில் சாப்பிட்டால் பெரும் பாவம் என்று எங்கள் பெரியவர்கள் சொல்லுவார்களே?எல்லாம் அறிந்த தாங்கள் அதைப்பற்றி என்ன அறிவுரை எங்களுக்கு கூறப் போகிறீர்கள்'' என்று கேட்டு விட்டாள்.

அதற்கு ராஜாஜி அவர்கள் என் மனைவியின் நேர்மையான கேள்வியை மெச்சி சுத்தமான இடத்தில் சமையலாகும் எதையும் யாரும் சாப்பிடலாம்.

அதற்கு விதிவிலக்கு கிடையாது. பிராமண குலத்தில் உதித்தவர்கள் எல்லாம் பிரமணர்கள் என்றும், பூணூல் போட்டவர்கள் எல்லாம் பிராமணர்கள் என்றும் கருத வேண்டாம். வேதத்தை அறிந்தவனும் பிராமணியத்தை ஒழுங்காகக் கடைபிடிப்பவனும்தான் பிராமணன். அவன் எந்தக் குலத்தில் பிறந்திருந்தாலும் அவன் பிராமணனே.

''காந்தியத்தைப் பின்பற்றுபவர்கள் கதர் அணிகிறோம். தலையில் குல்லா வைத்துக் கொள்கிறோம். கம்யூனிசத்தைப் பின்பற்றுபவர்கள் செஞ்சட்டை அணிகிறார்கள். அதைப்போல பிராமணீயத்தைப் பின்பற்றுகிறவர்கள் அக்காலத்தில் பூணூல் அணிந்தார்கள்.

இப்போது எல்லாத் தவறுகளும் பண்ணுகிறவர்களும், பிராமணீயத்திற்கு விரோதமான செயல்களில் ஈடுபட்டிருக்கும் பலர் அந்தக் குலத்தில் பிறந்ததற்காகத் தங்களைப் பிராமணர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

அப்படிப்பட்டவர்களை எல்லாம் விட நீங்கள் பல மடங்கு உயர்ந்த பிராமணர்கள். அதனால் உங்கள் வீட்டில் சாப்பிடுவதில் ஒரு பாவமும் இல்லை'' என்று ராஜாஜி கூறினார்.

என் மனைவி அவர் காலில் விழுந்து கும்பிட்டு அவர் கையில் இருந்து குங்குமம் வாங்கி இட்டுக் கொண்டாள்.

''என்றும் சுமங்கலியாகவே நீங்கள் இருப்பீர்கள்'' என்று ராஜாஜி ஆசீர்வாதம் செய்தார். அதிலிருந்து ராஜாஜியிடம் என் மனைவிக்கு எப்பொழுதும் ஒரு தெய்வீக பக்தி ஏற்பட்டது. ஏதாவது ஒரு நல்லநாள் பெரியநாள் என்றால் ராஜாஜியிடம் ஆசி பெறாமல் எதையும் என் மனைவி செய்ய மாட்டாள்.

நாளுக்கு நாள் ராஜாஜி மீது பற்றும் பாசமும் என் மனைவி அதிகம் கொண்டு இருந்தாள்.

அரசியல் அபிப்பிராய பேதங்கள் பல ஏற்பட்டு ராஜாஜி சுதந்திரா கட்சி ஆரம்பித்த காலத்தில் என்னை அந்தக் கட்சிக்கு வந்து பணிபுரியும்படி சொன்னார்.

''நான் கடைசி வரையில் காங்கிரஸ்காரனாகவே இருந்து சாக விரும்புகிறேன். உங்களை அரசியல் தலைவராக நான் கருதவில்லை. எங்கள் குடும்பத்தின் தெய்வமாகத்தான் நாங்கள் கருதுகிறோம்'' என்று சொல்லிவிட்டேன்.

ராஜாஜிகூட நான் சுதந்தரா கட்சியில் சேரவில்லை என்று என் மனைவி என் மீது கோபப்பட்டு இரண்டு நாள் சாப்பிடமாட்டேன் என்று பட்டினியாகக் கிடந்தாள்.

ராஜாஜி என் வீட்டிற்கு வந்து என் மனைவியை சமாதானப்படுத்தி, தான் இருக்கும்போதே தனக்கு நேராகவே உண்ணாவிரதத்தை முடித்துக் கொள்ளும்படி செய்தார்.

கடைசியாக ராஜாஜிக்கு உடல் நலம் இல்லை என்று கேள்விப்பட்டதும் என் மனைவி ஒருமுறை சென்று பார்த்து வந்தாள். பின்னர் இவளுடைய உடல் நலம் பாதிக்கப்பட்டு

எங்கும் போக முடியாமல் ஆஸ்பத்திரியிலும் வீட்டிலும் மாறி மாறி வைத்தியம் பார்த்துக் கொண்டு இருந்தோம்.

திடீரென்று ஒரு நாள் ராஜாஜி இறந்த செய்தி கேள்விப்பட்டு அவரது சடலத்தைத் தரிசிப்பதற்காக நான் ராஜாஜி மண்டபத்திற்குச் சென்றிருந்தேன். பகல் சாப்பிடும் நேரம் வந்ததும் என்னை என் மனைவி விசாரித்து இருக்கிறாள்.

பக்கத்தில் இருந்த ஒருவர் ராஜாஜி அவர்கள் இறந்து விட்டார்கள். அதற்காகப் போயிருக்கிறார் என்று சொல்லி யிருக்கிறார். ராஜாஜி இறந்து விட்டாரா?

அவர் சடலத்தையாவது நான் போய்ப் பார்க்க வேண்டும். ஐயோ யாரும் சொல்லவில்லையே, என்று அழுதுகொண்டே படுக்கையை விட்டு எழுந்திருந்தாளாம். பக்கத்தில் இருந்த உறவினர் எழுந்திருக்கக் கூடாது என்று எவ்வளவோ சொல்லியும் ராஜாஜியின் சடலத்தை தரிசிக்காமல் நான் எதற்கு இருக்க வேண்டும் என்று தட்டுத்தடுமாறி எழுந்து அருகில் இருந்த தன் தங்கையின் மீது விழுந்துவிட்டாள்.

எல்லோருமாகத் தூக்கிப் படுக்கையில் வைத்தபோது ராஜாஜி போய் விட்டாரே என்று சொன்னவாறு அந்த நிமிடமே உயிர் பிரிந்துவிட்டது.

ராஜாஜி ஆசி உரைத்தது போலவே "சுமங்கலியாகவே" ராஜாஜியைப் பின்பற்றி அவளும் சென்றுவிட்டாள்.

## நானும் எழுத்தாளனானேன்!

நான் எழுத்தாளனானதற்கு ஒரு பால்காரப் பையன்தான் காரணமாவான். அவன் பெயர் கருப்பையா.

1942ஆகஸ்ட் போராட்டத்தின்போது நான் தேவகோட்டை போலீஸ் சிறையில் சில நாட்கள் தனிமைக் கைதியாக வைக்கப்பட்டிருந்தேன்.

போலீஸ் சிறையில் (லாக்-அப்) 24 மணி நேரத்திற்குமேல் சட்டப்படி வைக்கக் கூடாது. ஆனால் சட்ட விரோதமாகப் போலீசார் ஏதோ காரணமாக என்னை வைத்திருந்தார்கள். அதனால் என் சாப்பாடு துணிமணி முதலியவற்றிற்கு சட்டப்படி போலீசார் செலவு செய்ய முடியாதாகையால் எனக்கு வீட்டிலிருந்து சாப்பாடு துணிமணி கொண்டுவரஅனுமதி யளித்திருந்தனர்.

அப்படித் தினமும் எனக்குச் சாப்பாடு கொண்டு வந்தவன்தான் பால்கார கருப்பையா!

இளைஞன், 15 வயதிருக்கும். நல்ல கருப்பு. சுருள் சுருளான தலைமுடி எப்போதும் சிரித்த முகமாக இருப்பான்.

எனக்கும் அப்போது வயது 22. நல்ல வாலிப முறுக்கு.

ஒரு நாள் சாப்பாடு கொண்டு வந்தபோது கருப்பையா ஒரு கடிதத்தை என்னிடம் நீட்டினான்.

என்னவென்று கேட்டேன். ''ஒரு பொண்ணு ஆசையா லெட்டர் கொடுத்திருக்கு'' என்றான்.

''எனக்கா? யாரது? '' என்று கேட்டேன்.

''மெய்யம்மை என்று பெயர், ஒங்கமேலே ரொம்ப ஆசையா இருக்குது. வயது 17 இருக்கும் பொண்ணு ரொம்ப சிவப்பு'' என்று சொன்னான்.

''அப்படியா'' என்று சொல்லி கடிதத்தை ஆர்வத்துடன் வாங்கிப் படித்தேன்.

மெய்யம்மையின் கையெழுத்து குண்டு குண்டாக அழகாக இருந்தது. அவள் கடிதம் கீழ்க்கண்டவாறு எழுதியிருந்தாள்.

என் உள்ளம் கவர்ந்த அன்பருக்கு எழுதியது. என்னை நீங்கள் பார்த்திருக்க முடியாது. நான் உங்களைப் பார்த்திருக்கிறேன். கண் குளிரப் பார்த்திருக்கிறேன்.

தங்கள் பேச்சைக் கேட்டு மயங்கியிருக்கிறேன்.

தாங்கள் சிறையில் தவம் செய்து கொண்டிருக்கிறீர்கள். நானும் சிறைக்கு வரவேண்டுமென்று துடிக்கிறேன்.

நான் பெண் ஜென்மம். என் இஷ்டப்படி செல்ல பெற்றோர்கள் என்னை அனுமதிக்க மாட்டார்கள்.

எப்போதும் உங்கள் ஏக்கமாகவே இருக்கிறேன். தாங்கள் விடுதலையாகும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஏனெனில் அப்போது தானே உங்களைக் கட்டி அணைக்க முடியும். கடவுளை வேண்டுகிறேன். விரைவில் சந்திப்போம். மறக்காமல் பதில் எழுதி கருப்பையாவிடம் கொடுத்தனுப்பவும். கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் உங்கள்,

மெய்யம்மை

இக்கடிதத்தைப் படித்ததும் புளகாங்கிதமடைந்தேன். பின்னர் மெய்யம்மையைப் பற்றி கருப்பையாவிடம் பல குறுக்கு விசாரணைகள் செய்தேன். அவளைப் பற்றி அவன் சொல்ல சொல்ல, அவளை உடனே பார்க்க வேண்டும்போல் தோன்றியது.

சிறை தடையாக இருந்தது. போலீஸ் காவல் வேறு குறுக்கே நின்றது.

அவள் கடிதத்திற்குப் பதில் எழுத பேப்பர், பேனா எல்லாம் கருப்பையா கொண்டு வந்திருந்தான். அவைகளை வாங்கிக் கொண்டு, அவனை மாலையில் வந்து கடிதத்தை வாங்கிக்கொண்டு போகும்படி சொன்னேன். கருப்பையா போய்விட்டான்.

பலவாறு யோசனை செய்து காதல் கடிதம் எழுதலானேன். கருத்துக்கள் கும்மாளி போட்டுக் கொண்டு வந்தன. பத்து பக்கத்திற்கு மேல் எழுதி விட்டேன். படித்துப் பார்த்தால் எனக்கே அதிசயமாக இருந்தது. இப்படியும் நம்மால் எழுத முடியுமா? என்று ஆச்சரியப்பட்டேன்!

காதல் வாசகங்கள் கொப்பளித்து நின்றன! வருணனைகள் அணிவகுத்து வரிசையாக நின்றன. கடிதம் பூராவும் ஒரே முத்தமாரி பொழிந்திருந்தது. கடிதத்தைப் படித்தால் கண்டிப்பாக உள்ளக் கிளர்ச்சி ஏற்பட்டே தீரும். அவ்வளவு போதை ஊட்டும் வார்த்தைகள் பொங்கி வழிந்தன! ஒருவாறு கடிதத்தை முடித்தேன்.

கருப்பையா வந்தான். கடிதம் பெற்றுக்கொண்டான். பதில் கடிதம் வந்தது. பரவசமாக இருந்தது. அதற்குப் பதில் எழுத முனைந்து எழுதித் தள்ளினேன்.

வரிசையாக அவள் கடிதம் வந்தது. பதில் கடிதமும் பறந்தது. கருப்பையா மூலம்தான் கடிதப் பரிமாறல்!

கடிதத்தின் மூலம் ரொம்ப அன்யோன்யமாகி விட்டோம். 'ஓயிர் ஈருடல்' என்றெல்லாம் பிணைந்து விட்டோம். தீபாவளி வந்ததும். கருப்பையா மூலம் ஒரு பட்டுப் புடவை பரிசளித்தேன்.

பின்னர் அவள் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஒரு கைக் கடிகாரம் வாங்க ரூபாய் முன்னூறு அனுப்பி வைத்தேன். அதற்காக அவள் முன்னூறு முத்தங்களை கடிதம் மூலம் அனுப்பி வைத்தாள்.

பின்னர் தங்க வளையல் வேண்டுமென்றாள் அதற்கு இருநூறு ரூபாய் அனுப்பி வைத்தேன்.

இப்படியாகக் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தது.

பின்னர் நான் மதுரையில் சிறைத் தண்டனை அனுபவித்து விட்டு விடுதலையாகி வெளியே வந்து கருப்பையாவை விசாரித்தேன்.

பால்கார கருப்பையா ஏதோ திருட்டுக் கேசில் பிடிபட்டு ஜெயிலுக்குப் போய்விட்டான் என்று தெரிந்தது.

ஒரு நாள் தேவகோட்டை போலீஸ் சப்- இன்ஸ்பெக்டரைப் பார்க்கப் போனேன்.

சப்-இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்ததும், 'வாங்க வாங்க, ''உங்கள் காதல் கடிதங்கள் வெகு ஜோர்'' என்றார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''எந்த காதல் கடிதம்?'' என்றேன்.

''நீங்கள் மெய்யம்மைக்கு எழுதிய காதல் கடிதங்கள்தான்'' என்றார்.

''அதெப்படி உங்களிடம் கிடைத்தது?'' என்றேன்,


''பால்கார கருப்பையா திருட்டுக் கேசில் அகப்பட்டுக் கொண்டான். அவன் வீட்டில் சோதனை போட்டபோது நீங்கள் எழுதிய காதல் கடிதங்கள் கிடைத்தன. இதைப்பற்றி கருப்பையாவிடம் விசாரித்தபோது உங்களிடம் பொய் நாடகம் ஆடி, மெய்யம்மை என்ற பெண் எழுதுவதுபோல உங்களுக்கு கடிதம் எழுதி ஏமாற்றியிருக்கிறான்'' மட்டைக்கு இரண்டு கீற்று என்று சப்-இன்ஸ்பெக்டர் புட்டுப்புட்டு வைத்தார்.

எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. என்ன செய்வது? ஏமாந்தது ஏமாந்ததுதானே?

ஆனால் சப் இன்ஸ்பெக்டர் சொன்னார்,'' சார், நீங்கள் பெரிய எழுத்தாளர். காதல் கடிதங்கள் எழுதுவதில் மன்னன்.''

ஏமாந்த வேதனையுடன் எழுந்தேன். நாமும் ஒரு எழுத்தாளரானோம் என்ற திருப்தியுடன் வீடு வந்து சேர்ந்தேன்.

பேராசிரியர் கல்கியுடன்
சின்ன அண்ணாமலை



ஸ்ரீ சின்ன அண்ணாமலை
மணிக்கணக்கில் பிரசங்க மாரி
பொழியக் கூடியவர்.
ஆவேசமாகப் பேசுவார்;
அழவைக்கும்படி பேசுவார்;
சிரித்து வயிறு புண்ணாகும்படியும் பேசுவார்;
பேசும் ஆற்றலைப் போல்
எழுதும் ஆற்றல் படைத்தவர்.

-பேராசிரியர் கல்கி ரா.கிருஷ்ணமூர்த்தி